இலக்கண மேற்கோள் விளக்கம்

இலக்கண அடுமனை

ஆசிரியர்
முதுமுனைவர் இரா. இளங்குமரனார் வஸந்

இலக்கண

மேற்கோள் விளக்கம்

இலக்கண அடிமனை

ஆசிரியர்

முது முனைவர் **இரா.இளங்குமரனார்**

வளவன் பதிப்பகம்

சென்னை - 600 017.

நூற் குறிப்பு

நூற்பெயர் : **இலக்கண மேற்கோள் விளக்கம்**

ஆசிரியர் : முதுமுனைவர் இரா. இளங்குமரன்

பதிப்பாளர் : கோ. இளவழகன்

முதற்பதிப்பு : 2003

மீள்பதிப்பு : 2017

தாள் : 16 கி வெள்ளைத்தாள்

அளவு : 1/8 தெம்மி

எழுத்து : 11 புள்ளி

பக்கம் : 8+184 = 192

நூல் கட்டமைப்பு : இயல்பு (சாதாரணம்)

விலை : உருபா. **180/-**

படிகள் : 1000

நூலாக்கம் : கோ. சித்ரா

அட்டை வடிவமைப்பு : செல்வன் பா. அரி (ஹரிஷ்)

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேசுவரா
ஆப்செட் பிரிண்டர்சு
இராயப்பேட்டை, சென்னை - 14.

வெளியீடு

வளவன் பதிப்பகம்

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

பதிப்புரை

முதுமுனைவர் இரா. இளங்குமரனார்

மொழிநூல் கதிரவன் பாவாணர் அவர்களின் வழிநிலை அறிஞர். சொல்லாய்வுப் பெருங்கடல். கழகக்காலச் சான்றோர்கள் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர்.

நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த செந்தமிழ் அறிஞர்களான சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக நிறுவனர் வ.சுப்பையாபிள்ளை, மூதறிஞர் செம்மல் முனைவர் வ.சுப. மாணிக்கனார், பதிப்புச் செம்மல் முனைவர் மெய்யப்பனார், பேரா. முனைவர் அரவிந்தன் ஆகிய தமிழ்ச் சான்றோர்களால் பாராட்டப்பட்டவர்.

இப்பெருந்தமிழ் அறிஞர் எழுதிய நூல்கள் பெரும்பான்மை யானவற்றை கடந்த காலத்தில் எம் பதிப்பகம் வெளியிட்டதன் வாயிலாக எங்களைப் பெருமைப்படுத்திக் கொண்டோம். தமிழ்நூல் பதிப்பில் எம் பதிப்பகம் செம்மாந்த நிலையில் வளர்வதற்கு இப்பெருமகன் செய்த உதவியை நன்றி உணர்வோடு நினைவுக் கூறுகிறோம்.

பல்லாண்டுகளுக்கு முன்பு இப்பெருந்தகை எழுதிய கீழ்க்கண்ட நூல்கள் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்க்கத்தக்கன. மீள்பதிப்பாக வெளிவருகின்ற இந்நூல்கள் அனைத்தும் தாய்த் தமிழுக்கு பெரும் சொத்தாகும். இந்நூல்களைத் தமிழ்கூறும் உலகுக்கு வழங்குவதை எம் கடமையாகக் கொள்கிறோம். தமிழ் உலகம் படித்துப் பயன்கொள்ள வேண்டுகிறோம்.

மீள்பதிப்பு நூல்கள்

1. பாரத வெண்பா - 1972
2. சுவடிக் கலை - 1973
3. பாவாணர் - 1989
4. தனித்தமிழியக்கம் - 1991
5. தமிழிசை இயக்கம் - 2000
6. தொல்காப்பிய சொற்பொருட் களஞ்சியம் - 2002
7. இலக்கண அடிமனை விளக்கம் - 2003
8. இலக்கண வரலாறு - 2009
9. செந்தமிழ் ஓர் அறிமுகம் - 2015
10. பிழை இல்லாமல் எழுதுவோம்-2017

கோ. இளவழகன்

நூல் வரவு

புறத்திரட்டு யாப்பருங்கல விருத்தி களவியற்காரிகை என்னும் அரிய நூல்களைக் கழகத்திற்காக யான் பதிப்பிக்க மேற்கொண்ட காலம், தமிழ்நூற் பரப்புக் காணவாய்த்த காலம், "தமிழ்வளம் தான் என்னே! தமிழர் நிலைதான் என்னே" எனப் பெருமிதமும், தாழ்வுமுற்ற காலமும் அது!

அக்காலத்தில் (1972 - 1975) என்னுள் உந்திய உணர்வு, காக்கை பாடினியத்தை முற்றாகக் கண்டு உரை விளக்கத்துடன் வெளிப் படுத்தத் துணையாயது. பழந்தமிழ் இலக்கண நூல்களாகச் சுட்டப் பட்டுள்ள பரப்பில் கிட்டிய மேற்கோள் நூற்பாக்கள் அனைத்தையும் அகர நிரற்படுத்தி ஆய்வாளர்க்குக் கருவியாக்கும் எண்ணத்தை ஊட்டியது. தமிழ், இயல் இலக்கணம் மட்டுமா உடையது?

அதன் இசை இலக்கணம், கூத்து இலக்கணம் என்பனவும் இலக்கணம் தாமே! அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் ஆயோர் வழங்கும் கொடைகள்தாம் எத்தகு பரப்பினவை; மாண் பினவை. இவற்றை எல்லாம் தமிழ் வளமும் பரப்பும் காண்பார் காணும் வகையால் அடைவு செய்தேன்.

முழுதுறு நூலாகக் கிடைத்தவற்றுள் கூறப்படும் இலக்கண நூற் பாக்களை நூலோதுவார் கண்டுகொள்வரே. ஆனால் மேற்கோளாகப் பலப்பல நூல்களில் பலப்பலரால் காட்டப்பட்டவற்றை மட்டும் தொகுத்தல் சாலுமெனக் கொண்டு, 'அஃகேனம்' தொடங்கி 'வேற்றுமை' இறுதியாகத் தொகை செய்யப்பட்டன. முப்பது ஆண்டு களின் முன்னே முடிந்த தொகை இது.

தமிழ்மண் பதிப்பகமே வெளியிட வேண்டும் எனக் காத்துக் கிடந்தது போலும்; இதுகால் வெளிப்படுகின்றது. தமிழ் இலக்கணச் சொற்பரப்பு, நூற்பரப்பு, புலமைத் தோன்றல்கள் பரப்பு என்பவை மட்டும் மேற்போக்காகக் காண்பார்க்கும் புலப்படும். ஆனால், நுண்ணிய ஆய்ஞர்க்கு, ஒவ்வோர் ஆசிரியர் சொல்லாட்சி நுணுக்கம், கருத்து நுணுக்கம், நூலாக்கத் திறன் முதலானவும் விளக்கமாம். அதனால், அகர நிரலில் தலைப்புச் சொல் ஒன்றும், அதன் பின் அதன் வகை, தொகை ஆகிய பிறவும் வரத் தொகுக்கப்பட்டது இத் தொகை.

'அடி' என்பது ஒரு தலைப்புச் சொல். அடியால் நடப்பது செய்யுள், அடி-பெயர்க் காரணம், அடிவகை, குறளடி முதலியன, சீர்வகை அளவடி, பாக்களின் அடிவகை, அடிக்குரிய நிலம், எழுத்துவகை அடியளவு, வஞ்சியடி, பாவினங்களின் அடிவகை, ஈரடிச் சிறுமை -

பெருமை, அடிச்சிறுமை, சுண்ணம் முதலியவற்றின் அடியளவு, அடி மயக்கம், ஆசிரியத்தில் பிறபா அடிகள், சொற்சீரடி, செய்யுள் அடிக்கு எழுத் தெண்ணும் வகை, அடிவரை இல்லன எனப் பத்தொன்பது உள் தலைப்புகளைக் கொண்டுளது. இவற்றுள் ஈரடிச் சிறுமை - பெருமை என்பதொன்று மட்டும் பதினெட்டு மேற்கோள்களைக் கொண்டுளது. இவற்றைத் தந்த நூலாசிரியர் காக்கைபாடினியார், அவிநயனார், நற்றத்தனார், சங்கயாப்பார், பல்காயனார், மயேச்சுரர், பரிமாணனார் என எழுவர். ஒப்பாய்வுக்கு உதவு கருவியல்லவா இது.

இனி, ஆடல் வகை என்பதொரு பெருந்தலைப்பு. அதில் மேற் கோளாகத் தரப்பட்டுள்ள நூற்பாக்கள் 29. சிலம்பு தானே ஆடல் கருவூலம் எனின், யாப்பருங்கல விருத்தியின் பங்களிப்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறதே!

பாவை ஆடல் பற்றி அடியார்க்குநல்லார் காட்டும் மேற்கோள் :

"பாவை திருமகள் ஆடிற் றதற்குறுப்
போவாமல் ஒன்றுடனே ஒன்று"

என்பது. இப் பாவை ஆடலுக்கு யாப்பருங்கல விருத்தியார் காட்டும் மேற்கோள்.

"திருவாடல் பாவை அதற்குறுப்புத் தேரின்
ஒருவா திரண்டுடன் ஒன்று"

என்பது.

இவற்றுள் வேறுபாடு காணப்படுதல் வெளிப்படை. துறைவல்லா ரால் தாமே இவற்றுள் ஒன்றனை உறுதி செய்யமுடியும்? இவ்வாறு மாசுபோக்கவும் இத்தொகை பயன்படல் உண்மை.

துடியாடல் வேல்முருகன் ஆடல் என்பது அடியார்க்கு நல்லார். துடியாடல் மங்கை எழுவர தாடல் என்பது யாப்பருங்கல விருத்தி. உறுப்புகளிலும் முன்னது ஐந்து. பின்னது ஆறு. இவ்வாறு ஆய்வுக் குரியவற்றை ஒப்பு நோக்கவும் உறுதி செய்யவும் உதவும் தொகை இது.

விரிவுமிக்கதாம் சுற்றப் பெயர்களை,

"த ந நு எம் முதல் மகரம் இடையிட்டு
ன ள ர வாம் ஈற்றன சுற்றப் பெயரே"

என மயிலைநாதர் மேற்கோள் காட்டுகிறார் (நன். 275) இதனைச் சங்கர நமச்சிவாயரும் காட்டுகிறார் (நன். 276).

தமிழில் வழங்கும் சுற்றப் பெயர்களையெல்லாம் இப்படித் திரட்டுப் பாகாக்கித் தரவும், எழிலுற நூற்பா ஓவியம் தீட்டிக் காட்டவும் இயலும் அருமை எளிதில் வாய்ப்பதா?

நூலாசிரியர் பெயரோ நூற்பெயரோ அறியவாராமல் கிடைத்த மாமணிப் புதையல் அல்லவோ இது! ஆடி நிழலில் அறியக் காட்டும் கோடுயர் மாமலைக் காட்சி அல்லவோ இது!

இந் நூாற்பா நம்மை எங்கே ஈர்த்துச் செல்கின்றது?

"த ந நு எ எனும் அவைமுத லாகிய
கினைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா"

என்னும் தொல்காப்பிய நூற்பாவைத் (293) தொட்டுத் தழுவி மேலே பற்றிப் படரச் செய்கின்றது அல்லவோ! தொல்லாசிரியன் ஒருவன் கொடையை நல்லாசிரியன் ஒருவன் மேற்கொண்டு மரபு காக்கும் மாண்பினை நமக்கு உணர்த்தவில்லையா?

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் விளக்கு எது? சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோள்கள் அல்லவா!

அவிநயம் என்னும் பெருந்தலைப்பின்கீழ் வரும் 32 குறுந் தலைப்பு களும் அவற்றின் முகவாயும் புறநடையும், மெய்ப்பாடு என்னும் பெருந் தலைப்பின் கீழ் வரும் 15 நூற்பாக்களும் ஒருங்கு காண்பார் தொல் காப்பிய மெய்ப்பாட்டியலில் புத்தொளி காண இயலுமே!

ஆக இத் தொகை பொதுமக்கள் பயன்பாட்டு நூால் என்பதனி னும் புலமக்கள் போற்றிக்கொள்ள வேண்டிய கருவி நூல் என்பதே தகும்.

ஆயிரம் ஆயிரம் கதை நூல்களை வெளியிடுவாரும் ஐந்து கருவி நூல்களை வெளியிடல் அரிது. புகழ்மிக்க அறிஞர் பெருமக்களும் கதை நூல்களைத் தம் வெளியீடாக வெளியிட்டதும், கருவி நூல்களை வெளி யிடப் பதிப்பகங்களிடம் ஒப்படைத்ததும் நாடறி செய்தி. ஆயினும், **தமிழ்மண் பதிப்பகம்** கருவி நூல் வெளியீட்டையே தலைக்கடனாகக் கொண்டு தாழாமல் கடனாற்றுகின்றமை பாராட்டுதற்கும் போற்று தற்கும் உரியவையாம்.

சமையல் நூல் பெருவாரியாக விற்பனையாகும். ஏன்? சுவையாக-வகை வகையாக உண்ணும் நாட்டம் எவர்க்கும் பொது அல்லவா!

சமய நூல்களும் அச் சமயம் சார்ந்தோரால் விரும்பிக் கொள்ளப் பெறும்.

நம்பிக்கையூட்டும் கணிய வகை நூல்களும் அவ்வார்வலர் பெருக்கத்தால் - தன்னம்பிக்கையற்றோரே பெருகிப் பல்கிவரும் சூழலும் நாட்டு நடைமுறையும் இருப்பதால் - அந் நூல்களும் விலையாம்.

நூற்றில் ஒருவராய்த் தன்னம்பிக்கைத் துடிப்பில் இருப்பார்க்கு உதவும் முன்னேற்ற வழிகாட்டி நூல்களும் விரும்பித் தேடப் பெறும்.

ஆனால், ஆழமான ஆய்வுக் கருவி நூல்களைக் கற்பார் அரியர்; வெளியிடுவாரும் மிக அரியர்.

தவத்திரு மறைமலையடிகளார் வெளியிட்ட தமிழர் மதம் என்னும் நூல் 500 படிகளே முதற் பதிப்பில் அச்சிடப்பட்டன. அந் நூல்களுள் 25 ஆண்டுகள் அளவில் ஏறத்தாழ 250 நூல்களே விலை யாயின. ஆண்டுக்கு விற்பனை எத்தனை நூல்கள்?

அடிகளார் அடியில் வீழ்ந்து வணங்கி வாழ்த்துப் பெற்றவரும் அவர் நூலை வாங்கிப் பயன் கொள்ளவில்லை! அப் பயன் கொண்டிருந்

தால், "அடிகளே தமிழ்நாடு; தமிழ்நாடே அடிகள்" என மன்னும் முழங்கும் மரமும் முழங்கும் என்னும் திரு.வி.க.வின் தேனுரை மெய்யாகியிருக்கும் மேலும் "அடிகளாரால் தமிழ்நாடு விழிப்புற்றது" என்னும் அவருரையும் உறுதிப்பட்டிருக்கும்.

இதனைச் சுட்டுவது ஏன்?

கருவி நூல் வெளியீட்டின் பொருளியல் கருத்தே இதனைச் சுட்டச் செய்வதாம்.

ஆனால், நூலக ஆணைக்குழு ஓராற்றான் கைகொடுக்கிறது. அறிஞர் பெருமக்களும் அதற்கெனக் காசு செலவிடவும் நூல் தொகுக்கவும் தலைப்பட்டுளர். கல்லூரி பல்கலைக்கழக நூலகங்களுக்கும் கருவி நூல் வேண்டும் நிலை உள்ளது. ஆய்வியல் பட்டம் பெறுவாருள் ஒரு சிலரேனும் தமிழ் வளம் நாடும் ஆய்வு மேற்கொள்வதால், அவர்களும் கருவி நூல் காதலர் ஆகின்றனர். இந் நிலை மேலும் மேலும் பெருகின் கருவி நூல் வெளியீட்டாலேயே ஒரு நல்ல பதிப்பகம் வாழ முடியும் என்பது விளக்கமாகும்.

இவ்வகையில் தலைப்பட்டுத் தளராமல் நடையிடும் தமிழ்ப் பற்றுடையர் இளவழகனார் தொண்டு வாழ்க என வாழ்த்துதல், விற்பனைக்கு உதவுதல் என்பவை தமிழ்ப் பற்றாளர் கடப்பாடாம். வழக்கம் போல் விரும்பியேற்றுக் கூர்த்த பார்வையால் மெய்ப்பினைத் திருத்தி உதவிய தோன்றல் புலமைச் செல்வர் திரு. தமிழகனார்க்கும் தவச்சாலை அறங்காவலர் முனைவர் ப. கங்கையார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியன்.

நலமே மல்குக.

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிமாவட்டம் 620101
பேசி: 0431 - 2685 328

குறுக்க விளக்கம்

அடியார்க்.	அடியார்க்கு நல்லார்	நச்.	நச்சினார்க்கினியம்
அரசஞ்.	அரசஞ் சண்முகனார்	நம்பி.	நம்பியகப் பொருள்
அரும்.	அரும்பதவுரையாசிரியர்	நவநீதப்.	நவநீதப் பாட்டியல்
இ.வி.	இலக்கண விளக்கம்	நன்.	நன்னூல்
இளம்.	இளம்பூரணம்	நேமி.	நேமிநாதம்
களவியல்.	இறையனார் களவியல்	பாயிர.	பாயிர விருத்தி
சங்கர.	சங்கர நமச்சிவாயர்	புறத்.	புறத்திணையியல்
சிலப்.	சிலப்பதிகாரம்	பேரா.	பேராசிரியம்
செய்.	செய்யுளியல்	பொருள்.	பொருளதிகாரம்
சேனா.	சேனாவரையம்	மயிலை.	மயிலைநாதர்
சொல்.	சொல்லதிகாரம்	யா.கா.	யாப்பருங்கலக்காரிகை
திருக்கோ.	திருக்கோவையார்	யா.வி.	யாப்பருங்கல விருத்தி
தொல்.	தொல்காப்பியம்	வீரசோ.	வீரசோழியம்

* முழு நூற்பெயர் சுட்டியவை இவண் இடம் பெற்றில.

இலக்கண மேற்கோள் விளக்கம்

(இலக்கண அடிமனை)

அஃகேனம்

அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே *(அவிநயனார்) யா.வி.1*

ஆய்தமும் யவ்வும் அவ்வொடு வரினே
ஐயென் எழுத்தொடு மெய்பெறத் தோன்றும் *(அவிநயனார்) யா.வி.1*

எ-டு: கஃசு - கைசு
கய்தை - கைதை.

அகப்பொருள் (கிளவிக் கொத்து)

இயற்கை பாங்கன் இடந்தலை மதியுடன்
இருவரும் உள்வ்ழி அவன்வர உணர்தல்
முன்னுற உணர்தல் குறையுற உணர்தல்
நன்னிலை நாண நடுங்க நாடல்
மடல்குறை நயப்பு வழிச்சேட் படுத்தல்
இடமிகு பகற்குறி இரவுக் குறியோ
டொருவழித் தணத்தல் உடன்கொண்டேகல்
வரைவு முடுக்கம் வரைபொருட் பிரிதல்
மணஞ்சிறப் போதல் வார்புவி காவல்
இணங்கலர்ப் பொருத்தல் வேந்தற் குற்றுழி
பொருள்வயிற் பிரிதல் பரத்தையில் பிரிதலென்
றருள்வயிற் சிறந்த அகத்திணை மருங்கின்
இருளறு நிகழ்ச்சி இவையென மொழிப. *திருக்கோவையார்*

அகப்புறம்

1. கைக்கிளை ஏனைப் பெருந்திணை என்றிவை
அக்கரம் அறிவோர் அகப்புறம் என்ப. *வீரசோ. 104*

2. கைக்கிளை யென்றா பெருந்திணை யென்றாங்
கத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே *(பன்னிரு படலம்)*
யா. வி. 96 தொல். புறத். இளம்

3. காந்தள் வள்ளி சுரநடை முதுபாலை
தாபதம் தபுதாரம் குற்றிசை குறுங்கலி
பாசறை முல்லை இல்லாண் முல்லை
என்றிவை பத்தும் அகப்புறம் என்ப.

4. ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் கலிமடமா ஏறுதல் உள்ளிட்ட
பத்தும் அகத்தின் புறம்

5. அறனும் வாட்கையும் ஒருதலைக் காமமும்
பொதுவியல் பாடாண் சுயநிலைப் படலமென்
றிவைகள் அனைத்தும் அகப்புறம் ஆகும் *வீரசோ. 104*

6. கைக்கிளை தானே காணுங் காலை
கூட்டமில் கிளவிக் கைக்கிளை அகப்புறம் *யா. வி. 96*

அகப்புற விளக்கம்

ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் கலிமடமா ஏறுதல்; காமமிக்
காய்ந்தவர் வள்ளி வெறியாட்டம்; வாய்ந்த
சுரநடை மாதர் வருத்தம்; சுரனுள்
முதுபாலை தன்னை மொழியின் மதுமலர்த்தார்க்
காவலன் வீயக் கவன்ற ததுவாகும்;
பாசறை முல்லை தலைமகன் பாசறைக்கண்
மாசறு மாதரை உள்ளுதல்; மாசற்ற
இல்லவள் முல்லையும் அஃதேயாம்; சொல்லுங்காற்
குற்றிசை கோல்வளை யாளைத் தலைமகன்
முற்றத் துறந்த துறவாம்; குறுங்கலி
முற்றத் துறந்த தலைமகனை முன்னின்று
பொற்றொடி மாதர் பழிதூற்றாம்; குற்றந்தீர்
தாபதம் காதற் றலைமகனை நீங்கிய
மேவரு மாதர் நிலையாகும்; மேவருஞ்சீர்
நீக்கப்பட் டாளை உவந்த தலைமகன்
பார்த்துறூஉம் தன்மை அதுவாம் தபுதாரம்;
பத்தும் அகத்தின் புறம் *(வீரசோ. 95) யா. வி. 96*

அகப்புற இரவுக்குறி

இரவுக் குறியொன் றெய்தும் அதுவே
மனையோர் கிளவி கேட்கும் இடத்துச்
செலவுவர வில்லாத் தொழிலிற்றாகி
மனையிறந் தெல்லையின் மாண்புடைத் தாகும்
அகப்புறம் ஆயின் மறுதலைப் படுமே. *களவியல் 21*

அகப்பொருளில் பெயர் முதலியன வருமுறை

ஒருவன் பெயர்மலை யாறுநா டூரிவை
வரினாண் டுலகியல் வழக்கந் தோற்றல் *யா. வி. 96*

அகவல்

1. அகவல் ஓசை ஆசிரி யம்மே *யா. வி. 69*
2. அகவல் என்பது ஆசிரியப் பாவே *(சங்க யாப்பு) யா. வி. 16*
3. நேர்நேர் இயற்றளை யான்வரும் அகவலும்
நிரைநிரை இயற்றளை யான்வரும் அகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய அகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றா
ஆய்ந்த நிரல்நிரை ஆகும் என்ப *(யா. வி. 69) (யா. கா. 21)*
4. தன்பால் உறுப்புத் தழுவிய மெல்லிய
இன்பா அகவல் இசையதை இன்னுயிர்க்
கன்பா வறைந்த ஆசிரியம் என்ப
5. இயற்சீர்த் தாகியும் அயற்சீர் விரவியும்
தன்றளை தழுவியும் மிறதளை தட்டும்
அகவல் ஓசைய தாசிரி யம்மே *(மயேச்சுரர்) யா. 69*

ஆசிரியப்பா வகை

நேரிசை இணைநிலை மண்டிலம் மண்டிலம்
ஈரிரண் டியல எண்ணுங் காலை *யா. வி. 70*

நேரிசை ஆசிரியப்பா

1. இற்றதன் மேலடி ஒருசீர் குறைய
நிற்பது நேரிசை ஆசிரி யம்மே *(அவிநயனார்) யா. வி. 71*
2. இறுசீர் அடிமேல் ஒருசீர் குறையடி
பெறுவன நேரிசை ஆசிரி யம்மே *(சிறுகாக்கை பாடினியார்) யா. வி. 71*

இணைக்குறள் ஆசிரியப்பா

1. இடைநிலை குறைவ தினைக்குற ளாகும் *(அவிநயனார்) யா. வி. 72*
2. ஈற்றயல் குறைந்த நேரிசை; இணையாம்
ஏற்ற அடியின் இடைபல குறைந்தன *(மயேச்சுரர்) யா. வி. 72*
3. அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்
குறளடி சிந்தடி என்றா யிரண்டும்
இடைவர நிற்ப தினைக்குறள் ஆகும் *(காக்கைபாடினியார்) யா. வி. 72*
4. இடையிடை சீர்தபின் இணைக்குறள் ஆகும் *(சிறுகாக்கைபாடினியார்) யா. வி. 72*

அடிமறிமண்டில ஆசிரியப்பா

1. உரைப்போர் குறிப்பின் உணர்வகை அன்றி
இடைப்பால் முதலீ றென்றிவை தம்முள்
மதிக்கப் படாதது மண்டில யாப்பே *(காக்கை பாடினியார்) யா. வி. 73*

2. கொண்ட அடிமுத லாயொத் திறுவது
மண்டிலம் ஒத்திறின் நிலைமண் டிலமே *(அவிநயனார்) யா. வி. 73*

3. கொண்ட அடிமுத லாயொத் திறுவது
மண்டில யாப்பென வகுத்தனர் புலவர் *(சிறுகாக்கைபாடினியார்) யா. வி. 73*

4. எவ்வடி யானும் முதனடு இறுதி
அவ்வடி பொருள் கொளின் மண்டில யாப்பே *(மயேச்சுரர்) யா. வி. 73*

நிலைமண்டில ஆசிரியப்பா

1. ஒத்த அடித்தாய் உலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே. *(காக்கைபாடினியார்) யா. கா. 28*

2. என்னென் கிளவி ஈறாப் பெறுதலும்
அன்னவை பிறவும் அந்தம் நிலைபெற
நிற்கவும் பெறூஉம் நிலைமண் டிலமே. *(காக்கைபாடினியார்) யா. கா. 28*

3. ஒத்த அடித்தாய் உலையா மண்டிலம்
என்னென் கிளவியை ஈறா கப்பெறும்
அன்ன பிறவுமந் நிலைமண் டிலமே. *(அவிநயனார்) யா. வி. 74*

4. ஒத்த அடியின நிலைமண் டிலமே

5. என்னென்னும் அசைச்சொலும் பிறவும் ஒன்றித்
துன்னப் பெறூஉம் நிலைமண் டிலமே
என்னென் றிறுதல் வரைதல் இன்றே!

6. அல்லா ஒற்றினும் அதனினாம் இறுதி
நில்லா அல்ல நிற்பன வரையார்! *(மயேச்சுரர்) யா. வி. 74*

மண்டில ஆசிரியம்

எழுவாய் இரட்டித் திறுதி ஒன்றாய்
வரினது மண்டில ஆசிரி யம்மே *யா. வி. 73*

கைக்கிளை ஆசிரியம்

கைக்கிளை ஆசிரியம் வருவ தாயின்
முச்சீர் எருத்தின் றாகி முடிவடி
எச்சீ ரானும் ஏகாரத் திறுமே *(கடிய நன்னியார்) யா. வி. 71*

அகவல்வகை (பொருள்வகை)

அவைதாம்
அகப்பா அகவல் புறப்பா அகவல்

நூற்பா அகவல் சித்திர அகவல்
உறுப்பின் அகவல் ஏந்திசை அகவலென்
றவ்வா றென்ப அறிந்திசி னோரே

1. அகப்பா அகவல்,
ஐயீ ருறுப்பின் ஆசிரி யம்மே.

2. அவைதாம்,
முன்னும் பின்னும் தூங்கல் இன்றிச்
சென்னெறி மருங்கிற் சென்றிசைக் கும்மே

3. புறப்பா அகவல் பொருந்தக் கூறின்
பாடாண் பகுதி நாடுங் காலை

4. நூற்பா அகவல் நுணங்க நாடின்
சூத்திரம் குறித்த யாப்பின வாகி
இசைவரம் பின்றி விழுமிதின் நடக்கும்

5. சித்திர அகவல்
சீர்தொறும் அகவும் சித்திரம் உடைத்தே

6. உறுப்பின் அகவல் ஒருபொருள் நுதலி
இசைபரந் தியலும் இயற்கைத் தென்ப

7. ஏந்திசை அகவல் எழுத்திறந் திசைக்கும்
பாங்கறிந் துணர்ந்தோற் பகருங் காலை *யா. வி. 77*

ஆசிரிய அடியீறு

1. முச்சீர் எருத்திற் றாகிமுட் டின்றி
எச்சீ ரானும் ஏகாரத் திறுமே. *(கைக்கிளைப் படலம், கடிய நன்னியார்)*
தொல். பொருள். 473 பேரா.

2. ஏயெனச் சொல்லின் ஆசிரியம் இறுமே
ஓஆய்என ஒரோவழி ஆகும்

3. அன்னென் சொல்லும் பிறவும் ஒன்றித்
துன்னவும் பெறூஉம் நிலைமண் டிலமே. *(அ.விநயனார்)*

4. ஏயென் றிறுவ தாசிரியத் தியல்பே
ஓஆய் இறுதியும் உரியவா சிரியம்.

5. நின்ற தாதி நிலைமண் டிலத்துள்
என்றும் என்னென் றிறுதிவரை வின்றே *யா. வி. 69*

ஆசிரியத் தாழிசை

1. ஒத்த ஒருபொருள் மூவடி முடியினஃ
தொத்தா ழிசையாம் உடன்மூன் றடுக்கின் *(மயேச்சுரர்)*

2. அடிமூன் றொத்திறின் ஒத்தா ழிசையே *(சிறுகாக்கை பாடினியார்)*
யா. வி. 75

ஆசிரியத்துறை

1. அடித்தொகை நான்குபெற் றந்தத் தொடைமேற்
கிடப்பது நாற்சீர்க் கிழமைய தாகி
எடுத்துரை பெற்ற இருநெடில் ஈற்றின்
அடிப்பெறின் ஆசிரியத்துறை ஆகும்

2. அளவடி ஐஞ்சீர் நெடிலடி தம்முள்
உறழத் தோன்றி ஒத்த தொடையாய்
விளைவதும் அப்பெயர் வேண்டப் படுமே *(காக்கை பாடினியார்)*

3. எண்சீர் அடியீற் றயலடி குறைநவும்
ஐஞ்சீர் அடியினும் பிறவினும் இடையொன்ற
அந்தத் தொடையாய் அடிநான் காகி
உறழக் குறைநவும் துறையெனப் படுமே *(மயேச்சுரர்)*

4. நாற்சீர் அடிநான் கந்தத்தொடை நடந்தவும்
ஐஞ்சீர் அடிநடந் துறழ்வடி குறைந்தவும்
அறுசீர் எழுசீர் அவ்வியல் நடந்தவும்
எண்சீர் நாலடி யீற்றயல் குறைந்தும்
தன்சீர்ப் பாதியின் அடிமுடி வுடைத்தாய்
அந்தத் தொடையின் அவ்வடி நடப்பிற்
குறையா உறுப்பினது துறையெனப் படுமே *(அவிநயனார்) யா. வி. 76*

ஆசிரிய விருத்தம்

1. அறுசீர் முதலா நெடியவை எல்லாம்
நெறியின் திரியா நிலத்தவை நான்காய்
விளைகுவ தப்பா இனத்துள விருத்தம் *(காக்கை பாடினியார்)*

2. அறுசீர் எழுசீர் அடிமிக வரூஉம்
முறைமைய நாலடி விருத்தம் ஆகும் *(சிறுகாக்கை பாடினியார்)*

3. அறுசீர் எழுசீர் அடிமிக நின்றவும்
குறைவில் நான்கடி விருத்தம் ஆகும். *அவிநயனார்)*

4. ஆறு முதலா எண்சீர் காறும்
கூறும் நான்கடி ஆசிரிய விருத்தம் *(பிறைநெடுமுடிக் கறைமிடற்றோன்*
பெயர் மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 77

அகவற்பா - கலிப்பாக்களின் அடிக்கெழுத்தளவு

நான்கு முதலாக நாலைந் தெழுத்தளவும்
ஆன்ற அகவல் அடிக்கெழுத்தும் - மூன்றுடைய
பத்தாதி யாகப் பதிற்றிரட்டி ஈறாக
வைத்தார் முரற்கைக் கெழுத்து *யா. வி. 74*

ஆசிரியம் - அரசர்பா

எல்லா நிலமும் அடிப்படுத் தீரிரண்டு
நல்லா கமப்பொருளை நண்ணுதலால் - பல்லோர்க்கும்

சீரா சிரியத்தைத் தேர்வேந்தன் என்றுரைத்தார்
பேரா சிரியர் பெயர் *யா. வி. 74*

அசை

அசையின் பெயர்க்காரணம்

வழுக்கா இயல்வகையின் வாய்மையால் வேறாய்
இழுக்கின் எறும்பொழுக்கே போலும் - எழுத்தின்
இசைத்தொடர்ச்சி மாலையை எண்முறையாற் கண்டித்(து)
அசைத்திசைய வைப்ப தசை *யா. வி. 9*

அசைக்கு உறுப்பாவன

1. குறில்நெடில் அளபெடை உயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய இடைமையொ டாய்தம்
இஉ ஐயென் மூன்றன் குறுக்கமொடு
அப்பதின் மூன்றும் அசைக்குறுப் பாகும் *(காக்கைபாடினியார்)*

2. குறிய நெடிய உயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய இடைமை அளபெடை
மூவுயிர்க் குறுக்கமும் ஆமசைக் கெழுத்தே *(சிறுகாக்கைபாடினியார்)*

3. நெடிய குறிய உயிர்மெய் உயிரும்
வலிய மெலிய இடைமை அளபெடை
மூவுயிர்க் குறுக்கமோ டாமசைக் கெழுத்தே *(அவிநயனார்)*

4. குறில்நெடில் ஆய்தம் அ ளபெடை ஐ காரக்
குறில்குற் றிகர வுகரம் - மறுவில்
உயிர்மெய் விராய்மெய்யோ டாறா றெழுத்தாம்
செயிர்வன்மை மென்மை சமன். *(நாலடி நாற்பது)*

5. உயிருறுப் புயிர்மெய் தனிநிலை எனாஅக்
குறினெடில் அளபெடை மூவினம் எனாஅ
அஃகிய நாலுயிர் மஃகான் குறுக்கமொடு
ஐந்து தலையிட்ட ஐயீ ரெழுத்தும்
அசைச்சீர் தளைதொடைக் காகும் உறுப்பென
வசையறு புலவர் வகுத்துரைத் தனரே *(பெரியபம்மம்)*

6. குறிலுயிர் வல்லெழுத்துக் குற்றுகர வாதி
குறுகிய ஐஔளமவ் வாய்தம்- நெறிமையால்
ஆய்ந்த அசைதொடை தாம் வண்ணங்கட் கெண்முறையால்
ஏய்ந்தன நானான் கெழுத்து *(நாலடி நாற்பது) யா. வி. 2*

அசையின் பெயர்

நேரே நிரையே நேர்பே நிரைபென
ஈரிரண் டென்ப அசையின் பெயரே *யா. வி. 5*

அசையின் அலகு

1. நேரசை ஒன்றே நிரையசை இரண்டல
காக்கும் என்ப அறிந்திசி னோரே.

2. நேரோர் அலகு நிரையிரண் டலகு
நேர்புமூன் றலகு நிரைபுநான் கலகென்
றோதினர் புலவர் உணரு மாறே *(அவிநயம்)*

3. நேர்நேர் நிரைநேராய் நேர்பு நிரைபடங்கும்
சீர்மேல் இசைபலவாய்ச் செல்லுங்கால் - ஈரியல்பிற்
குற்றிபோற் குற்றுகரம் கொண்டியற்ற நேர்நிரையாய்
முற்றும் முடிந்து விடும். *யா. வி. 5*

நேரசை நிரையசைகட்கு வேறுபெயர்

தனியசை யென்றா இணையசை என்றா
இரண்டென மொழிமனார் இயல்புணர்ந் தோரே *(காக்கை பாடினியார்)*

யா. வி.5

நேரசை நிரையசை

1. நெடில்குறில் தனியாய் நின்றுமொற் றடுத்தும்
குறிலினை குறினெடில் தனித்துமொற் றடுத்தும்
நடைபெறும் அசைநேர் நிரைநா லிரண்டே *(பல்காயனார்)*

2. தனிநெடில் தனிக்குறில் ஒற்றோடு வருதலென்
றந்நால் வகைத்தே நேரசை என்ப;

3. குறிலினை குறினெடில் ஒற்றொடு வருதலென்
றந்நால் வகைத்தே நிரையசை என்ப *(நற்றத்தனார்)*

4. நெடிலும் குறிலும் ஒற்றொடு வருதலும்
கடிவரை இலவே நேரசைத் தோற்றம்

5. குறிலும் நெடிலும் குறில்முன் நிற்பவும்
நெறியினொற்றடுத்தும் நிரையசை யாகும் *(பிறைநெடுமுடிக்*
கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்)

6. தனிநெடி லாகியும் தனிக்குறி லாகியும்
ஒற்றொடு வந்தும் நேரசை யாகும்

7. குறிலினை யாகியும் குறினெடி லாகியும்
ஒற்றொடு வந்தும் நிரையசை யாகும் *(சிறுகாக்கை பாடினியார்)*

8. நேர்நால் வகையும் நெறியுறக் கிளப்பின்
நெடிலும் குறிலும் தனியே நிற்றலும்
அவற்றின் முன்னர் ஒற்றொடு நிற்றலும்
இவைதாம் நேரசைக் கெழுத்தின் இயல்பே

9. இணைக்குறில் குறில்நெடில் இணைந்துமொற் றடுத்தும்
நிலைக்குரி மரபின் நிரையசைக் கெழுத்தே *(சங்கயாப்பு) யா. வி. 8*

நேர்பசை, நிரைபசை

1. நேர்முத லாகிய குற்றிய லுகரம்
நேர்பென மொழிப நிரைமுதல் நிரையே

2. முற்றிய லுகரம் வரினுமவை பெயரே

3. குற்றிய லுகரம் முற்றிய லுகரம்
ஒற்றொடு தோன்றற் குரிய வாகும்

4. குறிலும் நெடிலும் குறிலினை தானும் குறில்நெடிலும்
நெறிநின் றுயிர்ப்பினும் நேர்ந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்
றறி முந்தை நேர்நிரை ஐந்தீ ருகரம் அடுத்து வந்தால்
நெறிநுண் கருங்குழல் நேர்பும் நிரைபும் ஒற்றோடு மற்றே *யா. வி. 95*

இயலசை, உரியசை

முதலிரண் டியலசை ஏனைய உரியசை *யா. வி. 95*

தனிக்குறில் மொழி முதல் நேரசையாகுமிடம் :

1. தற்சுட் டேவல் குறிப்பிவை அல்வழி
முற்றத் தனிக்குறில் முதலசை ஆகா *(பல்காயனார்)*

2. ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையும் தனிக்குறில் முதலசை யாகா;
சுட்டினும் வினாவினும் உயிர்வரு காலை
ஒட்ட வரூஉம் ஒருசாரும் உளவே . *(மயேச்சுரர்)*

3. ஒற்றின் றாகியும் குறிப்பே ஏவல்
தற்சுட் டல்வழி முதல்தனி நேராம் *யா. வி. 7*

ஐகாரம் இணையசையாதல்

1. ஈறும் இடையும் இணைந்தும் இணையசை
ஆகுமை யென்ப அறிந்திசி னோரே. *யா. கா. 36*

2. ஐயென் நெடுஞ்சினை ஆதி ஒழித்தல
கெய்தும் இணையசை என்றிசி னோரே *(காக்கைபாடினியார்)*

3. இடையும் கடையும் இணையும் ஐ எழுத்தே *(காக்கைபாடினியார்)*

4. கடையும் இடையும் இணையும் ஐ இரட்டியும் *(அவிநயனார்) யா. வி. 9*

இணையசை யாகாதவை

நெடிலொடு நெடிலும் நெடிலொடு குறிலும்
இணையசை யாதல் இலவென மொழிப *யா. வி. 8*

அசைமுதல் அடி முடிய

1. எழுத்தினால் ஆகும் அசை அவையாற் சீராம்
இழுக்கிகந்த சீராற் றளையென் - றொழுக்கினார்
சீரால் அடிஅடியாற் செய்யுளாம் என்றிடையிட்
டோராதே ஓதுவதே ஒத்து.

2. ஒருதளை ஆதியா ஓரேழின் காறும்
வருவது மன்னும் அடியென் றுரையா
திருசீர் முதலாக எண்சீர்கா றென்ற
அருமுனிவர்க் காய்த்தோ அலர்.

3. ஒருதொடை ஈரடியென் றோதிய துள்ளிட்
டிருதிறமாச் சொல்லிய தெல்லாம் - இருதிறமும்
நல்லாசிரியர் நயமென்றற் கந்நயத்தால்
எல்லாரும் தீர்வர் இழுக்கு.

4. எண்ணெழுத்திற் றிண்ணியராய் எஃகுசெவியராய்
நுண்ணுணர்விற் சேர்ந்த நுழைவினராய் - மண்மேல்
நடையறிந்து கட்டுரைக்கும் நாவினோர்க் கல்லால்
அடியறியும் தன்மை அரிது.

5. தடுத்த தளையொன்றும் தாம்பலவும் கூடி
அடுத்து நடப்பின் அடியாம் - வடுத்தீர்ந்த
பாத வடமொழியைப் பைதீர் தமிழ்ப்புலமை
நாதரடி என்றார் நமக்கு. *யா. வி. 32*

அடி

அடியால் நடப்பது செய்யுள்

1. செயிர்தீர் செய்யுள் தெரியுங் காலை
அடியின் ஈட்டத் தழகுபட் டியலும்

2. ஒரோவடி யானும் ஒரோவிடத் தியலும் *யா. வி. 95*

அடி : பெயர்க்காரணம்

தடுத்தனர் தட்ட தளைபல தழுவியும்
அடுத்த சீரின் அடியெனப் படுமே *யா. வி. 23*

அடிவகை

குறள்சிந் தளவுநெடில் கழிநெடில் என்றாங்
கனைவகை மரபின அடிவகை தானே *யா. வி. 23*

குறளடி முதலியன

1. குறளொரு பந்தம் இருதளை சிந்தாம்
முத்தளை அளவடி நாற்றளை நெடிலடி
மிக்கன கழிநெடில் என்றிசி னோரே *யா.கா. 12*

2. இருசீர் குறளடி சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீர் அறுசீ ரதனின்
இழிப நெடிலடி என்றிசி னோரே *(காக்கை பாடினியார்)*

3. நாற்சீர் கொண்டது நேரடி அதுவே
தூக்கொடும் தொடையொடும் சிவணும் என்ப *(நற்றத்தனார்) யா. வி. 24*

சீர்வகை அடியளவு

இரண்டு முதலா எட்டீ றாகத்
திரண்ட சீரான் அடிமுடி வுடைய
இறந்தன வந்து நிறைந்தடி முடியினும்
சிறந்த அல்ல செய்யு ளுள்ளே *(காக்கைபாடினியார்) யா. வி. 25*

பாக்களின் அடிவகை

1. ஆசிரியம் வெண்பாக் கலியொடு மும்மையும்
நாற்சீர் அடியால் நடைபெற் றனவே

2. சிந்தும் குறளும் வருதலும் அவ்வழி
உண்டென் றறைப உணர்த்திசி னோரே *(காக்கைபாடினியார்) யா. வி. 27*

3. அல்லாப் பாவின் அடிவகை தெரியின்
எல்லாம் நாற்சீர் அல்லடி இயலா

4. இறுதியும் அயலும் இடையும் முச்சீர்
பெறுதியும் வரையார் வெள்ளைமுதல் மூன்றும் *(மயேச்சுரர்)*

5. இரண்டினும் மூன்றினும் வஞ்சி ஆகும்
நாற்சீர் அடியாற் பாப்பிற மூன்றே *(அவிநயனார்)*

6. ஆசிரி யப்பா வெண்பா கலியென
மூவகைப் பாவும் நேரடிக் குரிய *(நற்றத்தனார்)*

7. வஞ்சி அல்லா மூவகைப் பாவும்
எஞ்சுதல் இலவே நாற்சீர் அடிவகை *(சிறுகாக்கை பாடினியார்) யா. வி. 27*

8. ஆசிரி யத்தொடு வெள்ளையும் கலியும்
நேரடி தன்னால் நிலைபெற நிற்கும் *(பல்காயனார்) யா.வி. 16*

அடிக்குரிய நிலம்

ஐவகை அடியும் அறிவுறத் தெரியின்
மெய்வகை அமைந்த பதினேழ் நிலமே *யா. வி. 95*

எழுத்துவகை அடியளவு

1. ஈரிரண்டும் ஏழெழுத்தும் ஈரைந்தும் மூவைந்தும்
பாரியன்ற நாற்சீர் பதினெட்டும் - ஓரா
விளையும் பதினேழ் நிலத்துக் குறள்சிந்
தளவு நெடில் கழியோ டைந்து

2. ஐந்தும் அகவற்கு வெள்ளைக் களவடியும்
சிந்து நெடிலடிக்கண் தொல்லிரண்டும் - வந்த
தளவிரண்டும் ஆன்ற நெடில்கழியும் ஒண்பாற்
றளைசிதைவில் தண்டாக் கலிக்கு

3. ஈரிரண்டோ டீரா றெழுவாய் இறுவாயாச்
சேரும் எழுத்திருசீர் வஞ்சிக்காம் - ஓரும்

நெடிலடிக்கு நேர்ந்தனவும் மூவொருசீர் வஞ்சிக்
கடிவகுத்தார் எட்டாதி ஆய்ந்து.

4. அளவியற்பா ஆன்றசீர் ஐந்தெழுத்திற் பல்கா
வளவஞ்சிக் காறுமாம் மாதோ - வளவஞ்சிச்
சின்மையொரு மூன்றாகும் என்பர் சிறப்புடைமைத்
தன்மை தெரிந்துணர்வோர் தாம்.

5. குற்றிகரம் குற்றுகரம் என்றிரண்டும் ஆய்தமும்
ஒற்றும் எனவொரு நான்கொழித்துக் - கற்றோர்
உயிரும் உயிர்மெய்யும் ஓதினார் எண்ணச்
செயிரகன்ற செய்யுள் அடிக்கு *யா. வி. 25*

6. ஐந்தாதி ஐயிரண் டீறாம் அறுநிலமும்
வந்தவடி வெள்ளைக் களவு *யா. வி. 95*

வஞ்சியடி

1. சிந்தடி குறளடி என்றா யிரண்டும்
வஞ்சிக் கிழமை வகைப்பட்டனவே *(காக்கை பாடினியார்)*

2. இருசீர் அடியும் முச்சீர் அடியும்
வருதல் வேண்டும் வஞ்சி யுள்ளே *(மயேச்சுரர்) யா. வி. 26*

பாவினங்களின் அடிவகை

1. விருத்தம் துறையொடு தாழிசை என்றா
இனச்செய்யுள் எல்லா அடியினும் நடக்கும் *(காக்கைபாடினியார்)*

2. எல்லா அடியினும் இனப்பா நாற்சீர்
அல்லா மேலடிய பாவினுக் கியலா *(அவிநயனார்) யா. வி. 28*

ஈரடிச்சிறுமை - பெருமை

1. ஒருதொடை ஈரடி வெண்பாச் சிறுமை
இருதொடை மூன்றாம் அடியின் இழிந்து
வருவன ஆசிரியம் இல்லென மொழிப
வஞ்சியும் அப்பா வழக்கின ஆகும்

2. நான்காம் அடியினும் மூன்றாம் தொடையினும்
தாழ்ந்த கலிப்பாத் தழுவுதல் இலவே *(காக்கை பாடினியார்)*

3. படைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துரை இல்லென்
றுரைத்தனர் மாதோ உணர்ந்திசினோரே *(காக்கை பாடினியார்)*

4. ஒன்றும் இரண்டும் மூன்றும் நான்கும்
என்றிம் முறையே பாவின் சிறுமை
தத்தங் குறிப்பின தொடையின் பெருமை *(அவிநயனார்) யா. வி. 32*

5. ஆசிரியப் பாவின் சிறுமைக் கெல்லை
மூவடி யாகும் பெருமை ஆயிரம்

ஈரடி முதலா ஒன்று தலைச்சிறந்
தேழடி காறும் வெண்பாட் டுரிய
வாயுறை வாழ்த்தே செவியறி வுறூஉவே
கைக்கிளை அங்கதம் கலியியற் பாட்டே
தத்தம் குறிப்பின அளவென மொழிப *(நற்றத்தனார்)*

6. ஏழடி இறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்த அடியே

7. மிக்கடி வருவது செய்யுட் குரித்தே

8. மூவடிச் சிறுமை பெருமை ஆயிரம்
ஆகும் ஆசிரி யத்தின் அளவே *(சங்கயாப்பு)*

9. ஆயிரம் இறுதி மூவடி இழிபா
ஆசிரியப் பாட்டின தடித்தொகை அறிய

10. ஈரடி முதலா ஏழடி காறும்
தீர்பில வெள்ளைக் கடித்தொகை தானே *(பல்கயனார்)*

11. ஐயிரு நூறடி ஆசிரியம் வஞ்சிச்
செய்யுள் நடப்பினும் சிறப்பென மொழிப.

12. பேணு பொருள் முடிபே பெருமைக் கெல்லை
காணுங் காலைக் கலியலங் கடையே *(மயேச்சுரர்)*

13. கலியுறுப் பெல்லாங் கட்டளை உடைமையின்
நெறியின் முறைவழி நிறுத்தல் வேண்டும்.

14. கொச்சகக் கலிவயிற் குறித்தபொருள் முடிவாம்
தாழிசை பலவாய் முடிவு முடிவுழி *(மயேச்சுரம்)*

15. வஞ்சி ஆசிரியம் என்றிரு பாட்டும்
எஞ்சா மூவடி இழிபுயர் பாயிரம்

16. ஆசிரியம் என்ப தகவலின் வழாது
கூறிய சீரொடும் தளையொடும் தழீஇ
முச்சீர் அடியாய் ஈற்றயல் நின்றும்
முச்சீர் அடியிடை ஒரோவழித் தோன்றியும்
அவ்வியல் பின்றி மண்டில மாகியும்
மூவடி முதலா முறைசிறந் தேறித்
தொள்ளா யிரத்துத் தொண்ணூற் றெண்ணிரண்
டெய்தும் என்ப இயல்புணர்ந் தோரே

17. வஞ்சி தானே அடிவரம் பின்றி
எஞ்சா இசைநிலை தூங்கல் எய்தி
ஆசிரிய மாகி முடியும் என்ப *(பரிமாணனார்)*

18. செப்பல் ஓசையிற் சீர்தளை சிதையாது
மெய்ப்படக் கிளந்த வெண்பா விரிப்பிற்
குறள்நேர் நெடிலென மூன்றாய் அவற்றின்

இறுதி அடியே முச்சீர்த் தாகி
அதனீற் றசைச்சீர் எய்தி அடிவகை
ஓரிரண்டு முதலா முறைசிறந் தீரா
றேறும் என்ப இயல்புணர்ந் தோரே *(பரிமாணனார்) யா. வி. 32*

அடிச்சிறுமை

வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியென
நுண்பா உணர்ந்தோர் நுவலுங் காலை
இரண்டும் மூன்றும் நான்கும் இரண்டும்
திரண்ட அடியின் சிறுமைக் கெல்லை *யா. வி. 93*

சுண்ணம் முதலியவற்றின் அடி அளவு

1. சுண்ணம் நான்கடி சுரிதகம் எட்டடி
வண்ணம் நானான்கு வரிதகம் எண்ணான்கென்
றெண்ணிய அடித்தொகை என்னவும் பெறுமே *சிலப். 3:13 அடியார்க்*

2. வாயுறை வாழ்த்து முதலா உடைய வரைவில *யா. வி. 32*

அடிம்யக்கம்

1. உணர்த்திய பாவினுள் ஒத்த அடிகள்
வகுத்துரை பெற்றியும் அன்றிப் பிறவும்
நடக்குந ஆண்டை நடைவகை யுள்ளே *(காக்கை பாடினியார்)*

2. ஒத்த அடியினும் ஒவ்வா விகற்பினும்
மிக்கடி வரினும் அப்பாற் படுமே *(அவிநயனார்)*

3. பாவும் இனமும் மேவிய அன்றியும்
வேறுபட நடந்தும் கூறுபட வரினும்
ஆறறி புலவர் அறிந்தனர் கொளலே *(பிறைநெடுமுடிக் கறைமிடற்றோன்
பெயர் மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 93*

ஆசிரியத்தில் பிற பா அடிமயங்கல்

4. வஞ்சி விரவல் ஆசிரியம் உரித்தே
வெண்பா விரவினும் கலிவரை வின்றே *(பல்காயனார்)*

5. அகத்திணை யல்வழி அங்கதன் மருங்கின்
வகுத்த சொற்சீர் வஞ்சியொடு மயங்கும் *(பனம்பாரனார்) யா. வி. 29*

6 . ஆசிரியப்பாவின் அயற்பா அடிமயங்கும்
ஆசிரியம் வெண்பாக் கலிக்கணாம் - ஆசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்
ஒண்பா அடிவிரவா ஊற்று.

7. சீர்வண்ணம் வெள்ளைக் கலிவிரவும் வஞ்சியுள்
ஊரும் கலிப்பாச் சிறுச்சிறிதே - பாவினும்
வெண்பா ஒழித்துத் தளைவிரவும் செய்யுளாம்
வெண்பாக் கவியுட் புகும் *(நாவடி நாற்பது) யா. வி. 31*

சொற்சீரடி

கட்டுரை வகையால் என்னொடு புணர்ந்து
முற்றடி யின்றிக் குறைசீர்த தாகியும்
ஒழியிசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே (செய்யுளியல் உடையார்) யா. வி. 29

செய்யுள் அடிக்கு எழுத்தெண்ணும் வகை

குற்றிகரம் குற்றுகரம் என்றிரண்டும் ஆய்தமும்
ஒற்றும் எனவொரு நான்கொழித்துக் - கற்றோர்
உயிரும் உயிர்மெய்யும் ஓதினார் என்ணச்
செயிரகன்ற செய்யுள் அடிக்கு. *யா. வி. 36*

அடிவரை இல்லன

1. அவைதாம்
பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொல் அங்கதம் வாழ்த்தொடு பிறவும்
ஆக்கின என்ப அறிந்திசி னோரே *(பல்காயனார்)*
2. உரையொடு நூலிவை அடியில நடப்பினும்
வரைவில என்ப வாய்மொழிப் புலவர்
3. மொழிபிசி முதுநூல் மூன்றும் அன்ன *(பல்காயனார்)*
4. உரையும் நூலும் அடியின்றி நடப்பினும்
வரைவில என்ப வயங்கி யோரே
5. வாய் மொழி பிசியே முதுசொல் என்றாங்
காமுரை மூன்றும் அன்ன என்ப. *(நற்றத்தனார்) யா. வி. 95*

அடுக்கு வகை

அசைநிலை இரண்டினும் பொருண்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினும் ஒருமொழி தொடரும். *(அகத்தியம்) நன் மயிலை*

அசைநிலை அடுக்கு :

அசைநிலை அடுக்கே இரண்டுவரம் பாகும். *நேமி. 74*

அணிவகை

பரியகம்

1. பொன்னிதழ் பொதிந்த பன்னிற மணிவடம்
பின்னிய தொடரிற் பெருவிரன் மோதிரம்
தன்னொடு தொடக்கத் தமனியச் சிலம்பின்
புறவாய் சூழ்ந்து புணரலைப் பதுவே
2. அவ்வாய் மகரத் தணிகிளர் மோதிரம்
பைவாய் பசும்பொற் பரியக நூபுரம்
மொய்மணி நாவின் முல்லையங் கிண்கிணி
கௌவிய வேனவுங் காலுக் கணிந்தாள்

விரிசிகை

3. குறங்கு செறியோடு கொய்யலங் காரம்
நிறங்கிளர் பூந்துகி னீர்மையா னுடீஇப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
அறிந்த தமைவர வல்குற் கணிந்தாள்

தோளணி

4. ஆய்மணி கட்டி யமைந்தவிலைச் செய்கைக்
காமர் கண்டிகைக் கண்டிரண் முத்திடைக்
காமர்பெறா பாசங் கொளுத்திக் கலின்பெற
வேய்மருண் மென்றோள் விளங்க வணிந்தாள்.

முன்கையணி

5. புரைதபு சித்திரப் பொன்வளை போக்கில்
எரியவிர் பொன்மணி யெல்லென் கடகம்
பரியகம் வால்வளை பாத்தில் பவழம்
அரிமயிர் முன்கைக் கமைய வணிந்தாள்

சிறுபுறவணி

6. சங்கிலி நுண்டொடர் பூண்ஞாண் புனைவினைத்
தொங்க லருத்தித் திருந்துங் கயிலணி
தண்கடன் முத்தின் றகையொரு காழெனக்
கண்ட பிறவுங் கழுத்துக் கணிந்தாள்

காதணி

7. நூலவ ராய்ந்து நுவலருங் கைவினைக்
கோலங் குயின்ற குணஞ்செய் கடிப்பினை
மேலவ ராயினு மெச்சும் விறலொடு
காலமை காதிற் கவின்பெறப் பெய்தாள்

தலைக்கோளம்

8. கேழ்கிளர் தொய்யகம் வாண்முகப் புல்லகம்
சூளா மணியொடு பொன்னரி மாலையும்
தாழ்தரு கோதையுந் தாங்கி முடிமிசை
யாழின் கிளவி யரம்பைய ரொத்தாள். *சிலப். 6 : 84 108 அடியார்க்*

அணு

படையொடு தீ நீர்வளியாற் பங்கப் படாத
முடிபொருள் முந்தை அணு. *யா. வி. 95*

அந்தணரியல்

அரசர்க் காயினும் அந்தணர் ஒழுக்கமோ
டியலும் ஆயின் அவ்வகைக் குரிய (பரணர்பாட்டியல்) *நவநீதப். 73*

அரங்கு

அரங்கின் நிலம்

1. தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை
அறனழித் தியற்றா வழகுடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமுஞ் சுவையு மதுரமு மாய்க்கனம்
தோற்றிய திண்மைச் சுவட துடைத்தாய்
என்புமி கூர்ங்கல் களியுவ ரீளை
துன்ப நீறு துகளிவை யின்றி.
ஊரகத் தாகி யுளைமான் பூண்ட
தேரகத் தோடுந் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டு மாடரங் கதுவே.

2. ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும்
நாடிய வரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைசா ராது
மாவின் பந்தியொடு மயங்கல் செய்யாது.
செருப்புமிகு மிடமுஞ் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத் தாகி
மதுரச் சுவைமிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருத்திய
இத்திறத் தாகு மரங்கினுக் கிடமே. *(சுத்தானந்தப்பிரகாசம்)*

3. உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின்வருங் கேடு
துவர்ப்பிற் பயமாஞ் சுவைகள் - அவற்றிற்
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்
பளிபெருகு மாவ தரங்கு. *(பரத சேனாபதியார்) சிலப். 3:95,96 அடியார்க்.*

தலைக்கோல் நாட்டும் பொழுது

1. புண்ணியமால் வெற்பிற் பொருந்துங் கழைகொண்டு,
கண்ணிடைக் கண்சாண் கனஞ்சாரும் - எண்ணிய
நீளமெழு சாண்கொண்டு நீராட்டி நன்மைபுனை
நாளிற் றலைக்கோலை நாட்டு.

2. பூராடங் கார்த்திகை பூரம் பரணிகாலம்
சீரா தியைவீட்டஞ் சித்திரையோ - டாருமுற
மாசி யிடப மரிதுலை வான்கடகம்
பேசிய தேண் மிதுனம் பேசு *(மதிவாணனார்) சிலப் 3 : 123 அடியார்க்.*

3. பிணியுங் கோளு நீங்கிய நாளால்
அணியுங் கவினு மாசற வியற்றித்
தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான்
மாசது தீர மண்ணுநீ ராட்டித்

தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப்
பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கைமிசைக்
கொண்டு சென்றுறீஇக் கொடியெடுத் தார்த்து
முரசு முருடு முன்முன் முழங்க
அரசு முதலான வைம்பெருங் குழுவும்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
ஊர்வலஞ் செய்து புகுந்த பின்றைத்
தலைக்கோல் கோட றக்க தென்ப *(செயிற்றியனார்)*

சிலப் 3 : 125-8 அடியார்க்.

அளக்குங்கோல்

1. ஒத்த அணுமுதல் உயர்ந்துவரு கணக்கில்
உத்தமன் பெருவிரல் இருபத்து நாலு
கொண்டது கோலெனக் கோற்குறிப் புணர்ந்த
தண்டாக் கேள்வித் தலைவர் கிளந்தனர் *சிலப். 3. 104. அரும்.*

2. ஒத்த வணுமுத லுயர்ந்துவரு கணக்கின்
உத்தமன் பெருவிர லிருபத்து நாலுள
கோலே கோடல் குறியறிந் தோரே *சிலப் 3 : 9, 100 அடியார்க்.*

அரங்கின் அளவு

1. அக்கோ லேழகன் றெட்டு நீண்டும்
ஒப்பா லுயர்வு மொருகோ லாகும்
நற்கோல் வேந்த னயக்குறு வாயில்
முக்கோல் தானும்மு யரவு முரித்தே *(செயற்றியனார்)*

2. அக்கோ லொருகோ லளவுறக் கல்வி
மிக்க கம்மியர் வடகலை விதிமுறைக்
கூறின அன்றியுங் குறிவகைக் கேற்றன
ஏற்கச் செய்க வியல்புணர்ந் தோரே. *சிலப் 3 : 101, 102 அடியார்க்.*

3. அரங்கி னுயரமு மகலமு நீளமும்
பொருத்த நாடி யுரைக்குங் காலைப்
பெருந்தண் மால்வரைச் சிறுகழை கண்ணில்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டே
இருபத்து நால்விரற் கோலள வதனால்
எழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
உத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநிலை நாற்கோ லாகப்
பூதரை யெழுதி மேனிலை வைத்து
நந்தி யென்னுந் தெய்வமு மமைத்துத்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்து.

.....

கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும்
பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும்

யாவையும் மெழுதி யிந்நிலம் விளங்கப்
பாவையர்க் கியற்றுவ தரங்கெனப் படுமே. *(சுத்தானந்தப் பிரகாசம்)*
சிலப். 3 : 94 : 100 அடியார்க்.

4. கூறிய வுறுப்பிற் குறியொடு புணர்ந்தாங்
காடுநர்க் கியற்று மரங்கி னெற்றிமிசை
வழுவில் பூத நான்கு முறைப்பட
எழுதின ரியற்ற லியல்புணர்ந் தோரே. *சிலப் 3 : 106 - 7 அடியார்க்,*
சீவக. 672 நச்.

எழினிவகை (திரை)

1. முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும் *(மதிவாணனார்)*
2. அரிதரங்கிற், செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையும்
எய்த வெழுதி யியற்று. *(பரதசேனாபதியார்) சிலப் 3 : 109 - 10 அடியார்க்.*

அரங்கேறுங் காலம்

1. பண்ணியம்வைத் தானைமுகன் பாதம் பணிந்து நாட்
புண்ணிய வோரை புகன்றன கொண் - டெண்ணியே
வண்டிருக்குங் கூந்தல் மடவரலை யையாண்டில்
தண்டியஞ்சேர் விப்பதே சால்பு.
2. வட்டணையுந் தூசியு மண்டலமும் பண்ணமைய
எட்டுடன் ஈரிரண்டாண் டெய்தியபின் - கட்டளைய
கீதக் குறிப்பு மலங்கார முங்கிளரச்
சோதித் தரங்கேறறச் சூழ். *சிலப். 3 : 10 - 12, அடியார்க். சீவக. 673. நச்.*

அரங்கேறத் தக்கவள்

நன்னர் விருப்புடையோள் நற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்ன குலத்தாலமைந்த தொன்மையளாய்ப் - பன்னிரண்டாண்
டேய்ததற்பின் ஆடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தவரங் கேற்றல் வழக்கு. *(பரதசேனாபதியார்) சிலப். 3 : 10 - 12 அடியார்க்.*

குயிலுவர் நிற்கும் முறைமை

ஆடிட முக்கோ லாட்டுவார்க் கொருகோல்
பாடுநர்க் கொருகோ லந்தர மொருகோல்
குயிலுவர் நிலையிட மொருகோல் *சிலப். 3:130 அடியார்க்.*

அரசர் இயல்

"இளையன் ஆயினும் மணிமுடி கவித்தலின்
அரசுதொழில் அல்லது பிறதொழில் பெறாஅன்" *(பொய்கையார் கலாவியல்)*
நவநீதப். 75

அருங்கல உயர்வு

இயன்ற செய்யுட் கினைசந்த நடையால்
உயரக் கூறல் அருங்கல மொழிதலென்
றுயர்பிரண் டென்பர் உயர்ந்தோர் தாமே. *வீரசோ. 157*

'அல்'வினை 'அன்' ஆதல்

அல்வினை அன்ஆய்த் திரியவும் பெறுமே. *நேமி. 64*

அலகுபெறாதவை

ஆய்தம், ஒற்று - அலகு பெறாமை

1. அளபெழின் அல்லதை ஆய்தமும் ஒற்றும்
அலகியல் பெய்தா என்மனார் புலவர் *(அவிநயனார்)*

2. ஒற்றள பெழாவழிப் பெற்றவல கிலவே *யா. வி. 3. நேமி. 5*

ஈரொற்றும் மூவொற்றும் அலகுபெறாமை

3. ஈரொற் றாயினும் மூவொற் றாயினும்
ஓரொற் றியல ஆகும் என்ப *யா. வி. 3*

4. உயிரள பேழும் உரைத்த முறையான்
வருமெனின் அவ்வியல் வைக்கப் படுமே
(காக்கை பாடினியார்) யா. வி. 4

5. இஉ இரண்டன் குறுக்கம் தளைதப
நிற்புழி ஒற்றாம் நிலைமைய ஆகும் *(காக்கை பாடினியார்)*

6. இஉ இரண்டன் குறுக்கம் தளைதபின்
ஒற்றெழுத் தாகும் உயிரள பெடையும்

7. சீர்தளை சிதைவுழி ஈருயிர்க் குறுக்கமும்
நேர்தல் இலவே உயிரள பெடையும் *(மயேச்சுரர்)*

8. உயிரள பெடையும் குறுகிய உயிரின்
இகர உகரமும் தளைதபின் ஒற்றாம்
சீர்தப வரினும் ஒற்றியற் றாகும் *(அவிநயனார்)*

9. ஐந்தா றனசையின் அருகி உகரத்தின்
வந்தசீர் ஒன்றிரண்டொற் றொப்பித்து - நந்துவித்தால்
வஞ்சிப்பா விற்கியலும் நாலசைச்சீர் அல்லுரிச்சீர்
தங்கி விரவத் தகும்

16. தளைசீர் வண்ணம் தாங்கெட வரினே
குறுகிய இகரமும் குற்றிய லுகரமும்
அளபெடை ஆவியும் அலகியல் பிலவே.

17. குற்றிய லிகரமும் குறுகல் இன்றியே
மற்றுள நாலசை வந்த வாலெனின்
முற்றிய முதல்நடு இறுதி வஞ்சியுள்
குற்றமில் கூன்வரக் குற்றம் இல்லையே *யா. வி. 95*

அவநுதி

1. அதுவோ அதுவன் றாயுங் காலை
இதுபோல் நிகழ்ந்த தெனும்அவ நுதியே. *வீரசோ. 152*

2. சிறப்பினும் குணத்தினும் திருவினும் சீர்மையை
மறுத்துடன் மொழிவ தவநுதி வழக்கே. *வீரசோ. 169*

அவயவமாலை

அகத்தியன் நுதலிய பல்பொருள் வகையான்
அகவல் வஞ்சி ஆயிரு பாவினும்
அவைவரத் தொடுப்ப தவயவ மாலை
அதுகலி விரவினும் வரையார் ஆண்டே *(பொய்கையார் பாட்டியல்)*
நவநீதப். 44

அவிநயம் (அவிநயக்களன்)

நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென்
றத்தகு நான்கே யவினயக் களனே *சிலப் 14 : 152 அரும்பத*

வீர அவிநயம்

வீரச்சுவை அவிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமும் சிவந்த கண்ணும்
பிடித்த வாளும் கடித்த எயிறும்
மடித்த உதடும் சுருட்டிய நுதலும்
திண்ணென உற்ற சொல்லும் பகைவரை
எண்ணல் செல்லா இகழ்ச்சியும் பிறவும்
நண்ணும் என்ப நன்குணர்ந் தோரே.

அச்ச அவிநயம்

அச்ச அவிநயம் ஆயுங் காலை
ஒடுங்கிய உடம்பும் நடுங்கிய நிலையும்
அலங்கிய கண்ணும் கலங்கிய உளனும்
கரந்துவர லுடைமையும் கையெதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமும் இசைபண் பினவே.

இழிப்பு அவிநயம்

இழிப்பின் அவிநயம் இயம்புங் காலை
இடுங்கிய கண்ணும் எயிறுபுறம் போதலும்
ஒடுங்கிய முகமும் உளுற்றாக் காலும்
சோர்ந்த யாக்கையும் சொன்னிரம் பாமையும்
நேர்ந்தன வென்ப நெறியறிந் தோரே.

அற்புத அவிநயம்

அற்புத அவிநயம் அறிவரக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடையது.
எய்திய திமைத்தலும் விழித்தலும் இகவாதென்
றையமில் புலவர் அறைந்தனர் என்ப.

காம அவிநயம்

காம அவிநயங் கருதுங் காலைத்
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலும்
காரிகை கலந்த கடைக்கணுங் கவின்பெறு
மூரல் முறுவல் சிறுநிலா அரும்பலும்
மலர்ந்த முகனும் இரந்தமென் கிளவியும்
கலந்தன பிறவும் கடைப்பிடித் தனரே.

அவலத் தவிநயம்

அவலத் தவிநயம் அறிவரக் கிளப்பிற்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி இடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைகை யழிதலும் நீர்மையில் கிளவியும்
பொறையின் றாகலும் புணர்த்தினர் புலவர்.

நகையின் அவிநயம்

நகையின் அவிநயம் நாட்டுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது .....
விட்டுமுரி புருவமொடு விலாவிறுப் புடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவர் ஆய்ந்தனர் என்ப

நடுவுநிலை அவிநயம்

நாட்டுங் காலை நடுவுநிலை அவிநயம்
கோட்பா டறியாக் கொள்கையும் மாட்சியும்
அறந்தரு நெஞ்சமும் ஆறியவிழியும்
பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும்
குறிப்பின் றாகலும் துணுக்க மில்லாத்
தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையும்
அளத்தற் கருமையும் அன்பொடு புணர்தலும்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்பும்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புல்வர்.

வெகுண்டோன் அவிநயம்

வெகுண்டோன் அவிநயம் விளம்புங் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோ டாய்ந்தனர் கொளலே.

ஐயமுற்றோன் அவிநயம்

.பொய்யில் காட்சிப் புலவோர் ஆய்ந்த
ஐய முற்றோன் அவிநயம் உரைப்பின்
வாடிய உறுப்பும் மயங்கிய நோக்கமும்
பீடழி புலனும் பேசா திருத்தலும்
பிறழ்ந்த செய்கையும் வான்றிசை நோக்கலும்
அறைந்தனர் பிறவும் அறிந்திசி னோரே.

மடியின் அவிநயம்

மடியின் அவிநயம் வகுக்குங் காலை
நொடியோடு பலகொட் டாவிமிக வுடைமையும்
மூரி நிமிர்த்தலும் முனிவொடு புணர்தலும்
காரண மின்றி ஆழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோ
டணிதரு புலவர் ஆய்ந்தனர் என்ப

களித்தோன் அவிநயம்

களித்தோன் அவிநயங் கழறுங் காலை
ஒளித்தவை ஒளியான் உரைத்த லின்மையும்
கவிழ்ந்துஞ் சோர்ந்துந் தாழ்ந்துந் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும்
களிகைக் கவர்ந்த கடைக்கணோக் குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே.

உவந்தோன் அவிநயம்

உவந்தோன் அவிநயம் உரைக்குங் காலை
நிவந்தினி தாகிய கண்மலர் உடைமையும்
இனிதின் இயன்ற முறுவனகை யுடைமையும்
இருக்கையும் சேறலும் கானமும் பிறவும்
ஒருங்குடன் அமைந்த குறிப்பிற் றன்றே.

அழுக்காறுடையோன் அவிநயம்

அழுக்கா றுடையோன் அவிநயம் உரைப்பின்
இழுக்கொடு புணர்ந்த இசைப்பொருள் உடைமையும்
கூப்பிய வாயும் கோடிய உரையும்
ஓம்பாது விதிர்க்குங் கைவகை யுடைமையும்
ஆரணங் காகிய வெகுளி யுடைமையும்
காரண மின்றி மெலிந்தமுக முடைமையும்
மெலிவொடு புணர்ந்த இடும்பையு மேவரப்
பொலியு மென்ப பொருந்துமொழிப் புலவர்

இன்பமொடு புணர்ந்தோன் அவிநயம்

இன்பமொடு புணர்ந்தோன் அவிநயம் இயம்பில்
துன்ப நீங்கித் துவர்ந்த யாக்கையும்

தயங்கித் தாழ்ந்த பெருமகிழ் வுடைமையும்
மயங்கி வந்த செலவுநனி யுடைமையும்
அழகுள் ளுறுத்த சொற்பொலி வுடைமையும்
எழிலொடு புணர்ந்த நறுமலர் உடைமையும்
கலங்கள் சேர்ந்தகன்ற தோண்மார் புடைமையும்
நலங்கெழு புலவர் நாடினர் என்ப.

தெய்வமுற்றோன் அவிநயம்

தெய்வ முற்றோன் அவிநயஞ் செப்பிற்
கைவிட் டெறிந்த கலக்க முடைமையும்
மடித்தெயிறு கௌவிய வாய்த்தொழில் உடைமையும்
துடித்த புருவமும் துளங்கிய நிலையும்
செய்ய முகமும் சேர்ந்த செருக்கும்
எய்தும் என்ப இயல்புணர்ந் தோரே

ஞஞ்ஞையுற்றோன் அவிநயம்

ஞஞ்ஞை யுற்றோன் அவிநயம் நாடிற்
பன்மென் றிறுகிய நாவழி வுடைமையும்
நுரைசேர்ந்து கூம்பும் வாயும் நோக்கினார்க்
குரைப்போன் போல வுணர்வி லாமையும்
விழிப்போன் போல விழியா திருத்தலும்
விழுத்தக வுடைமையும் ஒழுக்கி லாமையும்
வயங்கிய திருமுக மழுங்கலும் பிறவும்
மேவிய தென்ப விளங்குமொழிப் புலவர்

துஞ்சா நின்றோன் அவிநயம்

துஞ்சா நின்றோன் அவிநயந் துணியின்
எஞ்சுத லின்றி இருபுடை மருங்கு
மலர்ந்தும் கவிழ்ந்தும் வருபடை இயற்றியும்
அலர்ந்துயிர்ப் புடைய வாற்றலு மாகும்

சிந்தையுடம் பட்டோன் அவிநயம்

சிந்தையுடம் பட்டோன் அவிநயம் தெரியின்
முந்தை யாயினும் உணரா நிலைமையும்
பிடித்த கைமேல் அடைத்த கவினும்
முடித்த லுறாத கரும நிலைமையும்
சொல்லுவது யாதும் உணரா நிலைமையும்
புல்லும் என்ப பொருந்துமொழிப் புலவர்.

துயிலுணர்ந்தோன் அவிநயம்

இன்றுயில் உணர்ந்தோன் அவிநயம் இயம்பின்
ஒன்றிய குறுங்கொட் டாவியும் உயிர்ப்பும்
தூங்கிய முகமும் துளங்கிய உடம்பும்
ஓங்கிய திரிபும் ஒழிந்தவுங் கொளலே.

செத்தோன் அவிநயம்

செத்தோன் அவிநயஞ் செப்புங் காலை
அத்தக வச்சமும் அழிப்பும் ஆக்கலும்
கடித்த நிரைப்பலின் வெடித்துப் பொடித்துப்
போந்ததுணி வுடைமையும் வலித்த வுறுப்பும்
மெலிந்த அகமும் மென்மைமிக வுடைமையும்
வெண்மணி தோன்றக் கருமணி கரத்தலும்
உண்மையிற் புலவர் உணர்ந்த வாறே.

மழைபெய்யப்பட்டோன் அவிநயம்

மழைபெய்யப் பட்டோன் அவிநயம் வகுக்கின்
இழிதக வுடைய வியல்புநனி யுடைமையும்
மெய்கூர் நடுக்கமும் பிணித்தலும் படாத்தை
மெய்பூண் டொடுக்கிய முகத்தோடு புணர்த்தலும்
ஒளிப்படு மனனில் உலறிய கண்ணும்
விளியினுந் துளியினு மடிந்தசெவி யுடைமையும்
கொடுகிவிட் டெறிந்த குளிர்மிக வுடைமையும்
நடுங்கு பல்லொலி யுடைமையு முடியக்
கனவுகண் டாற்றா னெழுதலு முண்டே.

பனித்தலைப்பட்டோன் அவிநயம்

பனித்தலைப் பட்டோன் அவிநயம் பகரின்
நடுக்க முடைமையும் நகைபடு நிலைமையும்
சொற்றளர்ந் திசைத்தலும் அற்றமில் அவதியும்
போர்வை விழைதலும் புந்திநோ வுடைமையும்
நீரும் விழியும் சேறு முனிதலும்
இன்னவை பிறவும் இசைந்தனர் கொளலே.

உச்சிப்பொழுதின் வந்தோன் அவிநயம்

உச்சிப் பொழுதின் வந்தோன் அவிநயம்
எச்சம் இன்றி இயம்புங் காலைச்
சொரியா நின்ற பெருந்துயர் உழந்து
தெரியா நின்ற வுடம்பெரி யென்னச்
சிவந்த கண்ணும் அயர்ந்த நோக்கமும்
பயந்த தென்ப பண்புணர்ந்தோரே.

நாணமுற்றோன் அவிநயம்

நாணமுற்றோன் அவிநயம் நாடின்
இறைஞ்சிய தலையும் மறைந்த செய்கையும்
வாடிய முகமும் கோடிய உடம்பும்
கெட்ட ஒளியும் கீழ்க்கண் ணோக்கமும்
ஒட்டின ரென்ப உணர்ந்திசி னோரே.

கண்ணோவுற்றோன் அவிநயம்

கண்ணோ வுற்றோன் அவிநயங் காட்டின்
நண்ணிய கண்ணீர்த் துளிவிரற் றெறித்தலும்
வளைந்த புருவத்தொடு வாடிய முகமும்
வெள்ளிடை நோக்கின் விழிதரும் அச்சமும்
தெள்ளிதிற் புலவர் தெளிந்தனர் கொளலே.

தலைநோவுற்றோன் அவிநயம்

தலைநோ வுற்றோன் அவிநயஞ் சாற்றின்
நிலைமை யின்றித் தலையாட் டுடைமையும்
கோடிய விருக்கையும் தளர்ந்த வேரொடு
பெருவிரல் இருக்கிய நுதலும் வருந்தி
ஒடுங்கிய கண்ணோடு பிறவும்
திருந்தும் என்ப செந்நெறிப் புலவர்.

அழற்றிரம் பட்டோன் அவிநயம்

அழற்றிறம் பட்டோன் அவிநயம் உரைப்பின்
நிழற்றிறம் வேண்டும் நெறிமையன் விருப்பும்
சுழலும் வெயிலும் சுடரும் அஞ்சலும்
நிழலும் நீரும் சேறும் உவத்தலும்
பனிநீர் உவப்பும் பாதிரித் தொடையலும்
நுனிவிரல் ஈரம் அருநெறி யாக்கலும்
புக்க துன்பமொடு புலர்ந்த யாக்கையும்
தொக்க தென்ப துணிவறிந் தோரே

சீதமுற்றோன் அவிநயம்

சீதமுற்றோன் அவிநயஞ் செப்பின்
ஓதிய பருவரல் உள்ளமோ டுழத்தலும்
ஈர மாகிய போர்வை யுறுத்தலும்
ஆர வெயிலுழந் தழலும் வேண்டலும்
உரசியும் உரன்றும் உயிர்த்தும் உரைத்தலும்
தக்கன பிறவும் சாற்றினர் புலவர்

வெப்பின் அவிநயம்

வெப்பின் அவிநயம் விரிக்குங் காலைத்
தப்பில் கடைப்பிடித் தன்மையுந் தாகமும்
எரியின் அன்ன வெம்மையோ டியையவும்
வெருவரும் இயக்கமும் வெம்பிய விழியும்
ஒருங் காலை உணர்ந்தனர் கொளலே

நஞ்சுண்டோர் அவிநயம்

கொஞ்சிய மொழியிற் கூரெயிறு மடித்தலும்
பஞ்சியின் வாயிற் பனிநுரை கூம்பலும்

தஞ்ச மாந்தர் தம்முக நோக்கியோர்
இன்சொல் இயம்புவான் போலியம் பாமையும்
நஞ்சுண் டோன்றன் அவிநயம் என்ப

புறநடை

1. சொல்லிய வன்றியும் வருவன உளவெனிற்
புல்லுவழிச் சேர்த்திப் பொருந்துவழிப் புணர்ப்ப *சிலப். 3:13 அடியார்க்.*

அவை

அவையெனப்படுபவை அரில்தபத் தெரியின்
நல்லவை தீயவை குறைநிறை அவ்வையெனச்
சொல்லுப என்ப தொல்லை யோரே.

2. அவற்றுள்
நல்லவை யென்பது நாடுங் காலை
எத்துறை யானும் இருவரும் இயம்பும்
அத்துறை வல்லோர் அறனொடு புணர்ந்தோர்
மெய்ப்பொருள் கண்டோர் மிக்கவை ஓர்ப்போர்
கற்றவர் கல்விக் கடாவிடை அறிவோர்
செற்றமும் சினமும் சேரா மனத்தோர்
முனிவொன் றில்லோர் மூர்க்கர் அல்லோர்
இனிய முகத்தோர் இருந்துரை கேட்போர்
வேந்தர் ஒருவர்கண் வாரம் படினும்
தாந்தாம் ஒருவர்கட் பாங்கு படாதோர்
அன்னோர் முன்னர்க் கூறிய பொழுதிற்
றொலையு மாயினும் தொலைவெனப் படாஅது
வெல்லு மாயினும் மிகச்சிறப் புடைத்தே *யா.வி.96*

3. தீயவை என்பது தெரியுங் காலை
சுலாவும் சுண்டும் தாமேற் கொண்டு
நிலவாப் பொருள்களைக் குலவி யெடுத்தாங்
குரைத்தவொரு வற்காய்ச் செருவென மொழிந்து
சொல்லிய துணரா தல்லவை யுணர்ந்து
வாரம் படுவது தீயவை யாகும்

4. நிறையவை என்பது நினையுங் காலை
எல்லாப் பொருளும் தம்மகத் தடக்கி
எதிர்வரு மொழிகளை எடுத்துரைப் பதுவே

5. குறையவை என்பது கூறுங் காலை
நிறைவில் சொல்லே நினைந்தவை யெடுப்ப
அறையும் என்ப ஆணையின் இகந்தே *யா. வி. 96*

அவைபுகு நெறி

அவைபுகு நெறியே ஆயுங் காலை
வாயிலின் நிரைத்துக் கூறப்புகுங் காலை

இருவரும் புகாஅர் ஒருவர் முன்புகிற்
புக்கவன் தொலையும் உய்த்தெனும் உண்மையின்
இருவருங் கூடி ஒருங்குடன் பட்ட
தெரிவுடன் உணர்ந்தோர் செப்பினர் என்ப. *அவிநயனார் கலாவியல்/ நவநீதப்பாட்டியல் 96*

அவையில் அழித்துரைக்கேடு

சாதி நோக்கியும் தன்மை நோக்கியும்
வாதம் அழித்துரை உரைப்போன் வாது
வென்ற நிலையினும் சென்றிடில் அரைசின்
..... சிறப்புச் சிதைவே. *(செய்யுள் வகைமை) நவநீதப். 96*

அவையம்

1. குடிப்பிறப்புக் கல்வி குணம்வாய்மை தூய்மை
நடுச்சொல்லு நல்லணி ஆக்கம் - கெடுக்கும்
அழுக்கா றவாவின்மை அவ்விரண்டோ டின்ன
இழுக்கா அவையின்கண் எட்டு. *புறப்பொருள் வெண்பாமாலை 8:19*

2. குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பேர் ஒழுக்கம் பூண்டு காமுற
வாய்மை வாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின் பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாஅ வின்மையென
விருபெரு நிதியமும் ஒருதாம் ஈட்டிடுந்
தோலா நாவின் மேலோர் பேரவை. *ஆசிரியமாலை/ தொல்பொருள். 76*

அழிதூஉவின்பால்

அழிதூஉ வகையும் அவற்றின் பாலே *அவிநயனார்/ நன். மயிலை.*

அளபெடை

மாத்திரை வகையாற் றளைதபக் கெடாநிலை
யாப்பழி யாமைநின் றளபெடை வேண்டும். *யா. வி. 2*

அளபெடை வகை

உயிரளபெடையும் ஒற்றள பெடையுமென்
றாயிரண் டென்ப அளபெடை தானே *யா. வி. 2*

அளபெடையின் பெயர்கள்

அளபே புலுதம் ஆயிரு பெயரும்
அளபெடை என்பர் அறிந்திசி னோரே *யா. கா. 4*

அளபெடை வருமிடம்

தனிநிலை முதனிலை இடைநிலை ஈறென
நால்வகைப் படூஉமள பாய்வரும் இடனே *யா. வி. 2*

அளபெழும் இடம்

1. வன்மையொடு ரஃகான் ழஃகான் ஒழிந்தாங்
கன்மை யாய்தமோ டளபெழும் ஒரோவழி. (அவிநயனார்) யா. கா. 4
நன் மயிலை. 59 நேமி.3

2. பதினெண் மெய்யும் அதுவே மவ்வோ
டாய்தமும் அளபரை தேய்தலும் உரித்தே (அவிநயினார்)
நன். மயிலை. 59

ஒற்றினுள் அளபெழுவன

ஙஞண நமன வயலள ஆய்தம்
ஈரிடத் தளபெழும் ஒரோவழியான யா. வி. 3

ஆய்தம், ஒற்று - அலகு பெறுதல் :

1. தனிநிலை ஒற்றினை தாமலகு பெறூஉம்
அளபெடை ஆகிய காலை யான

2. ஆய்தமும் ஒற்றும் அளபெழ நின்றுழி
வேறல கெய்தும் விதியின ஆகும் (காக்கைபாடினியார்) யா. வி. 3

ஒற்றளபெடை அலகு பெறுநிலை

1. இருவகை மருங்கினும் மெய்யள பெழினே
நிரைநேர் நேர்நேர்ஆகுதல் அன்றி
நிரைநிரை நேர்நிரை ஆகுதல் இலவே யா. கா. 36

2. ஒற்றிற்கு மாத்திரை ஒன்றே அளபெழுந்தால்
தெற்றக் குறிலதுவே யாம். யா. கா. 4.

எழுத்தல் இசைக்கு அலகூட்டல்

எழுத்தல் இசையே அசையொடு சீர்க்கண்
நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே யா. வி. 95

ஒற்றளபெடை செய்யுள் வழக்குக்குரியது

மாத்திரை வகையாற் றளைதபக் கெடாநிலை
யாப்பழி யாமைநின் றளபெடை வேண்டும். யா. வி. 3

செய்யுளோசை சிதையின் ஈரளவு கொளல்

செய்யுட்கண் ஓசை சிதையுங்கால் ஈரளபும்
ஐயப்பா டின்றி அணையுமாம் மைதீரொற்
றின்றியும் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமேல் ஒற்றளபும் கொள்.(மாபுராணம்) தொல்.எழுத்.6.நச். நன். மயிலை.

தனிநிலை அளபெடைக்கு அசை

தனிநிலை அளபெடை நேர்நேர் இயற்றே (நற்றத்தர்) யா. வி. 4

இறுதிநிலை அளபெடைக்கு அசை

இறுதிநிலை அளபெடை நிரைநேர் இயற்றே (நற்றத்தர்) யா. வி. 4

அன்பு (காதல்)

அடுமரம் துஞ்சுதோள் ஆடவரும் ஆய்ந்த
படுமணிப் பைம்பூ ணவரும் - தடுமாறிக்
கண்ணெதிர் நோக்கொத்த காரிகையிற் கைகலந்து
உண்ணெகிழச் சேர்வதாம் அன்பு. தொல்பொருள். 92 நச்.

அனு

1. அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ டீகாரம் எஏ- உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அனு.
2. அஆ ஐஔ என்றிவை எனாஅ

இஈ எஏ என்றிவை எனாஅ
உஊ ஒஓ என்றிவை எனாஅத்
தகமவ ஒநவெனும் என்றிவை எனாஅ
முந்நா லுயிரும் மூவிரு மெய்யும்
தம்முள் மயங்கினும் தவறின் றென்ப (நல்லாறனார்)

3. அருகி இனவெழுத் தணையா வாயினும்
வரைவில என்ப வயங்கி யோரே யா. வி. 53.

ஆசான்

ஆசான் தன்மை

1. அன்பீனும் ஆர்வமும் அன்ன தீனும்
நண்பும் ஆர்வலர் துன்பம் கண்டுழிப்
புன்கணீர் பொழிந்து புறந்தோன்று தன்மையும்
மிகுதிக் கண்ணே மேற்சென் றிடித்தலும்
கல்வி யளிக்கும் நல்வினை யாசாற்கு
இன்றி யமையா தியையுங் குணனே. தொல்.பாயிர. அரசஞ்

2. பெயரிவை மும்மையும் பிறவுமிப் பொருட்கண்
இயைபெதிர் இயலும் என்றுணர்ந் தியையக்
குறியொடு காரணம் கொளவகுத் தொழிந்த
தறிய வுரைப்போன் ஆசிரி யன்னே யா. வி. 96

3. முந்துநூல் முடிந்த முறைமையின் வழாஅமை
வந்தன பிறவும் வயினறிந் துரைப்போன்
அந்தமில் கேள்வி ஆசிரி யன்னே யா. வி. 96

ஆசான் அகத்தொழில்

கைம்மாறு வேண்டாக் கடப்பா டுடைமையும்
வறியார்க் களிக்கும் வண்மையும் அவர்தாம்
நெறிபல நாடின் அளியா தொழித்துக்
குறியல தாமும் கொடுத்த லின்றி

அறநெறி வழாதவர் நாடின அளித்தலும்
இல்லென்னும் எவ்வம் உரையா வண்ணம்
கொள்ளும் அளவிற் குறையா தளித்தலும்
ஆவகை நான்கும் அளித்தலின் ஆசாற்கு
இன்றி யமையா தியையுமகத்தொழில் தொல். பாயிர. அரசஞ்.

ஆசான் புறத்தொழில்

பகைவர் ஆயினும் தகைபெறு பருவம்
திடனுறக் கொள்ளின் உடனவர்க் களித்தலும்
நட்டார் ஆயினும் பெட்புறு பருவம்
உற்றில ராயின் வற்புறுத் தாமையும்
செயிரறப் பழகினும் சின்னப் பொருளும்
உயிரறப் போற்றார்க்கு முன்னிக் கொடாமல்
ஒருநாள் வரினும் மறவாதார்க்குப்
பெரிய பொருளும் வரிசையின் அளித்தலும்
தன்னடி பணியார் மன்னவர் ஆயினும்
மன்னவர்க் களியா தின்னல்மிக் குடைய
வறிய ராயினும் உறுபணி விரும்பின்
நெறியின் அவர்தாம் உறவளித் தலுமென
ஆவகை நான்கும் தாவிலா சாற்குக்
கோடல் பற்றிக் குறிக்கும் புறத்தொழில் தொல். பாயிர. அரசஞ்

ஆசான் ஒப்புப்பொருள்

மலையின் தன்மை

1. மலையே. அளக்க லாகாப் பெருமையும் அருமையும்
மருங்ககலம் உடைமையும் ஏறற் கருமையும்
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி

நிலத்தின் தன்மை

2. நிலத்தின் இயல்பே நினைக்கும் காலைப்
பொறையு டைமையொடு செய்பாங் கமைந்தபின்
விளைதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலும் எடுத்தலும் இன்னண மாக
இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே

3. பூவின் தன்மை

பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கலம் ஆதலும் நாற்றம் உடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு நெகிழ்தலும்
கண்டோர் உவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பின் உணரக் காட்டுப.

4. துலாக்கோல் தன்மை

துலாக்கோல் இயல்பே தூக்கும் காலை
மிகினும் குறையினும் நில்லா தாகலும்
ஐயம் தீர்த்தலும் நடுவு நிலைமையோ
டெய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே — தொல். பாயிரம். நச்.

ஆசிரிய வழியாடு

அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கா நிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே. — இ. வி. பாயிரம்.

ஆசி

அறநிலை மருங்கின் ஆசி என்பது
புறநிலை வாழ்த்தெனப் புகன்றார் புலவர் — வீரசோ. 153

ஆடல்வகை

கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பம் - சுடர்விழியால்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.

1. அல்லியம்

அல்லியம் மாயவன் ஆடிற் றதற்குறுப்புச்
சொல்லுப ஆறா மெனல்

2. கொட்டி

கொட்டி கொடுவிடையோ னாடிற் றதற்குறுப்
பொட்டிய நான்கா மெனல்

3. குடை

அறுமுகத்தோ னாடல் குடைமற் றதற்குப்
பெறுமுறுப்பு நான்கா மெனல்.

4. குடம்

குடத்தாடல் குன்றெடுத்தோ னாடல் அதனுக்
கடைக்குப ஐந்துறுப் பாய்ந்து

5. பாண்டரங்கம்

பாண்டரங்கம் முக்கணான் ஆடிற் றதற்குறுப்
பாய்ந்தன வாறா மெனல்

6. மல்லாடல்

நெடியவன் ஆடிற்று மல்லாடல் மல்லிற்
கொடியா வுறுப்போரைந் தாம்

7. துடியாடல்

துடியாடல் வேள்முருக னாடல் அதனுக்
கொடியா வுறுப்போரைந் தாம்

8. கடையம்

கடையம் அயிராணி ஆடிற் றதனுக்
கடைய வுறுப்புக்க ளாறு

9. பேடு

காமன தாடல்பே டாடல் அதற்குறுப்பு
வாய்மையின் ஆராயின் நான்கு

10. மரக்கால்

மாயவன் ஆடல் மரக்கால் அதற்குறுப்பு
நாமவகையிற் சொல்லுங்கால் நான்கு

11. பாவை

பாவை திருமகள் ஆடிற் றதற்குறுப்
போவாமல் ஒன்றுடனே ஒன்று. *சிலப். 3 : 14 அடியார்க்.*

ஆடல் வகை

1. அல்லியம் மாயவன் ஆடல் அதற்குறுப்புச்
   சொல்லினரா றாகத் துணிந்து.
2. கொட்டி கடம்பமர்ந்தான் ஆடல் அதற்குறுப்
   பொட்டினார் மூன்றுடன் ஒன்று.
3. அறுமுகத்தன் ஆடல் குடைகூத் ததற்குப்
   பெறுமுறுப்பு நான்காகப் பேசு
4. குடத்தாடல் குன்றெடுத்தான் ஆடல் அதற்கு
   மடக்கிய ஐந்துறுப் பாம்
5. முக்கணன் ஆடிற்றுப் பாண்டரங்கம் மற்றதற்
   கொக்கு முறுப் பாறா உணர்.
6. மாயவன் ஆடிற்று மல்லாடல் மற்றதற்
   காய உறுப்புக்கள் ஐந்து.
7. துடியாடல் மங்கை எழுவர தாடற்
   கடியாம் உறுப்புக்கள் ஆறு.
8. கடையம் அயிராணி ஆடல் அதனிற்
   குடைய உறுப்பைந்தோ டொன்று
9. காமன தாடலாம் பேட்டா டதற்குறுப்பு
   நாமக வாராயின் நான்கு
10. மாயவன் ஆடல் மரக்கால் அதற்குறுப்
    பேய்வன ஈரிரண் டென்

11. திருவாடல் பாவை அதற்குறுப்புத் தேரின்
ஒருவா திரண்டுடன் ஒன்று — *யா. வி. 96*

புரமெரித்தல் முதலியன ஆடியவாறு

புரமெரித்தல் சூர்மாத் துளைபடுத்தல் கஞ்சன்
உரனெரித்தல் வாணனைவா னுய்த்தல் - பெரிய
அரன்முத லாகவே லன்முதல் மாயோன்
அமர்முதல் ஆடிய வாறு — *சிலப். 3 : 14 அடியார்க்.*

நின்றாடலும் வீழ்ந்தாடலும்

1. நின்றாடல்

அல்லியங் கொடடி குடைகுடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்றாட லாறு. — *சிலப். 3 : 14 அடியார்க்.*

2. வீழ்ந்தாடல்

துடிகடையம் பேடு மரக்காலே பான்வ
வடிவுடன் வீழ்ந்தாடல் ஐந்து — *சிலப். 3 : 14 அடியார்க்.*

3. இருவகை ஆடலும்

பல்வரை நின்றாடல் ஆறுமற் றைந்துந்தன்
எல்லையில் வீழ்ந்தாடல் என். — *யா. வி. 96*

வைணவ நிலை

ஆட லின்றி நிற்பவை எல்லாம்
மாயோன் ஆடும் வைணவ நிலையே — *சிலப். 6 : 46 - 48அடியார்க்.*

ஆய்தம் மொழியில் வரும் வகை

ஆய்தந் தானே குறியதன் கீழ்த்தாய்
வலியதன் மேல்வந் தியலும் என்ப — *(கையனார்) யா. வி. 2*

ஆரிடம்

1. உலகியற் செய்யுட் கோதிய அளவிற்
குறையவும் விதப்பவும் குறையா ஆற்றல்
இருடிகள் மொழிதலின் ஆரிடம் என்ப — *(பாட்டியல் மரபு) யா. வி. 93*

2. ஆரிடச் செய்யுள் பாடுத்தற் குரியோர்
கற்றோர் அறியா அறிவுமிக் குடையோர்
மூவகைக் காலப் பண்புமுறை உணரும்
ஆற்றல் சான்ற அருந்தவத் தோரே — *(பாட்டியல் மரபு) யா. வி. 93*

3. மனத்தது பாடும் மாண்பி னோரும்
சினத்திற் கெடப்பாடும் செல்வி யோரும்
முனிக்கணச் செய்யுள் மொழியவும் பெறுப — *யா. வி. 93*

ஆளத்தி

1. மகரத்தி னொற்றாற் சுருதி விரவும்
பகருங் குறினெடில் பாரித்து - நிகரிலாத்
தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
மன்னாவச் சொல்லின் வகை *சிலப். 3 : 26 அடியார்க்.*

2. குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்தும்
நின்றார்ந்த மந்நகரந் தவ்வொடு நன்றாக
நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
ஆளத்தி யாமென் றறி *சிலப். 3 : 26 அடியார்க்.*

3. பாவோ டணைத லிசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டானும் - பாவாய்
எடுத்தன் முதலா விருநான்கும் பண்ணிப்
படுத்தமையாற் பண்ணென்று பார் *சிலப். 3 : 26 அடியார்க்.*

ஆனந்தக் குற்றம்

1. கூறுபுகழ் மரபின் உயர்ந்தோர் கூறிய
அறுவகை மரபின ஆனந் தம்மே *யா. வி. 96*

2. இறப்ப உயரினும் இறப்ப இழியினும்
அறத்தகை வழீஇய ஆனந் தம்மே
யா.கா.4, நவநீதப். 105 (அணியியல்)

3. சிறந்த மரபிற் றோர்ந்தவன் அறியப்
பன்னூல் வகுத்த பெற்றியின் நோக்கி
ஏதம் உறாமல் இயனெறிப் பகுத்தல்
தீதில் காட்சித் தெளிந்திசினோர் கடனே *(பருணர் பாட்டியல்)*
நவநீதப். 105

4. இயனெறி திரிந்த எழுத்தா னந்தமும்
சொன்னெறி வழீஇய சொல்லா னந்தமும்
புகழ்ச்சிநிலை திரிந்த பொருளா னந்தமும்
யாப்புநிலை திரிந்த யாப்பா னந்தமும்
தூக்குநெறி திரிந்த தூக்கா னந்தமும்
தொடைநெறி திரிந்த தொடையா னந்தமும்
நடையறி புலவர் நாடினர் இவையே *யா. வி. 96. யா. கா. 44*

எழுத்தானந்தம்

இயற்பெயர் சார்த்தி எழுத்தள பெழினே
இயற்பா டில்லா எழுத்தா னந்தம் *(அகத்தியனார்) யா. வி. 4*

பொருளானந்தம்

இறைச்சிப் பொருளை ஊறுபடக் கிளப்பினும்
புகழ்ச்சிக் கிளவியிற் பொருந்தா கூறலும்
உவமைக் காட்சியின் ஊனம் தோன்றினும்

இவையல பிறவும் இன்னவை வரினே.
அவையென மொழிப பொருளா னந்தம் *(அகத்தியனார்)*

யாப்பானந்தம்

முதற்றொடை மருங்கின் மொழிநிறுத் தொருபெயர்
இடைப்படுத் தவ்வழி இடுங்குசீர்ப் படினே
வாய்ப்ப நோக்கி வல்லோர் கூறிய
யாப்பா னந்தமென் றறைதல் வேண்டும். *(அகத்தியனார்)*

தூக்கானந்தம்

தாழா மரபினர் யாழொடு புணர்ந்த
பாவகை ஒருவனைப் பாடுங் காலைத்
தொல்வகை மரபின் அவன்பெயர் தோற்றி
ஏங்கினும் இடுங்கினும் எழுந்துபிரிந் திசைப்பினும்
தூங்கினும் குழறினும் தூக்கா னந்தம் *(அகத்தியனார்)*

தொடையானந்தம்

1. அளபெடை மருங்கிற் பாடப் படுவோன்
பெயரொடு தொகுப்பிற் பெற்றியில் வழுவாத்
தொடையா னந்தம் எனவே துணிக. *(அகத்தினயனார்)*

2. கழிநெடில் அசையும் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர் *(மாபுராணம்)*

3. உருவி யாகிய ஒருபெருங் கிழவனை
அருவி கூறுதல் ஆனந்த தம்மே

இசையானந்தம்

1. சிறையழி துயரொடு சிந்தையிற் பிரிந்த
கவலை கூர்ந்த கருணைக்குப் பெயரே
அவலம் என்ப அறிந்திசி னோரே

2. அவலம் என்பதற் கிசையெனப் படுவது
குறிஞ்சி புறநிலை பியந்தை யென்றா
பரந்த விகற்பிற் பாலை யாழே
கருதிய கற்பிற் காந்தார பஞ்சமம்
இசையா னந்தம் என்மனார் புலவர் *யா. வி. 96*

ஆனந்தப் பையுள்

களவினும் கற்பினும் கலக்க மில்லாத்
தலைவனும் தலைவியும் பிரிந்த காலைக்
கையறு துயரமொடு காட்சிக் கவாவி
எவ்வமொடு புணர்ந்து நனிமிகப் புலம்பப்
பாடப்படுவோன் பதியொடும் நாட்டொடும்

உள்ளுறுத் திறினே உயர்கழி ஆனந்தப்
பையுள் என்று பழித்தனர் புலவர் *(அகத்தியம்) யா. வி. 96*

ஆனைவிருத்தம் முதலியவற்றுக்குரியோர்

தானை பெற்ற தலைமை யோரையும்
ஏனைமுன் னோரைச் சொற்றன ராகத்
தானினி துரைப்பினும் தாழா தாகும் *நவநீதப். 41*

இசை (இசைக்கு ஆதார இடம்)

1. துய்ய வுடம்பளவு தொண்ணூற்றா றங்குலியா
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தான் - வையத்
திருபாலு நாற்பதோ டேழ்பாதி நீக்கிக்
கருவாகு மாதாரங் காண்

2. ஆதாரம் பற்றி யசைவ முதலெழுத்து
மூதார்ந்த மெய்யெழுத்து முன்கொண்டு - போதாரு
முந்தி யிடைவளியா யோங்குமிடை பிங்கலையால்
வந்துமே லோசையாம் வைப்பு *சிலப். 3 : 26 அடியார்க்.*

3. ஐவகைப் பூதமு மாய சரீரத்து
மெய்பெற நின்றியங்கு மெய்யெழுத்தால் - துய்ய
ஒருநாடி நின்றியங்கி யுந்திமே லோங்கி
வருமா லெழுத்துடம்பின் வந்து *சிலப். 3 : 26 அடியார்க்.*

இசைநூற் செய்யுள் அமைதி

வெண்பா இயலான் விரவுறுப் பின்றித்
தன்பா வகையொடு பொருந்திய பொருளே
ஒன்றுவிளைந் தற்ற இறுதித் தாகும். *தொல். பொருள். 465 பேரா.*

இசைப்பா

1. சந்தம் தாண்டகம் வெள்ளைச் செந்துறை
இன்னவை இன்றி அமைந்த இசைத்திறம்
எல்லாம் பாவினத் தியன்ற அன்றே *(மாமூலம்)*

2. இசையினுள் பாக்கள் இயலா ஆயின்
இசைதல் இற்றென உரைக்கவும் படுமே *(செய்யுள் வகைமை)*
நவநீதப். 68

இடந்தலைப்பாடு

பொழிலிடைச் சேரல் இடந்தலை சொன்ன
வழியொடு கூட்டி வகுத்திசி னோரே.

இடப்பொருள் உருபு

பின்சார் அயல்புடை தேவகை எனா
முன்இடை கடைதலை வலம்இடம் எனா. *நேமி. 78*

இயமம் முதலியன

1. இயமம்

பொய் கொலை களவே காமம் பொருணசை
இவ்வகை யைந்து மடக்கிய தியமம்

2. நியமம்

பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பய மாசாற் களித்தலொடு
பயனுடை மரபி னியம மைந்தே

3. ஆசனம்

நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென்
றொத்த நான்கி னொல்கா நிலைமையொ
டின்பம் பயக்குஞ் சமய முதலிய
அந்தமில் சிறப்பி னாசன மாகும்

4. வளிநிலை

உந்தியொடு புணர்ந்த விருவகை வளியும்
தந்த மியக்கந் தடுப்பது வளிநிலை

5. தொகைநிலை

பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை
ஒருவழிப் படுப்பது தொகைநிலை யாமே

6. பொறைநிலை (நிறை)

மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை.

தொல். பொருள். 35 நச்.
சிலப் 14 : 11 அடியார்க்.

7. நினைவு

நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே

8. சமாதி

ஆங்ஙனங் குறித்த வம்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி

சிலப் 14 : 11 அடியார்க்.
தொல். பொருள். 75 நச்.

இயற்கைப்புணர்ச்சி

காட்சி ஐயம் தெளிதல் நயப்பே
உட்கோள் தெய்வம் துணிதல்கைக் கிளையொடு
கலவி யுரைத்தல் இருவயினொத்தல்

கிளவி வேட்டல் நலம்புனைந் துரைத்தல்
பிரிவுணர்த் தல்லொடு பருவரல் அறிதல்
அருட்குணம் உரைத்தல் அணிமைகூறல்
ஆடிடத் துய்த்தல் அருமை அறிதல்
பாங்கியை அறிதல் எனவீரொன்பான்
நீங்கா இயற்கை நெறியென மொழிப. *திருக்கோவையார்*

இரவுக்குறி

இரவுக்குறியிடம்

இரவுக் குறியே இல்வரை இகவா
துணர உணர்த்த உரையி னான. *களவியல். 19*

இரவுக்குறி விளக்கம்

இரவுக்குறி வேண்டல் ஆற்றாமை கூறல்
நின்றுநெஞ் சுடைதல் நிலைகண்டு நேர்தல்
உட்கோள் வினாதல் உட்கொண்டு வினாதல்
குறியிடங் கூறல் குறியேற் பித்தல்
இரவர வுரைத்தல் ஏதங் கூறல்
குறைநேர்த லோடு குறைநயப் புரைத்தல்
மயில்மேல் இசைத்து வரவுணர்ந் துரைத்தல்
தாய்துயில் அறிதல் தலைவிதுயி லெடுத்தல்
இடத்துய்த்து நீங்கல் தளர்வகன் றுரைத்தல்
மருங்கணைத லோடு முகங்கண்டு மகிழ்தல்
பள்ளியிடத் துய்த்தல் பள்ளியிடத் துய்த்து
வரைவு கடாவி வரவு விலக்கல்
வரைவு டம்படா தாற்றா துரைத்தல்
அதரிடைச் செலவிற் கிரக்கங் கூறல்
இருளற நிலவு வெளிப்பட வருந்தல்
வேற்றுக் குறிகூறல் கடலிடை வைத்துத்
துயரறி வித்த தோழியும் இன்றித்
தானே கிடந்து தனிமையுற் றாற்றும்
காம மிக்க கழிபடர் கிளவி
காப்புச்சிறை மிக்க கையறு கிளவி
ஆறுபார்த் துற்ற அச்சக் கிளவி
தன்னுட் கையா றெய்திடு கிளவி
நிலைகண் டுரைத்த நெடுங்கடற் சேர்த்தல்
அலரறி வித்தலோ டாறைம் மூன்றும்
இரவுக் குறியிவை என்றிசி னோரே. *திருக்கோ.*

இருக்கை வகை

பதுமுக முற்கட் டிதமே யொப்படி
இருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகம்

தனிப்புட மண்டில மேக பாதம்
உளப்பட வொன்பது மாகும்
திரிதர வில்லா விருக்கை யென்ப *சிலப். 28 : 23-26 அடியார்க்.*

இருதிணைப் பன்மை விகுதி

கள்ளென் இறுதி இருதிணைப் பன்மையும்
கொள்ளும் பகர வகரமும் அற்றே. *நேமி. 61*

இருமை

இருமை பெருமையும் கருமையும் செய்யும் *தொல்.சொல். 390 இளம்*

இலேசம்

மறைந்த பொருண்மற் றொன்றின் இலக
இயம்புதல் இலேசின் இலக்கண மாகும். *வீரசோ.151*

இறைச்சி

செவ்விய உரிப்பொருட் கேது வாகவே
எவ்வகை இறைச்சியும் இயற்றுப தெரிந்தே *யா. வி. 96*

இன்பம்

நவையறு மொழியினும் நயத்தினும் பொருளினும்
சுவைதரத் தொடுக்கும் தூக்கே இன்பம். *வீரசோ.149*

இனம் கொள்ளுதல்

1. ஒருபுடையால் ஒப்புரைப்பின் மற்றுமோர் பாவிற்
கொருபுடையால் ஒக்குமா றுண்டாம் - இருபுடையும்
ஒப்பித்துக் கோடுமோ ஒன்றிற்கே சார்த்துதுமோ
எப்பெற்றிக் கோடும் இனம்? *யா.வி. 95*

2. குன்றி ஏய்க்கும் உடுக்கையென் றாற்கரி
தொன்றுமோ சிவப் பொன்றுமோ அவ்விரண்
டொன்றி நின்றவென் றோதுது மோ எனின்
நின்ற தோர்வர லாற்றோடு நிற்குமே *யா. வி. 95*

3. வெள்ளைக்குச் செப்பல் அகவற் கசவலே
துள்ளலே தூங்கல் கலிவஞ்சிக் குள்ளாகும்
தொன்னூற் புலவர் துணிவெனிற் பாவினமும்
சொன்னூற் புலவர் துணிவு. *யா. வி. 95*

ஈதல்

ஈதற் றொழிலின் முதற்காரணம்

உடைமை இரக்கப் பாடு துணிவே
தடையின்மை என்ன நடைபெறு நான்கும்
ஈதற் றொழில்முதற் காரண வினையே. *தொல். பாயிர. அரசஞ்.*

ஈதல் இயற்கை

ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
தெளிந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர். *தொல். பாயிரம். இளம்.*

ஈவோற்கிசையும் இடம்

ஈவோன் இருக்கை இடனும் அளித்தல்
மேவல் இடனும் நிலையின ஆகலும்
அவன்முகம் கொள்வோர்க் கமைவ தாகலும்
அவர்முக மவனுக் கமைவதாகலும்
ஆவகை நான்கும் மேவிய தென்ப
ஈவோற் பற்றி இசையும் இடனே.

ஈவோற் பற்றிய துணைவினை

கொள்வோன் உணரப் பன்னெறி குறித்தல்
அவனுளத் தச்சம் சிவணச்செய் யாமை
பன்னாட் கன்றி அந்நாட் களத்தல்
ஐயம் திரிபே அறியாமை என்னும்
முக்குற் றத்துட் புக்கொளி யாமல்
அவனுளங் கொள்ள அதனைக் காட்டல்
எனநான் கென்ப ஈதற் றொழிற்கண்
ஈவோற் பற்றி இயலும் துணைவினை.

ஈதற் பொருட்டுணை வினை

தொகையினும் வகையினும் இத்துணைத் தென்னப்
பொருண்மை காட்டலும் புகன்றன தமக்குள்
வேறுபா டாதல் விளங்கக் காட்டலும்
பொதுமை சிதையாமற் பல்வகைத் தாக்கலும்
சிறப்புந் தனித்தனி நிறுத்துக் காட்டலும்
எனநான் கென்ப ஈதற் றொழிற்கட்
செயப்படு பொருளிற் றிகழுங் துணைவினை

அளித்தற்பயன்

உயர்நன் மதிப்பும் உவந்தடைந் தாரை
உறுதி உறுத்தலும் உயர்புகழ் நிறுத்தலும்
அறம்பொருள் இன்பம் வீடடைதலு மென்னத்
திறன்படு நான்கும் உரன்பட அளித்தற்
கெய்திய பயனெனல் மெய்பெறத் தோன்றும். *தொல். பாயிர. அரசஞ்.*

ஈவோர் வகை

கற்கப் படுவோர் படாதோர் என்றா
எனவிரு வகையர் ஈவோர் என்ப. *இ. வி. பாயிரம்.*

உடம்படுமெய்

1. உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதல் மொழிவருங் காலை யான.

2. இறுதியும் முதலும் உயிர்நிலை வரினே
உறுமென மொழிப உடம்படு மெய்யே. *தொல். எழுத். 140 நச்.*

உடன்போக்கு

பருவங் கூறல் படைத்துமொழி தல்லொடு
மருவமர் கோதையை மகட்பேச் சுரைத்தல்
பொன்னணி யுரைத்தல் பொருள்விலை கூறல்
வன்னமென் னடையால் அருமைகேட்டழிதல்
தளர்வறிந் துரைத்த தாழ்குழல் ஆடல்
உளநினை வுரைத்தல் உடன்கொண்டு சேறற்
கருமை உரைத்தல் ஆதரங் கூறல்
மருவிய தடங்கயல் வாழாள் என்றல்
பொருவரு கற்பின் புனைநலன் உரைத்தல்
துணிந்தமை கூறல் துணிவு கேட்டல்
துணிவறி வித்தல் தொல்லைநாண்விடல்
துணிவெடுத் துரைத்தல்கொண் டகலென உரைத்தல்
அடிவழி நினைந்துநின் றவனுளம் வாடல்
கொடியிடையாளைக் கொண்டு சென் றுய்த்தல்
ஓம்படுத் துரைத்தல் வழிப்படுத் துரைத்தல்
தேம்படு கோதையைத் திறலடு வேலோன்
பையக் கொண்டேகல் பயங்கெட உரைத்தல்
மையமர் கண்ணினை வழியயர் வகற்றல்
நெறிவிலக் கல்லொடு நெறியிடைக் கண்டவர்
செறிவெடுத் துரைத்தல் சேயிழை யாளுடன்
வழிவிளை யாடல் வழியெதிர் வருவோர்
எழில்நகர் அணிமை இதுவென உரைத்தல்
நகர்காட் டல்லொடு நகரிடைப் புக்குப்
பதிபரி சுரைத்தல் பாங்கியைக் கிட்டி
மதிநுத லாளை வளர்த்தவள் கேட்டல்
அறத்தொடு நிற்றல் அதுகேட் டழுங்கல்
திறப்பா டுன்னிச் செவிலிகவன் றுரைத்தல்
அடிநினைந் திரங்கல் அதுதாய்க் குரைத்தல்
மடவரல் போக வாடி யுரைத்தல்
கிளிமொழிக் கிரங்கல் கிளர்சுடர்ப் பராய்தல்
அளிபெறு பருவத்திற் கவள்கவன் றுரைத்தல்
நாடத் துணிதல் நற்றாய் நயந்தவர்

கூடக் கரையெனக் கொடிக்குறி பார்த்தல்
சோதிடங் கேட்டல் சுவடுகண் டறிதல்
ஏதமற் றவைகண் டிரங்கி உரைத்தல்
வேட்ட மாதரைக் கண்டு வினாவல்
புறவொடு புலத்தல் குரவொடு வருந்தல்
திறலருந் தவத்தொடு செல்லா நின்ற
மாவிர தியரை வழியிடை வினாவல்
வேதியர் தம்மை விரும்பி வினாவல்
புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினாவல்
மணந்தரு குழலாள் மன்னிய நிலையொடு
வேங்கை பட்டது கண்டு வியத்தல்
ஆங்கவர் இயைபணி அவட்கெடுத் துரைத்தல்
மீள உரைத்தல் மீளா தவளுக்
கூழ்முறை இதுவென உலகியல் புரைத்தல்
அழுங்குதாய்க் குரைத்தல் ஐம்பதொ டாறும்
உழுங்கொலை வேலோன் உடன்போக் காகும். *திருக்கோ. 16*

உடனிலைக் கூட்டம்

பெரியத னோடு செயலால் இழிந்ததை
உரிய தாக்குதல் உடனிலைக் கூட்டம் *வீரசோ. 152*

உணர்தல் வகை

1. முன்னுற உணர்தல்

வாட்டம் வினாதல் முன்னுற உணர்தல்
கூட்டி யுணரும் குறிப்புரை யாகும்.

2. குறையுற உணர்தல்

குறையுற்று நிற்றல் அவன்குறிப் பறிதல்
அவள்குறிப் பறியலோ டவர்நினை வெண்ணல்
கூறிய நான்கும் குறையுற உணர்வெனத்
தேறிய பொருளிற் றெளிந்திசி னோரே

3. இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல்

ஐயம் நாடல் ஆங்கவை இரண்டும்
மையறு தோழி அவன்வர உணர்தல்.

உத்தமக்கருவி

மத்தளம் தண்ணுமை மிடக்கை சல்லிகையென
வைத்த நான்கு முத்தமக் கருவி *சிலப். 14 : 151 அடியார்க்.*

உதாத்தம்

செல்வம் ஆயினும் பதியே ஆயினும்
வல்லிதிற் புகழும் வாய்மைய துதாத்தம். *வீரசோ. 152*

உதார்த்தம்

செல்வமும் உள்ளமும் சீர்மைசெப் பிடுதல்
ஒள்ளிய உதார்த்தமென் றுரைத்தனர் கொளலே. *வீரசோ. 169*

உதாரதை

ண்பனி முகில்தகைத் தலையாகு வள்ளல்
ஒண்புகழ் கிளப்ப துதாரதை யாகும். *வீரசோ. 149*

உயர்நடைப் பொருள்

இயன்ற செய்யுட் கியைந்த பொருளை
உயர்ந்த நடையால் உணரக் கூறலும்
அருங்கல மொழியால் அரிதுபடக் காட்டலும்
ஒருங்கிரண் டென்ப உயர்நடைப் பொருளே *அணியியல் உடையார்/ யா. வி. 23*

உரிப்பொருள்

போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் - நோக்கொன்றி
இல்லிருக்கை முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருக்கும் ஐம்பால் தொகை *நம்பியகப் பொருள். இறுதி.*

உருவகம் (அணி)

உவமை போலப் பண்பொடும் இசைந்து
தானே அதுவாவ துருவக மாகும். *வீரசோ. 150*

உருவக வகை

1. உவமை உருவகம்

பொருளின் மெய்ம்மை காட்டிப் பொருளை
உருவின் நுவலின துவமை உருவகம்.

2. தெற்றுருவகம் (விரோத உருவகம்) :

எஞ்சிய பண்பில் இயையினு மொழிதொழில்
செஞ்சொலால் கிளப்பது தெற்றுரு வகமே.

3. தொகை உருவகம்

மிக்க உவமை விரியா துரையிற்
றொக்கு நிற்பது தொகையுரு வகமே

4. அவ்விய உருவகம்

கூறிய பொருள்வயிற் கொளுத்திய கிரியை
வேறா யிருப்பதவ் வியஉரு வகமே.

5. ஏது உருவகம்

மரபுடைப் பொருளைமற் றதுவா லதுவெனும்
உரைபெறில் ஏதுரு வகமா மென்ப.

6. பண்புருவகம்

ஒண்பொருட் பெற்றி உற்றதற் குரிய
பண்பொடு கிளப்பது பண்புரு வகமே.

7. விரியுருவகம்

கருதிய பொருளைக்கலையில் தொகாமல்
விரியத் தொடுப்பது விரியுரு வகமே.

8. உவமை உருவகம்

ஒண்டரு பொருளை உருவக மாக்குதல்
உண்டெனில் உவமை உருவகம் ஆகும்.

9. சிலேடை உருவகம்

நயப்படு சிறப்பின் நவைதீர் இருபொருட்
கியம்புதல் சிலேடை எனும்உரு வகமே.

10. சகல உருவகம்

ஒருபொருட் கேற உருவகம் பலமொழி
தருமெனில் உருவகம் சகல மாகும்.

11. இயைபுருவகம்

அசைவில் கருவி யவற்றாற் றொழிலில்
இசையும் என்ப தியைபுரு வகமே.

12. தொகைவிரி உருவகம்

தொகையும் விரியும் தொக்குடன் கிளப்பது
தொகை விரி யென்று சொல்லினர் புலவர்.

13. முற்றுருவகம்

சொற்ற அவயவ அவயவி இடம்பிற
முற்ற உரைப்பது முற்றுரு வகமே.

14. அவயவி உருவகம்

இயையும் உறுப்பொழித் துறுப்புடைப் பொருளை
அமைய உரைத்தல் அவயவி உருவகம்.

15. உறுப்புருவகம்

அவயவி ஒழிய அவயவந் தன்னை
உருவகஞ் செய்வ துறுப்புரு வகமே.

16. தத்துவாபன உருவகம்

உண்மைப் பொருள்மறுத் தொப்புமைப் பொருள்மேற்
றன்மைசெய் உருவகம் தத்துவா பனமே.

17. இயைபிலி உருவகம்

பலபொருள் இயையாப் பண்பின் வருவ
தியைபிலி உருவகம் என்மனார் புலவர்.

18. சமாதான உருவகம்

சீரிய உருவகஞ் செப்பிற் பயன்தரக்
காரணங் கற்பித்தல் சமாதான மாகும்.

19. விதிரேக உருவகம்

ஏற்றிய பொருள்கள் இரண்டினும் இயல்பாம்
வேற்றுமை கூறிலது விதிரே கம்மே.

20. தடைமொழி உருவகம்

இணங்கிய பொருள்கள் இயையுங் குணத்தை
விளங்க விளம்பும் தடைமொழி உருவகம்.

21. உருவக உருவகம்

உருவகந் தன்னை உருவகஞ் செய்வ
துருவக உருவகம் என்மனார் புலவர்.

22. ஏகாங்க உருவகம்

ஒன்றின் உறுப்புப் பலவற்றி னுள்ளும்
ஒன்றினை உருவகம் உரைப்ப தேகாங்கம். *வீரசோ. 157*

உரைவகை

உரை

1. உரையெனப் படுவ துணருங் காலைக்
கருத்தே கண்ணழி வுதாரணம் பொழிபொருள்
அகலம் நுட்பமென் றங்ஙன முடிய
உணர்த்தும் சொல்வகுத் துரைத்தபின்
எழுத்தெழுத் தாகப் பொருள்தெரிந்து
சூத்திரம் படலம் பிண்டமென் றவற்றான்
யாப்புற வகுத்த நூற்பொருள் வழாமை
நோக்கொடு மாறுகோள் ஏற்புழி யறிந்து
முதல்நடு இறுதி உரைமாறு படாமை
நிரல்நிறை சுண்ணம் அடிமறி ஆற்றொழுக்
களைமறி பாப்புவிற் பூட்டுத் தாப்பிசை
கொண்டுகூட் டாகிய வகையால்
ஏற்பக் கூறல் உரையெனப் படுமே

2. வடமொழி கூட்டினும் வரையார் ஆண்டே. *நவநீதப். 72*

3. சூத்திரந் தோற்றல் சொல்வகுத்தல்
சொற்பொருள் உரைத்தல் வினாவுதல் விடுத்தல்
விசேடங் காட்டல் உதாரணங் காட்டல்
ஆசிரிய வசனங் காட்டல் அதிகார வரவுகாட்டல்
தொகுத்து முடித்தல் விரித்துக் காட்டல்
துணிவு கூறல் பயனொடு முடித்தல் *நவநீதப். 72*

4. பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே.

5. பொழிப்புரை

பாடம் கண்ணழி வுதாரணம் என்றிவை
நாடித் திரிபில ஆகுதல் பொழிப்பே. *தொல். பாயிரம். இளம். இ. வி. பாயிரம்*

6. அகலவுரை

தன்னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினும்
துன்னிய கடாவின் புறந்தோன்று விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர். *தொல். பாயிரம். இளம். இ. வி. பாயிரம்*

7.. நுட்பவுரை

ஏதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம். *தொல். பாயிரம். இளம். இ.வி. பாயிரம்*

8. எச்சவுரை

துடைத்துக்கொள் பொருளே எச்சம் என்ப. *தொல். பாயிரம். இளம். இ.வி. பாயிரம்*

9. இயல்புரை

இயல்பெனப் படுவ தியல்புழி எண்ணில்
இன்னுழி யாயின்ன தியன்றதிது வென்ன
இன்ன முரைப்ப தென்மனார் புலவர் *வீரசோ. 90 - 94*

10. கண்ணழிபுரை

சொற்றொறும் சொற்றொறும் துணிபொருள் உரைத்தல்
கற்றறி புலவர் கண்ணழி பென்ப. *நம்பி. 1*

11. பொழிப்பு

பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே. *யா. கா. 1*

12. அகலவுரை

அகலம் என்ப தாசறக் கிளப்பின்
விகலம் இன்றி விரித்துரைப் பதுவே. *யா. கா. 5*

13. காலவுரை

ஆண்டே அயனம் இருதுத் திங்கள்
பக்கம் நாளே கிழமை நாழிகை
அஞ்சுங் கலையே காட்டே முதலா
ஈண்டிதற் கேற்ப திதுவென எடுத்துக்
காண்டக உரைப்பது கால உரையே. *வீரசோ. 90 - 94*

14. கருத்துரை

1. கருத்தெனப் படுவது கருத்துறத் தெரியில்
அறிதல் அறியாமை ஐயுறல் என்னும்
முறையுளி நோக்கின் மூவகைப் படுமே.

2. அறிந்தறி யாமை அறிந்தவை ஐயுறல்
அறியா தறிதல் ஐயுற் நிலாமை
எனநனி வகுத்த இத்திறல் வகைத்தே. *வீரசோ. 90 - 94*

15. புடையுரை

புடையுரை என்பது நடைவகை தெரியின்
திறந்தெரி பாட்டி னிற்பொரு ளன்றியும்
புறம்பெற வருஉம் பொருள்வகை யுடைத்தே. *வீரசோ. 90 - 94*

16. பத்து விதப் பனுவலுரை

சொல்லே சொற்பொருள் சோதனை மறைநிலை
இலேசே எச்சம் நோக்கே துணிபே
கருத்தே செலுத்தலென் நீரைங் கிளவியும்
நெறிப்பட வருவது பனுவல் உரையே *யா. வி. பாயிரம்.*

உரைத்தொழில்

வயிர ஊசியும் மயன்வினை இரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் ஆணியும்
தமக்கமை கருவியும் தாமாம் அவைபோல்
உரைத்திறம் உணர்த்தலும் உரையது தொழிலே. *(அகத்தியனார்) நேமி.*
பாயிரம். குறிப்புரை. நன். மயிலை (அகத்தினை)

உரைவகை

நெஞ்சிற் குரைத்தலும் கேட்போர் இன்றி
அந்தர மருங்கில் கூறலும் அல்லது
சொல்லலுங் கேட்டலும் இல்லை ஆக
அகத்திணை மருங்கின் ஐவகை யானும்
இகத்தல் என்ப இவ்வயி னான. *(கைக்கினைப்படலம்)*
தொல். பொருள். 472 பேரா.

உவமை

உவமா னத்தோ டுவமே யத்தினுக்
குரியபண் புறுத்துவ துவமை யாகும். *வீரசோ. 150*

உவமை - உவமிக்கப் பெறும் பொருள் நிலை

பொருளது புரைவே புணர்ப்போன் குறிப்பின்
மருளற வரூஉம் மரபிற் றென்ப. *களவியல். 2*

உவமை விளக்கம்

1. உவமம் எனப்படுவ தவமற விரிப்பிற்
புகழே பழியே நன்மையென் றின்ன
நிகழும் ஒப்புமை நேர்ந்தன முறையே.

2. அவைதாம்,
கண்ணே செவியே மூக்கே நாவே
மெய்யே மனமே விளம்பின ஆறினும்
ஐயமின்றி அறுமூன் றாமே.

3. அவற்றுள்,
வடிவே வண்ணம் மொழிதன் மையென
நொடிவ கண்ணின் நோக்கிய ஒப்பே.

4. எழுத்தியல் ஒலியும் எழுத்தில் ஒலியுமென
விழுத்தகு செவியின் வேண்டொப் பிரண்டே.

5. இனிய நாற்றமும் இன்னா நாற்றமும்
துன்னிய மூக்கினில் தோற்றும் பண்பே.

6. அறுவகைச் சுவையின் நாவின் ஒப்பே.

7. நடுவுநிலைமை தண்மை வெம்மை
அறிவு நிலைமை பன்மை விழுப்பம்
நொப்பமூ மழுக்குச் செருச்செருப் பென்றிவ்
வொன்பதும்
ஒழிவரும் பெருமை உடம்பின் ஒப்பே.

8. வினையும் பயனும் குலனும் குணனும்
அளவும் நிறமும் எண்ணோ டெழுவகைப்
பொறியின் ஆட்சியின் ஆடலின்
எய்திய வகையறிந் திசைப்ப தியல்பே.

9. மொழிந்த ஏழு முதலும் சினையும்
பண்பொடு பத்தும் ஐவகை சேர்த்திக்
கொண்டே கூறினர் குறிப்புணர்ந் தோரே.

10. இல்பொருள் கேள்வி துணிவே உவமம்
சொல்லிய நன்மையிற் சொல்லும் துணிந்தோர்
கருதப் படுவகை தெரிந்துநனி வெறாமை
பொருளும் உறுப்பும் முதலாக் கூறினும்
ஏற்புழி நோக்கிய எச்ச மாக
வாய்ப்பக் காட்டுக நூற்பொருள் வழக்கே.

11. அவைதாம்,
பாட்டின் பொருளொடு கூட்டித் தோன்றியும்
பொருவறு வனப்பிற் புனைந்துரை யாகியும்
இருவகை இயல்பும் ஏற்ப வருமே.

12. ஒப்பிக்கப் படுவ துவமமும் பொருளும்
ஒப்புடைக் காதல் புகட்சிதன் உயர்பே
அப்பொருள் அதுவாய்க் கிடப்பினும் அதுவே.

13. இரண்டு மூன்று முதலாக் குணங்கள்
திரண்டவொப் புமை திருந்த உடைத்தே.

14. முடிக்கப் படுவத்தும் மொழிவதும் இருகுணம்
அடுக்க வரினே தலைப்பா டொப்பாம்
கிளர்ந்தன உவமை கேட்போர்க்குத் தகுமென
உளங்கொளும் பெற்றியின் உருபுநனி பெற்றுக்
கண்ணுள் ளதுபோற் காட்டுவ னாயின்
ஒண்மை யுடையோர் உணர்ந்தனர் கொளலே.

15. அவ்வகைத் தன்றெனில் ஆதனும் பித்தனும்
ஒவ்வா வானை ஒப்பித் தோனே.

16. நோக்கிய ஒப்பினும் ஒரோஒ நோன்பொருள்
ஆக்கி உரைப்ப ததிசய ஒப்பே

17. ஐயமுந் துணிவு மாக வொப்புமை
செய்யவும் பெறுவர் தெரிந்திசி னோரே.

18. ஆங்க,
ஒப்புமைச் சொற்களைச் செப்புங் காலை
ஒப்ப உறழ உணர்ப்ப உரப்ப
ஏய்ப்ப மெத்த மெய்த்த விளக்கப்
புரையப் பொருந்தப் பொற்பக் கடுப்பக்
குரையக் கதழக் கருதக் கூட
நிகர மேவ நோக்க ஓராங்
கிகல ஏம இயைப்ப ஒப்ப
மான மருள மறல நீக்க
நீர அனைய நோக்கத் தொடிய
நுணங்கப் படிப துணிப்ப உன்ன
வணங்க வாவ மலைய என்ன
வெப்பத் தொழப்ப விட்ட விருள
இன்ன அன்ன என்றா இயையும்
துன்னும் என்ப துணிந்திசி னோரே.

19. உருவம் ஆயின் எஞ்சக் கிளத்தல்
இப்பொருள் இடையும் ஏற்பித் துரைப்பர்
பொருளறு கேள்விப் புலமை யோரே.

20. எல்லாப் பொருட்கும் எல்லா இயல்பும்
சொல்லார் உவமை ஒருபுடைச் சொல்வர்
உவமைக் குவமை வழுவென மொழிப.

21. நற்பொருள் உவமை தலைமைக் கேற்ப
திப்பொருள் நிற்கும் பண்கமைக்குந் திகழ்ந்தே.

22. அவற்றுள்,
ஈங்குத் தோன்றின ஒப்புமை இதுவெனப்
பாங்கறிந் துரைப்பது பண்பெனப் படுமே. *வீரசோ. 90 - 94*

உவமை வகை

1. புகழ்ச்சி உவமை

போது நற்புகழ்ச்சி பொருளைப் புகழா
தேதுவைப் புகழ்தல் என்மனார் புலவர்.

2. பழிப்புவமை

இழுக்கில் பொருளை உயர்த்தி உவமையைப்
பழிக்கப் படுவது பழிப்பெனப் படுமே.

3. விரோத உவமை

புகழ்பெறு பொருளும் பொருவும் ஒன்றையொன்
றிகழ்வது விரோதம் என்மனார் புலவர்.

4. கருத்துவமை

பொருந்திய பொருட்கிது பொருளெனக் கருதுதல்
கருத்தின் உவமை என்மனார் புலவர்.

5. இசையுவமை

பொருத்த மின்மைப் பொருவையும் பொருளையும்
இருத்தியும் இசைவ திசையுவமை யாகும்.

6. உண்மையுவமை

பொருளையும் சினையையும் பொருவன் றென்னும்
உரையினிற் கோடல் உண்மை உவமை.

7. ஐயுவமை

பொய்யறு பொருளையும் பொருவையும் கருதி
ஐயப் படுவ தைய உவமை.

8. இகழ்ச்சி உவமை

இகழப் படுபொருள் இயம்பிய பொருவை
நிகர்க்கும் என்பது நிரம்பிய இகழ்ச்சி.

9. எதிர்ப்பொருள் உவமை

இப்படி என்ப தியம்பிய துடைமையில்
அப்பொரு வாமெனும் அற்புத உவமை.

10. நோக்குவமை

சாலும் பொருட்கெதிர் பொருவெனும் பொருண்மொழி
நூலோர் நோக்குதல் நோக்கெனப் படுமே.

11. இதரேதர உவமை

மேதக எதிரெதிர் விளம்பிய பொருளும்
எதிரும் பொருவுதல் இதரே தரமே.

12. மிகையுவமை

இவ்வயிற் கண்டது பொருளையும் பொருவையும்
இவ்வயிற் கண்டதென் பதுமிகை யுவமை.

13. பண்புவமை

ஒண்பொருள் வரஅவ் வுவமையோ டொன்றிய
பண்பொடு வருதல் பண்பெனப் படுமே.

14. உயர்புவமை

ஏனோர் மொரிபொரு விகந்தொரு தனக்குத்
தானே பொருவெனத் தருமொழி யுயர்பே.

15. நியமவுவமை

வேறுரைப் பதுபிழை யுவமை இதுவெனத்
தேறிய பொருவுடைத் திறந்தது நியமம்.

16. அநியமவுவமை

உரிய உவமை ஒண்பொருட் கிதுகீழ்க்குப்
பொருவே றெனினாம் அநியம உவமை.

17. தடையுவமை

ஒப்பார் பொருவுக் கொருபிழை காட்டித்
தப்பும் என்பது தடைமொழி உவமை.

18. தெற்றுவமை

பொருள்போல் அமைந்த பொருவிது என்னும்
மரபொடு தெற்றி வருவது தெற்றே.

19. சிலேடையுவமை

புரந்தசொற் பொருவையும் பொருளையும் ஒன்ற
இரண்டையுஞ் சிலேடித் திசைப்பது சிலேடை.

20. துணிவுவமை

அன்னது பொருவன் றெனஅடை விளம்பி
இன்னது மெய்ப்பொருள் என்பது துணிவே

21. உம்மையுவமை

இக்குறி யதனால் அன்றி இதனாலும்
ஒக்குமென் றிசைப்ப தும்மை உவமை.

22. பொருளுவமை

கருதிய பொருட்குக் காரணம் தவிர்த்துப்
பொருவை இயம்புதல் பொருளெனப் படுமே.

23. ஒப்புமைக் கூட்ட உவமை

இப்படி எனப்பொருள் இரண்டுநற் பொருவுதல்
ஒப்புமைக் கூட்டமென் றோதினர் புலவர்.

24. ஆயுத வுவமை

விடாதவப் பொருட்கு விதிசேர் உவமை
அடாத தியம்புதல் அயூத உவமை.

25. வாக்கியப் பொருளுவமை

பழுதில் உவமைப் பலபதஞ் சேர்மொழிப்
பொருளில் விளக்கம் புணர்ப்பது வாக்கியம்.

26. கோவையுவமை

பண்டை யோருரை பலபொருள் தமக்குக்
கொண்டு கூறுதல் கோவையென் றனரே.

27. ஏது உவமை (காரணஉவமை)

இதனால் இப்பொருள் ஒக்கும் எனக்குணம்
துதியாற் சொல்லுதல் ஏது உவமை.

28. மயக்கவுவமை

இதுபொருள் அதுபொரு என்றுணர்த் திலமென
உவமையின் மலவினை உரைப்பது மயக்கே.

29. பலவியல் உவமை

உயர்பொருள் ஒன்றை ஒக்கும் உவமை
பலவுடன் கூறுதல் பலவியல் ஆகும்.

30. விக்கிரிய உவமை

இத்துணைப் பொருவில்வந் தெதிர்ந்தது பொருளென
அத்துணை மொழிவரின் அதுவிக் கிரியம்.

31. சந்தான உவமை

தொலைப்படும் பொருவையும் பொருளையும் தொடர்ந்து சொற்
சலிப்பது பொருளுறிற் சந்தா னம்மே. *வீரசோ. 154 - 155*

அடுத்துவரல் உவமை (உவமைக்குவமை)

1. அடுத்துவரல் உவமை இல்லென மொழிப.
2. உவமைக் குவமை இல்லென மொழிப. *யா. கா. 44*

ஊக்கம்

தாக்கிய இடத்தெனைத் தடுப்பார் யாரென
ஊக்கம் கூறுதல் ஊக்கம் ஆகும். *வீரசோ. 152; 168*

எச்சம்

பெயரெச்சம்

காலமும் வினையும் தோன்றிப்பால் தோன்றாது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே *அகத்தியம்/ நன். மயிலை*

வினையெச்சம்

காலமும் வினையும் தோன்றிப்பால் தோன்றாது
வினைகொள் ளும்மது வினையெச் சம்மே. *அகத்தியம்/ நன். மயிலை.*

எண்பேராயம் (ஐம்பெருங்குழு)

கரணத் தியலவர் கரும காரர்
கனகச் சுற்றங் கடைகாப் பாளர்
நகர மாந்தர் நளிபடைத் தலைவர்
யானை வீர ரிவுளி மறவர்
இனைய ரெண்பே ராய மென்ப *(சிலப். 5 : 157 - 160 அடியவர்)*

ஐம்பெருங்குழு

அமைச்சர் புரோகிதர் சேனா பதியர்
தவாத்தொழிற் றூதுவர் சாரண ரென்றிவர்
பார்த்திபர்க் கைம்பெருங் குழுவெனப் படுமே *(சிலப். 5 : 157 - 160 அடியார்க்)*

சாந்துபூக் கச்சாடை பாக்கிலை கஞ்சுகநெய்
ஆய்ந்த விவரெண்ம ராயத்தார் - வேந்தர்க்கு
மாசனம்பார்ப் பார்மருத்தர் வானிமித்த ரோடமைச்சர்
ஆசி லவைக் களத்தா ரைந்து *(சிலப். 5 : 157 அரும்பத)*

எழுத்து

நிலையும் வளியும் முயற்சியும் மூன்றும்
இயல நடப்பது எழுத்தெனப் படுமே *தொல். எழுத். 102. நச்.*

எழுத்து முதலிய காரணப்பெயர்கள்

எழுதப் படுதலின் எழுத்தே; அவ்வெழுத்து
அசைத்து இசை, கோடலின் அசையே; அசையினையந்து
சீர்கொள நிற்றலிற் சீரே; சீரிரண்டு
தட்டு நிற்றலிற் றளையே; அடியிரண்டு
தொடுத்தல் முதலாயின தொடையே; அத்தொடை
தூங்கித் தொடர்ந் திசைத்தலின் தூக்கெனப் படுமே *யா. வி. 1*

உயிரெழுத்து

1. அகரம் முதலா ஒளகாரம் ஈறா
இசையொடு புணர்ந்த ஈராறும் உயிரே *(சங்கயாப்பு) யா. வி. 2*

2. அகர முதல ஒளகார இறுவாய்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப *யா. கா. 4*

குறிலும் நெடிலும்

1. அ இஉஎ ஒஇவை குறிய மற்றை
ஏழ்நெட் டெழுத்தா நேரப் படுமே

2. குற்றெழுத் துத்தொண் ணூற்றைந் தாகும்;
நூற்றொடு முப்பத்து மூன்று நெடிலாம்;
இருநூற் றிருபத் தெட்டு விரிந்தன
உயிரே வன்மை மென்மை இடைமை *அவிநயம்)*

3. குறிலோ ரைந்தும் அறிவுறக் கிளப்பின்
அ இ உ எ ஒ எனும் இவையே *(சங்க யாப்பு) யா. வி. 2*

4. நெட்டெழுத்து: ஆஈ ஊஏ ஐஓ ஔவெனும்
ஏழும் நெட்டெழுத் தென்றல் இயல்பே *(சங்க யாப்பு) யா. வி. 2*

ஐகாரம் குறுகுதல்

குறுமை எழுத்தின் இயல்பே ஐகாரம்
நெடுமையின் நீங்கியக் கால் *யா. வி. 9*

ஆய்தத்தின் பெயர்

அக்கேனம் ஆய்தந் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே *அவிநயனார்) யா. வி. 2*

மெய்

1. ககர முதல னகர இறுவாய்
பதினெண் ணெழுத்தும் மெய்யென மொழிப *யா. கா. 4*

2. ககரம் முதலா னகரம் ஈறா
இவையீ ரொன்பது மெய்யென மொழிப *(சங்க யாப்பு) யா. வி. 2*

3. வன்மை என்ப கசட தபற
மென்மை என்ப ஙஞண நமன

இடைமை என்ப யரல வழள
இவைதாம்.
புள்ளியொடு நிற்றல் இயல்பென மொழிப
புள்ளியில் காலை உயிர்மெய் யாகும் *(சங்க யாப்பு) யா. வி. 2*

மூவினம் பிறத்தல்

முதலிடை நுனிநாப் பல்லிதழ் மூக்கிவை
வன்மை முதலாம் மும்மையும் பிறக்கும் *(அவிநயம்) யா. வி. 15*

இடையினவைப்பு

யரல வழள இடையினமாம் ஏனை
மரபு பிழையாத வைப்பு *யா. வி. 7*

உயிர்மெய்யெழுத்து

1. உயிரும் மெய்யும் புணர்ந்த புணர்ச்சி
   உயிர்மெய் யென்றாங் குணர்ந்தனர் கொளலே
2. உயிரும் மெய்யும் ஓராங் கியைந்த
   உயிர்மெய் யென்ப உணர்ந்திசி னோரே *யா. வி. 2*
3. உயிரீ ராறே மெய்ம்மூ வாறே
   அம்மூ வாறும் உயிரோ டுயிர்ப்ப
   இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே *நேமி. 3*

பொது சிறப்பு எழுத்துக்கள்

றனழள ஒவ்வும் தனியு மகாரமும்
தன்மைத் தமிழ்பொது மற்று. *(அவிநயனார்) நன். மயிலை.*

எழுத்தின் பிறப்பு

ஆற்ற லுடையுயிர் முயற்சியின் அணுவினையந்
தேற்றன ஒலியாய்த் தோன்றுதல் பிறப்பே. *(அவிநயனார்) நன். மயிலை.*

எழுத்திலக்கண வகை

எண்பெயர் முறைபிறப் பளவியல் வடிவு
புணர்தலோ டேழும் பொருந்திய வழக்கே. *(அவிநயனார்) நேமி. பாயிரம்*

எழுத்தும் சொல்லும்

மொழிமுதல இடைகடை - வரும் எழுத்து

தன்னை உணர்த்தின் எழுத்தாம்: பிறபொருளைச்
சுட்டுதற் கண்ணேயாம் சொல் *(அவிநயனார்) நன். மயிலை. 127*

கசதப ஙவ்வே ஆதியும் இடையும்
டறவிடை ணனாழ லளஇடை கடையே
ஞ நமய வவ்வே மூன்றிடம் என்ப. *(அவிநயனார்) நன். மயிலை.*

எழுத்துவகை (மற்றொரு முறை)

1. அவற்றுள்
உருவே உணர்வே ஒலியே தன்மையென
இருவகை எழுத்தும் ஈரிரண் டாகும்

2. காணப் பட்ட உருவம் எல்லாம்
மாணக் காட்டும் வகைமை நாடி
வழுவில் ஓவியன் கைவினை போல
எழுதப் படுவ துருவெழுத் தாகும்

3. கொண்டவோர் குறியாற் கொண்ட அதனை
உண்டென் றுணர்வ துணர்வெழுத் தாகும்

4. இசைப்படு புள்ளின் எழாஅல் போலச்
செவிப் புல னாவ தொலியெழுத் தாகும்

5. முதற்கா ரணமுந் துணைக்கா ரணமும்
துணைக்கா ரணத்தொடு தொடரிய உணர்வும்
அவற்றொடு புணர்ந்த அகத்தெழு வளியின்
மிடற்றுப்பிறந் திசைப்பது தன்மை எழுத்தே *யா. வி. 96*

அமுதெழுத்து

மங்கல மேவி யத்தோடு தோன்றினும்
அமுதெழுத் தேவரின் அவையுமாங் குரிய
மூப்பு மரணமும் நீக்கலும் அமுதொடு
பாட்டுண்டு முறையிற் பயனாகும் என்ப. *(பொய்கையார்) நவநீதப்.10*

நஞ்செழுத்து

நஞ்செனப் படுபவை ஒப்புடன் நிற்பின்
துஞ்சுதல் கெடுதலெனச் சொல்லினர் புலவர் *நவநீதப். 9*

ஐகாரம் ஔகாரம் சுருங்கி ஒலித்தல்

அளபெடை தனிஇரண் டல்வழி ஐ ஔ
உளதாம் ஒன்றரை; தனியும் ஐ ஆகும். *(அவிநயனார்) யா. வி. 2*

ஐ கார ஔகாரத் தன்மையவை

ஆய்தமும் யவ்வும் அவ்வொடு வரினே
ஐயென் எழுத்தொடு மெய்பெறத் தோன்றும்
உவ்வொடு வவ்வரின் ஔவிய லாகும். *(அவிநயனார்) யா. வி. 2*

எழுத்துப் போலி

அ ஐ முதலிடை ஒக்கும் ஒரோவழி *நேமி. 9*

ஏது

இப்படி யாதலின் இப்படி ஆயிற்
றென்னக் கிளப்ப தேது வாகும் *வீரசோ. 151*

ஏழிசை

சரிக மபதநியென் றேழெழுத்தாற் றானம்
வரிபரந்த கண்ணினாய் வைத்துத் - தெரிவரிய
ஏழிசையுந் தோன்று மிவற்றுள்ளே பண்பிறக்கும்
சூழ் முதலாஞ் சுத்தத் துளை *சிலப் 3 : 26 அடியார்க்.*

ஐயக்கிளவி

கண்டுபால் மயங்கும் ஐயக் கிளவி
நின்றோர் வருவோர் என்று சொல் நிகழக்
காணா ஐயமும் பல்லோர் படர்க்கை *(அகத்தியம். நன். மயிலை.)*

ஒப்புப்படுத்தல்

1. ஒத்த அடியினும் ஒவ்வா விகற்பினும்
மிக்க அடிவரினும் அப்பாற் படுமே *(அவிநயனார்)*

2. பாவும் இனமும் மேவின அன்றியும்
வேறுபட நடந்தும் கூறுபட வரினும்
ஆறறி புலவர் அறிந்தனர் கொளலே *(மயேச்சுரர்) வீரசோ. 123*

ஓமாலிகை

இலவங்கம் பச்சிலை கச்சோல மேலம்
குலவிய நாகணங் கொட்டம் - நிலவிய
நாக மதாவரிசி தக்கோல நன்னாரி
வேகமில் வெண்கோட்ட மேவுசீர் - போகாத
கத்தூரி வேரி யிலாமிச்சங் கண்டில் வெண்ணெய்
ஒத்தகடு நெல்லி யுயர்தான்றி - துத்தமொடு
வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சியுடன்
எண்ணுஞ் சயிலேக மின்புழுகு - கண்ணுநறும்
புன்னைநறுந் தாது புலியுகிர் பூஞ்சரளம்
பின்னு தமாலம் பெருவகுளம் - பன்னும்
பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி
கதிர்நகையா யோமாலி கை. *சிலப். 6 : 76 - 79 அடியார்க்.*

ஒருங்கியல்

மறுவில் கூட்டம் பொருந்தி ஒருங்கே
வருவ தொருங்கியல் என்மனார் புலவர் *வீரசோ. 153*

ஒருபொருள் பன்மொழி

1. கலித்தல் கன்றல் களுறல் பம்மல்
எழுச்சியும் பொலிவும் எய்தும் என்ப

2. கும்பலை சும்மை அழுங்கல் கலிமுழக்
கென்றிவை எல்லாம் அரவப் பெயரே. *யா. வி. 55.*

ஒருவழித் தணத்தல்

அகன்றணைவு கூறல் ஆழியொடு கேட்டல்
ஆழியொடு புலத்தல் அன்னமோடாய்தல்
ஆழிக் குரைத்தல் ஆழி இழைத்தல்
சுடரொடு புலம்பல் பொழுதுகண்டு மயங்கல்
பையுள் எய்தல் பரிவுற் றுரைத்தல்
அன்னமோ டழிதல் வரவுணர்ந் துரைத்தல்
வருத்தங் கூறல் வருபதின் மூன்றும்
திருத்திய ஒருவழித் திறனா கும்மே. *திருக்கோ. 15*

ஒலிவகை

1. செப்பல், துள்ளல்

வெண்சீரிற் செப்பல் பிறக்கும் விகற்பத்துப்
பண்பாய்ந்த துள்ளல் படும்.

2. அகவல், செப்பல்

இயற்சீருள் தோன்றும் அகவல் அவற்றின்
விகற்பத்து வெள்ளோசை யாம்.

3. தூங்கல்

தன்சீருள் தூங்கல் கலியடியின் கண்டக்கால்
வஞ்சிக் கிசையாய் வரும்.

4. ஓலிமயங்காமை

மயங்கி வருவனவும் வல்லோர் வகுப்ப
மயங்காமற் கொண்டுணரற் பாற்று *யா. வி. 95*

ஓலை இலக்கணம்

1. அந்தணர்க்கு நாலா றரசர்க் கிருபதாம்
இந்த விரல்வணிகர்க் கெண்ணிரண்டாம் - முத்துவிரல்
வேளாளர்க் கீராறாம் வெள்ளோலை வேயனைய
தோளாய் அறிநீ தொகுத்து. *(கல்லாடனார் வெண்பா)*

2. ஓலைய திலக்கணம் உரைக்கும் காலை
நாலாறு விரலாம் நான்மறை யோர்க்கே
பாருடை யோர்க்குப் பதிற்றிரண் டாகும்
வாணிகர்க் கீரெண் விரலாகும்மே
சாணென மொழிப சூத்திரர்க் களவே

3. வெண்பா அகவல் ஆயிரு மரபினும்
செய்யுட் பரவிய அவ்விரு திறத்தினும்
முற்புறத் திரண்டாம் பிற்புறத் தொழிந்து
வரைவென உரைப்பர் தெரிநூற் புலவர்

4. "சந்தனம் திமிசு சாதி சண்பகம்
உந்திய பதின்முழம் உயர்ந்தவர்க் காசனம்
கூவிளம் பலாசு வணிகர்க்கு வகுத்த
நாலிரு முழமே உயர்ச்சி யாகும்"

5. "பலவே கதிரம் அறுமுழ உயரம்
நிலமுழு தோர்க்கு நீதி யாகும்
நாடுதும் நாட்டி நாமவை யாமே."

6. "கல்லே பொதுவாம் திசையவர் திசையே
முனிவர்க் கோலை முப்பது விரலே
முறைமையின் முன்கடை உயர்ந்ததை உயர்ச்சி"

7. "அரசர் முன்கடை அல்லாப் பொதுவின்
முனிவரோ டல்லது மூவர்மற் றியலார்
பிறர்வலிக் கேய்ந்தன ஆதனத் தியல்பே"

8. "ஈசன் பதியாம் எரியாம் பாலே
பரியார்க் குந்திரு வருளி யுண்பவே"

9. "ஒழிந்தவை நான்கும் உரிய என்ப"

10. "மேடம் இடபம் அந்தணர்க் குரித்தே
நண்டரி அரிவை அரசர்க் காகும்
துலையோ டெரிதேள் வணிகர்க் காகும்
சுறவே கும்பம் சூத்திரர்க் காகும்."

11) "முறையின் மரபின மறையோர்க் காகும்
கதிரவன் அங்கி அரசர்க் குரித்தே
யமனொடு நிருதி வணிகர்க் காகும்
முறைமையின் வருணன்வளி சூத்திரர்க் காகும். *(பொய்கையார் கலாவியல்) நவநீதப். 92.*

கணிவன் முல்லை

பனியும் வெயிலும் கூதிரும் யாவும்
துனியில் கொள்கையொடு தொன்மை எய்திய
தணிவுற் றறிந்த கணிவன் முல்லை. *தொல். புறத். இளம்.*

கந்தருவம்

கந்தருவம் என்பது கசடறக் கிளப்பினற்
செந்துறை வெண்டுறை எனவிரு வகைத்தே *யா. வி. 96..*

கமகன்

1. ஞாபகம் செம்பொருள் நடையினெப் பொருளும்
காசின் றுரைப்போன் கமகன் ஆகும்

2. வல்ல நூற்பத் துப் பகை யானும்
மதியாது தனது பெருமை யானும்

கல்லாத நூல்களும் கற்றோர் விரும்பக்
கவிக்கும் நெறியோன் கமகன் ஆகும். *(மாமூலம்) நவநீதப். 87.*

கல்வியின் இயல்பு

தீய பயனில செய்தன் இன்றித்
தூய அறம்பொருள் இன்பம் தோற்றலும்
ஏய இனத்தால் தன்னியல் விடாமையும்
ஆயி னினத்தைத் தன்னியல் பாக்கலும்
மேய நான்கும் கல்வியின் இயல்பே. *தொல். பாயிர். அரசஞ்.*

கலம்பகம்

நான்கு பாவும் இனமும் மயங்கி
ஆன்ற பொருளினும் வருவது கலம்பகம் *(முள்ளியார் கலித்.)*
நவநீதப். 34

கலம்பகக் கவித் தொகை

1. "அமரர்க்கு நூறந் தணருக் கிழிவைந்
தரசர்க்குத் தொண்ணூ றன்றி முடிபுனையாப்
புதல்வர்க் கெண்பது புகலுங் காலே."

2. "தானைத் தலைவர்க்கும் வணிகர்க்கும் எழுப
ஏனை யோர்க்கிழி பிருபது பாட்டே" *(மாமூலம்)*

3. அந்தணர் அரசர் வணிகர் வினைஞர்க்குத்
தொண்ணூ றெண்ப தெழுவ தறுபது
விண்ணோர் தமக்கு நூறென விளம்பினர். *(கல்லாடம்) நவநீதப். 35*
கலி (கலிப்பா)

கலி

கலிவகை

1. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகக் கலியொடு கலிமூன் றாகும் *(நற்றத்தனார்)*

2. வெண்கலி ஒத்தா ழிசைக்கலி கொச்சகம்
என்றொரு மூன்றே கலியென மொழிப *(காக்கைபாடினியார்)*

3. கொச்சகம் வெண்கலி ஒத்தா ழிசையென
முத்திற மாகும் கலியின் பகுதி *(சங்கயாப்பு)*

4. ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகமென
முத்திறத் தான்வரும் கலிப்பா என்ப *அவிநயினார்)*

5. ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகம்
முத்திறத் தடங்கும் எல்லாக் கலியும் *(பெண்ணொரு பாகன் பெயர்*
மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 79

6. சீரதிற் கிளர்ந்த தன்றளை தழுவி
நேரீற் றியற்சீர் நேரா தாகி
துள்ளல் ஓசையிற் றள்ளா தாகி
ஓதப் பட்ட உறுப்புவேறு பலவாய்
ஏதம் இல்லன கலியெனப் படுமே *நீர்மலிந்தவார் சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 78*

கலிப்பா

1. பிறிதின் நடப்பினும் வஞ்சியும் கலியும்
இறுதி மருங்கின் ஆசிரி யம்மே
2. கலியே வெண்பா வாயினும் வரையார்
3. வகுத்த உறுப்பின் வழுவுதல் இன்றி
எடுத்துயர் துள்ளல் இசையன வாகல்
கலிச்சொற் பொருளெனக் கண்டிசி னோரே *(காக்கை பாடினியார்)*
4. ஆய்ந்த உறுப்பின் அகவுதல் இன்றியே
ஏய்ந்த துள்ளல் இசையது கலியே *அவிநயனார்) யா. வி. 78*

ஒத்தாழிசைக் கலி

தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம்
எனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி. *(காக்கைபாடினியார்) யா. கா. 30.*

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

1. அச்சொலப் பட்ட உறுப்பொ டராகவடி
வைத்த நடையது வண்ணகம் ஆகும் *(காக்கை பாடினியார்)*
2. அளவடி முதலா அனைத்தினும் நான்கடி
முதலா இரட்டியும் முடுகியல் நடக்கும்
3. வண்ணகத் தியற்கை திண்ணிதிற் கிளப்பின்
தரவொடு தாழிசை தலையள வெய்தித்
தாழிசைப் பின்னர்த் தனிநிலை எய்திப்
பேரெண்
நேரப் பட்ட எண்ணுடைத் தாகி
இடையெண் வழியால் அராகவடி நான்கும்
கீழள வாகப் பேரள வெட்டாச்
சீர்வகை நான்கு முதல்பதின் மூன்றா
நேரப் பட்ட இடைநடு எனைத்தும்
சீர்வகை முறைமையின் அராகம் பெற்றும்
அம்போ தரங்கத் தராகவடி இன்றி
மடக்கடி மேலே முச்சீர் எய்திக்
குறிலினை பயின்ற அசைமிசை முடுகி
அடுத்திசை முடுகியல் அராகம் என்னும்
உடைப்பெயர் மூன்றிற்கும் உரிமை எய்தி
விண்ணோர் விழுப்பமும் வேந்தரது புகழும்
வண்ணித்து வருதலின் வண்ணகம் என்ப.

4. அந்தாதித் தொடையினும் அடிநடை உடைமையும்
முந்தையோர் கண்ட முறைமை என்ப.
பிறை நெடுமுடிக் கறை மிடற்றோன் *பெயர் மகிழ்ந்த பேராசிரியர்*

5. குறில்வயின் நிரையசை கூட்டிய வாரா
தடியவட் பெறினே வண்ணக மாகும் *அவிநயினார்/ யா. வி. 84*

கடையளவு அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா

1. தாழிசைப் பின்னர்த் தனிச்சொல் முன்னர்
ஆழ்புனற் நிரைபுரை அம்போ தரங்கம்
உம்பர் மொழிந்த தாழிசை வழியே
அம்போ தரங்கம்வண் ணகமும் ஆகும்

2. அவையே,
தேவ பாணியென் றேவவும் படுமே

3. வழிபடு தெய்வம் வழுத்திவழி மொழியின்
தலையிடை கடையென அம்போ தரங்கம்
நிலையினவ் வளவின் நிலையுங் காலை
அராகம் பேரெண் இடையெண் சிற்றெண்
விராக என்ப தாழிசைப் பின்னர்க்
கூறிய தரவே ஆறடித் தாகும்.

4. தரவின் வழிமுறை தாழிசை மூன்றும்
வரன்முறை பிறழா நாலடிக் குரிய
தந்துமுன் நிறீஇத் தரவினிற் றாழிசை
உறுப்பினும் குணத்தினும் நெறிப்படப் புணரும்

5. தாழிசைப் பின்னர் அராகவடி இரண்டே
அராகத் திறுதி பேரெண் இரண்டு
விராக என்ப இரண்டிரண் டடியால்
பேரெண் வழியால் இடையெண் நாலடி
நேரல் வேண்டும் நெறியறி புலவர்

6. பெற்ற நாலடி அரையடி முடிவின
சிற்றெண் பகுதி இருநான் காகும்

7. மூவகை எண்ணின் பொருள்வகை முடிவும்
யாவகை எண்ணிற்கும் அகப்பட முடியும்

8. சிற்றெண் அகத்தே சேர்த்தப் படுவோன்
பெற்றபுகழ் தொடுப்பினும் பிழைப்ப தில்லை

9. அடக்கியல் உறுப்பும் ஆறடித் தாகத்
தொடுக்கு மாகிற் றொல்லையோர் துணிவே.

10. கொள்ளப் பட்ட உறுப்பொடிரு தலையும்
தள்ளாது வருவது தலையள வாகும்.

11) உடையதம் உறுப்பின் ஒன்றுகுறை வின்றி
இடையள விலக்கணம் இருதலை உறுப்பும்
அவ்வைந் தடியாய் அமைவுறு தாழிசை
மூன்றுமூன் றடியான் மூன்றுமுடி வெய்திப்
பேரெண் அறுசீர் இடையெண் முச்சீர்
சேரும் சிற்றெண் சீருமோர் அசையும்
நேரல் வேண்டும் நெறியறி புலவர்

12) கடையள வென்ப துடையுறுப் பெஞ்சாது
முடிவும் முதலும் நாலடித் தாகி
அடிவகை இரண்டிற் றாழிசை மூன்றாய்ப்
பேரெண் இரண்டடி பெற்றபின் இடையெண்
நேரடி நான்கும் அரையடி முடிவிற்
சிற்றெண் எட்டும் சீர்நால் இரட்டியும்
பெற்ற தாயினது கடையள வென்ப

13) அம்மூ வளவிற்கும் அராகவடி இரண்டே
ஈறும் முதலும் எல்லா அளவிற்கும்
கூறிய முறைமையிற் கொள்ளல் வேண்டும். *(மயேச்சுரர்) யா. வி. 83.*

ஒத்தாழிசைக் கலிப்பா உறுப்பு

1. 'தரவே தாழிசை தனிநிலை' சுரிதகம்
எனநான் குறுப்பின தொத்தா ழிசையே'

2. 'தன்னுடை அந்தமும் தாழிசை யாதியும்
துன்னு மிடத்துத் துணிந்தது போலிசை
தன்னொடு நிற்றல் தரவுக் கியல்பே'

3. 'தத்தமில் ஒத்துத் தரவின் அகப்பட
நிற்பன மூன்று நிரந்தவை தாழிசை'

4. 'ஆங்கென் கிளவி அடையாத் தொடைபட
நீங்கி இசைக்கும் நிலையது தனிச்சொல்'

5. 'ஆசிரியம் வெண்பா எனவிவை தம்முள்
ஒன்றாகி அடிபெற் றிறுதி வருவது
சுழியம் எனப்பெயர் சுரிதக மாகும்' *(காக்கை பாடினியார்)*

7. 'தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொல் இடைக்கிடந்து சுரிதகம் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி!'

8. 'தரவின் அளவிற் சுரிதகம் அயற்பா
விரவும் என்ப ஆசிரியம் வெள்ளை'

(காமவேளைக் கற்றத புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்)

9. விட்டிசை முதற்பாத் தரவடி ஒத்தாங்
கொட்டிய மூன்றிடைத் தாழிசை அதன்பின்

மிக்கதோர் சொல்லாம் தனிநிலை சுரிதகம்
ஆசிரியத்தொடு வெள்ளையின் இறுதலென்
றோதினர் ஒத்தா ழிசைக்கலிக் குறுப்பே *(அவிநயனார்) யா. வி. 82*

வெண்கலி

1. கலியொலி கொண்டு தன்றளை விரவா
இறுமடி வரினே வெண்கலி ஆகும் *(அவிநயனார்) யா. வி. 85*

2. தளைகலி தட்டன தன்சீர் வெள்ளை
களையுந இன்றிக் கடையடி குறையின்
விரவிவரல் இல்லா வெண்கலி ஆகும் *(மயேச்சுரர்) யா. வி. 85*

3. வெண்டளை தன்றளை என்றிரு தன்மையின்
வெண்பா இயலது வெண்கலி ஆகும் (காக்கை பாடினியார்) *யா. வி. 85*

கொச்சகக் கலிப்பா

1. தரவே யாகியும் இரட்டியும் தாழிசை
சிலவும் பலவும் மயங்கியும் பாவே
றொத்தா ழிசைசக்கலிக் கொவ்வா உறுப்பின
கொச்சகக் கலிப்பா ஆகும் என்ப *(அவிநயனார்)*

2. தரவே தரவினை தாழிசை சிலபல
வரன்முறை பிறழ அயற்பா மயங்கியும்
தனிச்சொற் பலவாய் இடையிடை நடந்தவும்
ஒத்தா ழிசைசக்கலி உறுப்பினிற் பிறழ்ந்தவும்
வைத்தவழி முறையால் வண்ணக இறுவாய்
மயங்கி வந்தவும் இயங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர். *(காமவேளைக் கறுத்த புத்தேள்*
நாமம்தாங்கிய நல்லாசிரியர்) யா.வி. 86

3. எருத்தியல் இன்றி இடைநிலை பெற்றும்
இடைநிலை இன்றி எருத்துடைத் தாயும்
எருத்தம் இரட்டித் திடைநிலை பெற்றும்
இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்
இடையும் எழுத்தும் இரட்டுற வந்தும்
எருத்தம் இரட்டித் திடைநிலை ஆறாய்
அடக்கியல் காறும் அமைந்த உறுப்புக்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயும்
தரவொடு தாழிசை அம்போ தரங்கம்
முடுகியல் போக்கியல் என்றிவை எல்லாம்
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
இடைநிலை வெண்பாச் சிலபல சேர்ந்தும்
மற்றும் பிறபிற ஒப்புறுப் பில்லன
கொச்சகம் என்னும் குறியின ஆகும் *(காக்கை பாடினியார்)*

4. ஓதப் பட்ட உறுப்புவகை எல்லாம்
ஏதப் படாமைக் கலிக்கியல் பெய்தி
மிக்கும் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும்
வண்ணமும் அடியும் தொடையும் மயங்கியும்
அடக்கியல் அந்தம் தொடுத்தன பல்கியும்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்தும்
நாற்சீர் இறந்த சீரொடு சிவணியும்
மூச்சீர் இருசீர் அம்போ தரங்கம்
அச்சீர் முடிவடி அழிவில தழுவியும்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே. *யா.வி. 86*

ஒருபோகு

1. கூறிய உறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய இரண்டு தேவ பாணியும்
தரவே குறையினும் தாழிசை ஒழியினும்
இருவகை முத்திறத் தெண்ணே நீங்கினும்
ஒருபோ கென்ப உணர்ந்திசி னோரே *(மயேச்சுரர்) யா.வி. 86*

2. கொச்சக ஒருபோகு அடி

அறுசீர் அடியே ஆசிரியத் தளையொடு
நெறிபெற்று வரூஉம் நேரடி முன்னே. *தொல். பொருள். 461 பேரா.*

தரவு ; தாழிசை; தனிச்சொல் சுரிதகம்

1. தந்துமுன் நிற்றலின் தரவே தாழிசை
ஒத்ததா ழத்தின தொத்தா ழிசையே.

2. தனிதர நிற்றலின் தனிநிலை குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுகரிந் திறுதலின்
சோர்ச்சியில் புலவர் சுரிதகம் என்ப *யா.வி. 82*

தரவு அளவு

1. அம்பு வண்ணகம் இருமூன் றடியின

2. முந்திய மூன்றடிச் சிறுமையின் மிகாவாய்த்
தந்துமுன் நிற்றலின் தரவா கும்மே' *யா.வி. 82*

தாழிசை அளவு

இரண்டடி சிறுமை பெருமையதன் இரட்டி
தரவிற் குறைந்தன தாழிசை ஆகும் *யா.வி. 82*

தனிநிலை சுரிதகம்

1. தனிநிலை சுரிதகம் வரைநிலை இலவே

2. சிறுமை இரண்டடி பெருமைபொருள் முடிவே
சுரிதகம் என்ப தொல்லை யோரே *யா.வி. 82*

அராகம் அம்போதரங்கம் தாழிசை

அளவடியே முதலாக அனைத்தடியி னாலும்
அழகமர்நான் கடிமுதலா எட்டடியின் அளவும்
வளமலியும் சீரராக உறுப்புவந் தாகும்
மன்னியவீ ரடியிரண்டும் ஓரடியான் நான்கும்
உளமலிசிந் தடியெட்டும் குறளடியீ ரெட்டும்
ஒருங்கியல்பே ரெண்சிற்றெண் ணிடையெண்ணோ டளவெண்
தளமலயம் போதரங்கம் எனும் பெயரால் நிலவும்
தாழிசைக்கீ ரடிசிறுமை பெருமைநான் கடியே. *வீரசோ. 114*

அராகம்

1. அராகம் என்ப தடுக்கியல் வண்ணகம்
முடுக்கியல் எனவும் மொழிந்தனர் புலவர். *யா. கா. 31*

2. அராகந் தாமே நான்காய் ஒரோவொன்று
வீதலும் உடைய மூவிரண் டடியே.

3. ஈரடி யாகும் இழிபிற் கெல்லை.

4. தரவே எருத்தம் அராகம் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே.

5. கொச்சக வகையின் எண்ணொடு விராஅய்
அடக்கிய லின்றி அடங்கவும் பெறுமே *அகத்தியம்/*
தொல். செய். 117 இளம்.

அம்போதரங்கம்

1. அனைய வாகிய அசையடி நான்கும்
தனியொடு தாழிசை இடைவரும் என்ப. *யா. கா. 30*

2. ஈரடி இரண்டும் ஓரடி நான்கும்
முச்சீர் எட்டும் இருசீர் இரட்டியும்
அச்சீர் குறையினும் அம்போ தரங்கம்

3. இரண்டும் நான்கும் எட்டும் இரட்டியும்
வருவன முறையே ஒருநிரை படாஅ
திரண்டடி ஓரடி முச்சீர் இருசீர்
அசையடி வரினே அம்போ தரங்கம் *யா. வி. 83*

4. இரண்டும் நான்கும் எட்டும் இரட்டியும்
இரண்டடி ஓரடி முச்சீர் இருசீர்
நிரந்த முறைமையின் நீர்த்திரை போல்வரின்
அம்போ தரங்கமென் றறிந்தனர் கொளலே *யா. வி. 95*

5. நீர்த்திரை போல நிரலே முறைமுறை
ஆக்கம் சுருங்கி அசையடி தாழிசை
விட்டிசை வீயத் தொடுத்துச் சுரிதகம்
தாக்கித் தவிர்ந்த தரவினோ டேனவும்
யாப்புற் றமைந்தன அம்போ தரங்கம் *(காக்கை பாடினியார்)*

6. ‘தரவே தாழிசை தனிச்சொற் சுரிதகம்
வருவன எல்லாம் தாழிசைக் கலியே’

7. ‘சேர்த்திய தரவொடு தாழிசைப் பின்னர்
நீர்த்திரை போல நெறிமையிற் சுருங்கி
மூவகை எண்ணும் முறைமையின் வழாஅ
அளவின எல்லாம் அம்போ தரங்கம்’ *(சிறுகாக்கைபாடினியார்)*

8. உரைத்த உறுப்பொடு தாழிசைப் பின்னர்
நிரைத்த அடியால் நீர்த்திரை போல
அசையடி பெறினவை அம்போ தரங்கம் *(அவிநயனார்) யா. வி. 83*

துள்ளல் வகை

1. **பிரிந்திசைத்துள்ளல்**

தன்றளை. பிறதளை என்றிவை அனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல் *யா. கா. 21*

2. **ஏந்திசைத் துள்ளல்**

ஏந்திசைத் துள்ளல் கலித்தளை இயையின் *யா. கா. 21*

3. **அகவல் துள்ளல்**

வெண்டளை தன்றளை என்றிவை இயையின்
ஒன்றிய அகவல் துள்ளலென் றோதுப. *யா. கா. 21*

கலிவிகற்பம்

1. ஒத்தா ழிசைக்கலியென் றோதிய ஆறினையும்
முத்திறத் தோசையான் முன்முரணி - வைத்து
வழுவற்ற ஆறிரண்டு வான்றளையால் மாற
எழுமுப்பத் தாறாம் எனல்.

2. கொச்சகம் ஈரைந்தும் வெண்கலி ஓரிரண்டும்
வைத்திசையோர் மூன்றினால் மாறியபின் - மற்றவற்றை
மாசில் பதினான்கு வான்றளையால் மாறவாம்
ஆசில்கலிக் கைஞ்ஞூற்று நான்கு *யா. வி. 81*

கலியுள் வெண்பா மயங்குதல்

வெண்பா விரவினும் கடிவரை யின்றே. *(நத்தத்தனார்) யா. கா. 39*

கலித் தாழிசை

1. அந்தடி மிக்குப் பலசில வாயடி
தந்தமில் ஒன்றிய தாழிசை ஆகும் *(காக்கைபாடினியா)*

2. அந்த அடிமிக் கல்லா அடியே
தந்தமுள் ஒப்பன கலித்தா ழிசையே *(சிறுகாக்கைப் பாடினியார்)*

3. ஈற்றடி மிக்கள வொத்தன வாகிப்
பலவும் சிலவும் அடியாய் வரினே
கலிப்பா இனத்துத் தாழிசை ஆகும் *(அவிநயனார்)*

4. அடிபல வாகியும் கடையடி சீர்மிகிற்
கடிவரை யில்லை கலித்தா ழிசையே *(காமவேளைக் கறுத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர்) யா. வி. 87.*

கலித்துறை

1. ஐஞ்சீர் முடிவின் அடித்தொகை நான்மையொ
டெஞ்சா மொழிந்தன எல்லாம் கலித்துறை *(காக்கை பாடினியார்) யா. வி. 88*

2. ஐஞ்சீர் நான்கடி கலித்துறை ஆகும் *(அவிநயனார்) யா. வி. 88*

3. அடியடி தோறும் ஐஞ்சீர் ஆகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதினேழென்
றோதினர் கலித்துறை ஒரடிக் கெழுத்தே. *யா. கா. 1*

கலிவிருத்தம்

1. நாற்சீர் நாலடி வருவ தாயின்
ஒலியின் இயைந்த கலிவிருத் தம்மே. *(அவிநயனார்) யா. வி. 89*

2. ஐஞ்சீர் நாற்சீர் அடிநான் காயின்
எஞ்சாக் கலியின் துறையும் விருத்தமும் *(மயேச்சுரர்) யா. வி. 89*

3. நாலொரு சீரால் நடந்த அடித்தொகை
ஈரிரண் டாகி இயன்றவை யாவும்
காரிகை சான்ற கலிவிருத் தம்மே *(காக்கை பாடினியார்) யா. வி. 89*

4. நாற்சீர் நாலடி கலிவிருத் தம்மே *(சிறுகாக்கை பாடினியார்) யா. வி. 89*

கலிப்பா (அகப்பொருள்)

இருவயின் ஒத்தும் ஒவ்வா இயலினும்
தெரியிழை மகளிரொடு மைந்தரிடை வருஉம்
கலப்பே ஆயினும் புலப்பே ஆயினம்
ஐந்திணை மரபின் அறிவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டிற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும். *(அகத்தியம்) தொல். செய். இளம்.*

கலிப்பாவின் சாதி

ஏதம் தழுவா திசைசேர்ந் திருநான்கு
நீதி நலஞ்சேர்ந்து நிற்றலால் - ஓதிய
மூன்றாங் கிடக்கை முறைமை முரற்கைக்கு
மூன்றாங் குலம் வகுத்தார் முன் *யா.வி. 86*

கவி வகை (ஒருவகையால் நால்வர்)

1. ஆசு மதுரம் சித்திரம் வித் தாரமென
நால்வகைப் படூஉம் நன்னெறிக் கவியே

2. ஆசு கவியே அறிவெனத் தொடுத்த
எழுத்தினும் பொருளினும் உள்ளுறை யாக
இழுக்கா வண்ணம் யாப்புடைத் தாகும்.

3. இன்பக் கவியே எல்லைக் குரிய
இன்பம் பயக்கும் யாப்பிற் பொருளின.

4. சித்திர கவியே மாலை மாற்றொடு
சக்கர முதலிய வரூஉ மென்ப.

5. அகலக் கவியே மங்கல மாலை
கலிவெண் பாட்டொடு களிறே குதிரை
மற்றவை பொருளாற் பிறவுங் காட்டுக;
மருங்கின்,
நல்லோர் ஆய்ந்த ஒளியும் பொருளும்
ஒன்பது சுவையும் நால்வகை விருத்தியும்
கூட நோக்கிக் குறித்தொரு வன்மேற்
பாடுஞ் செய்யுட் பாடு வோனே

6. சொல்லப் பட்ட எல்லாக் கவியும்
இரண்டு மூன்று நான்கு மூனம்
இல்லா மருங்கிடை ஒருவன் பெறுமே

நவநீதப். 87

கவிவகை (மற்றொருவகையால் நால்வர்)

1. கள்ளக் கவியே சார்த்துக் கவியே
வெள்ளைக் கவியே பிள்ளைக் கவியென
நாற்பாற் படுத்தனர் யாப்பியற் புலவர்

2. அவற்றுள்,
கள்ளக் கவியே கவிஞன் தலைமகற்குக்
கள்ளத் தொடுபெயர் களைந்தே ஆக்கி
ஒருவர்க் கியம்பும் மாணில் லோனே"

3. சார்த்துக் கவியே முன்னோன் பாடிய
யாப்பின் படிசிறிது தொடுப்போன் என்ப

4. வெள்ளைக் கவியே புனமொழிந் தொழுக்கும்
பிள்ளைக் கவியே பின்னிலை நிற்கும்.

(பரணர் பாட்டியல்)
நவநீதப். 87

களங்கடியப்பட்டார்

மொழிவ துணராதார் முன்னிருந்து கய்வார்
படிறு பலவுரைப்பார் பல்கால் நகுவார்
திரிதரு நெஞ்சத்தார் தீயவை ஓர்ப்பார்
கடியப்பட் டாபபரவையின் கண்.

தொல். பாயிரம். நச்.

களவிற்குரியது

குடவரைக் குறிஞ்சியும் குணகடல் நெய்தலும்
கடவ தாகும் களவிற் குரித்தே. *வீரசோ. 90 - 94*

களவிற் பிரிவு

"ஒருவயிற் றணத்தலும் பொருள்வயிற் பிரிதலும்
கருதிய களவிற் குண்மை யானே" *வீரசோ. 90 - 94*

களவு

களவெனப் படுவது யாதென வினவின்
வளைகெழு முன்கை வளங்கெழு கூந்தல்
முளையெயிற் றமர்நகை மடநல் லோளொடு
தளையவிழ் தண்டார்க் காமன் அன்னோன்
விளையாட் டிடமென வேறுமலைச் சாரல்
மானினங் குருவியொடு கடிந்து விளையாடும்
ஆயமும் தோழியும் மருவிநன் கறியா
மாயப் புணர்ச்சி என்மனார் புலவர். *தொல். பொருள். 92 நச்.*

களவு; கற்பு

1. அவற்றுள் களவெனப் படுவ தூஉழ்
காவன் மரபின் பாற்பட வருமே

2. கற்பெனப் படுவது கரணமோ டியையக்
கூடிய பிறவும் கூறுதற் குரித்தே

3. எய்திய இரண்டும் கைகோள் என்ப *யா. வி. 96*

கற்கப்படுவோர்; கற்பிக்கப்படுவோர்

வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்
வான்யா றன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந் தன்ன நலம்படர் ஒழுக்கமும்
திங்க ளன்ன கல்வியும் திங்களோடு
ஞாயி றன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும் வெஃகா உள்ளமும்
துலைநா அன்ன சமநிலை உளப்பட
எண்வகை உறுப்பின ராகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாஅளாண்மையும்
உலகியல் அறிதலும் நிலைஇய தோற்றமும்
பொறையும் நிறையும் பொச்சாப் பின்மையும்
அறிவும் உருவும் ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொல்வன்மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப் படுதலும்
இன்னோ ரன்ன தொன்னெறி மரபினர்
பன்னருஞ் சிறப்பின் நல்லா சிரியர்

அறனே பொருட்பயன் இன்பென மூன்றின்
திறனறி பனுவல் செப்புங் காலை
முன்னர்க் கூறிய எண்வகை உறுப்பினுள்
ஏற்பன உடையர் ஆகிப் பாற்படச்
சொல்லிய பொருண்மைச் சொல்லியாங் குணர்தலும்
சொல்லிய பொருளொடு சூழ்ந்து நன்குணர்தலும்
தன்னோர் அன்னோர்க்குத் தான்பயப் படுதலும்
செய்ந்நன்றி அறிதலும் தீச்சார் பின்மையும்
மடிதடு மாற்றம் மானம் பொச்சாப்புக்
கடுநோய் சீற்றம் களவே காமம்
என்றிவை இன்மையும் சென்றுவழி படுதலும்
அறத்துறை வழாமையும் குறிப்பறிந் தொழுகலும்
கேட்டவை நினைத்தலும் பாடம் போற்றலும்
மீட்டவை வினவலும் விடுத்தலும் உரைத்தலும்
உடையர் ஆகி நடையறிந் தியலுநர்
நன்மா ணாக்கர்என்ப மண்மிசைத்
தொன்னூற் புலமைத் துணிபுணர்ந் தோரே. *(ஆத்திரையன் பேராசிரியர்)*
இ. வி. பாயிரம்.

கற்கப்படுவோர்

மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில் உணர்வுடை யார். *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படுவோர் தன்மை

அன்னங் கிளியே நன்னிற நெய்யரி
யானை யானே றென்றிவை போலக்
கூறிக் கொள்ப குணமாண் டோரே. *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படுவோர் வகை

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளனோ டிவரென மொழிப. *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படுவோர் கடப்பாடு

தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாள னெனவெடுத் தோதிய
அறுவகை யவருள் ஒருவர் ஆகிச்

செவ்விதிற் றெரிதல் மெய்யுறக் காண்டல்
உரைபல கேட்டல் உறுபெருங் காதல்
தெய்வத்தின் மதித்தல் திரிபொன் றின்மை
அன்னம் கிளியே நன்னிற நெய்யரி
யானை ஆனே றென்றிவை போறல்

உடைய ராகி நடையறிந் தொழுகுநர்
கற்பிக் கப்படுங் கடப்பாட் டோரே.

1. அன்னம்

பாலும் நீரும் பாற்படப் பிரித்தல்
அன்னத் தியல்பென அறிந்தனர் கொளலே.

2. கிளி

கிளந்தவா கிளத்தல் கிளியின தியல்பே.

3. நிறம்

எந்நிறம் தோய்தற்கும் ஏற்ப தாதல்
நன்னிறத் தியல்பென நாடினர் கொளலே.

4. நெய்யரி

நல்லவை அகத்திட்டு நவைபுறத் திடுவது
நெய்யரி மாண்பென நினைதல் வேண்டும்.

5. குஞ்சரம்

குழுவுபடூஉப் புறந்தருதல் குஞ்சரத் தியல்பே.

6. ஆனேறு

பிறந்த ஒலியின் பெற்றியோர்ந் துணர்தல்
சிறந்த ஆனேற்றின் செய்தி என்ப. *இ. வி. பாயிரம்.*

கற்கப்படாதோர்

கழற்பெய் குடமே மடற்பனை முடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப. *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படாதோர் தன்மை

குரங்கெறி விளங்காய் எருமை ஆடே
தோணி என்றாங் கிவையென மொழிப. *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படாதோர் வகை

மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆறாச் சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலைக் கற்கலா தார். *தொல். பாயிரம். இளம்.*

கற்பிக்கப்படாதோர்

களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறன் பொச்சாப்பன் பலகால் நகுவோன்

மொழிவ துணரான் முன்னிருந்து காய்வோன்
திருகு மனத்தோன் தீயதே சேர்ப்போன்
குரங்கெறி விளங்காய் எருமை ஆடே
தோணி அன்ன கோணிலை யாளர்
கற்பிக் கப்படாக் கடப்பாட் டோரே.

1. குரங்கெறி விளங்காய்

கல்லால் எறிந்து கருதுபயன் கொள்வோன்
குரங்கெறி விளங்கா யாமெனக் கூறுவர்.

2. எருமை

விலங்கி வீழ்ந்து வெண்ணீர் உழக்கிக்
கலங்கல்செய் தருந்தல் காரா மேற்றே.

3. ஆடு

ஒன்றிடை ஆர உறினும் குளகு
சென்றுசென் றருந்தல் ஆட்டின் சீரே.

4. தோணி

நீரிடை அன்றி நிலத்திடை ஓடாச்
சீருடை யதுவே தோணி என்ப. *இ. வி. பாயிரம்.*

கற்பு

நன்னில மருதமும் தொன்னில முல்லையும்
துன்னருங் கற்பொடு தோன்றும் தொடர்ந்தே *வீரசோ. 90 - 94*

கற்பு களவின் வழியது

முற்படப் புணராத சொல்லின் மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே. *நம்பி. 55*

களவிற் காணத் தகாதவை

1. சொல்லத் தகுமுகட் டொட்டகம் வெட்டும் துணைமருப்பார்
இல்லத் தெருமை கழுதைக ளென்றிவை யேறிநின்றே
மெல்லத் தரையி லிழிவதன் முன்னம் விழித்திடுமேல்
கொல்லத் தலைவரு மாற்றருஞ் சீற்றத்துக் கூற்றுவனே. *(கனாநூல்)*

2. மிக்க எயிற்றின கொம்பின பன்றி விறற்குரங்கு
தொக்கன தம்மைக் கனவினிற் காணிற் சுடர்மகுடச்
சக்கர வர்த்திகளாற்பய முண்டெனுந் தம்மயிர்கள்
உக்கன வாதல்செய் தாற்பொருள் தேயும் பயமுடைத்தே

கனவிற் காணின் நலம் பயப்பன

3. ஓதும் பசுவு மிடபமும் யானையு மோங்கல்களும்
சீர்துன்று கோயிலு மேறிடக் காணினுந் தீமலத்தை
மீதொன்ற மேனியிற் பூசிடக் காணினு மெல்லியலாற்
சூதொன்று கொங்கை புணரினும் வாழ்வென்று சொல்லினரே *(கனாநூல்)*

கனவு பலிக்கும் காலம்

படைத்தமுற் சாமமோ ராண்டிற் பலிக்கும் பகரிரண்டே
கிடைத்தபிற் சாம மிகுதிங்க ளெட்டிற் கிடைக்கு மென்னும்
இடைப்பட்ட சாமமோர் மூன்றினிற் றிங்களொர் மூன்றென்பவால்
கடைப்பட்ட சாமமு நாள்பத்து ளேபலங் கைபெறுமே. *(கனாநூல்)*

சிலப் 15 : 95 - 106 அடியார்க்.

காப்புக் கடவுள்

காப்பு முதலெடுக்கும் கடவுள் தானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தன னாகும். *(பரணர் பாட்டியல்) நவநீதப். 26*

காப்புக் கடவுட் பாட்டு

அன்னவன் தன்னைச் சாற்றிடினும் மறையவர்
முன்னர் இடைநிலைப் பாட்டினும் மொழிவர்
சொன்ன கடவுட் டொழுதகப் பாவில் *(செய்யுள் வகைமை) நவநீதப். 33*

காரகம்

இந்திரன் தாமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தின் நீங்கிவின் மேல்இருந் தான்எனலும்
வந்தன காரக மெல்லாம் வகுத்த வழிமுறையே *வீரசோ. 39 பெருந்.*

காரணம்

1. காரணம் என்பது காலம் மூன்றின்
ஆரணங் காகிய அறிந்த பொருள்மேல்
சீரினிற் செப்பும் செந்நெறி பெறுமே.

2. அதுவே.
இன்னதென் றின்னோர் உரைப்ப அதன்வழிப்
பின்னோர் உரைத்த திதுவெனக்
கிளவியொடு கெழூஉம் விளைவின் கண்ணே. *வீரசோ. 90 - 94*

காலம்

இறந்ததும் நிகழ்வதும் எதிர்வதும் என்னும்
திறந்தெரி வுடையன கால மாகும். *யா. வி. 96*

கால வரையறை

பிரிவின் வரைவும் பெரும்பொழுது வரைவும்
சிறுபொழுது வரைவும் தெள்ளியோர் விலக்கலின்
வரைவும் என்ன உரைபெறு நான்கும்
காலமுடைத் தெனல் மேலையோர் துணிவே. *தொல். பாயிர. அரசஞ்.*

குழமகன்

பேணுதகு சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்றாம் ஆண்டின் மொழிகுவ குழமகன் *நவநீதப். 45*

குழல்

குழற்குரிய பொருள்

ஓங்கிய மூங்கி லுயர்சந்து வெண்கலமே
பாங்குறுசெங் காலி கருங்காலி - பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்றார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து.

குழற்குரிய மரநிலை

உயர்ந்த சமதலத் தோங்கிக்கா னான்கின்
மயங்காமை நின்ற மரத்தின் - மயங்காமே
முற்றிய மாமரந் தன்னை முதறடிந்து
குற்றமிலோ ராண்டிற் கொளல்.

குழல் அளவு

சொல்லு மிதற்களவு நாலைந்தாஞ் சுற்றளவு
நல்விரல்க ணாலரையா நன்னுதலாய் - மெல்லத்
துளையளவு நெல்லரிசி தூம்பிட மாய
வளைவலமேல் வங்கிய மென்

குழல் துளையளவு

இருவிரல்க ணீக்கி முதல்வாயேழ் நீக்கி
மருவு துளையெட்டு மன்னும் - பெருவிரல்கள்
நாலஞ்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய்
கோலஞ்செய் வங்கியத்தின் கூறு.

குழற்சீர்

"செம்முறை யுறழ்பே மெய்ந்நிலை கொட்ட
னீட்ட னிமிர்த்தல்"

குழல் துளைக்குரிய விரல்

வளைவா யருகொன்று முத்திரையாய் நீக்கித்
துளையேழி னின்ற விரல்கள் - விளையாட்
டிடமூன்று நான்கு வலமென்றார் கணேகா
வட்டாரு மென்முலையாய் வைத்து

சிலப் 3 : 26 அடியார்க்.

குழல் முதல் இயங்குமுறை

குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர்
முழவியம்ப லாமந்திரி கை.

(கூத்த நூலுடையார்) களவியல் 40

குற்றியலிகரம் வரும்வகை

1. யகரம் முதல்வரின் உகரம் ஒழிய
இகரமும் குறுகும் என்மனார் புலவர்

(பல்காயனார்) யா. வி. 2

2. வல்லெழுத் தாறோ டெழுவகை இடத்தும்
உகரம் அரையாம் யகரமோ டியையின்
இகரமும் குறுகும் என்மனார் புலவர் *(அவிநயனார்) யா. வி. 2*

குற்றுகரம் வரும் எழுவகை இடம்

1. நெடிலே குறிலிணை குறினெடில் என்றிவை
ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிய *யா. வி. 2*

2. எழுவகை இடத்தும் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே *(பல் காயம்) யா. வி. 2*

குற்றியலுகர இகரங்கள் புள்ளி பெறுதல்

குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும்
மற்றவை தாமே புள்ளி பெறுமே *(சங்கயாப்பு) யா. வி. 2*

குற்றுகர அலகு - கடாவும் விடையும்

1. குற்றுகரம் ஒற்றாகக் கொள்ளாதே வெள்ளையான்
மற்றும் தளைவிரவும் மற்றதனால் - குற்றுகரம்
ஐந்தா றசைச்சீர் அருகிவரும் வஞ்சிக்கண்
என்றாற்றான் என்னாம் இழுக்கு? *யா. வி. 95*

2. அறுத்திசைக்கும் செய்யுட்பால் அன்றுள்ளான் றன்பேர்
செறிப்பிற் செயிர்வாக்காம் என்னும் - குறிப்பினாற்
கேடுரைத்தார் கெட்டவரோ பற்றார்க்கும் கேடல்லர்
நாடறியும் என்பதனால் நன்கு *யா. வி. 95. (குற்றம்) (தொலைவு)*

குற்றம்

தொலைவெனப் படுபவை சொல்லுங் காலைக்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
பொருளல கூறல் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாகிப்
பழித்த மொழியான் இழித்துக் கூறல்
தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
இன்னா வகையின் மனங்கோ ளின்மை
அன்னவை பிறவும் அவற்றினெறி யாகும் *யா. வி. 96*

குறிஞ்சி நடையியல்

அறிந்தோர் ஆய்ந்த அன்புதரு வகையிற்
குறிஞ்சி நடைவகை கூறுங் காலை
அரிவைக் காகிய இறைவியை வர்க்கந்
தெரிமணிப் பூணான் தெரியச் செப்பலும்
நன்னலம் புகழ்தலும் நாணின் மழுங்கலும்
பொன்னவிர் பூவையைப் புணர்ப்ப துரைத்தலும்

பிரிவுநனி கருதலும் பிரிவின்மை பேசலும்
பெருமை செய்தலும் பெறற்கரி தென்றலும்
ஊழ்வினை வலித்தலும் உறுதெய்வம் பேணலும்
தோழனை நினைத்தலும் அகறலும் அணுகலும்
இடத்தொடு புலம்பலும் ஏழையை வினவலும்
மடத்தகு சாயல் மாதரைக் காண்டலும்
வனம்புலம் பகற்றலும் ஆர்வ நோக்கமும்
குவளையுண்கண் புதைத்துத் தலைவி இறைஞ்சலும்
ஆற்றான் மொழிதலும் அஞ்சிய நோக்கமும்
ஏற்ற உவகையோ டினியவள் முறுவலும்
ஆங்கவன் புணர்தலும் அவ்வயிற் புணர்ச்சியைப்
பாங்கற் குணர்த்தலும் பழியெனக் கூறலும்
தேங்கமழ் தாரோன் தெரியான் செப்பலும்
கிளைஞன் கழறலும் கேடெனக் கூறலும்
இளையவன் வடிவும் இடனும் ஈதலும்
அண்ணல் கவற்சிக் கவள்வடிவும் இடனும்
திண்ணிதிற் செப்பலும் சென்றவன் காண்டலும்
வெறிகமழ் கோதை மிகுநலம் புணர்தலும்
அறிவும் நிறையும் அண்ணலை எய்தலும்
வேறிடங் காட்டலும் இலங்கிழை உணர்தலும்
ஊறன்றா முடிவில்தான் பாங்கற் கூட்டமும்
தையல் தளர்ச்சியை நோக்கித் தோழி
ஐயுறு நிலைமை அறிய உரைத்தலும்
மனைவி போல வல்லவை மொழிதலும்
விழுப்பம் பேசலும் வேண்டா என்றலும்
பழித்தக உணர்த்தலும் பார்த்துற வுரைத்தலும்
பொருந்தா என்றலும் பொய்யுரை புரிதலும்
வருந்தும் என்றலும் வடிவிது என்றலும்
நின்குறை நீயே சென்றுரை என்றலும்
சீர்மலர்க் கோதைக்குச் செவ்வியின் றென்றலும்
நீர்மையன் றென்றலும் நீங்குமின் என்றலும்
மூரல் முறுவலொடு முகமலர்ந் துரைத்தலும்
இரங்கி மொழிதலும் ஏத்தி மொழிதலும்
கலங்கி மொழிதலும் கழறி மொழிதலும்
வள்ளல் தளர்ச்சியும் மடலேற்று மொழிதலும்
உள்ளங் குளிர்ப்பித் தொண்தழை யேன்றலும்
நெஞ்சத் தடங்கிய நின்றுகுறை யேற்றலும்
இன்சொல் இரக்கமும் வன்சொலின் மயக்கமும்
புகழ்தலு மயங்கி உரைத்தலும்
கயற்கண் ஏழையைக் கவற்சி தீர்த்தலும்
பகற்குறி நேர்தலும் அக்குறி உரைத்தலும்
இற்செறி வுரைத்தலும் வரைவு கடாவலும்

இரவுவர விசைத்தலும் வரவு விலக்கலும்
மற்றவள் தளர்ச்சியும் இரவுக்குறிநேர்தலும்
எய்துகுறி வினவலும் ஏந்திழை மகிழ்வுடன்
குறியு ரைத்தலும் அதுகேட் டுணர்த்தலும்
மெய்க்குறி யுரைத்தலும் மிகுதியில் கொண்டலும்
ஏந்திழை எடுப்பிலும் இடப்புறத் தகற்றலும்
பூந்தண் சிலம்பன் புணர்ச்சியது குறியும்
செவிலியது சேறலும் சென்றெதிர் கோடலும்
கவ்வை பெரிதவட் கண்டறி என்றலும்
அம்பலும் அலரும் ஆயின என்றலும்
வம்பலர் கோதை வாட்டங் கூறலும்
நற்றாய் செவிலி என்றிவர் நன்னுதற்
குற்றதை அறியாது நற்றிறம் படர்தலும்
கட்டுரை கூட்டலும் கேட்டவள் கூற்றும்
ஒட்டிவெறி அயர்தலும் ஒண்ணுதல் அழுங்கலும்
இவ்வியல் அன்னைக் குணர்த்துக என்றலும்
அவ்வியல் ஒட்டாள் மொழிதலும் ஆயிடைப்
பூத்தரு புணர்ச்சியும் புனல்தரு புணர்ச்சியும்
காப்பரும் புனத்துக் களிறுதரு புணர்ச்சியும்
தாய்தரு புணர்ச்சியும்
கூறிய தாயது குறிப்புவழி மொழிதலும்
வரைந்துநனி புகுதலும் வரைவவர் மறுத்தலும்
கரைந்ததற் கிரங்கலும் கவற்சி தீர்த்தலும்
எதிர்கொளல் மொழிதலும் ஏற்றுமகள் மொழிதலும்
நிரவிய இயற்கையொ டின்னவை பொருளே. *வீரசோ. 90 - 94*

குறிப்பு

1. பெண்டி ராயினும் மைந்த ராயினும்
உண்ட வேட்கை உள்ளது கருதிக்
கொண்டுநனி செய்வது குறிப்பெனப் படுமே *வீரசோ. 90 - 94*

2. அதுவே, உற்றவன் ஒழுக்கமும் உறாச்சிறு நோக்கமும்
பற்றியுரை யாடலும் பாங்கிற் கேட்டலும்
ஊடலும் உணர்தலும் உவத்தலும் பரிதலும்
பாடலும் பரவலும் பணிதலும் பணித்தலும்
அணங்குகொண் டகைத்தலும் அழுங்குற் றுணர்த்தலும்
குணம்புகழ்ந் துரைத்தலும் குற்றம் கூறலும்
செய்தது பொறுத்தலும் செய்வாய் திருத்தலும்
வைத்து மகிழ்தலும் வாட்டம் காண்டலும்
அணிந்தன களைஇ ஆடைபெயர்த் துடுத்தலும்
நாணலும் நகுதலும் நயத்தலும் பார்த்தலும்
கானங் கழியே கடலே காற்றே
பானல் பற்றை பனிமதிப் பருவம்

மலையே புனமே மழையே பிறவும்
என்றிவை யிற்றோடு நின்றுரை யாடலும்
ஒன்றிய குறிப்பென உரைக்கல் வேண்டும் *வீரசோ. 90 - 94*

குறிப்பிசை

எழுத்தில் இசையை அசையொடு சீர்க்கண்
நிரைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே. *யா. கா. 43*

குறை நயப்புக் கூறல்

குறிப்பறித லோடு மென்மொழி கூறல்
விரவிக் கூறல் அறியாள் போறல்
வஞ்சித் துரைத்தல் புலந்து கூறல்
வன்மொழி கூறல் மனத்தொடு நேர்தல்
சொன்னவிரு நான்கும் துறைகுறை நயப்பென
மன்னிய பொருளில் வகுத்திசி னோரே.

கூத்து (கூத்து வருவழி)

குணத்தின் வழியதக் கூத்தெனப் படுமே *(குணநூல்) சிலப். 3 : 12 அடியார்க்.*

அகம் (கூத்துவகை)

அகத்தெழு சுவையான் அகமெனப் படுமே *(சயந்தம்) சிலப். 3 : 12 அடியார்க்.*

கூத்தின் இலக்கணம்

அறுவகை நிலையும் ஐவகைப் பாதமும்
ஈரெண் வகைய அங்கக் கிரியையும்
வருத்தனை நான்கும் நிருத்தக்கை முப்பதும்
அத்தகு தொழில ஆகும் என்ப. *சிலப். 3 : 12 அடியார்க்.*

இருவகைக் கூத்து

அவைதாம்.
சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துற வகுத்தனன் அகத்தியன் தானே *சிலப். 3 : 12 அடியார்க்.*

சாந்திக் கூத்து

1. சாந்திக் கூத்தே தலைவன் இன்பம்
ஏந்திநின் றாடிய ஈரிரு நடமவை
சொக்க மெய்யே அவிநயம் நாடகம்
என்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர் *சிலப். 3 : 12 அடியார்க்.*

2. வாசிகை வைத்து மணித்தோ டணியணிந்து
மூசிய சுண்ண முகத்தெழுதித் - தேசுடனே
ஏந்துசுடர் வாள்பிடித்திட் டிசனுக்குங் காளிக்கும்
சாந்திக்கூத் தாடத் தகும். *சிலப். 5 : 49. அடியார்க்*

விநோதக் கூத்து

1. விநோதக் கூத்து வேறுபா டுடைத்து
வென்றி விநோதக் கூத்தென விளம்புவர் *சிலப். 3 : 13. அடியார்க்.*

2. பரவிய சாந்தி யன்றியும் பரதம்
விரவிய விநோதம் விரிக்குங் காலைக்
குரவை கலிநடங் குடக்கூத் தொன்றிய
கரண நோக்குத் தோற்பா வைக்கூத்
தென்றிவை யாறு நகைதிறச் சுவையும்
வென்றியும் விநோதக் கூத்தென விசைப்ப

சிலப். 6 : 54 - 55 அடியார்க்.

குரவை

குரவைக் கூத்தே கைகோத் தாடல் *சிலப். 5:70 - அரும்பத*

•

கூத்துவகை

குரவை

1. குரவை என்பது கூறுங் காலைச்
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கும் இயல்பிற் றென்ப.

2. குரவை என்ப தெழுவர் மங்கையர்
செந்நிலை மண்டலக் கைகோத்
தந்நிலைக் கொட்பநின் றாட லாகும் *சிலப். பதி. 77. அடியார்க்.*

சேதம்

ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும்
ஆதிக் கதையை அவற்றிற் கொப்பச்
சேதித் திடுவது சேதமென் றாகும் *சிலப். 3 : 13 அடியார்க்.*

துணங்கை

பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத்
தொடக்கிய நடையது துணங்கை யாகும் *சிலப் 5 : 70 அரும்பத.*

பல்வகைக் கூத்து

பல்வகை என்பது பகருங் காலை
வென்றி வசையே விநோத மாகும் *சிலப் : 3 : 13 அடியார்க்.*

பல்வரிக் கூத்து

சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை
கொந்தி கவுசி குடப்பிழுக்கை - கந்தன்பாட்
டாலங் காட் டாண்டி பருமணல் நெல்லிச்சி
சூலந் தருநட்டந் தூண்டிலுடன் - சீலமிகும்

ஆண்டி அமண்புனவே டாளத்தி கோப்பாளி
பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி - மீண்ட
கடவுட் சடைவீர மரீகேசங் காமன்
மகிழ்சிந்து வாமன ரூபம் - விகடநெடும்
பத்திரங் கொற்றி பலகைவாள் பப்பரப்பெண்
டத்தசம் பாரம் தகுணிச்சங் - கத்து
முறையீண் டிருஞ்சித்து முண்டித மன்னப்
பறைபண் டிதன்புட்ப பாணம் - இறைபரவு
பத்தன் குரவையே பப்பறை காவதன்
பித்தனொடு மாணி பெரும்பிழுக்கை - எத்துறையும்
ஏத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக்
கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து - மூத்த
கிழவன் கிழவியே கிள்ளுப் பிறாண்டி
அழகுடைய பண்ணிவிக டாங்கம் - திகழ் செம்பொன்
அம்மனை பந்து கழங்காட லாலிக்கும்
விண்ணகக் காளி விறற்கொந்தி - அல்லாத
வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்த முடைய சடாதாரி - ஏய்ந்தவிடை
தக்கபிடார் நிர்த்தந் தனிப்பாட்டுச் சாதுரங்கம்
தொக்க தொழில்புனைந்த சோணாண்டு - மிக்க
மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையாடு வேடு சிவப்புத் - தலையில்
திருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்
டிருண்முகத்துப் பேதை இருளன் - பொருமுகத்துப்
பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தந் தோள்வீச்சு நற்சாழல் - அல்லாத
உந்தி யவலிடி யூராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத் - தந்தியம்போ
தாடுங் களிகொய்யு முள்ளிப்பூ வையனுக்குப்
பாடும்பாட் டாடும் படுபள்ளி - நாடறியும்
கும்பீடு நாட்டங் குணாட்டங் குணாலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனக மஞ்சரி
ஏற்ற வுழைமை பறைமைமுத லென்றெண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம் *சிலப். 3 : 13 அடியார்க்.*

மார்க்கம் (ஒருவகைக் கூத்து)

மார்க்கம் என்பது வடுகின் பெயரே *சிலப். 3 : 12 அரும்.*

வசைக்கூத்து

பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
வல்லவன் ஆதல் வசையெனப் படுமே *சிலப். 3 : 13 அடியார்க்.*

வென்றிக் கூத்து

அவற்றுள்,
மாற்றான் ஒடுக்கமும் மன்னன் உயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே. *சிலப். 3 : 13 அடியார்க்.*

வைசாக நிலை

வைகாச நிலையே வடுகிற்கும் வரையார் *சிலப். 3 : 155-6 அடியார்க்.*

தேசிவருமுறை

கொண்ட தேசிப் பகுதி யெல்லாம்
மண்டில நிலையின் வருதக வுடைத்தே *சிலப். 3 : 152 அடியார்க்.*

எழுவகைக் கூத்தும் ஆடுவார்

எழுவகைக் கூத்தும் இழிகுலத் தோரை
ஆட வகுத்தனன் அகத்தியன் தானே *சிலப். 3 : 12. அடியார்க்.*

கூலவகை

1. எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
   கடலை துவரை மொச்சை யென்றாங்
   குடனிவை முதிரைக் கூலத் துணவே *சிலப். 14 : 208 - 211 அடியார்க்.*
2. நெல்லுப் புல்லு வரகுதின்ன சாமை
   இறுங்கு தோரையொடு கழைவினை நெல்லே
3. பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக. *சிலப். 5 : 22. 23 அடியார்க்.*

கூற்று

கிழவன் பாங்கன்
கிழத்தி தோழி திறத்தன கூற்றே *யா. வி. 96*

கூற்றுக்குரியவர்

தலைமகன் தலைவி தோழி தாயே
கலைமருங் காப்பிற் செவிலி பாங்கன்
சீறியாட் பாணன் கண்டோர் கட்டு
வேலன் விறலி நலத்தகை யூரே
சேரி அயலோ டின்னன பிறவும்
ஆகும் என்ப அறிந்திசி னோரே *வீரசோ. 90 - 94*

கூற்றுவகை

நெஞ்சுக் குரைத்தல் கேட்டோர்க் குரைத்தல்
அந்தர மருங்கின அறிதரக் கூறலென
வந்த வகையின மூவகைக் கூற்றே *வீரசோ. 90 - 94*

கூறியது கூறல் குற்றமாகாத இடம்

கூறியது கூறினும் குற்றம் இல்லை
வேறும் ஒருபொருள் விளைக்கும் ஆயின் *யா. வி. 57.*

சுவன்

அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு
முடிய நிற்பது கூனென மொழிப. *(பல்காயனார்) யா. கா. 43.*

கூன் வஞ்சியின் வருதல்

வஞ்சியின் இறுதியும் ஆகும் அதுவே. *(பல்காயனார்) யா. கா. 43.*

கேள்வி

உயர்தினை மருங்கின் இவர்நனி கேட்டோர்
அஃறினை மருங்கின் இது நனி கேட்டதெனச்
சொல்லுதல் கேள்வி என்மனார் புலவர். *வீரசோ. 90 - 94*

கைக்கிளை

1. காட்சி முதலாக் கலவியின் ஒருதலை
வேட்கையில் தோன்றுதல் கைக்கிளை; அதுதான்
கேட்போர் இல்லாக் கிளவிய தாகும். *கள. கா. 24 யா. கா. 35 வீரசோ. 104*

2. கைக்கிளை தானே கருதும் விருத்தம்
ஐந்தும் மூன்றும் ஆகவும் பெறுமே. *(செய்யுள் வகைமை) நவநீதப் பாட்டியல் 42*

கைக்கிளைப் பாட்டு

போற்றி வெண்பா ஆகி மற்றதன்
இறுதி அஞ்சீர் ஆசிரி யம்மே *(கைக்கிளைப் படலம்) தொல். பொருள். 472 பேரா.*

கைக்கிளை - பெருந்திணை

கைக்கிளை செந்திறம் பெருந்திணை நோந்திறம்
அத்திறம் இரண்டும் அகத்திணை மயங்காது
அத்திணை யானே யாத்தனர் புலவர். *தொல். பொருள். 55. இளம்.*

கைவகை

மெய்பெறத் தெரிந்து மேலோர் ஆய்ந்த
கைவகை தன்னைக் கருதுங் காலை
இணையா வினைக்கை இணைக்கை என்ன
அணையும் என்ப அறிந்திசி னோரே

இணையா வினைக்கையும் இணையும் வினைக்கையும்

இணையா தியல்வ திணையா வினைக்கை
இணைந்துடன் வருவ திணைக்கை யாகும்

இணையா வினைக்கை

இணையா வினைக்கை இயம்புங் காலை
அணைவுறு பதாகை திரிபதா கையே

சுத்தரிகை தூப மராள மிளம்பிறை
சுகதுண் டம்மே முட்டி கடகம்
சூசி பதும கோசிகந் துணிந்த
மாசில்காங் கூலம் வழுவறு கபித்தம்
விற்பிடி குடங்கை யலாபத் திரமே
பிரமரந் தன்னொடு தாம்பிர சூடம்
பிசாச முகுளம் பிண்டி தெரிநிலை
பேசிய மெய்ந்நிலை யுன்ன மண்டலம்
சதுர மான்றலை சங்கே வண்டே
அதிர்வி லிலதை கபோத மகரமுகம்
வலம்புரி தன்னொடு முப்பத்து மூன்றென்
றிலங்குமொழிப் புலவர் இசைத்தன ரென்ப

பதாகை

பதாங்க என்பது பகருங் காலைப்
பெருவிரல் குஞ்சித் தலாவிரல் நான்கு
மருவி நிமிரு மரபிற் றென்ப

திரிபதாகை

திரிப தாகை தெரியுங் காலை
அறைப தாகையின் அணிவிரல் முடக்கினஃ
தாமென மொழிப அறிந்திசி னோரே

கத்தரிகை

கத்தரி கையே காண்டக விரிப்பின்
அத்தரி பதாகையின் அணியின் புறத்தைச்
சுட்டக மொட்ட விட்டுநிமிர்ப் பதுவே

தூபம்

தூபம் என்பது துணியுங் காலை
விளங்குகத் தரிகை விரலகம் வளைந்து
துளங்கு மென்ப துணிபறிந் தோரே

அராளம்

அராள மாவ தறிவரக் கிளப்பின்
பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரன் முடக்கி
விரல்கள் மூன்று நிமிர்த்தகம் வளைத்தற்
குரிய தென்ப வுணர்ந்திசி னோரே

இளம்பிறை

சுட்டும் பேடும் அநாமிகை சிறுவிரல்
ஒட்டி யகம்வளைய ஒசித்த பெருவிரல்
விட்டு நீங்கும் விதியிற் றென்ப

சுகதுண்டம்

சுகதுண்ட மென்பது தொழில்பெறக் கிளப்பின்
சுட்டு விரலும் பெருவிரல் தானும்
ஒட்டி யுகிர்நுனை கௌவி முன்வளைந்
தநாமிகை முடங்கப் பேட்டொடு சிறுவிரல்
தான்மிக நிமிர்ந்த தகுதித் தென்ப

முட்டி

முட்டி என்பது மொழியுங் காலைச்
சுட்டுநடுவிரல் அநாமிகை சிறுவிரல்
இறுக முடக்கி இவற்றின்மிசைப் பெருவிரல்
முறுகப் பிடித்த முறைமைத் தென்ப

கடகம்

கடக முகமே கருதுங் காலைப்
பெருவிரல் நுனியும் சுட்டுவிரல் நுனியும்
மருவ வளைந்தவ் வுகிர்நுனி கௌவி
ஒழிந்த மூன்றும் வழிவழி நிமிர
மொழிந்தனர் என்ப முடிபறிந் தோரே

சூசி

சூசி யென்பது துணியுங் காலை
நடுவிரல் பெருவிர லென்றிவை தம்மில்
அடைவுட னொற்றிச் சுட்டுவிர னிமிர
ஒழிந்தன வழிவழி முடங்கி நிற்ப
மொழிந்தனர் மாதோ முடிபறிந் தோரே.

பதுமகோசிகம்

பதும கோசிகம் பகருங் காலை
ஒப்பக் கைவளைத் தைந்து விரலு
மெய்ப்பட வகன்ற விதியிற் றாகும்

காங்கூலம்

1. காங்கூ லம்மே கருதுங் காலைச்
சுட்டும் பேடும் பெருவிரன் மூன்றும்
ஒட்டிமுன் குவிய வநாமிகை முடங்கிச்
சிறுவிர னிமிர்ந்த செய்கைத் தாகும்

2. முகிழ்காங் கூல முந்துற மொழிந்த
குவிகாங் கூலங் குவிவிழந் ததுவே

3. மலர்காங் கூல மதுமலர்ந் ததுவே

கபித்தம்

கபித்த மென்பது காணுங் காலைச்
சுட்டுப் பெருவிர லொட்டிநுனி கௌவி
அல்ல மூன்று மெல்லப்பிடிப் பதுவே

விற்பிடி

விற்பிடி யென்பது விரிக்குங் காலைச்
சுட்டொடு பேடி யநாமிகை சிறுவிரல்
ஒட்டி யகப்பால் வளையப் பெருவிரல்
விட்டு நிமிரும் விதியிற் றாகும்.

குடங்கை

குடங்கை யென்பது கூறுங்காலை
உடங்கு விரற் கூட்டி யுட்குழிப் பதுவே

அலாபத்திரம்

அலாபத் திரமே யாயுங் காலைப்
புரைமையின் மிகுத்த சிறுவிரன் முதலா
வருமுறை யையந்தும் வளைந்துமறி வதுவே

பிரமரம்

பிரமர மென்பது பேணுங் காலை
அநாமிகை நடுவிர லறவுறப் பொருந்தித்
தாம்வலஞ் சாயத் தகைசால் பெருவிரல்
ஒட்டிய நடுவுட் சேரச் சிறுவிரல்
சுட்டு வளைந்துபின் றோன்றிய நிலையே

தாம்பிரசூடம்

தாம்பிர சூடமே சாற்றுங் காலைப்
பேடே சுட்டுப் பெருவிர னுனியொத்துக்
கூடி வளைந்து சிறுவிர லணிவிரல்
உடனதின் முடங்கி நிமிர நிற்பதுவே

பசாசம்

1. பசாச மென்பது பாற்படக் கிளப்பின்
அகநிலை முகநிலை யுகிர்நிலை யென்னத்
தொகநிலை பெற்ற மூன்றுமென மொழிப

2. அவைதாம்
சுட்டுவிர னுனியிற் பெருவிர லகப்பட
ஒட்டிவளைத்த தகநிலை முகநிலை;

3. அவ்விர னுனிகள் கௌவிப் பிடித்தல்
செவ்வி தாகுஞ் சிறந்த வுகிர்நிலை

4. உகிர்நுனை கௌவிய தொழிந்த மூன்றும்
தகைமையி னிமிர்த்தலம் மூன்றற்குந்தகுமே

முகுளம்

முகுள மென்பது மொழியுங் காலை
ஐந்து விரலும் தலைகுவிந் தேற்ப
வந்து நிகழு மாட்சித் தாகும்.

பிண்டி

பிண்டி யென்பது பேசுங் காலைச்
சுட்டுப் பேடி யநாமிகை சிறுவிரல்
ஒட்டி நெகிழ முடங்க வவற்றின் மிசை
விலங்குறப் பெருவிரல் விட்டுங் கட்டியும்
இலங்குவிரல் வழிமுறை யொற்றலு மியல்யே

தெரிநிலை

தெரிநிலை யென்பது செப்புங் காலை
ஐந்து விரலு மலர்ந்து குஞ்சித்த
கைவகை யென்ப கற்றறிந் தோரே

மெய்ந்நிலை

மெய்ந்நிலை யென்பது விளம்புங் காலைச்
சிறுவிர லநாமிகை பேடொடு சுட்டிவை
உறுத லின்றி நிமிரச் சுட்டின் மிசைப்
பெருவிரல் சேரும் பெற்றித் தென்ப

உன்னம்

உன்னநிலையே யுணருங் காலைப்
பெருவிரல் சிறுவிர லென்றிவை யினைய
வருமுறை மூன்று மலர்ந்துநிமிர் வதுவே

மண்டலம்

மண்டல மென்பது மாசறக் கிளப்பிற்
பேடு நுனியும் பெருவிர னுனியும்
கூட வளைந்துதம் முகிர்நுனை கௌவி
ஒழிந்த மூன்று மொக்க வளைவதென
மொழிந்தன ரென்ப முழுதுணர்ந் தோரே

சதுரம்

சதுர மென்பது சாற்றுங் காலை
மருவிய மூன்று நிமிர்ந்தகம் வளையப்
பெருவிர லகமுறப் பொற்பச் சேர்த்திச்
சிறுவிரல் பின்பே நிமிர்ந்த செவ்வியின்
இறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே

மான்றலை

மான்றலை யென்பது வகுக்குங் காலை
மூன்றிடை விரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப்
பெருவிரல் சிறுவிர லென்றிவை நிமிர்ந்து
வருவ தென்ப வழக்கறிந் தோரே.

சங்கம்

சங்கெனப் படுவது சாற்றுங் காலைச்
சிறுவிரன் முதலாச் செறிவிர னான்கும்
பெறுமுறை வளையப் பெருவிர னிமிர்ந்தாங்
கிறுமுறைத் தென்ப வியல்புணர்ந் தோரே

வண்டு

வண்டென் பதுவே வகுக்குங் காலை
அநாமிகை பெருவிர னனிமிக வளைந்து
தாநுனி யொன்றித் தகைசால் சிறுவிரல்
வாலிதி னிமிர மற்றைய வளைந்த
பாலின தென்ப பயன்றெரிந் தோரே.

இலதை

இலதை யென்ப தியம்புங் காலைப்
பேடியுஞ் சுட்டும் பிணைந்துட னிமிர்ந்து
கூடிய பெருவிரல் கீழ்வரை குறுகக்
கடையிரு விரலும் பின்னர் நிமிர்ந்த
நடையின தென்ப நன்னெறிப் புலவர்

கபோதம்

காணுங் காலைக் கபோத மென்பது
பேணிய பதாகையிற் பெருவிர னிமிரும்

மகரமுகம்

மகரமுக மென்பது வகுக்குங் காலைச்
சுட்டொடு பெருவிரல் கூட வொழிந்தவை
ஒட்டி நிமிர்ந்தாங் கொன்றா வாகும்

வலம்புரி

வலம்புரிக் கையே வாய்ந்த கனிட்டன்
நலந்திகழ் பெருவிர னயமுற நிமிர்ந்து
சுட்டு விரன் முடங்கிச் சிறுவிர னடுவிரல்
விட்டுநிமிர்ந் திறைஞ்சும் விதியிற் றென்று
கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந் தோரே

இணைக்கை வகை

எஞ்சுத லில்லா வினைக்கை யியம்பில்
அஞ்சலி தன்னொடு புட்பாஞ் சலியே

பதுமாஞ் சலியே கபோதங் கற்கடகம்
நலமாஞ் சுவத்திகங் கடகா வருத்தம்
நிடதந் தோரமுற் சங்க மேம்பட
உறுபுட் படுட மகரஞ் சயந்தம்
அந்தமில் காட்சி யபய வத்தம்
எண்ணிய வருத்த மானந் தன்னொடு
பண்ணுங் காலைப் பதினைந் தென்ப

அஞ்சலி

அஞ்சலி யென்ப தறிவுறக் கிளப்பின்
எஞ்ச லின்றி யிருகையும் பதாகையாய்
வந்தகம் பொருந்து மாட்சித் தென்றனர்
அந்தமில் காட்சி யறிந்திசி னோரே.

புட்பாஞ்சலி

புட்பாஞ் சலியே பொருந்தவிரு குடங்கையும்
கட்டி நிற்குங் காட்சிய தென்ப

பதுமாஞ்சலி

பதுமாஞ் சலியே பதும கோசிகம்
எனவிரு கையு மியைந்து நிற்பதுவே

கபோதம்

கருதுங் காலைக் கபோத வினைக்கை
இருகையுங் கபோத மிசைந்துநிற் பதுவே

கற்கடகம்

கருதுங் காலைக் கற்கட கம்மே
தெரிநிலை யங்குலி யிருகையும் பிணையும்

சுவத்திகம்

சுவத்திக மென்பது சொல்லுங் காலை
மணிக்கட் டமைந்த பதாகை யிரண்டையு
மணிக்கட் டேற்றி வைப்ப தாகும்

கடகாவருத்தம்

கருதிய கடாக விருத்தக் கையே
இருகையுங் கடக மணிக்கட் டியைவது

நிடதம்

நிடத மென்பது நெறிப் படக் கிளப்பின்
முட்டி யிரண்டுகை யுஞ்சம மாக
கட்டி நிற்குங் காட்சித் தென்ப

தோரம்

தோர மென்பது துணியுங் காலை
இருகையும் பதாகை யகம்புற மொன்ற
மருவிமுன் றாழும் வழக்கிற் றென்ப

உற்சங்கம்

உற்சங்க மென்ப துணருங் காலை
ஒருகை பிறைக்கை யொருகை யராளம்
தெரிய மணிக்கட்டி லேற்றிவைப் பதுவே

புட்பபுடம்

புட்பபுட மென்பது புகலுங் காலை
ஒத்த விரண்டு குடங்கையு மியைந்து
பக்கங் காட்டும் பான்மைத் தென்ப

மகரம்

மகர மென்பது வாய்மையி னுரைப்பிற்
கபோத மிரண்டு கையு மகம்புறம்
ஒன்ற வைப்பதென் றுரைத்தனர் புலவர்

அபயவத்தம்

அபயவத் தம்மே யறிவுறக் கிளப்பின்
வஞ்சமில் சுகதுண்ட மிருகையு மாட்சியில்
செஞ்சுற நோக்கி நெகிழ்ந்துநிற் பதுவே

வருத்தமானம்

வருத்த மானம் வகுக்குங் காலை
முகுளக் கையிற் கபோதக் கையை
நிகழச் சேர்த்து நெறியிற் றென்ப

பொருட்கை

அவைதாம்
எழிற்கை யழகே தொழிற்கை தொழிலே
பொருட்கை கவியிற் பொருளா கும்மே *சிலப் 3 : 13 - 18*

கற்கடகம்

இருவிரல்கள் தம்மையும் தம்முள்ளே கோத்துப்
பெருவிரல்கள் நீக்கநண் டாம் *சிலப். 17 : 17 அரும்.*

பதாகை

1. பெருவிரல் குஞ்சித் தேனைய நான்கும்
நிரலே நிமிர்த்தல் பதாகை யாகும் *சிலப். 8 : 27-28 அரும்.*

2. எல்லா விரலு நிமிர்த்திடை யின்றிப்
பெருவிரல் குஞ்சித்தல் பதாகை யாகும் *சிலப். 8 : 27 - 28 அடியார்க்.*

கொள்வோர்

கொள்வோர்க் கிடம்

கொள்வோர் தம்மை வரையா இயல்பும்
அல்லா தாரை வரையும் இயல்பும்
கொள்வோர் இணங்கிக் கூட்டி வரினும்
அல்லா தார்வந் தணுகா இயல்பும்
கொள்வோர் இணங்காது தள்ளினர் ஆயினும்
அவருள் யாரையும் அகற்றா இயல்புமென
ஆவகை நான்கும் மேவிய தென்ப
கொள்வோர்க் குறித்துக் கொள்ளும் இடனே.

கொள்வோர்ப் பற்றிய புறத் தொழில்

கொள்வோன் மருங்கில் தான்செல் லாமல்
ஈவோன் அவனைத் தன்மருங் குய்த்தலும்
அவன்மயங் காமல் அரும் பொருள் அளித்தலும்
கேட்டன நெஞ்சம் நாட்டி உசாவத் தன்பால்
வைத்தலும் அவனுடன் அவ்வினை யாளர் பிறரும்
பயில்வகை ஆங்கே செயலும் என்ன
ஆவகை நான்கும் தாவிலா சாற்குக்
கொள்வோர்ப் பற்றிக் குறிக்கும் புறத்தொழில்

கொள்வோர் வரைவு

முயற்சி இன்மையின் வரைவும் காலம்
அன்மையின் வரைவும் அல்ல செயலின் வரையும்
அறியாமை நாடி அப்பொருள் வரைவுமெனத்
தள்ளா நான்கும் கொள்வோர் வரைவே.

கொள்வோனைப் பற்றிய துணைவினை

ஈவோன் கொள்வோற் றன் கீழ் இருத்தல்
அவனை ஏவலின் அசைத்தல் இன்மை
அவன்தான் ஆகவும் அசையச் செய்யாமை
ஈவோன் தானும் அசைதல் இன்மை
என நான் கென்ப ஈதற் றொழிற்கட்
கொள்வோர்ப் பற்றிக் குறிக்கும் துணைவினை

கோடன் மரபு (கொள்வோன் முறைமை)

1. கொள்வோன் முறைமை கூறங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
முன்னும் பின்னும் இரவினும் பகலினும்
அகலான் ஆகி அன்பொடு புணர்ந்தாங்
கிருவென இருந்தே டவிழென அவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிப் போவெனப்

போகி நெஞ்சுகள னாகச் செவிவா யாகக்
கேட்டவை கேட்டவை வல்லன் ஆகிப்
போற்றிக் கோடல் அவனது தொழிலே.

2. எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சிவழி பாடே.

3. செவ்வன் தெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான்
பல்லுரையும் கேட்பான் மிகப்பெரிதும் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்
இவ்வாறு மாண்பும் உடையாற் குரைப்பவே
செவ்விதின் நூலைத் தெரிந்து.

4. வழக்கின் இலக்கணம் இழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

5. அனையன் அல்லோன் கொள்குவ னாயின்
வினையின் உழப்பொடு பயன்றலைப் படாஅன் *தொல். பாயிரம் இளம்*

6. அனையல் அல்லோன் அம்மர பில்லோன்
கேட்குவன் ஆயிற் கொள்வோன் அல்லன். *தொல். பாயிரம். நச்.*

கோவைப்பாட்டிற்கு எழுத்தளவு

எழுவாய் நிரைவரினாம் ஏழுடைய ஈரைந்
தெழுவாய் தனிவரினொன் றெஞ்சும்-வழுவாத
கோவையும் செய்யும்கால் குன்றா பெருகா வென்
றேவினார் தொல்லோர் எழுத்து. *யா. வி. 95*

சக்கரம்

ஆறாரைச்சக்கரம்

1. ஆராறாய் அவ்வார்மேல் எவ்வே ழெழுத்தாகி
ஏரார்ந்த நேமிமேல் ஈராறாய்ச் - சீரார்ந்த
ஒண் குறட்டைச் சூழ நடுவோர் தகாரமேற்
றண்மணவிற் சக்கரமாந் தான் *யா. வி. 96*

எட்டாரைச் சக்கரம்

2. ஆரெட்டாய் அவ்வார்மேல் ஐயைந் தெழுத்தாகி
ஏரொத்த நேமிமேல் எண்ணான்காய் - வாரத்தால்
வாழ்க வலிவல மாவுளதேன் மாதவர்கோன்
சூழ்தருமச் சக்கரமாச் சொல்லு *யா. வி. 96*

எட்டாரைச் சக்கரம்

3. எட்டாராய் நேமி பதினேழாய் ஆர்தொறும்
பட்ட பதினேழெழுத்தாய்ச் - சுட்டிய
கொப்பூழின் ஈற்றெழுத்தாய்க் கொண்டபுறத் துண்டத்துத்
தப்பா விருபத் திரண்டெழுத்தாய்த் - துப்பேற
வீரெட் டடியும் எழிற்சக் கரக்கவியை
நேரிட் டெழுதி நிறுத்துங்காற் - சீரிட்ட
நவ்வு மனநடையின் நன் கண்ணின் ஒத்தியலும்
செவ்விதனை ஈங்கியலச் செப்பிடுவேன் - எவ்வாயும்
ஒன்றுவிட்டொன்றாம் ஒளிநேமி எட்டின்கண்
நின்றபுகழ் வீரன் திருநாமம் - பின்றாமை
மன்னியவோர் எட்டாகும் மாலைமாற் றாமதுவும்
முன்னு சுழிகுளமும் ஓரடியாம் - துன்னிய
ஈரடியும் கோமூத் திரியாம் தமிழ்க் கூட்டுக்
கூரிய கூட சதுக்கமாம் - சீரிய
விற்பூட்டும் ஏது எனுமிவையாம் இந்நூலிற்
கற்பார் கருத்தாக் களையுரைத்த - பொற்பார்
கவியென்னும் வள்ளுவன்பா மூன்றினு மூன்று
செவியென்றும் வந்து சிறக்கும் - புவியின்கண்
ஒன்றுக் கொன் றுள்ளாப் பதினெட்டு வட்டமிட
நின்றபதி னேழு நிலத்து. *வீரசோ.179*

சத்துவம்

1. நின்ற சுவையே ... ...
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவம் என்ப.

2. சத்துவம் என்பது சாற்றுங் காலை
மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்த்தல்
நடுக்கம் கடுத்தல் வியர்த்தல் தேற்றம்
கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த
பத்தென மொழிப சத்துவந் தானே *தொல். மெய்ப்.1. இளம்.*

சந்தம்

சந்தத் தாண்டகம்

சந்தச் சரணமும் தாண்டகத்தின் பாதமும்
வந்து மயங்கி வழுவிகந்த - செந்தமிழ்நர்
ஈண்டு வடநூற் புலவர் இயற்சந்தத்
தாண்டகம் என்றுரைப்ப தாம் *யா. வி. 95*

சந்தத் தொகை, அளவு முதலியன

1. இரண்டுநான் கெட்டுப் பதினாறு முப்பத்
திரண்டறுபத் தீரிரண் டேறப்-பொருந்திய

உத்தம் முதலாக உற்கிருதி ஈறாக
வைத்துரைப்பார் நாவல் லவர்.

2. விருத்த விரியிரட்டித் தோர்விரல் நீக்க
விருத்த விரற்களவை யாம்.

3. ஒருவிரற்கு மெய்யுணரின் மூன்றிறந்த சந்தம்
விரிமூன்று தொட்டுமே லேற - விரல் தொடங்கி
ஈறு முதலாக இவ்வளவும் ஏய்ந்த தொகை
வேறுபா டின்றி விளம்பு.

4. ஆதி இரட்டித் ததனகத் தொன்றிடினும்
வேறுபா டில்லை விரல்

5. மூன்றேழு மூவைந்து முப்பதின்மேல் ஒன்றதுவும்
மூன்றுடைய மூவிரு பஃதுமெனத் - தோன்ற
வரற்றொகைவா னன்றாகக் காணுமே சந்த
விரற்றொகையா னின்ற விரி *வீரசோ. 137*

சந்தப் பெயரும் முறையும்

ஒத்தமைந்த சந்தப் பொதுப்பெயர் ஆய்ந்துரைப்பின்
உத்தம் அதியுத்தம் மத்திமம் ஒத்தநிலை
நன்னிலை காயத் திரியுடன் உண்டி
அனுட்டுப் பொடுபகுதி பந்தி வனப்புச்
சயதி அதிசயதி சக்குவரி மற்றைஅதி
சக்குவரி ஆடி அதியாடி திருதி
அதிதிருதி யோடு கிருதி பிரகிருதி
ஆகிருதி விக்கிருதி சங்கிருதி மேலும்
அபிகிருதி உற்கிருதியாமெழுத்தா லென்றார்
இருபதின்மேல் ஆறும் இவை. *வீரசோ. 137*

சமாயிதம்

நினைவுடைப் பொருளை நிரப்புதற் கதுவாம்
துணையெனப் படுவது துணைப்பே றென்ப. *வீரசோ. 169.*

சார்பில் தோன்றுவன

குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தப் புள்ளி என்றிவை மூன்றும்
சார்பிற் றோற்றத் துரிமையு முளவே *யா.வி. 2*

சான்றோர் பக்கத் தெட்டியல்

அழுக்கா றிலாமை அவாவின்மை தூய்மை
ஒழுக்கம் குடிபிறப்பு வாய்மை - இழுக்காத
நற்புலமை யோடு நடுவு நிலைமையே
கற்புடைய எட்டுறுப்புக் காண் *வீரசோ. 102*

சிலேடை

மெய்ப்பொருள் ஏற இயம்பிய இரண்டையும்
திட்பங் கூறுதல் சிலேடையாகும். *வீரசோ. 152*

ஒருவினை - பலவினைச் சிலேடை:

ஒருவினை முடித்தலும் பலவினை முடித்தலும்
ஒருவினை பல்வினைச் சிலேடை யாகும். *வீரசோ. 170*

சிறப்பு

சிறப்பு (அணி)

சிறப்புடைப் பொருளைக் கூறும் வகை :

1. சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல் *யா. வி. 1*
2. சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல் *தொல்.பொருள். 470 பேரா.*

சாதியும் குணமும் கிரியையும் பொருந்த
மேதகு சிறப்பின் விளம்புதல் சிறப்பே. *வீரசோ.152*

சின்னப்பூ

மன்னர் ஏவல் பெற்ற மாந்தர்க்குத்
தொண்ணூ றெழுப்பது சொல்லியல் வரையார்
ஆங்கவை இனமுறை ஒன்றுமூன் றைந்தே
ழோங்கிய வெண்பாச் சின்னப் பூவே" *நவநீதப். 40*

சீர்

1. அசையிரண்டும் மூன்றும் அவைநான்கும் ஒன்றும்
வசையில் முறைமையின் வந்து - திசைகமழும்
ஏரேற்ற கோதாய் எதிபங்கம் வாராமைச்
சீரேற்று நிற்பது சீர். *யா. வி. 16*
2. ஈரசை கொண்டது சீரெனப் படுமே
மூவசை இறத்தல் இல்லென மொழிப *யா. வி. 95*

சீர் வைப்பு முறை

1. இயற்சீர் உரிச்சீர் பொதுச்சீர் என்னும்
நிகழ்ச்சிய என்ப நின்ற மூன்றும் *(மயேச்சுரர்) யா.வி. 10*
2. அசையே இரண்டும் மூன்றும் தம்முள்
இசையே வருவன சீரெனப் படுமே
ஈரிரண் டாகியும் ஒரோவிடத் தியலும் *(பல்காயனார்)*
3. நாலசை யானும் நடைபெறும் ஓரசை
சீர்நிலை எய்தல் சிலவிடத் துளவே *(காக்கைபாடினியார்)*
4. நாலசைச் சீரும் ஒரோவிடத் தியலும்
பாவொடு பாவினம் பயிறல் இன்றி *(அவிநயனார்) யா.வி. 14*

5. நேரும் நிரையும் சீராய் வருதலும்
சீரும் தளையும் சிதைவுழிக் கொளலும்
யாவரும் உணர்வர் யாவகைப் பாவினும் *(மயேச்சுரர்) யா.வி. 14*

இயற்சீர் இலக்கணம்

ஒரோஒ அகையினால் ஆகிய ஈரசைச்
சீரியற் சீரெனச் செப்பினர் புலவர் *(காக்கைபாடினியார்) யா.வி.11*

இயற்சீர் நான்கு

நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரையென்
றீரிரண் டென்ப இயற்சீர்த் தோற்றம் *யா. வி. 10*

இயற்சீரும் உரிச்சீரும் வருமிடம்

1. இயற்சீர் உரிச்சீர் எனவிரு சீரும்
மயக்க முறைமையின் நால்வகைப் பாவும்
இனத்தின் மூன்றும் இனிதின் ஆகும்.

2. உரிச்சீர் விரவ லாயும் இயற்சீர்
நடக்குன ஆசிரி யத்தொடு வெள்ளை
அந்தம் தனியாய் இயற்சீர் கலியொடு
வஞ்சி மருங்கின் மயங்குதல் இலவே

3. நாலசை யானடை பெற்றன வஞ்சியுள்
ஈரொன் றிணைதலும் ஏனுழி ஒன்றுசென்
றாகலும் அந்தம் இணையசை வந்தன
கூறிய வஞ்சிக் குணத்த ஆகலும்
ஆகுன என்ப அறிந்திசி னோரே *(காக்கைபாடினியார்) யா.வி. 15*

ஆசிரிய உரிச்சீர்

இயற்சீர் எல்லாம் ஆசிரிய உரிச்சீர் *(காக்கை பாடினியார்) யா.வி. 11*

இயற்சீர்

1. இயலசை மயக்கம் இயற்சீர் ஆகும்
உரியசைப் பின்னர் நேரியல் காலையும்
இயலசை இறுதி வருஉம் உரியசை
இயற்சீர்ப் பால ஆகும் என்ப

2. நேரும் நிரையும் மயங்கிய நான்கென்ப நேரிறுவாய்
நேர்பும் நிரைபும் முதலியற் சீர்களும் நேர்நிரைப்பின்
நேர்பும் நிரைபும் நிலவிய நான்கும் நிரைவளைத்தோள்
நேர்நுண் குழல்மட வாய்இயற் சீரென்று நேர்ந்தனரே *யா. வி. 95*

உரிச்சீர்வகை

ஆசிரிய உரிச்சீர் வெண்பா உரிச்சீர்
வஞ்சியொடு மூன்றே உரிச்சீர் தோற்றம்

ஆசிரிய உரிச்சீர்

1. உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்
நிரையிறு காலையும் அதனோ ரற்றே

2. நேர்பும் நிரையும் மயங்கிய நான்கும் நிரையிறுவாய்
நேர்பும் நிரைபும் முதலிய சீர்களும் நேர்நிரையாய்ச்
சேரும் அளபெடைப் பின்னிரை சேரிரு சீரொடெட்டும்
ஆரும் அறிவுற ஓதினர் ஆசிரி யக்கனவையே

வெண்பா உரிச்சீர்

நேர்நேர் நிரைநேர் ஆயிரு சீரும்
நேர்முத லாகவும் நிரைமுத லாகவும்
நான்கென மொழிப வெண்பா உரிச்சீர்

வஞ்சி உரிச்சீர்

1. வெண்பா உரிச்சீர் அல்லா மூவசை
எல்லாம் வஞ்சி உரிச்சீர் ஆகும்

2. நேர்நிரை நேர்பு நிரைபுமுப் பாலும் நிரைத்துறழ்ந்தாற்
சீர்சிலை முப்பத்திரண்டின் இரட்டியச் சீரிலுள்ளா
நேர்நிரை யாதி இடைகடை நேர்வந்த நான்கும் வெள்ளைக்
காரியர் ஓதினர் அல்லன வஞ்சிக் கறுபதுமே *யா. வி. 95*

மூவசைச் சீர்

1. மூவசை யான்முடி வெய்திய எட்டனுள்
அந்தம் தனியசை வெள்ளை; அல்லன
வஞ்சிக் கிழமை வகைப்பட் டனவே *(காக்கை பாடினியார்) யா. வி. 12*

2. ஈரசை யாக மூவசைச் சீர்தான்
நேரிறின் வெள்ளை நிரையிறின் வஞ்சி *(அவிநயனார்) யா.வி. 12*

நாலசைச்சீர்

ஈரசைச் சீர் முன்பின் னாவைத் துறழ்ந்து
மாறியக்கால் நாலசைச் சீர்பதி னாறாம் *(அவிநயனார்) யா. வி. 13*

நாலசைச் சீர்க்கு வாய்பாடு

1. தேமா புளிமா கருவிளம் கூவிளம்மென்
றாமா றறிந்தவற்றின் அந்தத்து - நாமாண்பின்
தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழலும்
நண்ணுவிக்க நாலசைச்சீர் ஆம்

2. வாய்க்காலும் வாய்த்தலையும் மாண்ட துலைவாயும்
நீக்காப் பெருந்துறையும் முன்னிறீஇ - நீக்கா
மறிவுவாழ் வென்ப திடையா முதற்கண்
சுறமறிப்பின் நாலசைச்சீர் சொல்

3. ஆரம் முறுவல் அணிவடம் மேகலையென்
நீரிரண்டும் வைத்தெண் இடையாரச் - சேர்வித்து
முத்தும் மணியும் முதல் வைப்ப நாலசைச்சீர்
பத்துமிரு மூன்றும் படும். *யா. வி. 13*

நாலசைச்சீர் நடவாமை

1. நேரசை இறுதியாய் நிகழும் - ஈரசைச்
சீர்க்கடை வஞ்சியுட் செலவும் கூறினார்
நேர்நிரை நேர்பொடு நிரையும் நாலசைச்
சீருநன் கெடுத்துடன் செப்பி னாரரோ *(பல்காயனார்)*

2. குற்றிய லுகரமும் கூனும் சிந்துமா
முற்றிய அன்றியும் மொழிவ ராமெனின்
தெற்றென நெடிலடி சேரும் என்பது
சொற்றபின் நாலசைத் தோற்றம் இல்லையே

3. சேரும் நேரடிப் பாவிலைஞ் சீரடி
ஏரும் வெள்ளையல் லாவழி என்பது
சோர்வி லாததொல் காப்பியத் துள்ளுநக்
கீர னாரடி நூலுள்ளும் கேட்கவே

4. தகைபெறு பொதியிலெம் தலைவன் ஆணையின்
தொகைவகை விரிபடச் சொற்ற நூல்களுள்
வகையுளி சேர்த்துதல் வகுப்பர் ஆதலால்
நகைபெற நாலசை நடப்ப தில்லையே

5. நேர்பும் நிரைபசையும் நேராதே நாலசைச்சீர்
சேரும் சிறிதென்று செப்பாதே - பாரின்மேல்
தென்றமிழ்நூல் யாப்புரைத்தான் சிந்தைபோல் நுண்ணிதே
இன்றமிழ்போல் நல்லாள் நடை

1. குற்றுகரம் ஒற்றாத்கிக் கூன்வகுத்துச் சிந்தியற்றி
மற்று நெடிலும் வகையுளியும் - சொற்றபின்
மேலசைச்சீர் நாட்டி அளபெடை வீறழித்தால்
நாலசைச்சீர்க் கில்லை நடை

2. காக்கை பாடினி யார்முத லாகிய
மாக்க விப்புல வோர்மதம் பற்றியீங்
கூக்கம் இன்மையுண் டாமுக ரத்தையொற்
றாக்கின் நாலசைச் சீரணை யாதரோ *யா. வி. 95*

நாலசைச்சீர் நிலை

நாலசைச்சீர் வெண்பாவில் நண்ணா அயற்பாவில்
நாலசைச்சீர் நேரீற்ற நாலிரண்டாம் - நாலசைச்சீர்
ஈறுநிரை சேரின் இருநான்கும் வஞ்சிக்கே
கூறினார் தொல்லோர் குறித்து *யா. வி. 15*

நேரீற்றியற்சீர் வாராத இடம்

1. நேரீற் றியற்சீர் கலிவயின் இலவே
வஞ்சி மருங்கினும் இறுதியின் இலவே *(நற்றத்தனார்)*

2. ஓசையின் ஒன்றி வரினும்வெண் சீரும்
ஆசிரிய அடியுள் குறுகும் என்ப

3. அகவலுள் தன்சீர் வெண்சீர் ஒருங்கு
புகலிற் கலியுடன் பொருந்தும் என்ப

4. வஞ்சியு ளாயின் எஞ்சுதல் இலவே

5. இயற்சீர் இறுதிநேர் இற்ற காலை
வஞ்சி யுள்ளும் வந்த தாகா
ஆயினும் ஒரோவிடத் தாகும் என்ப *(பல்காயனார்)*

6. உரிமை இயற்சீர் மயங்கியும் பாநான்
கிருமை வேறியல் வெண்பா வாகியும்
வருமெனும் வஞ்சி கலியினோர் இற்ற
இயற்சீர் ஆகா என்மனார் புலவர்

7. நிரையினும் நாலசை வஞ்சி யுள்ளால்
விரவினும் நேரீற் றல்லவை இயலா *(அவிநயனார்) யா. வி. 15*

ஆசிரியத் துறையுள் வஞ்சியுரிச்சீர் வருதல்

1. இணைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
இணையுள ஆசிரி யத்தன வாகா *(காக்கைபாடினியார்)*

2. நடுவு நேரியல் வஞ்சி யுரிச்சீர்
உரிமை யுடைய ஆசிரியத் துள்ளே

3. நேர்நடு வியலா வஞ்சி யுரிச்சீர்
ஆசிரி யத்தில் உண்மையும் உடைய் *(சிறுகாக்கைபாடினியார்)*

4. நிரைநடு வியலா வஞ்சி யுரிச்சீர்
வருதல் வேண்டும் ஆசிரிய மருங்கின் *(மயேச்சுரர்) யா.வி. 16*

சீர்தளைசிதையின் அலகுபெறாதவை

1. சீர்தளை சிதைவுழி ஈருயிர்க் குறுக்கமும்
நேர்தல் இலவே உயிரள பெடையும் *(மயேச்சுரர்)*

2. உயிரள பெடையும் குறுகிய உயிரின்
இகர உகரமும் தளைதபின் ஒற்றாம்

3. சீரதப வரினும் ஒற்றியற் றாகும் *(அவிநயனார்) யா. வி. 95*

வெண்பா இனத்துள்ளும் வஞ்சி உரிச்சீர் வாராமை

வெண்சீர் வரைவின்றிச் சென்று விரவினும்
தன்பால் மிகுதி இனமெல்லாம் வஞ்சி
உரிச்சீர் விரவுதல் வெண்பாவிற் கில்லை
தனிச்சொல் அசைச்சீர் அடி *யா. வி. 95*

வஞ்சியுள் நேரீற்றியற்சீர் வாராமை

1. இயற்சீர் நேரிறல் தன்றளை உடைய
கலிக்கியல் பிலவே காஞ்சிங் காலை
வஞ்சியுள்ளும் வந்த தாகா
ஆயினும் ஒரோவிடத் தாகும் என்ப *(பல்காயம்)*

2. நேரீற் றியற்சீர் கலிவயின் இலவே
வஞ்சி மருங்கினும் இறுதியின் இலவே. *(நற்றத்தம்) யா. வி. 95*

3. நேரீற் றியற்சீர் கலிவயிற் சேரா
நிரையிற நின்ற நாலசை எல்லாம்
வரைதல் வேண்டும் வஞ்சியில் வழியே. *(மயேச்சுரர்) யா. வி. 15*

சுட்டு

சுட்டு (நிதரிசன அணி)

ஒட்டிய பொருள்வர ஒன்றைமுன் வைத்துச்
சுட்டிக் கூறுதல் சுட்டென மொழிப. *வீரசோ. 152*

சுவை

சுவை (அணி)

நவைதீர் ஒன்பதாகும் உட்பொருள்
சுவையாய்க் கிளப்பது சுவையென மொழிப. *வீரசோ. 152 : 168*

சுவைநிலம்

இருவகை நிலத்தின் இயல்வது சுவையே *தொல். மெய். 1 இளம்.*

அகச்சுவை

அகத்தெழு சுவையான் அகமெனப் படுமே *(சயந்தம்) சிலப். 3:12 அடியார்க்.*

அவலச்சுவை

கவலை கூர்ந்த கருணையது பெயரே
அவலம் என்ப அறிந்தோர் அதுதான்
நிலைமை இழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை அழிதல்
சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்
குறைபடு பொருளொடு குறைபா டெய்தல்
சாபம் எய்தல் சார்பிழைத்துக் கலங்கல்
காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்
கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்
முடியுடைச் சென்னிபிறர் அடியுறப் பணிதல்
உளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி
தளைத்திளைத் தொலிப்பத் தளர்ந்தவை

நிறங்கிளர் அகலம் நீறொடு சேர்த்தல்
மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்
கொலைக்களம் கோட்டம் கோன்முனைக் கவற்சி
அலைக்கண் மாறா அழுகுரல் அரவம்
இன்னோ ரன்னவை இயற்பட நாடித்
துன்னினர் உணர்க துணிவறிந் தோரே
இதன்பயம் இல்வழி நோக்கி
அசைந்தன ராகி அழுதல் என்ப. *(செயிற்றியம்) தொல்.மெய்ப். 5 இளம்*

சிருங்காரம் (உவகைச்சுவை)

ஒத்த காமத் தொருத்தனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனொடு பலரும்
ஆடலும் பாடலும் கள்ளும் களியும்
ஊடலும் உணர்தலும் கூடலும் மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புனல் என்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கடல் ஆடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலும்
குளம்பரிந் தாடலும் கோலம் செய்தலும்
கொடிநகர் புகுதலும் கடிமனை விரும்பலும்
துயிற்கண் இன்றி இன்பந் துய்த்தலும்
மயிற்கண் மடவார் ஆடலுள் மகிழ்தலும்
நிலாப்பயன் கோடலும் நிலம்பெயர்ந் துறைதலும்
கலம்பயில் சாந்தொடு கடிமலர் அணிதலும்
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்கா ரம்மென வேண்டுப இதன்பயன்
துன்பம் நீங்கத் துகளறக் கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கழுத் தம்மே. *தொல். மெய்ப். 11 இளம்.*

நகைச்சுவை

நகையெனப் படுதல் வகையா தெனினே
நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு
நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே. *தொல். மெய்.4 இளம்.*

நகைச்சுவை தோன்றுமிடம்

உடனிவை தோன்றும் இடமியா தெனினே
முடவர் செல்லும் செலவின் கண்ணும்
மடவோர் சொல்லும் சொல்லின் கண்ணும்
கவற்சி பெரிதுற் றுரைப்போர் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணும்
சுற்றத் தோரை இகழ்ச்சிக் கண்ணும்
மற்றும் ஒருவர்கட் பட்டோர் கண்ணும்
குழவி கூறும் மழலைக் கண்ணும்

மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலியின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணும்
கல்லார் கூறும் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை அலியின் கண்ணும்
ஆண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணும்
களியின் கண்ணும் காவாலி கண்ணும்
தெளிவிலார் ஒழுகும் கடவுளார் கண்ணும்
ஆரியர் கூறும் தமிழின் கண்ணும்
காரிகை அறியாக் காமுகர் கண்ணும்
கூனர் கண்ணுங் குறளர் கண்ணும்
ஊமர் கண்ணும் செவிடர் கண்ணும்
ஆன்ற மரபின் இன்னுழி யெல்லாம்
தோன்று மென்ப துணிந்திசி னோரே *(செயிற்றியம்) தொல்.மெய். 4 இளம்.*

நடுவுநிலைமை

"செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை" *தொல்.பொருள். 260 பேரா.*

மத்திமம் (சமனிலைச் சுவை)

மத்திமம் என்பது மாசறத் தெரியிற்
சொல்லப்பட்ட எல்லாச் சுவையொடும்
புல்லா தாகிய பொலிவிற் றென்ப. *தொல். மெய்ப். 1 இளம்.*

மத்திமப் பயன் (சமனிலை)

நயனுடை மரபின் இதன்பயம் யாதெனிற்
சேர்த்தி யோர்க்கும் சார்ந்துபடு வோர்க்கும்
ஒப்ப நிற்கும் நிலையிற் றென்ப *(செயிற்றியம்) தொல். மெய். 1 இளம்*

மத்திமம் உய்ப்போன்

உய்ப்போன் இதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்
கயக்கறு முனிவர் அறிவரொடு பிறரும்
காமம் வெகுளி மயக்கம் நீங்கிய
வாய்மை யாளர் வகுத்தனர் பிறரும்
அச்சுவை எட்டும் அவர்க்கில ஆதலின்
அச்சுவை ஒருதலை ஆதலின் அதனை
மெய்த்தலை படுக்கவிதன் மிகவறிந் தோரே. *(செயிற்றியம்)*
தொல்.மெய்ப்.1 இளம்

சுவை குறிப்பு சத்துவம் (நாடகத்து ஒருங்குவரல்)

எண்ணிய மூன்றும் ஒருங்கு பெறுமென
நுண்ணிதின் உணர்ந்தோர் நுவன்றனர் என்ப. *தொல். பொருள். 250. பேரா.*

சுற்றப்பெயர்

தநநு எம்முதல் மகரம் இடையிட்டு
னளரவாம் ஈற்றன சுற்றப் பெயரே. *நன். 275 மயிலை - நன். 276 சங்கர.*

சூத்திரம்

1. ஏற்புடைப் பொருளெலாம் தோற்று மாறு
சூத்திரித்து நடத்தலின் சூத்திரம் எனப்படும். *யா. வி. பாயிரம்.*

2. சூத்திரம் தானே,
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதல் இன்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுள் தோன்ற யாத்தமைப் பதுவே. *தொல்.பொருள்.655 பேரா.*

3. நுட்பம் ஒட்பம் திட்பம் சொல்லிற்
சுருக்கம் கருத்துப் பகுதியொடு தொகைஇ
வருத்தமில் பொருட்பய னிகழ்ச்சி சூத்திரம்.

4. பொதுவினும் சிறப்பினும் போற்றுங் காலைப்
பெறுதல் பெற்றவை காத்தல் காப்பொடு.
பிறிதுபெற நிகழ்த்தல் அதன்கருத் தாகும்.

5. அதுவே,
பிண்டம் தொகைவகை குறியே செய்கை
கொண்டியல் புறனடை என்றதன் விகற்பமோ
டொன்றிய குறியே ஒன்றும் என்ப.

6. ஆற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்து வீழ்வென்
றாவகை நான்கே கிடக்கைப் பயனே.

7. பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் சூத்திரப் பயனான் கென்ப. *தொல். பாயிரம். இளம்.*

சூத்திரவுரை

முத்திறத் தானும் மூவிரு விகற்பினும்
பத்துவிதத் தானும் பதின்மூன்று திறத்தானும்
எழுவகை யானும் இரண்டுகூற் றானும்
வழுவுநனி நீங்க மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத் துரைப்பது சூத்திர உரையே. *யா. வி. பாயிரம்.*

விதிச் சூத்திரம்

இன்ன தொன்றிற் கிதுவாம் என்று
முன்னில் லதனை மொழிவ தாகும் *யா. வி. பாயிரம்.*

செந்துறை, வெண்டுறை

1. நாற்பெரும் பண்ணும் அதினெழும் திறனும்
தோற்றிய இன்னிசை செந்துறை யாகும்;
ஏனைய எல்லாம் வெண்டுறை யாகும். *வீரசோ. 179*

2. தேவபாணி முதலா ஏவிய
ஒன்றீ றாகக் கிடந்தவும் வந்த
இலங்கிரு வைளவம் வானூர் மதியம்
என்றிம் மொழிந்த மேற்புறம் எல்லாம்
செந்துறை வெண்டுறை சேர்த்துங் காலே

3. செந்துறை என்ப தொலிகுறித் தற்றே
வெண்டுறை என்பது கூத்தின் மேற்றே

4. ஆங்கிரு துறையும் அறுவகைப் பகுதிய
பாங்கின் உணரும் பண்பினானே.

5. மையில் பொருளாம் பரிபா டல்லே
மகிழிசை நுண்ணிசை யுரிபெரு மரபிற்
காமவின் னிசையே யாற்றிசை இவற்றைச்
செந்துறை என்று சேர்த்தினர் புலவர்

6. ஓங்கெழில் முதலாக்
குன்று கூதிர் பண்பு தோழி
விளியிசை முத்துறழ் என்றிவை யெல்லாம்
தெளிய வந்த செந்துறைச் செந்துறை

7. கலியே வரியே சிற்றிசை என்றா
மலிதரு பேரிசைச் சிற்றிசைச் சிற்றிசை
என்றிவை யெல்லாம் பாணி யியந்தூக்
கொன்ற நோக்கி ஒளிபட வந்த
வெண்டுறைச் செந்துறை வேண்டுங் காலை

8. அவ்வப் பொருளால் அரில்தப நாடிப்
பாட்டினிற் புகழ்தல் பாடலி தாகலிற்
பதினோ ராடற் பாட்டாய் வந்தன
வெண்டுறை வெண்டுறை எனவிரித் தனரே

செய்யுள்

1. யாப்பும் பாட்டும் தூக்கும் தொடர்பும்
செய்யுளை நோக்கிற் றென்ப நுணங்கி யோரே *யா. கா. 1*

2. செய்யு டாமே மெய்யுற விரிப்பின்
தனிநிலைச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள்
அடிபல தொடுத்த தனிப்பாச் செய்யுள்
இசைநுவல் மரபின் இயன்ற செய்யுள்
நயநிலை மருங்கின் சாதியொடு தொகைஇ
அவையென மொழிப அறிந்திசி னோரே *(அணியியல்) யா. வி. 96*

3. விளம்பின தியற்கை விரிக்கும் காலை
ஆரியம் தமிழினோடு நேரிதின் அடக்கி
உலகின் தோற்றமும் ஊழியின் இறுதியும்
அலகில் தொண்ணூற் றறுவர தியற்கையும்

வேதம் நாலும் வேதியர் ஒழுக்கமும்
ஆதி காலத் தரசுசெய் இயற்கையும்
அப்பால் நாட்டார் அறியும் வகையில்
ஆடியும் பாடியும் அமைவரக் கிளத்தல். *வீரசோ. 179*

செய்யுள் மொழி முறைமை

அரசன் அருள்பெறின் எல்லார்க்கும் உரித்தே
காணிகை தவிர்தலும் விரித்துரை வேண்டலும்
ஓங்கிய சிந்தையொடு தெய்வம் பணிதலும்
அறுபது முதலா ஐம்பதிற் றிரட்டி
அனைவர்க்கும் உரித்தே ஆயுங் காலை. *(பொய்கையார் கலவியல்) நவநீதப். 81*

செய்யுளுக்கு வருணம் முதலியன

1. தெய்வம் துணையிராசி பக்கம் திணைபொழுது
பொய்யில் புகைவண்ணம் பூச்சாந்து மையில்கோள்
நாற்கதி சாதி கிழமைநாள் நன்கமையப்
பாற்படுக்க பானான்கின் பால் *யா. வி. 95*

2. வெண்பா முதலா வேதிய ராதியா
மண்பால் வகுத்த வருணமாம் - ஒண்பா
இனங்கட்கும் இவ்வாறே என்றுரைப்பர் தொன்னூல்
மனந்தட்பக் கற்றோர் மகிழ்ந்து

3. மீனாடு தண்டேறு வேதிய ராதியா
ஆனாத ஐந்தொன்பா னாயினவும் - தேனார்
விரைக்கமல வான்முகத்தாய் வெள்ளை முதலா
உரைத்தனவும் இவ்வாறே ஒட்டு *யா. வி. 95*

4. ஆரல் மகமோ டனுடம் அவிட்டமென்
றீரிரண்டும் ஆதியா வெண்ணியநாள் - சீரிய
வெண்பா அகவல் கலிவஞ்சி என்றுரைத்தார்
எண்பா அறிவோர் எடுத்து.

5. வேதியர்க்கு வெண்மை வியன்செம்மை வேந்தர்க்கு
நீதிசால் பீதம் நிதிக்கிழவோர்க் - கோதிய
நீலமாம் ஏனை நிலைமையோர்க் கக்குலத்தின்
பாலவாம் பாவிற்கும் அற்று.

6. ஆரம் அ ரிசந் தனம்பழுப்போ டங்கலவை
பாரியனற் பாநான்கின் பாற்படுத்தார் - சீரிய
வெண்போது செங்கழுநீர் வேரிசேர் சண்பகத்தின்
வண்போது நீல மலர்.

7. மகயிரம் ஆதியா வண்பூரங் காறும்
வகையின் மருட்பாவின் நாளாம் - தகாதென்ஞெண்
டோராசந் தேரிரு சந்தச்சென் றொண்போது
தேரிற் பவளம் சிவப்பு.

8. வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேரநிகழ்ந்த நெடுங்குலம் போல்
ஆதிசால் யாவும் அரச வியன்பாவும்
ஓதியவா றொன்ற மருட்பாவாய் ஓங்கிற்றே. *யா. வி. 95*

9. பாநாளாற் பாவோரை தாமொப்பப் பண்புணர்ந்த
மாநா வலர்வகுத்த வாய்மையாற் - பாநான்கின்
மூவிற் றினமும் மொழிப்புத்தேள் உண்மகிழப்
பாவித்துப் பாடப் படும். *யா. வி. 95*

10. முல்லை குறிஞ்சி மருதத்தின் பின்னெய்தல்
எல்லையில் பாக்கட் கியற்றிணையாம் - முல்லை
குறிஞ்சி யெனவிரண்டு குன்றா மருட்கென்
றறைந்தார் வியன்புலவோர் ஆய்ந்து.

11. முல்லை அந்தணன் குறிஞ்சி அரசன்
மல்லல் மருதம் வாணிகன் என்ப
நெய்தல் சூத்திரன் நினையுங் காலைப்
பல்குலம் என்ப பாலை யானே *யா. வி. 95*

12. பண்ணும் திறமும்போல் பாவும் இனமுமாம்
வண்ண விகற்ப வகைமையால் - பண்மேல்
திறம்விளரிக் கில்லதுபோல் செப்பல் அகவல்
இசைமருட்கும் இல்லை இனம் *யா. வி. 95*

13. பாடப் படுவோர்க்கும் பாடு மவன்றனக்கும்
நாடப் படுநயங்கள் நாடாதே - பாடுமேற்
காகப்புட் சேரக் கனிபனையின் வீழ்வது போல்
ஆகித்தற் சேரும் அலர்

14. நாற்பா நடைதெரிந்த நன்னூற் பெரும்புலவர்
நூற்பால் நயந்த நுழைபொருளைப் - பாச்சார்த்திப்
பாவித்துப் பார்மேல் நடாத்தப் படருமே
நாவித் தகத்து நகம்.

15. புலந்துறை போகிய நலவர் நாவினுட்
கலந்துறை கலைமகள் கவிதை கந்தமா
நிலந்தொழப் புறப்படும் நிலையள் ஆகுமிவ்
விலங்கிழை பெருமையை எண்ண வேண்டுமோ

16. உள்ளப் பரவையி னூல்வரை நாட்டியொண் கேள்விதம்பா
எள்ளப் படாமை இயையக் கடையின் இசைபெருக்கும்
வள்ளற் குணநாவர் வானோர் களைவள மைப்படுக்கும்
வெள்ளைக் கவிதை அமிழ்தமெல் லார்க்கும் வெளிப்படுமே

17. அகமுத லாய பொருள்கவிக் காவி அணிதழைப்பத்
தகமுத லோர்பெற்ற பாவின சட்டகக் கட்டுரையே
நிகழ்தரும் ஓசை இயனடை யானெடு நீர்வரைப்பிற்
புகழ்தரு வாய்மைப் பயன்வியன் சீர்த்திப்புத் தேளுலகே *யா. வி. 95*

செலவிடைப் படாமை

ஆடிய வெறியும் அழுங்கிய செலவும்
நாடுங் காலை இல்லென மொழிப. *களவியல். 52*

சேட்படை

தழைகொண்டு சேறல் தகாதென்று மறுத்தல்
நிலத்தின்மை கூறல் நினைவறிவு கூறல்
படைத்து மொழிதலோடு பனிமதி நுதலியை
எடுத்துநாண் உரைத்தல் இசையாமை கூறல்
செவ்வியிலள் என்றல் சேட்பட நிறுத்தல்
அவ்வினிய மொழிநீ அவட்குரை என்றல்
குலமுறை கிளத்தல் கோதண்டத்தொழில்
வலிசொல்லி மறுத்தல் மற்றவர் இரங்கல்
சிறப்பின்மை கூறல் சிறியனென் றுரைத்தல்
மறைத்தமை கூறி நகைத்துரை செய்தல்
நகைகண்டு மகிழ்தல் நானவள் தன்னை
அறியேன் என்றல் அவயவங் கூறல்
கண்ணயந் துரைத்தல் கையுறை எதிர்தல்
முகம்புக உரைத்தல் முகங்கண்டு கூறல்
வகுத்துரைத்த லோடு வண்டழை யவட்கு
மிகுத்துரை செய்து விரும்பிக் கொடுத்தல்
தழைவிருப் புரைத்தல் தானிரு பத்தா
றிழைவார் முலையா யிழைசேட் படையே *திருக்கோ.12*

சொல்

நுவற்சி நொடியே கிளவி இசைத்தல்
புகற்சி அனைய சொல்லின் பாலே *யா. வி. 58*

சொல்லின் வகை

1. பெயர்ச்சொல் என்றா தொழிற்சொல் என்றா
இரண்டின் பாலாய் அடங்குமன் பயின்றே. (அவிநயனார்) நன்.மயிலை.

2. பெயரினும் வினையினும் மொழிமுதல் அடங்கும் *(அகத்தியம்) நன்.மயிலை.*

3. எப்பொரு ளேனும் ஒருபொருள் விளங்கச்
செப்பி நிற்பது பெயர்ச்சொல் ஆகும்.

4. வழுவில் மூவகைக் காலமொடு சிவணித்
தொழில்பட வருவது தொழிற்சொல் ஆகும்.

5. சுடுபொன் மருங்கிற் பற்றா சேய்ப்ப
இடைநின் றிசைப்ப திடைச்சொல் ஆகும்.

6. மருவிய சொல்லொடு மருவாச் சொற்கொணர்ந்
துரிமையொ டியற்றுவ துரிச்சொல் ஆகும். *யா. வி. 96*

சொல்லும் வகை

நெஞ்சொடு கூறல் கேட்போர்க் குரைத்தல்
தஞ்சம் வரவறிவு தானே கூறலென்
றம்மூன் றென்ப செம்மைச் சொல்லே. *சிலப். 3:13 அடியார்க்.*

சொல் செயல்முறை

அவைதாம்,
கையே கருத்தே மிடறே சரீரமென்
றெய்தமுன் பமைத்த இவையென மொழிப *சிலப். 3:18 அடியார்க்.*

தசநாடிகளின் முதன்மை

1. இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன்
புடைநின் றபானன்மலம் போக்கும் - தடையின்றி
உண்டனகீ ழாக்கு முதானன் சமானனெங்கும்
கொண்டெறியு மாறிரதக் கூறு *(சிகண்டியார்) சிலப் 3:26 அடியார்க்.*

2. கூர்ம னிமைப்புவிழி கோணகன் விக்கலாம்
பேர்வில் வியானன் பெரிதியக்கும் - போர்மலியும்
கோபங் கிருகரனாங் கோப்பி னுடம்பெரிப்புத்
தேவதத்த னாகு மென்று தேர் *(சிகண்டியார்) சிலப் 3 : 26 அடியார்க்.*

3. ஒழிந்த தனஞ்சயன்பே ரோதி லுயிர்போய்க்
கழிந்தாலும் பின்னுடலைக் கட்டி - அழிந்தழிய
முந்நா ளுதிப்பித்து முன்னியவான் மாவின்றிப்
பின்னா வெடித்துவிடும் பேர்ந்து *(சிகண்டியார்) சிலப். 3:26 அடியார்க்.*

தசாங்கம்; சின்னப்பூ

1. உரைத்த தசாங்க மாவன பத்தாக
நிரைத்து வருவது நேரிசை வெண்பா
அமரரைச் செங்கோல் வேந்தரைச் செப்புதல் சின்னப்பூவாம்

2. ஏனையோர்க்குத் தசாங்கம் அல்லா
தனவென்ப இயல்புணர்ந் தோரே. *(முள்ளியார் கவித்தொகை)*
நவநீதப் பாட்டியல் 40.

தடுமாறும் உருபு

1. ஒன்று மூன்றுநான் கைந்தா றுருபொடு
கருவி வருமெனக் கருதினர் பெரியோர்

2. எல்லா உருபொடும் செயப்படு பொருளெழும்

3. எல்லா உருபொடும் கொள்வோன் எழுமே.

4. நான்கைந் தாறே ழொடுகுறை நடக்கும்.

5. ஒன்றிரண்டு நான் கேழோ டிடமெழும். *நன். 317 சிவஞான.*

தடைமொழி (அணி)

இழுக்குரை தழீஇ விலக்குதற் பொருளை
முற்கொண் டுரைக்கு முறையே தடைமொழி. *வீரசோ. 151*

தமிழ்

தமிழ்முறைவைப்பு

அகர முதலாக ஆய்தம் இடையா
னகரமீ றாகுமுதல் வைப்பு. *நேமி. 1*

தமிழ்வழக் கெல்லை:

வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே. *(சிகண்டியார்) சிலப். வேனிற். 1 அடியார்க்.*

தமிழகம்

கன்னித் தென்கரைக் கட்பழந் தீவம்
சிங்களம் கொல்லம் கூவிளம் என்னும்
எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கம் தெலிங்கம்
கொங்கணம் துளுவம் குடகம் குன்றம்
என்பன குடபால் இருபுறச் சையத்
துடனுறைபு பழகுந் தமிழ்திரி நிலங்களும்
முடியுடை மூவரும் இடுநில ஆட்சி
அரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரும் உடனிருப்பவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும் *(அகத்தியம்) நன். பெயர். 16 மயிலை.*

தவம்

நீஇ ராடல் நிலக்கிடை கோடல்
தோஒல் உடுத்தல் தொல்லெரி ஓம்பல்
ஊரடை யாமை உறுசடை புனைதல்
காட்டில் உணவு கடவுட் பூசை
ஏற்ற தவத்தின் இயல்பென மொழிப. *தொல். பொருள்.*

தளை

1. செயற்குரி இருசீர் செய்யுள் நடப்புழித்
தலைப்பெய நிற்பது தளையெனப் படுமே

2. நின்ற சீரீற் றொடுவரும் சீர்முதல்
ஒன்றுதல் ஒன்றா தாகுதல் தளையே- *யா. வி. 17*

3. பகுத்தெதிர் நிற்றலில் பந்தம் தளையென
வகுத்தனர் மாதோ வண்டமி ழோரே. *யா. கா. 1*

4. நின்றசீர் ஈறும் வருஞ்சீர் முதலசையும்
ஒன்றியும் ஒன்றாதும் ஓசைகொள - நின்றால்
வளையொன்று முன்கையாய் வந்ததனை வல்லோர்
தளையென்று கட்டுரைப்பார் தாம்.

5. அதிகண்டம் என்றும் இசையென்றும் சீரைப்
பதச்சேதம் என்றும் பகர்வர் - பதச்சேதம்
சந்தித் ததனைத் தளையென்பர் - அத்தளையைப்
பந்தமென் பாரும் பலர். *யா. வி. 22*

வெண்டளை

1. இயற்சீர் ஒன்றா நிலையது வெண்டளை
உரிச்சீர் அதனுள் ஒன்றிய தியல்பே *(மயேச்சுரர்) யா.வி. 21*

2. இயற்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்ப வகையது வெண்டளை யாகும் *(காக்கை பாடினியார்) யா.வி. 18*

3. வேறுபட வரினது வெண்டளை வெண்சீர்
ஆறறி புலவர்க் கொன்றினும் அதுவே *(மயேச்சுரர்) யா.வி. 21*

4. வெண்சீர் ஒன்றினும் வெண்டளை யாகும்
இன்சீர் ஒன்றிய காலை யான *(காக்கை பாடினியார்)*
தொல்பொருள். 367 பேரா.

5. வெண்சீர் இறுதியின் நேரசை பின்வரின்
வெண்சீர் வெண்டளை ஆகும் என்ப. *யா. கா. 10*

ஆசிரியத்தளை

1. இயற்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்பம் இலவாய் விரவி நடப்பின்
அதற்பெயர் ஆசிரி யத்தளை ஆகும் *(காக்கைபாடினியார்) யா.வி. 21*

2. ஈரசை இயற்சீர் ஒன்றிய தெல்லாம்
ஆசிரி யத்தளை என்மனார் புலவர் *(மயேச்சுரர்)*

3. ஈரசை இயற்சீர் ஒன்றிய நிலைமை
ஆசிரி யத்தளை ஆகும் என்ப *(சிறுகாக்கை பாடினியார்) யா.வி. 19*

4. ஈரசை இயற்சீர் ஒன்றிய தியல்பே *(அவிநயனார்)*

5. நேரும் நிரையுமாம் இயற்சீர் ஒன்றின்
யாவரும் அறிய ஆசிரி யத்தளை *(மயேச்சுரர்) யா.வி. 21*

கலித்தளை

1. வெண்சீர் இறுதிக் கிணையசை பின்வரக்
கண்டன எல்லாம் கலித்தளை ஆகும் *(காக்கைபாடினியார்) யா.வி. 21*

2. உரிச்சீ ரதனுள் உரைத்ததை அன்றிக்
கலிக்கும் தளையெனக் கண்டிசி னோரே *(காக்கைபாடினியார்)*

3. வெண்சீர்ப் பின்னர் நிரைவருங் காலைக்
கண்டனர் புலவர் கலித்தளை யாக *(மயேச்சுரர்)*

4. வெண்சீர் நிரைவரிற் கலித்தளை *(சிறுகாக்கைபாடினியார்) யா.வி. 21*

5. ஈரசைச்சீர் தாமுரிய ஆசிரியக் கென்றமைபான்
நேரீற் றியற்பின் நிரைவருங்கால் - ஒரும்
கலித்தளையாம் என்னினக வற்சீர் கலியின்
ஒலிக்கினையா என்றுரைக்கும் ஒத்து. *யா. வி. 20*

வஞ்சித்தளை

1. தன்சீர் இரண்டு தலைப்பெயல் தம்முளொத்
தொன்றினும் ஒன்றா தொழியினும் வஞ்சியின்
பந்தம் எனப்பெயர் பகரப் படுமே *(காக்கைபாடினியார்)*

2. வஞ்சி உரிச்சீர் வந்தன வழிமுனிற
எஞ்சிய வரினும் வஞ்சித் தளையே *(மயேச்சுரர்)*

3. வஞ்சி வகைமை வரைவின் றாகும் *(சிறுகாக்கைபாடினியார்) யா.வி. 21*

அசைச்சீர்க்குத்தளை வழங்குதல்

1. உரியசைச் சீர்ப்பின் உகரம் நேராய்த்
திரியும் தளையில சேர்த லானே *(நல்வாறனார்)*

2. சீரா கிடனும் உரியசை உடைய
நேரீற் றியற்சீர் அவ்வயி னான *(நற்றத்தனார்) யா. வி. 95*

தளைமயக்கம்

1. எல்லாத் தளையும் மயங்கினும் தன்றளை
அல்லாத் தளையாற் பாவினி தியலா

2. வெள்ளை ஒழித்தல் பாவொடு பாவினம்
சொல்லிய தளைசீர் வரைவில விரவும் *யா. வி. 22*

தளைசிதையா அடி எண்

எள்ளற்ற முந்நூற் நிருபத்து நான்ககவல்
வெள்ளைக்கு நூற்றெண்பத் தொன்றாகும் - துள்ளல்
நவையறு நூற்றிருப தாமடி நாடின்
அவையறு நூற்றிருபத் தைந்து *தொல். பொருள். 362 பேரா.*

தற்புகழ்தல் கூடாமை

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே. *(பனம்பாரம்) நன்.மயிலை.*

தன்மை

சாதித்தன்மை

இன்மை இகழா தினத்திற் கொத்த
தன்மையிட் டுரைப்பது சாதித் தன்மை *வீரசோ. 150*

தொழிற் றன்மை

பழுதில் செய்வினை பதந்தொறும் வருவது
தொழிலின் தன்மை என்மனார் புலவர். *வீரசோ. 150*

குணத்தன்மை

மனத்தின் வாய்மையின் தொழிலின் வருமெனக்
குணத்தினைக் கிளப்பது குணத்தின் தன்மை. *வீரசோ. 150*

தன்மைப் பன்மை

தன்மையோ டிசைந்தன தன்மை ஆகும்
முன்னிலை மொழியொடு படர்க்கையும் அற்றே. *நேமி. 34*

தன்னைப்புகழத் தக்க இடம்

மன்னுடை மன்றத் தோலைத் தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே. *(பனம்பாரம்) நன். மயிலை.*

தனிச்சொல்

1. தனிச்சொல் என்ப தடிமுதற் பொருளொடு
   தனித்தனி நடக்கும் வஞ்சியுள் ஈறே *(சிறுகாக்கைபாடினியம்)*

2. அந்தமும் ஆதியும் நடுவும் கூனசை
   வந்தன அன்றியும் வந்த வாமெனின்
   முந்திய குறளடி மொழிந்த தன்றது
   சிந்தென நாலசை சேர்வ தில்லையே *யா. வி. 95*

3. தனியே அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொல் அஃ
   திறுதியும் வஞ்சியுள் நடக்கும் என்ப. *(அவிநயனார்) யா. வி. 94*

4. உறுப்பிற் குறைந்தவும் பாக்கண் மயங்கியும்
   மறுக்கப் படாத மரபின ஆகியும்
   எழுவாய் இடமாய் அடிப்பொருள் எல்லாம்
   தழுவ நடப்பது தான்றனிச் சொல்லே.

5. வஞ்சி மருங்கின் இறுதியும் ஆமெனக்
   கணடனர் மாதோ கடனறிந் தோரே *(காக்கைபாடினியார்)*

6. அடியினிற் பொருளைத் தானினிது கொண்டு
   முடிய நிற்பது கூன்என மொழிப

7. வஞ்சி இறுதியும் ஆகும் அதுவே

8. அசைகூன் ஆகும் என்மனார் புலவர் *(பல்காயனார்)*

9. தானே அடிமுதற் பொருள்பெற வருவது
   கூன்என மொழிப குறியுணர்ந் தோரே

10. வஞ்சி இறுதியும் வரையார் என்ப *(நற்றத்தனார்) யா. வி. 94*

11. வெண்சீர் வரைவின்றிச் சென்று விரவினும்
தன்பால் மிகுதியின் வருவன எல்லாம்
வஞ்சி உரிச்சீர் விரவினும் வெண்பா
அருகுந தனிச்சொல் அசைச்சீர் அடியே

12. அடிமுதற்கண் நான்கிற்கும் சீர்கூனாம் ஆகும்
இடைகடையும் வஞ்சிக் கசை *யா. வி. 94*

தாண்டகம்

தாண்டகத்தின் எழுத்துக்குறைதல் - மிகுதல்

நிசாத்து, விராட்டு

1. ஒரெழுத்துக் குன்றின் நிசாத்தாம் விராட்டாகும்
ஈரெழுத்துக் குன்றும் எனின்.

2. புரிக்கு, சுராட்டு :

ஒரெழுத்து மிக்காற் புரிக்காம் சுராட்டாகும்
ஈரெழுத்து மிக்க தெனின்

3. யவம், எறுப்பிடை :

இடைக்கண் இரண்டடியும் மிக்கால் யவமாம்
எறுப்பிடையாம் குன்றின் எழுத்து

4. ஒரெழுத்துக் குன்றினணி சாத்தாம் விராட்டாகும்
ஈரெழுத்துக் குன்றின் இயமானன் - நேராப்போய்
ஒரெழுத்து மிக்க புரிக்காம் சுராட்டென்ப
ஈரெழுத்து மிக்க வெனல். *வீரசோ. 137*

திணை

உயர்திணை, அஃறிணை

1. மக்கட் சுட்டே உயர்திணை யாகும்.

2. தேவரும் நரகரும் மேவவும் பெறுமே

3. ஏவிய இம்மூன் றன்றி ஒழிந்தவை
யாவகைப் பொருளும் அஃறிணை யாகும். *யா. வி. 96*

திணைபால் அறிவிப்பன

திணையும் பாலும் தெரியா நின்றுழி
வினையும் பெயரும் வேற்றுமை விளக்கும். *நேமி. 01*

திணைவகை

அகமே அகப்புறம் புறமே புறப்புறம்
எனநான் கென்ப திணையின் பகுதி *யா. வி. 96*

இருதிணையும் ஒருதிணைக்கு ஆதல்

இருதிணைத் தொழிலும் இயன்று தம்முள்
ஒருதிணைக் கோதல் ஒழிந்தன இயல்பே *வீரசோ. 90-94*

திணைமயக்கம்

மற்றவை தம்முள் மயங்கினும் அப்பெயர்
பெற்ற திணையின் பெயர்க்கொடை பெறுமே *வீரசோ. 90-94; யா.வி. 96*

சில இயங்குதிணை முடிபு

முன்னிலை நெடிலு மாவு மின்மிகப்
புணரும் இயங்கு திணையான *நேமி. 23*

திரப்பியத் தன்மை

உருப்பெறக் கிடந்த உண்மைசால் மரபின்
திரப்பியம் பகர்வது திரப்பியத் தன்மை *வீரசோ. 150*

திரிசொல்

1. சேரிச்சொல்லின் முட்டுறல் அஞ்சிச்
செய்யுட்குப் புலவர்செய்து கொண் டன்றே. *தொல். சொல். 319 இளம்.*

2. பைஞ்ஞீலம் பைதிரம் விரற்றலை யோர்பித்தை
பூழிலவம் பீளைதுருவையனல் தொடுப்பகை பிறடி
கருவுள நவிரல் வசிதலையல் நிவப்புச்
செப்பிய பிறவும் திரிசொல் ஆகும். *யா. வி. 96*

துணைப்பேறு

நினைவுடைப் பொருளினை நிரப்புதற் கிதுவும்
துணையெனப் படுவது துணைப்பே றென்ப. *வீரசோ. 152*

துவர்வகை

பூவந்தி திரிபலை புணர்செங் கருங்காலி
நாற்பான் மரம்நாவன் மாந்தளிர் முப்பழம்
சீர்முத்தக் காசு துவர். *சிலப். 6 : 76 அரும்பத. அடிக்குறிப்பு*

துறவறத்தின் வகைமை

துறவும் அடக்கமும் தூய்மையும் தவமும்
அறவினை ஓம்பலும் மறத்தினை மறுத்தலும்
மனையின் நீங்கிய முனைவர்த்தம் அறமே *வீரசோ. 104*

தூக்கு

ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை
முச்சீர் துணிபு நாற்சீர் கோயில்
ஐஞ்சீர் நிவப்பாம் அறுசீர் கழாஅலே
எழுசீர் நெடுந்தூக் கென்மனார் புலவர் *சிலப். 3 : 16 அடியார்க்.*

தெளிவில் புகழ்ச்சி

பழிமொழி மொழிந்து பல்புகழ் விளக்குதல்
தெளிவில் புகழ்ச்சி என்மனார் புலவர் *வீரசோ. 152*

தேவபாணி

1. தேவபாணித்துதி முறை

திருவள ரரங்கிற் சென்றினி தேறிப்
பரவுந் தேவரைப் பரவுங் காலை
மணிதிகழ் நெடுமுடி மாணிபத் திரனை
அணிதிகழ் பளிங்கி னொளியினை என்றும்
கருந்தா துடுத்த கடவுளை யென்றும்
இரும்பனைத் தனிக்கொடி யேந்தினை யென்றும்
கொடுவாய் நாஞ்சிற் படையோ யென்றும்
கடிமலர் பிணைந்த கண்ணியை யென்றும்
சேவடி போற்றிச் சிலபல வாயினும்
மூவடி முக்கால் வெள்ளையின் மொழிப *(மதிவாணனார்)*
சிலப். 6:35 அடியார்.

2. வருணப்பூதர் தேவபாணி

அந்தணர் வேள்வியோ டருமறை முற்றுக
வேந்தன் வேள்வியோ டியாண்டுபல வாழ்க
வணிக ரிருநெறி நீணிதி தழைக்க
பதினெண் கூலமு முழவர்க்கு மிகுக
அரங்கியற் கூத்து நிரம்பிவினை முடிக
வாழ்க நெடிமுடி கூர்கவென் வாய்ச்சொலென்
றிப்படி பலிகொடுத் திறைவனிற் றொக்குச்
செப்பட வமைத்துச் செழும்புகை காட்டிச்
சேவடி தேவரை யேத்திப் பூதரை
மூவடி முக்கால் வெண்பா மொழிந்து
செவியிழுக் குறாமை வேந்தனை யேத்திக்
கவியொழுக் கத்து நின்றுழி வேந்தன்
கொடுப்பன கொடுப்ப வடுக்கு மென்ப. *(மதிவாணனார்)*
சிலப். 6:36 அடியார்.

3. செந்துறை வெண்டுறை தேவபா ணிய்யிரண்டும்

வந்தன முத்தகமே வண்ணமே - கந்தருவத்
தாற்றுவரி கானல் விரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச் சுட்டு *(சிகண்டியார்) சிலப் 6:35 அடியார்க்.*

செப்பரிய சிந்து திரிபதை சீர்ச்சவலை
தப்பொன்று மில்லாச் சமபாதம் - மெய்ப்படியும்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமெனப்
பைந்தொடியா யின்னிசையின் பா. *(பஞ்சமரபுடைய அறிவனார்)*
சிலப். 6 : 35 அடியார்க்.

தொகை

வேற்றுமை உம்மை வினைபண் புவமை
அன்மொழி என்றிவை தொகையா றாமே. *நேமி. 26*

தொகைமொழி

நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு
செஞ்சொலிற் காட்டும் திறமே தொகைமொழி *வீரசோ. 151*

தொடர்மொழி முடிவு

இருபொருள் இயைதலின் அப்பொருள் படுமொழி
இதுவென வேறுவைத் திசைத்தல் வேண்டும். *நேமி. 22*

தொடை

1. தொடையெனப் படுவ தடைவகை தெரியின்
எழுத்தொடு சொற்பொருள் என்றிவை மூன்றில்
நிரல்பட வந்த நெறிமையதாகி
அடியோ டடியிடை யாப்புற நிற்கும்
முடிவின தென்ப முழுதுணர்ந் தோரே *(காக்கைபாடினியார்)*

2. அடுத்த அடியிரண் டியாவகைப் பாவினும்
தொடுத்து வழங்கலின் தொடையெனப் படுமே *(வாம மேகலை மாதையோர் பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர்) யா.வி. 33.*

3. எழுத்தியற் றொடைகளின் இடைக்கண் மாறுகோள்
மொழிப்பொருட் டொடைமுறை பிறழ வைத்ததோர்
இழுக்கியல் பிலாநிரல் நிரையும் எட்டென
ஒழுக்கினர் உண்மையை உணர்த்தல் வேண்டியே *யா. வி. 34*

4. எழுத்து மொழிபொருளென் றெண்ணிய மூன்றின்
வழுக்கின் முறைமை வகையா - விழுக்கில்
அடியோ டடியியைந்து மந்தரித்தும் வந்தாற்
றொடையென்பர் தொன்னூ லவர்

5. தொடையுந் தொடைவிகற்புந் தொல்புலவோர் சொற்ற
நடையின் வழுவாமை நாடிக் - கடல்பயந்த
சீரார் திருவீசுஞ் செய்யுட் கெழுவாயு
மாராயத் தீரு மரில். *யா. வி. 53*

தொடையளவு

1. முந்திய மோனை எதுகை அளபெடை
அந்தமில் முரணே செந்தொடை இயைபே
பொழிப்பே ஒரூஉவே இரட்டை என்னும்
இயற்படு தொடைகள் இவை முதலாகப்
பதின்மூ வாயிரத் தறுநூ றன்றியும்
தொண்ணூற் றொன்பதென் றெண்ணினர் புலவர்

2. வல்லொற்றுத் தொடர்ச்சியும் மெல்லொற்றுத் தொடர்ச்சியும்
இடையொற்றுத் தொடர்ச்சியும் முறைபிறழ்ந் தியலும் *(சங்கயாப்பு) யா. வி. 49*

3. மோனை எதுகை முரணே அளபெடை
ஏனைச் செந்தொடை இயையியே பொழிப்பே
ஒருஉவே இரட்டை ஒன்பதும் பிறவும்
வருவன விரிப்பின் வரம்பில என்ப. *(பல்காயனார்) யா. வி. 49.*

தொடைக்கு எழுத்து

எழுத்தென் றதிகாரம் ஈண்டியலா நிற்ப
எழுத்தென்று மீண்டும் இயம்பிற் - நிழுக்காமை
எல்லா எழுத்தும் தொடைக்காம்; அடிக்கெழுத்
தல்லா தனவுமென் றற்கு. *யா. வி. 36*

தொடை கொள்ளும்மாறு

செந்தொடை இயைபினை அல்லா நான்கும்
முதற்சீர் அடியால் விகற்பம் கொள்ப. *(பரிமாணனார்) யா. வி. 48*

மோனை - எதுகை

1. முதலெழுத் தொன்றி முடிவது மோனை
ஏனைய தொன்றின் எதுகைத் தொடையே
உறுப்பின் ஒன்றின் விகற்பமும் அப்பால்
நெறிப்பட வந்தன நேரப் படுமே. *(சிறுகாக்கை பாடினியார்)*

2. முதலெழுத் தொன்றுவ மோனை ; எதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
அதுவொழித் தொன்றின் ஆகும் என்ப. *(பல்காயனார்) யா. வி. 36*

3. முதலெழுத் தொன்றின் மோனை யாகும்
அஃதொழித் தொன்றின் எதுகை யாகும்
அவ்விரு தொடைக்கும் கிளையெழுத் துரிய *(நற்றத்தனார்) யா. வி. 37*

4. முதலெழுத் தொன்றின் மோனை; எதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
அதுவெழுத் தொன்றின் ஆகும் என்ப. *யா. கா. 16. யா. வி. 37*

5 இவ்விரு தொடைக்கும் கிளையெழுத் துரிய. *(பல்காயனார்) யா. வி. 37*

6. அடிதொறு முதலெழுத் தடைவதை முதற்றொடை
இடையதன் முன்னொன் றியைவதை எதுகை
நெடிய பிறவும் இனத்தினும் ஆகும். *யா. வி. 37*

மோனை

1. அடிமோனை ஏனைக் கிளைமோனை என்று
முடியுமாம் மோனைப் பெயர் *யா. வி. 49*

2. வருக்கமோனை முதலியன

வருக்க நெடில் இனம் வரையார் ஆண்டே
நெடிய பிறவும் இனத்தினும் ஆகும். *யா. கா. 41*

எதுகை

1. முதலெழுத் தளவொத் தயலெழுத் தொன்றுவ
எதுகை அதன்வழி இயையவும் பெறுமே. *யா. வி. 36*

எதுகை வகை

2. இரண்டாம் எழுத்தொன்றல் மூன்றாவ தொன்றல்
திரண்டமைந்த சீர்முழுதும் ஒன்றல் - முரண்டீர்
கிளைவன்பால் மென்பால் இடைப்பால் உயிர்ப்பால்
விளையும் எதுகையோர் எட்டு. *யா. வி. 49*

3. சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
ஒரெழுத் தொன்றின் இடை கடை பிறவே *யா. வி. 37*

4. இரண்டடி எதுகை திரண்டொருங் கியைந்தபின்
முரண்ட எதுகையும் இரண்டினுள் வரையார் *யா. வி. 37*

5. யரலழ என்னும் ஈரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப்பினஃ
தாசிடை எதுகையென் றறிந்தனர் கொளலே *(காக்கைபாடினியார்)*
யா. வி. 37, வீரசோ. 109

6. எதுகைத் தொடையால் இனம்பிற விரவினும்
சிறப்புடை மோனையும் சிவணும் ஆண்டே

7. விட்டிசை மோனையும் இடையிட் டெதுகையும்
ஒட்டி வருஉம் ஒருசாரும் உளவே *யா. வி. 37*

8. நிரைநேர் மறுதலை அடையா தம்முளும்
எதுகை முதலசை என்மனார் புலவர்

9. யாவகை எதுகையும் அசைமுறை பிறழாப்
பாவகை நான்காம் பகருங் காலை *யா. வி. 37*

முரண்

1. மொழியும் மொழியும் பொருளும் பொருளும்
மொழியும் பொருளும் மொழியோ - டழியாத
சொல்லும் பொருளும் பொருளோடு சொற்பொருளும்
சொல்லும் பொருளுமோர் ஐந்து *யா. வி. 49*

2. சொல்லினும் பொருளினும் மாறுகோள் முரணே *(நற்றத்தனார்)*

3. பொருளினும் மொழியினும் முரணுதல் முரணே *(பல்காயனார்)*
யா. வி. 38

4. பொருளினும் சொல்லினும் முரணத் தொடுப்பின்
முரணென மொழிப முந்தை யோரே *(மயேச்சுரர்)*

5. மறுதலை உரைப்பினும் பகைத்தொடை ஆகும் *(அவிநயனார்)*

6. மொழியினும் பொருளினும் முரணத் தொடுப்பின்
முரணத் தொடையென் றெய்தும் பெயரே *(காக்கை பாடினியார்)*
யா. வி. 38

இயைபுத் தொடை

1. இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிய *(அவிநயனார்)*

2. இயைபே இறுசீர் ஒன்றும் என்ப *(பல்காயனார்)*

3. இறுசீர் ஒன்றின் இயைபெனப் படுமே *(நற்றத்தனார்) யா.வி.40*

அளபெடைத் தொடை

1. அளபெடைத் தொடைக்கே அளபெடை யாகும் *(பல்காயனார்)*

2. அளபெடைத் தொடைக்கே அளபெடை ஒன்றும் *(நற்றத்தனார்)*

3. சொல்லிசை அளபெழ நிற்பதை அளபெடை *(சிறுகாக்கை பாடினியார்)*

4. அளபெழுந் தியாப்பினஃ தளபெடைத் தொடையே
(உயரும்புரம் நகரச் செற்றவன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 41

சீர்த் தொடை

அவைதாம்,

முதலோ டயல்கொள்வ திணை: அயல் இன்றி
மூன்றாஞ் சீரது பொழிப்பிரண் டிடையிட்
டிறுதியொடு கொள்வ தொருஉ: இறுதிச்
சீரொழித் தேனைய தொன்றிற் கூழை
முதலீ றடைந்தவற் றின்மை இருவகைக்
கதுவாய்: முற்றும் நிகழ்வது முற்றே
முதலொடெட் டாகும் என்மனார் புலவர் *(பரிமாணார்) யா. வி. 48*

பொழிப்பு முதலியன

பொழிப் பொருஉச் செந்தொடை பொய்தீர் இரட்டை
அழிப்பில் நிரனிறையோ டைந்தும் - எழுத்தல்
குறிப்புத் தொடையியையும் கொண்டுரைப்பார்க் கல்லால்
நெறிப்படுமோ நூலின் நிலை? *யா. வி. 49*

இணைத் தொடை

1. இரண்டாம் சீர்வரின் இணையெனப் படுமே *யா. வி. 42*

பொழிப்புத் தொடை

1. சீரிடை விட்டினி தியாப்பது பொழிப்பாம்

2. ஒருசீர் இடைவிடிற் பொழிப் பொருஉ இருசீர் *யா. வி. 43*

ஒருஉத் தொடை

1. சீரிரண் டிடைவிடின் ஒருஉ்வென மொழிப *(பல்காயனார்) யா. வி. 44*
2. ஒருஉத் தொடை இருசீர் இடைவிடில் என்மனார் புலவர்
(அவிநயனார்) யா. வி. 44

கீழ்க்கதுவாய்

முடிவதன் முதலயல் கதுவாய் சீழ்மேல் *யா. வி. 47*

முற்று - கூழைத் தொடைகள்

மூன்றுவரிற் கூழை நான்குவரின் முற்றே *யா. வி. 45*

அந்தாதி

1. அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறையல் வேண்டும் *(நற்றத்தனார்)*
2. அசையினும் சீரினும் அடிதொறும் இறுதியை
முந்தா இசைப்பினஃ தந்தாதித் தொடையே *யா. வி. 52*

இரட்டைத் தொடை

1. முழுவதும் ஒன்றின் இரட்டை யாகும் *(பல்காயனார்)*
2. சீர்முழு தொன்றின் இரட்டை யாகும் *(நற்றத்தனார்) யா.வி. 51*
3. ஒருசீர் அடிமுழு தாயின் இரட்டை *(அவிநயனார்)*
4. ஒருசீர் அடிமுழுவதும் வருவ திரட்டை *(மயேச்சுரர்)*
5. அடிமுழு தொருசீர் வரினஃ திரட்டை *(பரிமாணனார்) யா.வி. 51*

செந்தொடை

1. ஒன்றிய தொடையொடும் விகற்பந் தம்மொடும்
ஒன்றாது கிடப் பது செந்தொடை தானே *(சிறுகாக்கைபாடினியார்)*
2. அசையினும் சீரினும் இசையினும் எல்லாம்
இசையா தாவது செந்தொடை தானே *(பல்காயனார்) யா. வி. 50*
3. ஒன்றாதாவது செந்தொடைக் கியல்பே *(நற்றத்தனார்)*
4. செம்பகை யல்லா மரபினதாம் தம்முள்
ஒன்றா நிலையது செந்தொடை யாகும் *(காக்கைபாடினியார்)*
5. மாறல தொவ்வா மரபின செந்தொடை *அவிநயனார்) யா. வி. 50*

தொடை-தளை-பலவரின் வழங்குமாறு:

1. மயங்கிய தொடை முதல் வந்ததன் பெயரால்
இயங்கினும் தளைவகை இன்னணம் ஆகும் *அவிநயனார்)*
2. பல்வகைத் தொடையொரு பாவினிற் றொடுப்பின்
சொல்லிய முதற்றொடை சொல்லினர் கொளலே *(சிறுகாக்கைபாடினியார்)*

3. தொடையடி யுட்பல வந்தால் எழுவாய்
உடையத னாற்பெயர் ஒட்டப் படுமே *(காக்கைபாடினியார்)*

4. விகற்பம் கொள்ளா தோசைய தமைதியும்
முதற்கண் அடிவயின் முடிவ தாகும் *(பல்காயனார்)*

5. முதற்சீர்த் தோற்றம் அல்ல தேனை
விகற்பம் கொள்ளார் அடியிறந்து வரினே *(நற்றத்தனார்) யா. வி. 53*

தொடைக்கு வரம்பின்மை

இணைகூழை முற்றோ டிருகதுவா யுள்ளிட்
டனையும் தொடையனைத்தும் கூட்டிக் - கணிதநூல்
வல்லார் தொடைப்பெருமை நோக்கி வரம்பின்மை
சொல்லார் மற்றஃதன்றோ தோம் *யா. வி. 49*

தொடை - புறநடை

ஒன்றினம் முடித்தல் தன்னினம் முடித்தல்
என்றிவ் வகையால் யாவையும் முடியும் *யா. வி. 37*

தொன்று

தொன்றென் கிளவி தொழிற்பயில் வாகும். *தொல். சொல். 390 இளம்.*

தோமின்றுணர்தல்

கூறிய குன்றினும் முதனூல் கூட்டித்
தோமின்றுணர்தல் தொல்காப் பியன்தன்
ஆணையில் தமிழறிந் தோர்க்குக் கடனே *(பல்காப்பியப் புறநடை)*
தொல். பொருள். 649 பேரா.

தோரிய மடந்தையர்

1. இந்நெறி வகையா லிடத்தூண் சேர்வாள்
தொன்னெறி மரபிற் றோரிய மகளே

2. தலைக்கோ லரிவை குணத்தொடு பொருந்தி.
நலத்தகு பாடலு மாடலு மிக்கோள்
சொலப்படு கோதைத் தோரிய மகளே *சிலப் 3 : 133 - 4 அடியார்க்.*

தோழிக்குத் தலைவி அறத்தொடுநிலை

முற்படு புணர்ச்சியிற் கடிபடு கிழத்தி
மெய்ப்பாட் டவலம் புரியும் தோழிக்கு
ஏதீடாக எண்ணிய முறையாற்
கூறவும் பெறூஉம் குறிப்பொடு புணர்ந்தே
கற்புக் கடை காக்கும் கருத்தி னான. *களவியல். 11*

தோற்கருவிகள்

பேரிசை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசி றகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே. *சிலப். 3:27 அடியார்க்.*

நகைப்பிற்குரிய நாடகப்புலவன்

இன்ன னல்லோன் செய்குவ னாயிற்
றேற்றா மாந்த ராரியம் போலக்
கேட்டார்க் கெல்லாம் பெருநகை தருமே. *சிலப். 3 : 43. 4*

நடம்

வரியே குரவை மதலை மேடம்
முரியே தாழிசை முன்னிலை வாழ்த்தே
தேவ பாணி சிற்றிசை நேரிசை
பாவை தனிநிலை பாங்கமை மடலே *யா. வி. 96*

நல்கலின் கருவி

இயற்கை அருளும் பணியின்மிகும் அருளும்
இன்சொலின் மிகுதல் இயல்புறும் அருளும்
பொருள்பெரு வகையின் விரிவுறும் அருளும்
நல்கலின் கருவி நால்வகைத் தென்ப. *தொல்.பாயிர. அரசஞ்.*

நலியு ஓசை

ஆய்தம் ஒற்றெனப் பெற்றசை யாக்குமென்
றோதி னாருள ராகவும் ஒண்டமிழ்
நாத ராயவர் நாநலி போசையிற்
கேது வென்றெடுத் தோதினர் என்ப. *யா. வி. 3*

நாடகம்

நாடகப் பொருளும் இன முறையும்

அவைதாம்,
நாடகம் பிரகர ணப்பிர கரணம்
ஆடிய பிரகரணம் அங்கம் என்றே
ஓதுப நன்னூல் உணர்ந்திசி னோரே *(மதிவாணனார்) சிலப். 3:13 அடியார்க்.*

நாடகச் சாதி

1. அறமுதல் நான்கும் ஒன்பான் சுவையும்
முறைமுன் னாடக முன்னோன் ஆகும்.

2. அறம்பொருள் இன்பம் அரசர் சாதி.

3. அறம்பொருள் வணிகர் சாதியென் றறைப

4. அறமேற் சூத்திரர் அங்க மாகும். *(செயிற்றியனார்) சிலப். 3:13 அடியார்க்.*

நாணநாட்டம் - நடுங்கநாட்டம்

1. நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேஎத்து. *களவியல் 7*

2. பிறைதொழு கென்றல் பின்னுமவளை
உறவென வேறுபடுத்தி உரைத்தல்
சுனையாடல் கூறல் தோற்றங் கண்டு
புணர்ச்சி யுரைத்தல் பொதுவெனக் கூறி
மதியுடம் படுதல் வழிநாண நடுங்கல்
புலிமிசை வைத்தல் புகலுங் காலே. *திருக்கோ. 8*

நான்மணிமாலை

வெண்பா ஆசிரியம் விருத்தம் கலித்துறை
ஒன்பா நான்கு நான்மணி மாலை. *(செய்யுள்வகைமை)*
நவநீதப்பாட்டியல் 36

நிரல்நிறை - மகிழ்ச்சி (அணி)

அடைவே நிரனிறை ஆகும் ஆங்குத்
திடமுற மகிழ்ந்து செப்புதல் மகிழ்ச்சி. *வீரசோ. 152*

நிரோட்டி

ஆறிரண்டாம் ஆவியும் ஐயிரண்டாம் ஆவியும்
மாறிகந்த உஊவும் ஓனமும் - கூறில்
வகர பகரமர்ஃகான் வந்தணையாச் செய்யுள்
நிகரில் நிரோட்டி எனல். *யா. வி. 96*

நுணுக்கம்

இங்கிதா காரத் தியல்குறி குறிப்பின்
உணர்த்துதல் நுணுக்கம் என்மனார் புலவர். *வீரசோ. 151*

நுவலா நுவற்சி

அடைநின் றியம்பி அறிபொருள் விளக்குதல்
நுவலாச் சொல்லென நுவன்றனர் புலவர் *வீர்சோ. 152*

நூல்

1. நூலெனப் படுவது நுதலிய பொருளை
ஆதிக் கண்ணே அறியச் சுட்டி
ஒத்துமுறை நிறுத்துச் சூத்திரம் நிறீஇ
முதல்வழி சார்பென மூவகை மரபின்
தொகைவகை விரியின் வசையறத் தெரிந்து
ஞாபகம் செம்பொருள் ஆயிரு வகையில்
பாவமைந் தொழுகும் பண்பிற் றாகிப்
புணர்ச்சியின் அமைந்தது பொருளகத் தடக்கித்
தனக்குவரம் பாகித் தான்முடி வதுவே.

2. நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலிற் கூறி
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றமைந்த உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே. *களவியல். 1*

3. முதல்நடு இறுதி மறுதலைப் படாது
தொகைவகை விரியின் உட்பொருள் தோன்ற
உரையொடு புணர்ந்த ஒழுக்கிற் றாகிச்
சூத்திரம் ஓத்துப் படலம் பிண்டமென்
றியாப்புறுத் தமைத்த அவயவத் தாகி நடப்பது *யா. வி. பாயிரம்.*

நூல் இனிது முடிய

வழிபடு தெய்வ வணக்கம் செய்து
மங்கல மொழிமுதல் வழுவற வகுத்தே
எடுத்துக்கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் இன்றி இனிது முடியும். *யா. கா. 1*

நூல்நிலை

ஈனரங் குற்றமும் இன்றி நேரிதின்
எண்வகைப் புணர்ப்பின தென்மனார் புலவர்.

நூல்செய்தற்குரியான்

அப்புலம் அறில்தப அறிந்து முதனூல்
பக்கம் போற்றும் பயந்தெரிந் துலகத்
திட்ப முடைய தெளிவர வுடையோன்
அப்புலம் படைத்தற் கமையும் என்ப.

நூல் செய்யும் ஆறு

சூத்திரம் உரையென் றாயிரு திறனும்
பாற்படப் போற்றல் படைத்தல் என்ப
நூற்பயன் உணர்ந்த நுண்ணி யோரே *தொல். பாயிரம். இளம்.*

நூல் செய்தான் பாயிரம் செய்யாமை

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி அன்றே.

நூலின் பிரிவு

ஓத்தே சூத்திரம் என இரு வகைய. *தொல். பாயிரம். இளம்.*

நூல்வகை

முதல்வழி சார்பென நூல்மூன்றாகும். *களவியல். 1*

முதல்நூல்

1. முதல்வன் நூற்குப் பிறன்கோட் கூறாது.
2. தந்திரம் சூத்திரம் விருத்தி மூன்றற்கு
   முந்துநூல் இல்லது முதல்நூல் ஆகும்.

வழிநூல்

முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்.

புடைநூல் (சார்பு நூல்)

இருவர் நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவே றுடையது புடைநூல் ஆகும்.

எதிர்நூல்

தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்ப
தெதிர்நூல் என்ப ஒருசா ரோரே. *களவியல். 1*

நூல்முற்ற அறியும் முறை

1. ஆசான் உரைத்தவை அமைவரக் கொளினும்
   காற்கூ றல்லது பற்றலன் ஆகும்.
2. அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
   செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
   மையறு புலமை மாண்புடைத் தாகும். *தொல். பாயிரம். இளம்*

நூல்முற்ற அறியும் முறை

1. ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பின்
   பெருக நூலிற் பிழைபா டிலனே.
2. முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்
3. பிறர்க்குரை யிடத்தே நூற்கலப் பாகும்
   திறப்பட உணரும் தெளிவி னோர்க்கே. *தொல். பாயிரம். நச்.*

நூற்பா யாப்பு

1. வெண்பா அகவல் அல்லன பிறவும்
வெள்ளைக் குறட்சிறப் பல்லன வரையார்

2. ஓரடி முதலாப் பொருண்முடி வரையாம்
பிறர்நூற் காட்டினும் வரையார் ஆண்டே

3. வஞ்சியும் கலியும் வரையல் வேண்டும். *நவநீதப். 72*

நெய்தல் நடையியல்

கையறு புலம்பும் கலவியும் தலைதரு
நெய்தல் நடையியல் நேருங் காலைக்
கடலும் கழியும் கைதையும் கானலும்
மடலிரும் பெண்ணையும் வான்சிறைப் புள்ளும்
கழுமிய இருளும் கதிரொளி மதியும்
பொழுதும் காற்றும் என்றிவை முதலாம்
எவ்வகைப் பொருளும் இரந்துகுறை யுறுதலும்
அவ்வகைப் பொருளுக் காற்றாதுரைத்தலும்
விரைமலர்த் தாரோன் விழுப்பங் கூறலும்
இரவுக்குறி நேர்தலும் பகற்குறி மறுத்தலும்
இரவிடங் காட்டலும் பகலிடங் காட்டலும்
வரவறி வுறுத்தலும் வான்துயில் கோடலும்
இறைவனைத் தோளியை இன்துயில் எழுப்பலும்
துறைவனின் துயிலெழீஇத் துன்னுதற் பொருட்டால்
ஏதில் கூறலும் இடத்துய்த் தகற்றலும்
மேதகு கிளவியின் மீண்டெதிர் கோடலும்
சிறப்புறக் கிளத்தலும்
அம்பலும் அலரும் ஆயின என்றலும்
குறிவழிப் படுத்தலும் கொண்கன் தோன்றலும்
அறியக் கூறலும் அருங்காப்பு மிகுதலும்
தாம்பிழைப் பின்மையும் தலச்செல வருமையும்
வன்பழிக்கஞ்சலும் வாரலை என்றலும்
இரவரல் என்றலும் பகல்வரல் என்றலும்
இரவும் பகலும் வாரல் என்றலும்
அவ்விருபொழுதும் ஆய்ந்துவரல் என்றலும்
கவ்வையுரைத்தலும் களவவன் உரைத்தலும்
வரைதல் வேட்கையொடு வந்தவும் பிறவும்
உரைதரு பெருமையோ டுரைத்தனர் பலரே. *வீரசோ. 90-94*

பகற்குறி

குறியிடங் கூறல் ஆடிடம் படர்தல்
குறியிடைச் சேறல் இடத்துய்த்து நீங்கல்
உவந்துரைத்தலோடு மருங்கணை தல்லே

அறிவறி வித்தல் அவனுண் மகிழ்தல்
ஆயத் துய்த்தல் தோழிவந்து கூடல்
ஆடிடம் புகுதல் தனிகண் டுரைத்தல்
தடமென் முலையாள் பருவங் கூறி
வரவு விலக்கல் வரைவுடம் படாது
மிகுத்துரைத் தலொடு மெய்ம்மை யுரைத்தல்
வருத்தம் கூறல் தாயச்சம் கூறல்
இற்செறி வறிவித்தல் தமர்நினை வுரைத்தல்
எதிர்கோள் கூறல் ஏறுகோள் கூறல்
ஏதிலார் தம்முறை கூறல் அவளொடு
கூறுவாள் போன்று தினைமுதிர் வுரைத்தல்
பகல்வரல் விலக்கல் பையுள் எய்தித்
தினையோடு வெறுத்தல் சிறைப்புற மாக
வேங்கையொடு வெறுத்தல் வெற்பமர் நாடற்குக்
கழுமலுற் றிரங்கல் கடிப்புனங் கையறக்
கொய்தமை கூறல் பிரிவருமை கூறல்
மயிலொடு கூறல் வரும்புனங் காண்டல்
பயில்பதி நோக்கிப் பதிமிக வாடல்
சொன்னநாலெட்டும் தோன்றும் இயற்கை
மன்னிய பகற்குறி வகையா கும்மே. *திருக்கோ.*

பாடர்க்கைப்பால்

ஒருவன் ஒருத்தி பலரென்று மூன்றே
உயர்திணை மருங்கிற் படர்க்கைப் பாலே
ஒன்றன் படர்க்கை பலவற்றுப் படர்க்கை
அன்றி அனைத்தும் அஃறிணைப் பால. *அவிநயனார்) நேமி. 28*

பண்

நாற்பெரும் பண்ணுள் சாதி நான்கும்
பாற்படு திறனும் பண்ணெனப் படுமே. *சிலப். 8:35 அடியார்க்.*

பண்வகை

1. பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
   நால்வகைப் பண்ணா நவின்றனர் புலவர் *வாய்ப்பியனார்) யா. வி. 96*
2. விளரி யாழோ டைந்தும் என்ப. *யா. வி. 96*
3. பண்சார் வாகப் பரந்தன எல்லாம்
   திண்டிறம் என்ப திறனறிந் தோரே
4. அராகம் நோதிறம் உறழ்ப்புக் குறுங்கலி
   ஆசான் ஐந்தும் பாலையாழ்த் திறனே
5. நைவளம் காந்தாரம்
   பஞ்சுரம் படுமலை மருள்அயிர்ப் பரற்றுச்
   செந்திறம் எட்டும் குறிஞ்சியாழ்த் திறனே

6. நவிர்வடுகு வஞ்சி
செய்திறம் நான்கும் மருதயாழ்த் திறனே

7. சாதாரி பியந்தை
நொந்த திறமே பெயர்திறம் யாம யாழ்
சாதாரி நான்குஞ்செவ் வழியாழ்த் திறனே *(வாய்ப்பியனார்) யா. வி. 95*

பதினெண்கணத்தவர்

1. கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்
பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும்
உரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம்
பரகதியோர் சித்தர் பலர்

2. காந்தருவர் தாரகைகள் காணாப் பசாசகணம்
ஏந்துபுகழ் மேய விராக்கததரோ - டாய்ந்ததிறற்
போகா வியல்புடைய போகபூமி யோருடனே
ஆகாச வாசிகளா வார் *சிலப். 5 : 176 - 8 அடியார்*

பயன்

பயனெனப் படுவது நயனுறக் கிளப்பின்
வழிபா டன்பே வாய்மை வரைவே
பிழையா நிலைமை பெருமை தலைமை
பொறையே போக்கே புணர்வே முயக்கே
நிறையே எச்சம் நேசம் நீர்மை
ஐயம் அகறல் ஆர்வம் குணமே
பையப் பகர்தல் பண்பே சீற்றம்
காப்பே வெறியே கட்டு நேர்தல்
பூப்பே புலப்பே புறைவே புறைவியெனப்
பாற்பட இன்னவை பயத்த லாகும். *வீரசே. 90-94*

பரணியாடற் குரியோர்

முடிபு னைந்த மன்னர்க் கல்லது
குறுநில மன்னர்க்கு வரையார் ஆண்டே *நவநீதப். 61*

பரிசில் நல்கார் உறுவது

“முன்னொரு வர்க்கு மொழிந்த செய்யுள்
பின்னொரு வர்க்குச் சாற்றில்
முன்னோன் பின்னே திருவும் நீங்கி
பழிகிளர்ந் தோன்பாற் சேறன் மரபே” *(மாமூலம்)*

“யாவ ராயினும் இவ்வகை யேதன்
மூவகைக் காலத்து மொழிந்தனர் புலவர்” *(செய்யுள் வகைமை)*

“பாடிய புலவர் பரிசிற் நிறம் நீங்கிற்
கேடுதலைத் தருமே கேட்டோன் மருங்கினும்” *(பரணர் பாட்டியல்)*

"பாடிய செய்யுட் பலநாட் கிடப்பினும்
கேடென மொழிப கேட்டோர் தமக்கே" *(திருப்பிரவாசிரியர் தூக்கியல்)*
நவநீதப். 104

பரியாடற் பொருள்

அதுதான,
மலையே யாறே ஊரென் நிவற்றின்
நிலைபெறு மரபின் நீங்கா தாகும். *தொல். செய். 117 இளம்.*

பரிமாற்றம் (மாறாட்டு)

இவைகொண் டிவையெனக் கீந்தனர் என்று
நவைதீர மொழிவது நவில்பரி மாற்றம். *வீரசோ. 153*

பரியாயம்

1. குறித்த பொருளைப் பிறிதொரு வழியாற்
புலப்பட உரைத்தல் பரியாய மொழியே. *வீரசோ. 168*

2. பொருளினைப் புலப்பட் டிராமல் வேறொரு
பரிசினிற் கூறுதல் பரியா யம்மே. *வீரசோ. 152*

பருவங்கள்

1. காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனில் என்றாங்
கிருமூ வகைய பருவம் அவைதாம்
ஆவணி முதலா இவ்விரண் டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளலே. *(அணியியல்) யா. வி. 96*

2. காரே கூதிர் முன்பணி பின்பனி
சீரிள வேனி லொடுமுது வேனில். *வீரசோ. 179*

பல்சந்தமாலை

சந்தத் தொருபது பல்சந்த மாலை
அந்த வெள்ளை ஐம்பதான் எழுபதான்
என்கவூர்ப் பேரோ டுறுமா வியல்பே
அகவல் தனையும் அவ்வழி வரையார் *(முள்ளியார் கவித்தொகை)*
நவநீதப்பாட்டியல் 38

பலசில

பலாஅஞ் சிலாஅம் என்மனார் புலவர். *தொல். எழுத். 213. நச்.*

பலவினையந்த ஒன்று :

பலவின் இயைந்தவு மொன்றெனப் படுமே
அடிசில் பொத்தகம் சேனை அமைந்த
கதவ மாலை கம்பலம் அனைய. *(அகத்தியம்) நன். மயிலை.*

பன்மை

ஒன்றல் லவைபல தமிழ்நடை வடநூல்
இரண்டல் லவைபல என்றிசி னோரே. *யா. கா. 24*

பாங்கற்கூட்டம் (கிளவித் தொகை)

நினைதல் வினாதல் உற்ற துரைத்தல்
கழறல் மறுத்தல் கவன்றுரைத் தல்லே
வலியழி வுரைத்தல் விதியொடு வெறுத்தல்
நொந்து கூறல் நோதல் நீங்கி
இயலிடம் கேட்டல் இயலிடங் கூறல்
வற்புறுத்தல் குறிவழிச் சேறல் காண்டல்
வியந்து ரைத்தல் மெல்லியல் தன்னைக்
கண்டமை கூறல் கருத்துக் கேற்பச்
செவ்வி செப்பல் அவ்விடத் தேகல்
ஈங்கிவை நிற்க இடந்தலை தனக்கும்
ஆங்கவண் மெலிதல் பொழில்கண்டு மகிழ்தல்
நீங்கா மகிழ்வோடு நிலைகண்டு வியத்தல்
தளர்வகன் றுரைத்தல் மொழிபெற வருந்தல்
கண்புதை வருத்தம் காவல் நாண்விடல்
நண்பொடு சென்று நன்மருங் கணைதல்
இன்றியமையாமை ஆயத் துய்த்தல்
நின்று வருந்தல் நிகழா றைந்தும்
துன்று பாங்கற் றுறையென மொழிப.

பாட்டியலில் கூறப்பெறாதனவும் கொளல்

திசையும் மரமும் முதலிய பிறவும்
இயலா ஆயினும் இயலப் பெறுமே" *(கல்லாடனார் கலாவியல்) நவநீதப். 92*

பாட்டு

1. சீரினும் தளையினும் சட்டக மரபினும்
பேரா மரபின பாட்டெனப் படுமே

2. அவைதிரி பாகின் விசாதி யாகும் *(வாய்ப்பியம் உடையார்) யா. வி. 95*

பாடல் வென்றி

தூக்கியல்வகை ஓலையை,
செவித்திறம் கொள்ளாது தெரியுங்காலைத்
தானே நம்பி மகனே மாணி
ஆசானென் றவரில் ஒருவர் இழுக்கிலைக்
குற்றம் வகுத்துடன் படாமற் சொல்லின்
வென்றியும் பெறுமே. *அவிநயனார்கலாவியல்) நவநீதப். 96*

பாடலாசான் இலக்கணம்

இருவகை பல்வகை யென்னும் விலக்கோ
டரியவுறுப் புப்பதினோ ராட்டுக் - குரவைவரி
சொக்க மவிநயம் நாடகம் என்றிவற்றால்
தக்கவனே பாடலா சான் *சிலப். பதி. 73. அடியார்க்.*

பாடலின் பயன்

இன்பந் தெளிவே நிறையோ டொளியே
வன்சொல் இறுதி மந்தம் உச்சமென
வந்த எட்டும் பாடலின் பயனே *சிலப். 3 : 16 அடியார்க்.*

பாடுமுறை

மறுவறு முதல்வன் வகுத்த
அறுவகை மரபின் ஆனந்தமும்
எழுவகைப் பட்ட சொல்வழு வொரீஇ
எழுத்தினும் யாப்பினும் இழுக்கா தாகப்
பாடு கென்றனர் பன்மொழிப் புலவர் *நவநீதப். 84*

பாணர் முதலியோர் பெறும் பரிசு

முட்டில் பாணரு மாடியன் மகளிரும்
எட்டொடு புணர்ந்த வாயிரம்பொன் பெறுப *சிலப். 3 : 116-3 அடியார்க்*

பாணி

கொட்டும் அசையும் தூக்கும் அளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும் *சிலப். 3 : 16 அடியார்க்.*

பால், திணை மயக்கம்

உவப்பினும் உயர்வினும் இழிப்பினும் சிறப்பினும்
பாலும் திணையும் மயங்குதல் வரையார். *நேமி. 35*

பால்தோறும் வினைவேறுபடல்

காலம் அறிதொழில் கருத்தினோ டியையப்
பால்வகை தோறும் படுமொழி வேறே *அவிநயனார்) நன். மயிலை.*

பாலை

பொருள்வயிற் பிரியினும் புணர்ந்துடன்போகினும்
அதுபிரி வுரைப்பினும் பாலை யாகும். *களவியல் 51*

பாலைத் திணையின் பொதுமை

இடைநிலைப் பாலை இருபாற்கு முரித்தே
படர்கொடி முல்லையின் பாற்படு மியற்றே *வீரசோ. 90-94*

பாலை நடையியல்

நூலியல் முறைமை நுண்ணிதின் உணர்ந்தோர்
பாலை நடையது பகருங் காலை
உடன்போக் குணர்த்தலும் அப்போக் குரைத்தலும்
மடவோன் தன்திறம் மாண்புற நோக்கலும்
கற்பியல் காட்டலும் கையுய்த்து மொழிதலும்
வெற்பிடைப் போதலும் மெல்லியல் தளர்தலும்
தளர்ந்தோள் ஓம்பலும் தம்முயி ரென்றலும்
எதிர்ந்தோர் மொழிதலும் எதிர்கொளத் தவிர்தலும்
கண்டோர் ஏத்திய கற்புடை ஒழுக்கமும்
தண்தளிர் மாடந் தனக்குரை மாற்றமும்
தாங்கரும் பூசல் தன்னையர் எழுச்சியும்
ஆங்கவள் வலித்தலும் அமைந்தோர் திருத்தலும்
பதியுடன் படுத்தலும் பண்பெய்த மொழிதலும்
ஈன்றார் இரங்கலும் எதிர்ந்தோர் கூறலும்
அம்பலும் அலரும் ஆதலும் அயலோர்
தோன்றக் கூறிய தோமறு கற்பும்
அன்புறு செவிலி பின்செல வலித்தலும்
சென்றவள் வினவலும் கண்டோர் தெருட்டலும்
ஒன்றிய உள்ளமோ டுவந்தவள் மீண்டலும்
வறுஞ்சுரங் கடந்தவர் வளநாடு புகுதலும்
பிறங்கு புகழ்ப் புதல்வரைப் பெறுதலும் பெற்றோர்
இருங்கிளை மருங்கில் தூது விடுத்தலும்
நெருங்க வருந்தலும் உவந்துடன் சென்றலும்
மாதரைக் கொண்டுதம் வாழ்பதி புகுதலும்
ஓதிய அனைத்தும் உரியவை புக்கபின்
பொருள்வயிற் பிரிதலும் அப்பிரிவுணர்த்தலும்
இருள்புரி கூந்தல் இற்றென மொழிதலும்
ஆற்றான் ஆதலும் அதுகேட்டு மொழிதலும்
கூற்றங் கோளிய உலகியல் உரைத்தலும்
பின்னைப் பிரிதலும் பெருஞ்சுரத் தழுங்கலும்
நனிபகர் பள்ளியின் நயந்து செலவழுங்கலும்
பரத்தையிற் பிரிவொழித் தெல்லாப் பிரிவும்
உரைக்கும் காலை உணர்ந்தன னோக்கே. *வீரசோ. 90-94*

பாயிரம்

பாயிர வகை

பாயிரம் பொதுச் சிறப்பெனவிருபாற்றே *நன். இ.வி. பாயிரம்*

பாயிரத் தின்றியமையாமை:

ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே. *களவியல் 1*

பாயிரத்திலக்கணம்

பாயிரத் திலக்கணம் பகருங் காலை
நூல்நுதல் பொருளைத் தன்னகத் தடக்கி
ஆசிரியத் தானும் வெண்பா வானும்
மருவிய வகையால் நுவறல் வேண்டும். *தொல். பாயிரம். இளம்*

பாயிரங் கேட்டலின் இன்றியமையாமை

பருப்பொருட் டாகிய பாயிரம் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினிது விளங்கும். *தொல். பாயிரம். நச்.*

பொதுப்பாயிரம்

ஈவோன் தன்மை ஈதல் இயற்கை
கொள்வோன் தன்மை கோடல் மரபென
ஈரிரண் டென்ப பொதுவின் இயற்கை. *களவியல். 1*

சிறப்புப்பாயிரம்

1. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோ டாயெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே.

2. காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே. *தொல். பாயிரம். இளம்.*

3. பன்னிய நூற்பேர் பகர்ந்தோன்பேர் காரணமும்
துன்னு பயனளவும் சொல்லினான் - முன்னைச்
சிறப்பாம் அவற்றுச் சிலவேறி னாலும்
பெறப்படுமாம் முன்னைப் பெயர். *நேமி. பாயிரம்.*

4. தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்
எய்த உரைப்பது தற்சிறப் பாகும். *யா. கா. 1*

5. வணக்கம் அதிகாரம் என்றிரண்டும் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம் *யா. வி. பாயிரம்*

சிறுகாக்கைப் பாடினியப் பாயிரம்

வடதிசை மருங்கின் வடுகுவரம்பாகத்
தென்திசை யுள்ளிட் எஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த
நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே *தொல்.பொருள். 650 பேரா.*

பன்னிருபடலப் புனைந்துரைப் பாயிரம்

வீங்குகடல் உடுத்த வியன்கண் ஞாலத்துத்
தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென
வானோர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ்

ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்
அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்
பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்
நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும். *தொல். பொருள். 649 பேரா.*

பாவின் வேறு பெயர்

"தூக்கும் பாட்டும் பாவும் ஒன்றென
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே *(பல்காயனார்) யா. வி. 1*

பாவென மொழியினும் தூக்கினது பெயரே *(நற்றத்தார) யா. வி.*

பாவினம்

1. வெண்பா விருத்தம் துறையொடு தாழிசை
என்றிம் முறையின் எண்ணிய மும்மையும்
தத்தம் பெயரால் தழுவும் பெயரே *(காக்கைபாடினியார்)*

2. பாவே தாழிசை துறையே விருத்தமென
நால்வகைப் பாவும் நானான் காகும் *(சிறுகாக்கைப் பாடினியார்)*

3. வெண்பாத் தாழிசை வெண்டுறை விருத்தமென்
நிந்நான் கல்ல முந்நான் கென்ப *(அவிநயனார்)*

4. ஒத்தா ழிசைதுறை விருத்தம் எனப் பெயர்
வைத்தார் பாவினம் என்ன வகுத்தே *(மயேச்சுரர்)*

5. விருத்தம் வியன்றுறை தாழிசையென் றோதா
தொருத்திங்கி யாதிலா ஒத - உரைப்பிற்
சிறுகாக்கை பாடினியார் செப்பக்கேட் டஃது
மறுத்தாரே வன்மையால் வைத்து.

6. பண்ணும் திறமும்போற் பாவும் இனமுமாம்
வண்ண விகற்ப வகைமையால் - பண்மேல்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்பல் அகவல்
இசைமருட்கும் இல்லை இனம் *யா. வி. 56*

பாவின விகற்பம்

தத்தம் பாவினத் தொப்பினும் குறையினும்
ஒன்றொன் றொவ்வா வேற்றுமை வகையாற்
பாத்தம் வண்ணம் ஏலா வாகிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும். *யா. கா. 23*

பாவும் வருணமும்

1. வெண்பா முதலாம் நால்வகைப் பாவும்
எஞ்சா நாற்பால் வருணக் குரிய

2. பாவினத் தியற்கையும் அதனோ ரற்றே *(வாய்ப்பியம் உடையார்)*
யா. வி. 55

3. வெண்பா முதலாக வேதியர் ஆதியா
மண்பால் வகுத்த வருணமாம் - ஒண்பா
இனங்கட்கும் இவ்வாறே என்றுரைப்பர் தொன்னூல்
மனந்தட்பக் கற்றோர் மகிழ்ந்து

பா - காரணப்பெயர்

அறமுதனான் கென்றும் அகமுதனான் கென்றும்
திறனமைந்த செம்மைப் பொருண்மேல் - குறைவின்றிச்
செய்யப் படுதலாற் செய்யுள் செயிர்தீரப்
பையத்தாம் பாவுதலாற் பா *யா. வி. 55*

பிரிவு

ஓதற் பிரிவு

கல்விநலங் கூறல் பிரிவுநினை வுரைத்தல்
கலக்கங் கண்டுரைத்தல் காதலர் தமது
வாய்மொழி கூறல் வருவன நான்கும்
தீமையில் கல்வி தேருங் காலே. *திருக்கோ. 20*

பொருள்வயிற் பிரிவு

வாட்டங் கூறல் பிரிவுநினை வுரைத்தல்
ஆற்றாது புலம்பல் ஆற்றாமை கூறல்
தினைப்பெயர்த் துரைத்தல் பொருத்தமறிந் துரைத்தல்
பிரிந்தமை கூறல் பிரிவாற் றாமையால்
இரவுறு துயரத்திற் கிரங்கி யுரைத்தல்
இகழ்ச்சி நினைந்தழிதல் உருவுவெளிப் படுதல்
நெஞ்சொடு நோதல் நெஞ்சொடு புலத்தல்
நெஞ்சொடு மறுத்தல் நாளென்ணி வருந்தல்
ஏறு வரவுகண் டிரங்கி யுரைத்தல்
பருவங்கண் டிரங்கல் முகிலொடு கூறல்
தேர்வரவு கூறல் இளையரெதிர் கோடல்
உண்மகிழ்ந் துரைத்தல் ஓதிய இருபதும்
மாமதி நுதலாய் வான்பொருட் பிரிதல் *திருக்கோ. 24*

வேந்தற்குற்றுழிப் பிரிவு

பிரிந்தமை கூறல் பிரிவாற் றாமை
கார்மிசை வைத்தல் காரை நோக்கி
வருந்தி யுரைத்தல் மலர்க்குழல் அரிவை
கூதிர்கண்டு கவறல் குளிர்முன் பனிக்கவள்
நொந்து கூறல் நோக்கிப் பின்பனிக்
கிரங்கி யுரைத்தல் இளவேனில் கண்டவன்
இன்னல் எய்தல் இதுஅவர் குறித்த
பருவ மாமென வரவு கூறல்
பருவமறைத் துரைத்தல் மறுத்துரைத் தல்லொடு

தேர்வரவு கூறல் வினைமுற்றி நினைதல்
நிலைமைநினைந் துரைத்தல் முகிலொடு கூறல்
வரவெடுத்து ரைத்தல் மறவாமை கூறல்
மற்றிவை ஈரெட்டும் உற்றுழிப் பிரிவாம். *திருக்கோ. 23*

வரைபொருட் பிரிதல்

முலைவினை கூறல் வரைவுடம் படுத்தல்
வரைபொருட் கேகலை உரைஅவட் கென்றல்
நீகூ றென்றல் சொல்லா தேகல்
பிரிந்தமை கூறல் நெஞ்சொடு கூறல்
வற்புறுத் தல்லொடு வன்புறை அழிதல்
வாய்மை கூறல் மன்னவன் மெய்யுரை
தேறாது புலம்பல் காலமறைத் துரைத்தல்
தூதுவர வுரைத்தல் தூதுகண் டழுங்கல்
மெலிவு கண்டு செவிலி யுரைத்தல்
மேவிய செவிலி கட்டுவைப் பித்தல்
கலக்குற்று நிற்றல் கட்டுவித்தி கூறல்
வேலனை அழைத்தல் இன்னல் எய்தல்
விலக்க நினைத்தல் நிலைமையுரைத்தல்
அறத்தொடு நிற்றல் ஐயந் தீர்த்தல்
அவன்நெறி விலக்கல் செவிலிக்குத் தோழி
அறத்தொடு நிற்றல் நற்றாய்க்குச் செவிலி
அறத்தொடு நிற்றல் தேர்வர வுரைத்தல்
மணமுரசு கேட்டு மகிழ்ந்து ரைத்தல்
ஐயுற்றுக் கலங்கல் அவனிதி காட்டல்
ஆறைந் துடனே கூறிய மூன்றும்
விரைமலர்க் குழலாய் வரைபொருட் பிரிதல் *திருக்கோ. 18*

பரத்தையிற் பிரிவு

கண்டவர் கூறல் காதல் தோழி
பொறையுவந் துரைத்தல் பொதுப்படக் கூறி
வாடி அழுங்கல் மாறுகொண் டவனொடு
கனவிழந் துரைத்தல் விளக்கொடு வெறுத்தல்
வாரம் பகர்ந்து வாயில் மறுத்தல்
பள்ளியிடத் தூடல் பனிமொழியாள்தன்
செவ்வணி விடுக்க இல்லோர் கூறல்
அயலறி வுரைத்தவள் அழுக்கம் எய்தல்
செவ்வணி கண்ட வாயிலவர் கூறல்
மனைபுகல் கண்ட வாயிலவர் கூறல்
முகமலர்ச்சி கூறல் முனிவ தென்னெனக்
காலநிகழ் வுரைத்தல் கலவி எய்தலை
எடுத்துரைத் தல்லொடு கலவிகருதிப்
புலத்தல் குறிப்பறிந்து புலந்தமை கூறல்
வாயிலவர் வாழ்த்தல் புனல்வர வுரைத்தல்

தேர்கண்டு மகிழ்தல் சேடியர் விழவில்
தம்முள் உரைத்தல் தன்னை வியத்தல்
நகைத்துரைத் தல்லொடு நாண்கண் டுரைத்தல்
பானன்வர வுரைத்தல் பாங்கியியற் பழித்தல்
உழையரியற் பழித்தல் ஒண்ணுத லாளவற்
கியற்பட மொழிதல் இயல்புனைந் துரைத்தல்
வாயில்பெறாது மகன்திறம் நினைதல்
வாயிற்கண் நின்று தோழிக் குரைத்தல்
வாயில் வேண்டத் தோழி கூறல்
மன்னிய தோழி வாயில் வேண்டல்
மனையவர் மகிழ்தல் வாயில் மறுத்தல்
பாணனொடு வெகுளல் பாணன் புலத்தல்
விருந்தொடு செல்லத் தணிந்தமை கூறல்
ஊடல் தணிவித்தல் அணைந்தவழி ஊடல்
புனலாட்டு வித்தமை கூறிப் புலத்தல்
கலவி கருதிப் புலவி புகறல்
மிகுத்துரைத் தூடல் விறல்வேற் காளை
ஊடல் நீட வாடி யுரைத்தல்
துனியொழிந் துரைத்தல் துகளொன் றில்லாப்
புதல்வன் மேல்வைத்துப் புலவி தீர்தல்
கலவியிடத் தூடல் முன்னிகழ் வுரைத்தல்
பரத்தையைக் கண்டமை பயன்படக் கூறல்
ஊதியம் எடுத்துரைத் தூடல் தீர்த்தல்
எண்ணா றொன்றினை பரத்தையிற் பிரிவெனப்
பண்ணார் மொழியாய் பகர்ந்திசி னோரே. *திருக்கோ. 25*

பிள்ளைத்தமிழ் – செய்யுள் அளவு

அமரர்க்கு நூறந் தணர்க்கிழி வைந்து
அரசர்க்குத் தொண்ணூறு மூன்றாம் பட்ட
முடிபுனையா மன்னர்க் கெண்பது
வணிகர்க் கெழுபது மற்றவை யோர்க்குத்
துணியி லறுபத் தைந்து சொல்லும் *(முள்ளியார் கவித்தொகை)*
நவநீதப்பாட்டியல் 35

பிறபொருள் வைப்பு

துறையினிற் பிறக்கப் பொருள்கள் கடியப்
பிறபொருள் வைப்பது பிறபொருள் வைப்பே. *வீரசோ. 151*

புகழ்ச்சி மாலை

அராகம் வெள்ளை அகவல் முதலின்
ஆசிரியம் வஞ்சி மெல்லியற் புகழினும்
வரைதல் இலவென வரைசெய்வர் புலவர் *(முள்ளியார் கவித்தொகை)*
நவநீதப்பாட்டியல் 47

புகை

1. நேர்கட்டி செந்தேன் இரியாசம் பச்சிலை
ஆரம் அகிலுறுப்போ டாறு. *சிலப். 5 : 14 அடியார்க்.*

2. அஞ்சனக் கட்டி யரியாசம் பச்சிலை
ஆர மகிலுறுப்போ ரைந்து *சிலப். 5 : 14 அரும்பத*

புணரக்கூடா முந்நாள்

பூப்புமுதன் முந்நாட் புணர வுணரின்
யாப்புறு மரபின் முனிவரும் அமரரும்
யாத்த கரணம் அழியும் என்ப. *களவியல். 43*

புலன் (அணி)

சொலப்படும் பொருளுமச் சொல்லும் வண்ணமும்
புலப்படக் கிடப்பது புலனெனப் படுமே *வீரசோ. 149*

ஐம்புலன்

தோற்றம் இசையே நாற்றம் சுவையே
உறலோ டாங்ஙகம் புலனென மொழிப *தொல். சொல்.2 83 இளம் 288 சேனா.*

புறத்திணை

1. வெட்சி முதலாகத் தும்பை ஈறாகப்
புக்கமர் செய்வது புறத்திணை ஆகும். *வீரசோ. 104*

2. மதுவிரி வாகையும் பாடாண் பாட்டும்
பொதுவியற் படலமும் புறமா கும்மே *வாய்ப்பியனார் (யா. வி. 96)*

3. வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை என்றாங்
கித்திற மேழும் புறனென மொழிப

4. வெட்சி முதலாத் தும்பை யீறாச்
செப்பிய ஏழும் புறப்பொரு ளாகும். *யா. வி. 96*

புறத்திணை வகை

ஆங்ஙனம் உரைப்பின் அவற்றது வகையால்
பாங்குறக் கிளந்தனர் என்ப அவைதாம்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
உட்குவரு சிறப்பின் உழிஞை நொச்சி
முரண்மிகு சிறப்பின் தும்பையுள் ளிட்ட
மறனுடை மரபின் ஏழே ஏனை
அமர்கொள் மரபின் வாகையும் சிறந்த
பாடாண் பாட்டொடு பொதுவியல் என்ப. *தொல். பொருள். புறத். இளம்*

புறத்திணைப் பொருள்

வெட்சி நிரைகவர்தல்; மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேற் செல்வது வஞ்சியாம் - உட்காது
எதிரூன்றல் காஞ்சி; எயில்காத்தல் நொச்சி
அதுவளைத்த லாகும் உழிஞை - அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கார்
செருவென் றதுவாகை யாம். *வீரசோ. 104*

புறப்பொருள்

1. ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென
மூன்றுவகை நுதலிய துலகம் அவற்றுள்
அறமும் இன்பமும் அகலா தாகிப்
புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே *(பன்னிருபடலம்)*
தொல். பொருள். புறத். இளம்.

2. அறத்தினும் பொருளினும் அன்பினும் மறத்திறம்
வரைந்த நோக்கத்தப் புறத்திணை ஆகும்.

3. அவைதாம்,
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகை
எச்சப் படலமோ டிவையென மொழிப். *வீரசோ. 104*

புறப்புறம்

வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப்
போகிய மூன்றும் புறப்புறப் பொருளே *(தொல்காப்பிய அகத்தியம் உடையார்) யா. வி. 96 வீரசோ. 104*

புனைந்துரை

உரைக்கப் படும்பொருட் கொத்தன எல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை ஆகும். *யா. வி. 95*

பூதம்

1. ஐம்பூதம்

நிலனே நீரே தீயே வளியே
ஆகா யத்தோ டைந்தே பூதம். *தொல். சொல். 289 இளம்.*

மண்ணுட னீர்நெருப்புக் கால்வான மென்றிவைதாம்
எண்ணிய பூதங்க ளென்றறிந்து - நண்ணிய
மன்னர்க்கு மண்கொடுத்து மாற்றார்க்கு விண்கொடுத்த
தென்னவர்கோ மானே தெளி. *சிலப். 3 : 26 அடியார்க்.*

2. ஐம்பூதக் குணங்கள்

செப்பிய பூதங்கள் சேர்ந்தோர் குறியன்றே
அப்பரிசு மண்ணைந்து நீர்நாலாம் - ஒப்பரிய

தீயாகின் மூன்றிரண்டு காற்றம் பரமொன்று
வேயாருந் தோளி விளம்பு *சிலப். 3 : 26 அடியார்க்.*

3. ஐம்பூதம் உடம்பாம் வகை

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாயு மாயவற்றின் மீதடுத்துத் - துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தால்
அவைமுதற் புற்கல மாம். *சிலப். 3 : 26 அடியார்க்.*

4. தீ - வளி இவற்றின் குணம்

பசிசோம்பு மைதுனங் காட்சிநீர் வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து - மொசிகின்ற
போக்கு வரவுநோய் கும்பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை. *சிலப். 3 : 26 அடியார்க்.*

5. ஆகாயத்தின் குணம்

ஓங்கும் வெகுளி மதமான மாங்காரம்
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும் - பாங்காய
வண்ண முலைமடவாய் வானகத்தின் கூறென்றார்
எண்ணிமிக நூலுணர்ந்தோ ரெண் *சிலப். 3 : 26 அடியார்க்.*

6. தசவாயுக்கள்

ஒப்பார் பிராண னபான னுதானனுடன்
தப்பா வியானன் சமானனே - இப்பாலும்
நாகன் றனஞ்செயன் கூர்மன் கிருகரன்
தீதிலாத் தேவ தத்த னே *சிலப். 3 : 26 அடியார்க்.*

7. தசநாடிகள்

இடைபிங் கலைசுழுனை காந்தாரி யத்தி
புடைநின்ற சிங்குவை சங்கினி - பூடாவோ
டங்குகு கன்னி யலம்புடை யென்றுரைத்தார்
தங்குதச நாடிக டாம். *சிலப். 3 : 26 அடியார்க்.*

8. பூதபரிணாமம்

பூத வகைகளோ ரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனை யோரையைந்தாய் மாருதமும் - மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பத்தாகும் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு *சிலப் 3. 26 அடியார்க்.*

பெயர் தரும் முறை

வந்த முறையாற் பெயர்கொடுத் தெல்லாம்
தந்தம் முறையாற் றழாஅல் வேண்டும். *யா. வி. 95*

பெயர்ப்பயனிலை

வினைநிலை உரைத்தலும் வினாவிற் கேற்றலும்
பெயர்கொள் வருதலும் பெயர்ப்பய னிலையே *அகத்தியம்) நன். மயிலை.*

பெயரயற் புணர்க்கலாகாதவை

கழிநெடில் அசையும் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர் *(மாபுராணம்) யா. வி. 2*

பெருக்கு

உரையினும் புகழினும் அன்றிவே றுயர்ச்சியிற்
பெருகச் சொல்லுதல் பெருக்கெனப் படுமே. *வீரசோ. 151*

பெருந்திணை

1. இறந்த மூப்பும் எய்தா இளமையும்
சிறந்த காமத்திற் செய்யும் சிதைவும்
பிறங்குதரு மரபிற் பெருந்திணை யாகும். *வீரசோ. 104*

2. பெருந்திணைப் பொருளே பொருந்தக் கூறின்
அறத்தின் இயன்ற அகத்தொடு புணராத்
திறத்த தென்ப திறனறிந் தோரே

3. நிலையா அன்பின் நீடா இன்பத்
துலகமலை வெல்லாம் பெருந்திணை அகப்புறம் *யா. வி. 96*

பேதை

பேதை என்பது யாதென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது தெளிதல். *தொல்.பொருள். 316 இளம்.*

பொதுமை குறித்துப் புகலும் இடம்

தூய்மைநற் காற்றுச் சுடர்வெம்மை இன்மை
மரச்செறி வின்ன உறப்பெறு தன்மையும்
நான்குபக் கத்தும் ஓங்கிய அடைப்பும்
ஈவோன் கொள்வோன் இருவரும் போதல்
வருதற்கு வேறு வழியிரண் டாதல்
நூலும் கொள்வோரும் வாலிதின் இருத்தற்
கிடனிரண்டாதல் கடனென உடைமையும்
வெயில்மழை தடுப்ப விமானம் தாங்கி
அடுத்தூன்று கால்பல தொடுத்து நிற்றலும்
ஆவகை நான்கும் மேவிய தென்ப
பொதுமை குறித்துப் புகலும் இடனே *தொல். பாயிர. அரசஞ்*

பொதுவகையாற் கூறியதன் பயன்

பொதுவகையாற் சொற்றனவும் பொய்தீர் சிறப்பிற்
குதவி ஒரோவிடத்து நிற்கும் - விதிவ்கையால்
நின்ற பொருளை நிகழ்விப் பதுநியமம்
என்றுரைப்பர் தொல்லோர் எடுத்து *நற்றத்தனார் யா. வி. 16*

பொருட் டெளிவு

தெருள்படு மொழிவயிற் றெரியா ததற்குப்
பொருளாற் றெரிவது பொருட்டெளி வாகும். *வீரசோ. 149*

பொருத்தம்

எழுத்துப் பொருத்தம்

1. ஐந்தொடு மூன்றே ழாறொடு மூன்றும்
ஆகும்நா லாறெட் டெழுத்தா காவே *வெண்பாப். 5*

2. மெய்யுட னாகிய வியனிலை தானே
எய்தும் சமநிலை இழுக்கென மொழிப. *(மாமூலம்) நவநீதப். 5*

உரைப் பொருத்தம்

1. அமுதெழுத் தென்ற ஆதியுயிர் நான்கொடும்
புணர்ந்த மெய்யை உணர்ந்தமு தென்ப
மெய்யாம் அமுதின் மேவிய உயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப
நஞ்சா மொற்றொடு நடந்த உயிர்களும்
வஞ்சமில் புலவர் மறுத்திலர் என்ப
இருவகை உண்டியென் றெடுத்தன வல்ல
தாமே நிற்பினும் தோமில வென்ப *இந்திர காளி வெண்பா. 9*

2. நீரது கணமே சீர்சிறப் பெய்தும்
தீயின் கணமே நோயது சேரும்
அந்தக் கணமே வாழ்நாள் அகற்றும்
இந்திர கணமே பெருக்கம் செய்யும்
சந்திர கணமே வாழ்நாள் தரூஉம்
சூரிய கணமே வீரியம் பெருக்கும்
மாருத கணமே சீர்சிறப் பகற்றும்
நிலக்கணந் தானே மலர்த்திரு விளங்கும். *(மாமூலம்) வெண்பாப். 21*

கணப்பொருத்தம்

1. தேமாங் காயிந் திரகணம் புளிமாங்
காய்சந் திரகணம் ; கருவிள மென்கனி
நிலக்கணம்; கூவிளங் கனிநீர்க் கணமிவை
யாகும் கருவிளங் காயந் தரகணம்
கூவிளங் காயிர விக்கணம் தேமாங்
கனிகாற் கணம்புளி மாங்கனி தீக்கணம் *வெண்பாப். 21*

கணப்பொருத்தம்

1. இந்திர கணமே பெருக்கம் செய்யும்
சந்திர கணமே வாணாள் தருஉம்
சீர்த்த நீர்க்கணம் பூக்கணஞ் செழுந்திரு
ஆக்கும் என்றாங் கறையப்படுமே *(மாமூலம்)*

2. நேரசை யாகவும் நிரையசை யாகவும்
சீர்பெற எடுத்தல் சிலவிடத் துளவே *(இந்திர காளியம்) நவநீதப்22*

3. எண்வகைக் குறி இயலுமச் சீர்களுள்
வருணற் குரிய நாளே சதையம்
இயமானற் குரிய நாளே பரணி
சந்திரன் வந்தநாளே மகயிரம்
பூமிதேவிநாள் கேட்டை யாகும்
எஞ்சிய சீரி ரிரண்டி னுள்ளும்
வஞ்சமில் மாருத நாளே சோதி
ளிநாள் கார்த்திகை அந்தர மதனுக்
குரிய நாளே ஓணம் ஆகும்
சூரியன் நாளே புனர்பூ சம்மே *(இந்திரகாளியம்) நவநீதப். 23*

கதிப் பொருத்தம்

1. மேவிய செய்யுளின் முதற்சீர்க் கண்ணே
விலங்கின் கதியும் நரக கதியும்
பாவியல் பாடப் பழியது முடியும் *(தொல்காப்பியனார்) நவநீதப். 21*

2. "அஇஉ எ�யொடு கசட தபவாம்
ஒன்பதும் தேவர் கதியாம்; ஆஈ
ஊஏ ஙஞண நமவா மொன்பதும்
மாந்தர் கதி ஓய ரலழற
விலங்கின் கதி; ஐ ஔவொடு வளன
ஐந்தும் நரகர் கதியாம் இவற்றுள்
முன்னவை நல்லன பின்னவை தீயன *வெண்பாப். 20*

தாளப் பொருத்தம்

1. தன்பெய ரெழுத்துத் தான மாக
வந்த மூப்பும் மரணமும் வரைப *(மாமூலம்) .*

2. நட்புதா சீனம் பகையென் றுள்ளம்
ஒப்புடைக் குறிகள் ஒருமூன் றாகும்.

3. பாலன் குமரன் இராசதம் என்னும்
மூவகைத் தானமும் நட்பென மொழிப

4. விருத்தம் உதாசீனம் மரணம் பகையென
எடுத்துப் பகர வேண்டும் என்ப.

5. மூப்பும் மரணமும் மொழிந்த காலை
நிலையிற் குலைதல் செல்வம் நீங்குதல்
கொலையிற் பிணியிற் கூட்டுதலாகும் *(இந்திரகாளியார்) நவநீதப்.6*

6. அஆ இஈ ஐயும் உஊ
ஒளவும் எஏ ஒஓ என்றிவை
பாலன் குமரன் இராசன் மூப்பு
மரணம் முறையே ஐந்தும் எண்ணுக
மூப்பும் மரணமும் முதற்சீர்க் காகா. *வெண்பாப்.6*

நாட்பொருத்தம்

"மூன்றாம் ஒன்பதின் மூன்றைந் தேழும்
பொருந்து மென்று புகலுவர் புலவர்" *(இந்திரகாளி) வெண்பாப்.18*

பாற்பொருத்தம்

1. குறிலாண் நெடில்பெண் ணாந்தனி நிலைமெய்
அலியாம் பெண்ணினோ டாண்பாற் புணர்ச்சிக்
கவ்வவ் வெழுத்தாம் மயங்கினும் வழுவே. *வெண்பாப். 7*

2. பேடாகும் ஒற்றுக்கள் பெண்ணாம் உயிர்மெய்கள்
ஆடூஉ உயிரென் றறையெல்லாம் - நாடுங்கால்
பெண்ணாம் எழுத்தே பெருங்கவியின் முன்னெடுத்துக்
கண்ணாரக் காட்டல் கடன்

3. ஆண்பாற் புகழ்ச்சிக் காணெழுத் துரிய
பெண்பாற் புகழ்ச்சிக்குப் பெண்ணெழுத்துரிய
அவ்விரு பாற்கும் அலியெழுத் தாகா
தம்முள் மயங்கினும் தவறின் றென்க *(ப்ரணர் பாட்டியல்) நவநீதப்.7*

இயற்பெயர்க்கே பொருத்தம்

திருவின் ஆசிரியர் தூக்கியல் உரைத்தன
யாவையும் இயற்பெயர்க் கல்லது
பொருத்தம் வேண்டார் புலமை யோரே *(கல்லாடம்) நவநீதப்.83*

பொருள்கோள்

சொல்லாதல் சொல்லின் பொருளாதல் முன்முறைவைத்
தவ்வகை நேர்கொள் நிரல்நிறையாம்: அவ்வல்
விடையிட் டெதிரும் விராய்ச்சொல் இடையிடை
இட்டன சுண்ணம்; இரண்டடியாற் சொல்வர
நிற்ப தடிமொழி மாற்றல் அலதடி
மறியா முழுதும் யாப்பு *யா. வி. 95*

பொருள்கோள் வகை

ஆற்றுச் செலவும் அளைமறி நாகமும்
தாப்பிசைத் தளையும் தனிநிலைப் பெய்தியோ
டேற்கும் பொருள்கோள் இவையாம் எனலான் *யா. வி. 74*

பொருள்கோள்

1. கொழுங்கொடி வள்ளி செழுங்குலை வாழை
தீங்கரும் பேமலர் திகழ்தரு பலவே
தேங்கமழ் அசோகு செருவிற் பூட்டே
பூம்புன லாறெனப் பொருள்கோள் ஏழே -

2. அவற்றுள், கொழுங்கொடி வள்ளி கூறுமுற் பொருளே;
செழுங்குலை வாழையின் சொற்பொருள் ஈறே;
இன்தீங் கரும்பின் இடையது பொருளே;
வன்றாள் பலவுக்கு முதலிடை பொருள்;
நற்பூ அசோகுக்கு நடுவது பொருளே;
விற்பூட்டு மேலுங் கீழும் பொருளே;
இரும்புனல் ஆற்றினுக் கெங்கும் பொருளே *வீரசோ. 90-94*

பொருள் தெரிநிலை

1. வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள் தெரிநிலையே *யா. வி. 35*

2. வேற்றுமை இன்றியும் இடமுத லாவறிந்
தேற்பன பொதுவின் இசைப்பினும் இழுக்கா *யா. வி. 35*

3. கேட்ட மொழி ஒழித்துக் கேளாக் கிளவியொடு
கூட்டியுரை கொளுத்தல் கோட்பா டன்றே *யா. வி. 35*

4. அடிமுதல் ஓரெழுத் தடிமுதற் றொடையே *யா. வி. 35*

பொருள் நடை

1. அளைமறி கோடலும் மொழிமாற்றுக் கோடலும்
கொண்டு கூட்டும் இருநிரல் நிறையும்
சுண்ணங் கோடலும் முதலா யினவே.

2. அவைதாம் தலைமையும் இன்மையும் கூட்டிப்
பின்னருங் காரணம் பற்றிய
பொருட்டாத் தோன்றும் பொருள்வகை யுடைத்தே *வீரசோ. 90-94*

பொருள் வகை

அறம்பொருள் இன்பம் வீடென நான்கும்
திறம்படு பொருளெனச் செப்பினர் புலவர் *சிலப். 3 : 12 அடியார்க்.*

பொருள் தெரிவகை

அறம்பொருள் இன்பம் அறனே காரணம்
அகமும் புறமும் அகப்புற முமென
விலக்கில் இன்னவாகும் பொருட்டெரி வகையே. *வீரசோ. 104*

உட்பெறு பொருள்

உட்பெறு பொருளைச் செய்யுங் காலைப்
பெற்றசொற் பொருளைச் செப்புதல் வழியே
மற்றொரு சொற்பொருள் வந்துநிற் பதுவே" *வீரசோ. 90-94*

சொற்பொருள்

சொற்பொருள் மேதகச் சொல்லுங் காலைத்
தனிச்சொல் எல்லாம் தாம்பொருள் விளக்கலும்
புணர்ச்சொல் புணர்ந்து தம்பொருள் விளக்கலும்
முதன்மொழி விளக்கலும் கடைமொழி விளக்கலும்
எனமொழி பொருளை விளக்குதல் இயல்பே *வீரசோ. 90-94*

இறைச்சிப் பொருள் வகை

இறைச்சிப் பொருள்வகை திறப்படத் தெரியில்
அங்கியற் பொருளே திணைநிலைப் பொருளே
வன்புலப் பொதுப்பொருள் மென்புலப் பொதுப்பொருள்
பெருமைப் பொதுப்பொருள் விருந்துப்பொதுப் பொருளென
இருமூன் றென்பர் தெரிநூற் புலவர் *வீரசோ. 90-94*

மென்புலப் பொதுப் பொருள்

கீரை வழுதுணை கிடையே சணப்பே
வேரிதணக் கந்த மருதமுதலான
மென்புலப் பொருளென நன்குரைத் தனரே *வீரசோ. 90-94*

பெருமைப் பொருள்

தாளியும் பூவலும் நாவலும் கழஞ்சும்
வேலியு மாறும் பதடியும் கோரையும்
சூரையும் சுரையும் சுரும்பும் வண்டும்
துவரையும் அத்தியும் ஐம்பெரு முதிரையும்
காணுங் காலைத் தினைதொறுங் காணப்
பேணினர் என்மனார் பெருமைப்பொதுப் பொருளே *வீரசோ. 90-9*

விருந்துப் பொதுப் பொருள்

ஒருதிணைக் குரியன ஒருதிணைச் சேரின்
விரிநூற் புலவர் விருந்தென் றனரே *வீரசோ. 90-94*

மகளிர் அனைவருக்கும் உரியவை

1. "ஓதலும் பாடலும் ஊசலும் பிறவும்
   பதினெண் தேசத்துப் பலப்பல பேச்சின் நவிறலும்
   அனைவர்க்கும் உரித்தே ஆயுங் காலை"
2. மங்கை முதலா மற்றை யவரும்
   ஆடை உடுத்தலும் ஆகம் புனையலும்
   அம்மனை கழங்கே ஊசல் பந்தொடு
   சூது பொருதலும் காளையிற் பிரிதலும்
   பல்லோர் ஆயத்திலும் மக்கள் உளவாக
   அனையவை பிறவுமவர்க் குரிய வென்ப *நவநீதப். 46*

மகிழ்ச்சி (ஆர்வமொழி)

உண்ணிகழ் மகிழ்ச்சி புலப்பட உரைத்தல்
திண்ணிய ஆர்வ மொழியெனச் செப்புவர். *வீரசோ. 168*

மங்கலச் சொல்லாவன சில

சங்கு சக்கரம் மதியம் அரிமா
இடபம் வெள்ளம் அரசன் நிறைகுடம்
தோட்டி விளக்கு வட்டி கடல்சூலம்
நாவாய் தாமரை
செயிர்தீர் இலேகை திருப்பொறி யாகும். *நவநீதப். 2*

மங்கலப்பாட்டுப் பங்கப்படுதல்

1. மங்கலப்பாட்டுப் பரிசியாம் ஒழியின்
பங்கப் படுமெனப் பழித்தனர் புலவர்.

2. அரசர்க்குக் கொற்றக் குடைவெண்பாச் சீரிய
மெய்க்கீர்த்தி முறைமை மங்கலச் செய்யுட்
செயப்பெறா தாரென் றிவர்களைப் புணர்ப்பினும்
தன்னை மொழியினும் பின்னை மொழியினும்
இன்ன நெறியோர் இயம்பல் வேண்டும். *(செய்யுள் வகைமை) நவநீதப். 98 மடக்கு.*

மடக்கு

ஒத்த எழுத்திற் பொருள்வே றாக
வைத்துமொழி மடக்கினது மடக்கெனப் படுமே. *வீரசோ. 177*

மடக்கு வகை

இரண்டாம் அடியை இனிதின் மடக்கலும்
இரண்டாம் அடியின் இறுதிச்சீர் மடக்கலும்
இரண்டாம் அடியின் ஈற்றசை மடக்கலும்
இவ்வா றென்ப மடக்குதல் தானே. *யா. வி. 76*

மடற்றிறம்

ஆற்றா துரைத்தல் உலகின் மேல் வைத்தல்
தன்துணி புரைத்த லொடுவகை யுரைத்தல்
அருளால் அரிதெனல் நடையால் அரிதெனல்
அவயவம் எழுதல் அரிதென விலக்கல்
உடம்படாது விலக்கல் உடம்பட்டு விலக்கல்
திடம்பட ஒன்பதும் செப்புங் காலை
வடம்படு முலைமேல் மடலாகும்மே. *திருக்கோ. 10*

மணஞ்சிறப்புரைத்தல்

மணமுரசு கூறல் மகிழ்ந்துரைத் தல்லொடு
வழிபாடு கூறல் வாழ்க்கைநலங் கூறல்
காதல்கட் டுரைத்தல் கற்பறி வித்தல்
கற்புப் பயப் புரைத்தல் காதன்மரு வுரைத்தல்
கலவி யுரைத்தல் கருதிய ஒன்பதும்
நலமிகுமணமிவை நாடுங் காலே. *திருக்கோ. 19*

மணவகை

எண்வகை மணம்; களவு

அறநிலை ஒப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அரும்பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை என்றிக் கூறிய
மறையோர் மன்றல் எட்டவை அவற்றுள்
துறையமை நல்லியாழ் துணைமையோர் இயல்பிதன்
பொருண்மை என்மனார் புலமை யோரே. *களவியல். 1*

பிரமம்

1. கயலேர் அமர்உண்கண் கன்னிபூப் பெய்தி
அயல்பே ரணிகலன்கள் சேர்த்தி - இயலில்
நிரலொத்த அந்தணற்கு நீரிற் கொடுத்தல்
பிரமமண மென்னும் பெயர்த்து. *தொல். பொருள். 92. நச்*

2. ஒப்பாருக் கொப்பார் ஒருபூப் பிரிந்தபின்
இப்பால் மதிதோன்றா எல்லைக்கண் - அப்பால்
தருமமே போல்கென்று தக்கார்க்குச் சேர்த்தல்
பிரமமாம் போலும் பெயர் *பா. வி. 96*

3. ஒப்பானுக் கொப்பாளோர் பூப்பு நிகழ்ந்தபின்
இப்பால் மதிதோன்றா எல்லைக்கண் - அப்பால்
தருமமே போற்றீமுன் தக்கானுக்கீதல்
பிரமமே என்ப பெயர். *வீரசோ. 179*

பிரசாபத்தியம்

1. அரிமதர் உண்கண் ஆயிழை எய்துதற்
குரியவன் கொடுத்த ஒண்பொருள் இரட்டி
திருவின் தந்தை திண்ணிதிற் சேர்த்தி
அரியதன் கிளையோ டமைவரக் கொடுத்தல்
பிரித லில்லாப் பிரசா பத்தியம். *தொல். பொருள். 92 நச்.*

2. கொடுத்த பொருள்வாங்கிக் கொண்ட பொழுது
மடுப்பர் மடுத்தற் கமைந்தால் - அடுப்போன்
இரண்டா மடங்குபெய் தீவ ததுவே
இரண்டாம் மணத்தின் இயல்பு *பா. வி. 96*

3. கொடுப்பான் கொடுத்துழிக் கொண்ட பொழுது
மடுப்பாங் கடுத்தற் கமைந்தார் - மடுப்பின்
இரண்டா மடங்குபே தித்தலே மாயன்
இரண்டா மணத்தின் இயல்பு. *வீரசோ. 179*

ஆரிடம்

1. தனக்கொத்த ஒண்பொருள் தன்மகளைச் சேர்த்தி
மனைக்கொத்த மாண்புடையாற்பேணி - இனக்கொத்த
ஈரிடத் தாவை நீறிஇயிடை ஈவதே
ஆரிடத்தோர் கண்டமண மாம். *தொல். பொருள். 92 நச்.*

2. இற்குலத்தோ டொப்பானுக் கொப்பான் இமிலேறாம்
பொற் குளம்பிற் பொற்கோட்ட வாப்புனைந்து - முற்படுத்து
வாரிடம் பேராமுலையை வாழ்க்கைக்கண் வைப்பதுரை
ஆரிடம் பேராம் அதற்கு *யா. வி. 96*

3. இற்குலம்போ லொப்பவருக் கொப்பவர் என்றொட்டாப்
பொற்குளம்பி னூடு புனலினிடை - முற்கொணர்ந்து
வாரொடுங்கு மென்முலையை வாழ்க்கைக் கமைப்பரேல்
ஆரிட மாகு மதற்கு. *வீரசோ. 179*

தெய்வம்

1. நீளி நெடுநகர் நெய்பெய்து பாரித்த
வேள்வி விளங்கழல் முன்நிறீஇக் - கேள்வியால்
கைவைத்தாம் பூணாளைக் காமுற்றாற் கீவதே
தெய்வ மணத்தார் திறம். *தொல். பொருள். 92 நச்.*

2. மெய்ப்பாலைப் பெண்டன்மை எய்தியபின் மெல்லியலை
ஒப்ப உணர்ந்த பொழுதுண்டல் - ஒப்பாற்கு
நெய்தயங்கு தீமுன்னர் நேரிழையை ஈவதே
தெய்வப்பே ராகும் தெளிந்து. *யா. வி. 96*

3. தெய்வம் தொழுதுபெற்ற சேயிழையை ஒப்புமையால்
நெய்வந்த தீமுன்னா நேர்வதூஉம் - கைவந்த
வேள்வி யகத்து வினையான் விளைபொருளாய்
ஆள்வதூஉம் தெய்வமண மாம். *வீரசோ. 179*

அசுரம்

1. முகையவிழ் கோதையை முள்ளெயிற் றரிவையைத்
தகைநலங் கருதும் தருக்கினர் உளரெனின்
இலையிலை செய்தாற் கெளியள்மற் றிவளெனத்
தொகைநிலை உரைத்த பின்றைப் பகைவலித்
தன்னவை யாற்றிய அளவையிற்
றொல்நிலை அசுரந் துணிந்த வாறே. *தொல். பொருள். 92 நச்.*

2 வில்லேற்றல் வேள்வியைக் காத்தல் மிகுவலிக்
கொல்லேற் றியல்குழையைக் கோடலென் - றெல்லாம்
அரியனசெய் தெய்தினான் ஆயின் அசுரம்
அரியவாம் அந்த மணம் *யா. வி. 96*

3. வில்லேற்றல் வேழமடல் தன்மெய் மதவலியால்
கொல்லேற்றை நண்ணியே கொள்ளுதல் பொன் - நல்லாட்
கரியன ஈதல் அசுரம் ; அசுரர்
அரியன ஆற்றும் மணம். *வீரசோ. 179*

இராக்கதம்

1. மலிபைம்பொற் பூணாளை மாலுற்ற மைந்தர்
வலிதிற்கொண் டாள்வதே என்ப - வலிதிற்
பராக்கதஞ் செய்துழலும் பாழி நிமிர்தோள்
இராக்கதத்தார் மன்றல் இயல்பு. *தொல். பொருள். 92 நச்.*

2. பூந்துகிலா டின்னவுமேல் இட்டும் புதவடைத்தும்
பாய்ந்து கதந்தாஅய்ப் பற்றிக் கொண்-டேந்திழையை
எய்தப் படுவ திராக்கதம் என்பதே
மைதீர்ந்தார் சொல்லும் மணம் *யா. வி. 96*

3. இராக்கதம்

பூந்துகிலோ டின்மைமே லிட்டுப் புதவடைந்து
பாய்ந்து வலிந்துகைப் பற்றிக்கொண் - டேந்திழையை
எய்தப் படுதல் இராக்கதமாம் என்பரே
மைதீர்ந்தார் சொன்ன மணம். *வீரசோ. 179*

பைசாசம்

1. எச்சார்க் கெளியர் இயைந்த காவலர்
பொச்சாப் பெய்திய பொழுதுகொள் அமையத்து
மெய்ச்சார் பெய்திய மிகுபுகழ் நண்பின்
உசாவார்க் குதவாக் கேண்மைப்
பிசாசர் பேணிய பெருமைசால் இயல்பே.

2. இடைமயக்கம் செய்யா இயல்பினில் நீங்கி
உடைமயக்கி உட்கறுத்தல் என்ப - உடைய
துசாவார்க் குதவாத ஊனிலா யாக்கைப்
பிசாசத்தார் கண்டமணப் பேறு. *தொல். பொருள். 92 நச்.*

3. துஞ்சல் களித்தல் மயங்குதல் மாழாத்தல்
அஞ்சல் அறிவழிதல் சாதலென் - றெஞ்சினவும்
இன்ன திறத்தான் இழிதக வெய்துபவேல்
பின்னைப் பிசாசமணப் பேர். *யா. வி. 96*

4. குணத்தி னிழிந்த மயங்கியவ ரோடும்
பிணத்தினும் விலங்கினும் பிணைவது பிசாசம் *யா. வி. 96*

5. மஞ்சிற் களித்தல் மயங்குதல் மாழாத்தல்
அஞ்சல் அறிவிழுத்தல் சாவுதலிற் - றுஞ்சின
மின்னை மறத்தால் விழைந்தகடு செய்வதே
பின்னைப் பிசாச மணம்.

கந்தருவம்

1. அதிர்ப்பில்பைம் பூணாரும் ஆடவரும் தம்முள்
எதிர்ப்பட்டுக் கண்டியைதல் என்ப - கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்திருவர் கண்ட கலப்பு. *தொல். பொருள். 92 நச்.*

2. ஒத்த குலத்தார் தமியராய் ஓரிடத்துத்
தத்தமிற் கண்டதம் அன்பினால் - உய்த்திட
அந்தரம் இன்றிப் புணர்வ ததுவரோ
கந்தருவம் என்ற கருத்து *யா. வி. 96*

3. முன்னை வினையின் முறையாற் களவியலாற்
கன்னியைக் கண்டுடன் காதலித்துப் - பின்னர்
உளநிகழ் ஆர்வம் உரைத்தொத் துறுதல்
வளமிகுகாந் தர்ப்ப மணம். *வீரசோ. 179*

4. முற்செய் வினையது முறையா உண்மையின்
ஒத்த இருவரும் உள்ளகம் நெகிழ்ந்து
காட்சி ஐயம் தெரிதல் தேற்றலென
நான்கிறந் தவட்கு நாணும் மடனும்
அச்சமும் பயிர்ப்பும் அவற்கும்
உயிர்த்தகத் தடக்கிய
அறிவும் நிறையும் ஓர்ப்பும் தேற்றமும்
மறைய அவர்க்கு மாண்டதோர் இடத்தில்
மெய்யுறு வகையுமுள் ளல்ல துடம்படாத்
தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே *அவிநயனார்) யா. வி. 96*

மணிவகை

நீலமணியின் நிறம்

வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்
றெண்ணிய நாற்குலத் திலங்கிய நிறமே

நீலமணிக் குணம்

கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பர்
ஆகுலக் கண்க ளவிரிச் சாறு
..... காயா நெய்தல் கனத்தல் பத்தி
பாய்த லெனக்குணம் பதினொன் றாமே

நீலமணியின் வகை

நீலத் தியல்பு நிறுக்குங் காலை
நால்வகை வருணமு நண்ணுமா கரமும்
குணம்பதி னொன்றுங் குறையிரு நான்கும்
அணிவோர் செயலு மறிந்திசி னோரே *சிலப். 14 : 190 அடியார்க்.*

மரகதக் குற்றம் எட்டு

கருகுதல் வெள்ளை கன்மணல் கீற்றுப்
பொரிவு தராச மிறுகுதன் மரகதத்
தெண்ணிய குற்ற மிவையென மொழிப

மரகதக் குணம் எட்டு

நெய்த்தல் கிளி மயிற்கழுத் தொத்தல்பைம் பயிரிற்
பசுத்தல் பொன்மை தன்னுடன் பசுத்தல்
பத்தி பாய்தல் பொன்வண் டின்வயி
றொத்துத் தெளிதலொ டெட்டுங் குணமே. *சிலப். 14 : 184 - 85 அடியார்க்.*

மாணிக்கத்தின் நிறம்

1. தாமரை கழுநீர் சாதகப் புட்கண்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
மாதுளைப் பூவிதை வன்னியீ ரைந்தும்
ஒதுசா துரங்க வொளியிலா கும்மே.

2. திலக முலோத்திரஞ் செம்பருத் திப்பூக்
கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே
சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டும்
எண்ணிய குருவிந்த மன்னிய நிறமே

3. கோகிலக் கண் செம்பஞ்ச கொய்ம்மலர்ப் பலாசம்
அசோக பல்லவ மணிமலர்க் குவளை
இலவத் தலர்க ளென்றாறு குணமும்
சௌகந் திக்குச் சாற்றிய நிறனே

4. கோவை நற்செங்கல் குராமலர் மஞ்சளெனக்
கூறிய நான்கும் கோவாங்கு நிறனே. *சிலப். 14 : 186-187 அடியார்க்.*

மாணிக்கத்தியல்

மாணிக் கத்தியல் வகுக்குங் காலைச்
சமனொளி சூழ்ந்த வொருநான் கிடமும்
நால்வகை வருணமும் நவின்றவிப் பெயரும்
பன்னிரு குணமும் பதினறு குற்றமும்
மருவிய விலையும் பத்தி பாய்தலும்
இவையென மொழிப வியல்புணர்ந் தோரே *சிலப். 14 : 186-87 அடியார்க்.*

மாணிக்கவகை

வன்னியிற் கிடக்கும் வருணநாற் பெயரும்
உன்னிய சாதுரங்க மொளிர் குருவிந்தம்
சொகந்தி கோவாங்கு தானா கும்மே. *சிலப். 14 : 186 - 87 அடியார்க்.*

வயிரத்தின் நால்வகை வருணத்து ஒளி

அந்தணன் வெள்ளை அரசன் சிவப்பு
வந்த வசியன் பச்சை சூத்திரன்
அந்தமில் கருமையென் றறைந்தனர் புலவர் *சிலப் 14 : 180 -183 அடியார்க்.*

வயிரத்தின் மிக்ககுற்றங்களின் பயன்

1. காக பாத நாகங் கொல்லும்
2. மலம்பிரி யாதது நிலந்தரு கிளைகெடும்
3. விந்து சிந்தையிற் சந்தா பந்தரும்
4. கீற்று வரலினை யேற்றுவர் மாய்வர் *சிலப். 14 : 180 - 83 அடியார்க்.*

வயிரவருணம் நான்கின் பயன்

1. மறையோ ரணியின் மறையோ ராகிப்
பிறவி யேழும் பிறந்துவாழ் குவரே.

2. மன்னவ ரணியின் மன்னவர் சூழ
இந்நில வேந்த ராவரெழு பிறப்பும்
3. வணிக ரணியின் மணிபொன் மலிந்து
தணிவற வடைந்து தரணியில் வாழ்வர்
4. சூத்திர ரணியிற் றோகையர் கனகநெல்
வாய்ப்ப மன்னி மகிழ்ந்துவாழ் குவரே. *சிலப். 14 : 180 - 83 அடியார்க்.*

வயிரத்தின் குற்றம் பன்னிரண்டு

சரைமலங் கீற்றுச் சப்படி பிளத்தல்
துளைகரி விந்து காக பாதம்
இருத்துக் கோடிக ளிலாதன முரிதல்
தாரை மழுங்க றன்னோ
டீராறும் வயிரத் திழிபென மொழிப

வயிரக்குணம் ஐந்து

பலகை யெட்டுங் கோண மாறும்
இலகிய தாரையுஞ் சுத்தியுந் தராசமும்
ஐந்துங் குணமென் றறைந்தனர் புலவர்
இந்திர சாபத் திகலொளி பெறினே *சிலப். 14 : 180-183 - அடியார்க்.*

மதியுடம்படுத்தல்

சேறல் துணிதல் வேழம் வினாதல்
கலைமான் வழிபதி பெயர்வினா தல்லே
மொழிபெறாதுரைத்தல் கருத்தறி வித்தல்
இடைவி னாதலோ டிவையீ ரைந்தும்
மடவரல் தோழிக்கு மதியுடம் படுத்தல் *திருக்கோ.*

மருட்பா

1. வெள்ளை முதலா ஆசிரியம் இறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும் *(காக்கை பாடினியார் - தொன்னூல்)*

2. இருதலைக் காமம் இன்றிக் கைக்கிளை
ஒருதலைக் காம மாகக் கூறிய
இலக்கண மரபின் இயல்புற நாட்டி
அதர்ப்பட மொழிந்தனர் புலவர் அதுவே
பெறுதி வெண்பா உரித்தாய் மற்றதன்
இறுதி எழுசீர் ஆசிரி யம்மே.
3. வெண்பா ஆசிரி யத்தாய் மற்றதன்
இறுதி எழுசீர் ஆசிரி யம்மே
4. கைக்கிளை மருட்பா வாகி வருகால்
ஆசிரியம் வருவ தாயின் மேவா
முச்சீர் எருத்திற் றாகி முடிவடி
எச்சீ ரானும் ஏகாரம் இறுமே *(கடிய நன்னீயார்)*

5. புறநிலை வாயுறை செவியறி வலைவயடக்கு
எனவிவை வஞ்சி கலியவற் றியலா
அவற்றுள்
இடையிறு செய்யுளும் கைக்கிளைப் பாட்டும்
கடையெழு சீரிரண் டகவியும் வருமே *நல்லாறனார்) யா. வி. 55*

மருத நடையியல்

கருதற் கமைந்த கற்றோர் பூண்ட
மருத நடையது மாண்புறக் கூறின்
விழவு விரும்புதல்
பொழில்மகிழ்ந் திருத்தல் புனலாட் டயர்தல்
இல்லிடைப் பரத்தையர் இயலிடைப் பரத்தையர்
கல்வியொடு பழகிய காதற் பரத்தையர்
சொல்லிய பரத்தையர் நால்வருங் கூற
அங்கவர்ப் புணர்தல் அவர்க்கண் அகறல்
வீங்குமுலைப் பரத்தையர் உழைநின்று விடர்க்குப்
பாங்கன் தோழி பாணன் என்னும்
ஆங்கவர் முதலியர் இரந்துகுறை யுறுதல்
அவர்சென் றிரக்க அணியிழை மறுத்தல்
புகரறு கோதை பொறுத்தற் குறையிரத்தல்
ஊரன் புகுதல் உவந்தெதிர் கோடல்
பேராச் சீற்றமொடு பெருமுனிவு பேசல்
விருந்தொடு புகுதல் புதல்வரொடு புகுதல்
திருந்திழை அரிவையைத் திரிந்தெதிர் கோடல்
சென்னிறக் கோலச் சிறுமி புகுதல்
அன்னிற நன்னாள் அருங்கவின் உறைதல்
உண்ணிறை உவகையோ டொண்ணுதல் உவற்றல்
வெண்ணிறக் கோலத்து மேதக உணர்தல்
பண்ணமைக் கிளவியொடு பள்ளியுள் மகிழ்தல்
அலைபுனல் ஊரன் ஆற்றான் புகுதல்
புலவிகற் பொன்றால் நண்ணிச்சீறல்
ஆற்றா னாகி அவளெதிர் ஊடல்
தேற்றேன் என்ற தொழித்துவழி படுதல்
வளவயல் ஊரன் வதுவை கேட்டுளை
உளநனி அடக்கி உவந்தோள் போறல்
பண்ணி விடுதல் பான்மையின் மொழிதல்
எண்ணிய சிறப்பின் எங்கையென் றிசைத்தல்
மனைச்செல் பரத்தையை மகிழ்ந்தெதிர் கோடல்
முனித்தக வின்மை முயன்றுபண் பெய்தல்
ஆயிடை அவர்கள் அமர்ந்தெதிர் கோடல்
போய ஃதீண்டல் புகழ்தல் ஏத்தல்
பள்ளியுள் மகிழ்தல் பாங்குறப் புணர்தல்
எள்ளருந் தோழி ஏற்கக் கூறலெனச்

சொன்னவை போல அன்னவும் எல்லாம்
பன்னுங் காலை அவ்வயிற் படுமே. *வீரசோ. 90-94*

மனையறத்தின் வகை

கொடுத்தலும் அளித்தலும் கோடலும் இன்மையும்
ஒழுக்கத்தொடு புணர்தலும் புணர்ந்தோர்ப் பேணலும்
வழுக்கில் பிறவும் மனையற வகையே *வீரசோ. 104*

மாத்திரை

கண்ணிமை கைந்நொடி என்றிவை இரண்டும்
மின்னிடை அளவே எழுத்தின் மாத்திரை.
ஒன்றிரண் டொருமூன் றொன்றரை அரைகால்
என்றனர் பொழுதிவை இமைநொடி யளவே *(சங்க யாப்பு) யா. வி. 2*

மாத்திரைப் பகுப்பு

உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே. *யா. கா. 4*

அரைநொடி அளவு

அரைநொடி என்ப தியாதென மொழியின்
நொடிதரக் கூடிய இருவிரல் இயைபே *(சங்க யாப்பு)*

எழுத்தும் மாத்திரையும்

குறிலொரு மாத்திரை நெடிலிரு மாத்திரை
அளபெடை மூன்றென் றறியல் வேண்டும். *(பல்காயம்) யா. வி. 2*

உயிர்மெய்க்கு அளவு

1. உயிரின் அளபே அளபென மொழிப
2. உயிரின் அளவுயிர் மெய்யென மொழிப
   வழக்கொடு வரூஉங் காலை யான

உயிர்மெய் எண்ணிக்கை

உயிர்ஈ ராறே: மெய்மூ வாறே
அம்மூ வாறும் உயிரொ டுயிர்ப்ப
இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே *(பல்காயம்) யா. வி. 2*

மெய்யெழுத்தின் மாத்திரை

1. உறுப்பின் அளவே ஒன்றன் பாகம் *(கையனார்)*
2. அரைநொடி அளவின அறுமூ வுடம்பே *(சங்கயாட்பு) யா. வி. 2*

ஐகாரக் குறுக்க அளவு

குறுமை எழுத்தின் அளவே ஐ காரம்
நெடுமையின் நீங்கியக் கால் *நேமி. 5*

மகரக் குறுக்கம்

ணனஃவின் முன்னர் மகரம் குறுகும். *நேமி. 15*

கொட்டு முதலியவற்றின் மாத்திரை

ககரங் கொட்டே எகரம் அசையே
உகரந் தூக்கே அளவே ஆய்தம் *சிலப். 3 : 16 அடியார்க்.*

மாரைக் கிளவி

காலமொடு கருத வரினும் மாரை
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே *(அகத்தியம்) நன். மயிலை.*

மீட்சி

பொருளே மீள்வது பொருளின் மீட்சி ;
பதமே மீள்வது பதத்தின் மீட்சி;
இரண்டும் மீள்வ திருகை மீட்சி *வீரசோ. 150*

மீண்டு வரைதல்

அறத்தொடு நிலையின் அஃதறிந் திருந்த
சிறப்புடை மரபின் தெய்வம் அன்ன
இருபெருங் குரவரொடு பொருவில் ஆற்றல்
தன்னையர் தம்மைச் சால்புடை மரபின்
மன்னிய சிறப்பின மதியோர் தேற்ற
அதுபண் பாதல் விதியுளி தெருண்டபின்
மீண்டு வந்து வியநகர் விரும்ப
மாண்டகு சிறப்பின் வரைந்தெய்து மென்ப. *களவியல் 23*

முதலொடும் அடுக்குதல்

முதலொடு குணமிரண் டடுக்கல் வழக்கியல்
சினையோ டடுக்கல் செய்யுள் ஆறே. *தொல். சொல். 26 சேனா.*

முதற்சொல்

முற்பாட் டெடுப்பின் முதலீ ரசைச் சொல்
சொற்பான் மங்கலச் சொல்லொடு தோன்றி
நிற்பினுங் கொள்ளார் நெறியுணர்ந் தோரே.

முதுமறை

உலக வழக்கமும் ஒருமுக் காலமும்
நிலைபெற உணர்தரு முது மறை நெறியான். *(அகத்தியம்) நன். மயிலை*

மும்மணிக்கோவை

ஆசிரியம் வெண்பாக் கலித்துறை முப்ப
தாகி வருவது மும்மணிக் கோவை. *(செய்யுள் வகைமை) நவநீதப்பாட்டியல்*

மும்மணிமாலை

வெள்ளை கலித்துறை ஆசிரிய விருத்தம்
புல்லும் முப்பது மும்மணி மாலை *(செய்யுள் வகைமை) நவநீதப்பாட்டியல்*

முரண்

பொருளினும் மொழியினும் பொருந்தக் காட்சியின்
முரணக் கூறுதல் முரணென மொழிப. *வீரசோ. 152*

முரண்வினைச் சிலேடை

முரண வருவது முரண்வினைச் சிலேடை *வீரசோ. 170*

முல்லை நடையியல்

இறைச்சிப் பெருமையோ டிறைவழிப்பட்டுக்
கற்புக்கடம் பூண்டு கடப்பா டாற்றும்
முல்லைத் திணைநடை சொல்லுங் காலை
இறைவன் பிரிய இல்லிருந் தாற்றா
நினைவு நனி காத்தல் வருந்தினள் பெரிதெனத்
தோழி கவறல் கவன்ற தோழிக்
காற்றுவன் என்றல் அவன்பயம் உரைத்தல்
வேற்றுமை கூறல் வெய்துயிர்த் திரங்கல்
மின்மலி கார்கண்டு மெலிந்தவள் மொழிதல்
தொன்மலி தோழி கால மறுத்தல்
காதல் பெயர்பு காரன் றிருவெனத்
தாதவிழ் கோதை தானே கூறல்
பருவங் காட்டிப் பிரிவொழி என்றல்
அந்தியும் ஆம்பலும் மாலையும் அணியும்
தென்றலும் திங்களும் பிறவும் அன்னவை
பகன்றற வாற்றாள் அகன்றவண் மொழிதல்
என்குறை இதுவென இரந்துகுறை கூறல்
பொருள்வயின் நிற்றல் அவ்வயின் நிலையும்
இயல்வளி முற்றுதல்
கார்கண் டுரைத்தல் கனவின் அரற்றல்
போர்வேற் கண்ணி புலம்புமென் றிரங்குதல்
தூது விடுதல் தூதெதிர் கோடல்
போதவிழ் கோதை புலம்புநனி தீர்த்தல்
கோவொரூஉ மொழிதல் தோவண் வருதல்
ஆர்மலி தேரை அமர்ந்தவன் ஏறல்
பாகனைக் கடாவெனப் பன்மணி நெடுந்தேர்
வேக நிலைமையின் விரைந்து நனி கடாவுதல்
இல்லியல் மடந்தையர் இயல்புரங் கேட்டல்
நல்லியல் நெடுங்கொடி நன்னகர் காட்டல்
இறைவன் சேருதல் எதிர்சென்று வ்ணங்குதல்
பொறைமலி மடந்தையைப் புலவித்தலை யளித்தல்

பருநாண் ணோக்கிப் பயன்கண்டு மொழிதல்
செருவேற் கண்ணி சேக்கையிற் கேட்டலெனச்
சொல்லிய பிறவும் சொன்னதன் பொருளே *வீரசோ. 90-94*

முற்று

எனைத்துமுற் றடுக்கினும் அனைத்துமொரு பயர்மேல்
நினைத்துக்கொ நிகழும் நிகழ்த்திய முற்றே
வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும்
பலப்பல அடுக்கினும் முற்றுமொழிப் படிய *(அகத்தியம்) நன். மயிலை.*

முற்றுச் சொல் வினையொடு முடிதல்

முற்றுச் சொற்றாம் வினையொடு முடியினும்
முற்றுச் சொல் என்னும் முறைமையின் இறவா. *(அகத்தியம்) தொல்.*
சொல். 204 சேனா. நன். மயிலை.

முற்று மொழி

மற்றுச் சொல் நோக்கா மரபின அனைத்தும்
முற்றி நிற்பது முற்றியன் மொழியே. *(அகத்தியனார்) தொல். சொல்.64.*
தெய். நன். மயிலை.

முன்னிலையசைச் சொல்

மியா இக மோமதி இகும் சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச் சொல் *நேமி.79*

மெய்ப்பாடு

உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே *தொல். மெய்ப். 3. இளம்.*

1. மெய்ப்பாட் டியல்வகை மேதக விரிப்பின்
மெய்க்கட் பட்டு விளங்கிய தோற்றம்
செவ்விதில் தெரிந்து செப்பல்மற் றதுவே:
சுப்பிர யோகம் விப்பிரயோகம்
சோகம் மோகம் மரணம் என்னும்
ஐவகைக் கணையுள் ஆக்கிய காமம்
பைய முறுகிடப் படரும்: அவற்றுள்.
சுப்பிர யோகம் சொல்லும் நினைப்பும்;
விப்பிர யோகம் வெய்துயிர்ப் புறுதல்;
சோகம் வெப்பும் சோறுண் ணாமையும்;
மோகம் மயக்கமும் மொழிபல பிதற்றலும்;
மரணம் அணங்கலும் வருந்தலும் என்பர்
அரணஞ் சான்ற அறிவி னோரே.

2. பிற்கணை நீக்கி முற்கணை நான்கும்
மெய்ப்படப் பட்டு வருந்தி விளம்பல்
அகமெய்ப் பாட்டே புறமெய்ப் பாட்டெனத்
தகநனி உணர்ந்தோர் தந்துரைத் தனரே.

3. அகமெய்ப் பாட்டே அறியுங் காலை
விளர்ப்பே பசப்பே மெலிவே விதிர்ப்பே
துளக்கம் துயர்தல் தும்மல் சோர்தல்
வேர்த்தல் வெருவுதல் விம்முதல் விரும்புதல்
ஒப்பி லாமை உருகுதல் மயங்குதல்
மூரி யுயிர்ப்பு மூர்ச்சனை முறுவல்
காரிகை கடத்தல் கழிகண் ணோட்டம்
இருந்துழி இராமை இராகம் இகழ்தல்
வருந்திக் காட்டுதல் வாய்நனி உறுதல்
சிந்தனை கூர்தல் சோர்துயி லின்மை
கண்டது மறுத்தல் காட்சி விரும்பல்
உண்டி விரும்பாமை உரைத்தது மறுத்தல்
கண்ணீர் வழிதல் கனவுநனி காண்டலென
எண்ணாற் றுறையும் என்மனார் புலவர்.

4. புறமெய்ப் பாட்டே திறனுளிப் புகலில்
ஆரணங் காயவக் காமந்தானே
காரணம் பற்றிக் கருத்து வேறுபட்டு
மற்றுமோ ரேழாய் மெய்கண் டதனொடும்
எட்டா மென்ப இயல்புணர்ந் தோரே.

5. அவைதாம்,
நற்சிருங் காரம் நகையே வியப்பே
அச்சம் வீரம் உட்கோள் இரக்கம்
இழிப்பெனத் தோன்றின இவை: அவை தாமே
விழுத்தக வொன்றிற் கொரோ நான் காக
முப்பத் திரண்டென மொழிந்தனர் கண்டே

6. அவற்றுள்,
இளமையும் வனப்பும் வளமையும் கலவியும்
களனாத் திரிதரும் சிருங்கா ரம்மே

7. மயக்கம் பெயர்ப்பே இகழ்வே நோக்கம்
நயப்பத் தோன்றும் நகையது நலனே.

8. தறுகண்மை புலமை பொருளே பண்பே
பெறுவழித் தோன்றும் பெருந்தகு வியப்பே

9. மாற்றலர் விலங்கல் மற்றவர் சேருதல்
ஆற்றத் தோன்றும் அச்சத்து விளைவே

10. பகையே செருவே இகலே முனிவே
மிகவழித் தோன்றும் வீரத்து விளைவே.

11. ஐவகைக் குரவர் தேவர் மன்னர்
எய்தா தெய்திய இயல்பவை உட்கோள்.

12. வருத்தம் இகழ்வே வலியின்மை பெருமை
இரக்கம் தோன்றும் இந்நாலிடத்தே.

13. நாற்றம் சுவையே தோற்றம் ஊறென்
றிந்நால் வழித்தாம் இழிபெனப் படுமே.

14. இற்றென வகுத்த எண்ணாற் றுறையினும்
மற்றுப் பெயர்மயக் காயினும் வாய்ப்ப
தந்நெறிப் பெற்றுழித் துன்னினர் கொளலே

15. உட்கோள் நிலைமை உணர உரைப்பின்
மெய்க்கொளத் தோன்றினவை மெய்ப்பா டென்க *வீரசோ. 90-94*

யாக்கையும் யாப்பும்

நாதன் முதாலக நல்லுறுப் பேழியைந்
தேதமில் தன்மை இயலரசாம் - தாதுக்கள்
ஏழும் புணர்த்த தியாக்கை; எழுத்தாதி
ஏழும் புணர்த்த தியாப்பு. *யா. வி. 1*

யாப்பு

1. யாப்பெனப் படுவ தியாதென வினவின்
தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே *(நற்றத்தர்) யா. வி. 1*

2. இமிழ்கடல் வரைப்பின் எல்லையின் வழாஅத்
தமிழியல் வரைப்பிற் றானினிது விளங்கி
யாப்பியல் தானே யாப்புற விரிப்பின்
எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கொடு
இழுக்கா மரபின் இவற்றொடு பிறவும்
ஒழுக்கல் வேண்டும் உணர்ந்திசி னோரே *(பல்காயனார்) யா. வி. 1*

யாப்புரைத்தவர்

தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்;
பல்காய னார்பகுத்துப் பன்னினார்;- நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்
சொற்றார்தம் நூலுள் தொகுத்து. *யா. வி. 1*

யாழ்

பேரியாழ் பின்னு மகரஞ் சகோட முடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார் - தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற. *சிலப் 3 : 26. அடியார்க்.*

யாழ்நரம்பு

ஒன்று மிருபது மொன்பதும் பத்துடனே
நின்றபதி னான்கும் பின்னேழும் - குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி. *சிலப் 3 : 26 அடியார்க்.*

யாழ் உறுப்பமைதி

கோட்டின தமைதியுங் கொளுவிய வாணியும்
ஆட்டிய பத்தரின் வகையு மாடகமும்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு
முந்திய நூலின் முடிந்த வகையே — *சிலப் 3 : 26 அடியார்க்.*

செங்கோட்டியாழ்

1. செங்கோட்டி யாழே செவ்விதிற் றெரியின்
அறுவகை யுறுப்பிற் றாகு மென்ப

2. அவைதாம்
கோடே திவவே யொற்றே...
தந்திரி கரமே நரம்போ டாறே — *சிலப் 13 : 108 அடியார்க்.*

தந்திரிகரம்

தந்திரி கரமே தகைப்பற விலகி
வந்த விருசா ணால்விர லாகும் — *சிலப் 13 : 107 அடியார்க்.*

மாடகம் (யாழுறுப்பு)

மாடக மென்பது வகுக்குங் காலைக்
கருவிளங் காழ்ப்பினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து.
சதுர் மூன்றாகத் துளையிடற் குரித்தே. — *சிலப். 8 : 27 - 28 அரும்பத.*

திறன்

1. அராகம் நேர்திறம் வற்புக் குறுங்கலி
யாக நான்கும் பாலையாட் டிறனே.

2. நைவளம் காந்தாரம் பஞ்சுரம் படுமலை
மருளொடு செந்நிறம் குறிஞ்சியாட் டிறனே.

3. நவிரே வடுகு குறிஞ்சியே திறமென்
றிவைநான் காகும் மருதயாட் டிறனே.

4. நேர்திறம் பியாதிறம் யாமயாழ் சாதாரி
யென்றிவை நான்கு செவ்வழியாட் டிறனே — *வீரசோ. 179*

யாழ் வாசிக்குமுறைமை

நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி
அல்லியம் பங்கயத் தயனினிது படைத்த
தெய்வஞ் சான்ற தீஞ்சுவை நல்யாழ்
மெய்பெற வணங்கி மேலொடு கீழ்புணர்த்
திருகையின் வாங்கி யிடவயி னிரீஇ
மருவிய வினய மாட்டுதல் கடனே — *சிலப் 8 : 23-26 அடியார்க்.*

இசையெழுப்பும் வகை

பண்ணல்

வலக்கைப் பெருவிரல் குரல்கொளச் சிறுவிரல்
விலக்கின் றிளிவழி கேட்டும்...
இணைவழி யாராய்ந் திணைகொள முடிப்பது
விளைப்பரு மரபிற் பண்ண லாகும் *சிலப். 7 : 5 அரும்பத.*

பரிவட்டணை

பரிவட் டணையி னிலக்கணந் தானே
மூவகை நடையின் முடிவிற் றாகி
வலக்கை யிருவிரல் வலப்புறந் தழிஇ
இடக்கை விரலி னியைவ தாகத்
தொடையொடு தோன்றியுந் தோன்றாதாகியும்
நடையொடு தோன்று நயத்த தாகும் *சிலப். 7 : 5-8 அரும்பத.*

ஆராய்தல்

ஆராய்த லென்ப தமைவரக் கிளப்பிற்
குரன்முத லாக வினைவழி கேட்டும்
இணையி லாவழிப் பயனொடு கேட்டும்
தாரமு முழையுந் தம்மிற் கேட்டும்
குரலும் விளியுந் தம்மிற் கேட்டும்
துத்தமும் விளரியுந் துன்னறக் கேட்டும்
விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும்
தளரா தாகிய தன்மைத் தாகும். *சிலப். 7 : 5 - 8 அரும்பத.*

தைவரல்

தைவர லென்பது சாற்றுங் காலை
மையறு சிறப்பின் மனமகிழ் வெய்தித்
தொடையொடு பட்டும் படாஅ தாகியும்
நடையொடு தோன்றிய யாப்புநடையின்றி
ஓவாச் செய்தியின் வட்டணை யொழுகிச்
சீரேற் றியன்று மியலா தாகியும்
நீர வாகு நிறைய தென்ப *சிலப். 7 : 5 - 8 அரும்பத.*

செலவு

செலவெனப் படுவதன் செய்கை தானே
பாலை பண்ணே திறமே கூட்டமென
நால்வகை யிடத்து நயத்த தாகி
இயக்கமு நடையு மெய்திய வகைத்தாய்ப்
பதினோ ராடலும் பாணியு மியல்பும்
விதிநான்கு தொடர்ந்து விளங்கிச்செல் வதுவே

விளையாட்டு

விளையாட் டென்பது விரிக்குங் காலைக்
கிளவிய வகையி னெழுவகை யெழாலும்
அளவிய தகைய தாகு மென்ப.

கையூழ்

கையூ ழென்பது கருதுங் காலை
எவ்விடத் தானு மின்பமுஞ் சுவையும்
செவ்விதிற் றோன்றிச் சிலைத்துவர லின்றி
நடைநிலை திரியாது நண்ணித் தோன்றி
நாற்பத் தொன்பது வனப்பும் வண்ணமும்
பாற்படத் தோன்றும் பகுதித் தாகும். *சிலப். 7 : 5 - 8 அரும்பத.*

குறும்போக்கு

துளர்அற கணணுங் குடகுத துளரும
தள்ளா தாகிய வுடனிலைப் புணர்ச்சி
கொள்வன வெல்லாங் குறும்போக் காகும். *சிலப் 7 : 5 - 8 அரும்பத.*

நரம்பு

குரலே துத்தம் கைக்கிளை உழையிளி
விளரி தாராமென ஏழு நரம்பே. *வீரசோ. 179*

நரம்பின் விகற்பம்

இளிகுரல் துத்தம் நான்கு மாத்திரை
விளரி கைக்கிளை மூன்றே யாகும்
தாரம் உழையிரண் டாகத் தகுமே. *யா. வி. 96*

இணை (இரண்டு நரம்பு)

இணையெனப் படுவ கீழு மேலும்
அணையத் தோன்று மளவின வென்ப *சிலப். 8 : 33 - 34 அடியார்க்.*

கிளை (ஐந்து நரம்பு)

கிளையெனப் படுவ கிளக்குங் காலைக்
குரலே யிளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகுமென்ப *சிலப். 8 : 33 - 34 அடியார்க்.*

கூடம் (பகை நரம்பு)

நின்ற நரம்பிற் காறு மூன்றும்
சென்று பெறநிற்பது கூட மாகும் *சிலப். 8 : 33 - 34 அடியார்க்.*

கூடம்

1. நின்ற நரம்புக்கா றாநரம்பு சென்றுமுன்
நிற்பது கூடமாச் செப்பு *யா. வி. 96*

கூடம்

கூட மென்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வராது மழுங்கியிசைப் பதுவே

செம்பகை (நரம்பு)

செம்பகை யென்பது பண்ணோ டுளரா
இன்பமி லோசை யென்மனார் புலவர்

ஆர்ப்பு

ஆர்ப்பெனப் படுவ தளவிறந் திசைக்கும் *சிலப். 8 : 29 - 30 அடியார்க்.*
சீவக 716 - 9 நச். மேற்

பகை முதலியன

இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகும்
சொன்னமாத் திரையி னோங்க விசைத்திடுஞ் சுருதி யார்ப்பே
மண்ணிய விசைவ ராது மழுங்குதல் கூட மாகும்
நன்னுதால் சிதற வுந்த லதிர்வென நாட்டி னாரே *(பஞ்சபாரதீயம்)*
சிலப் 8 : 29 - 30 அடியார்க்.

ஓசை தோன்றுமுறை

தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்றும்
ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமிளி
உட்டோன்றும் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு *சிலப். 8 : 31 - 32 அடியார்க்.*

அதிர்விசை

அதிர்வெனப் படுவதிழுமென லின்றிச்
சிதற யுரைக்குந ருச்சரிப் பிசையே *சிலப். 8 : 29 - 30 அடியார்க்.*
சீவக 716 - 9 நச். மேற்.

மூவகைத்தானம்

எழுத்தே யசையே சீரே யென்றிவை
இழுக்கி லவைமூன் றிற்கு மென்ப. *சிலப். 13 : 110 - 112 அடியார்க்.*

பாலைவகை

1. ஆயஞ் சதுரந் திரிகோணம் வட்டமெனப்
பாய நான்கும் பாலை யாகும். *சிலப். 17 : 13 அடியார்க்.*

2. வட்ட மென்பது வகுக்குங் காலை
ஓரேழ் தொடுத்த மண்டல மாகும்.

3. சாணளவு கொண்ட தொருவட்டந் தன்மீது
பேணியிரு நாலு பெருந்திசைக் - கோணத்
திருகயிறு மேலோட்டி யொன்பானு மூன்றும்
வருமுறையே மண்டலத்தை வை.

4. எதிரு மிராசி வலமிட மாக
எதிரா விடமீன மாக - முதிராத
ஈரா றிராசிகளை யிட்டடைவே நோக்கவே
ஏரார்ந்த மண்டலமென் றெண்

5. ஏத்து மிடப மலவ னுடன்சீயம்
கோற்றனுக் கும்பமொடு மீனமிவை - பார்த்துக்
குரன்முதற் றார மிறுவாய்க் கிடந்த
நிரலேழுஞ் செம்பாலை நேர்

6. துலைநிலைக் குரலுந் தனுநிலைத் துத்தமும்
நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளையும்
மீனத்துழையும் விடைநிலத் திளியும்
மானக் கடகத்து மன்னிய விளரியும்
அரியிடைத் தாரமு மணைவுறக் கொளலே

பாலையாழில் பிறக்கும் ஏழ்பாலையிசை

குரலிளியிற் பாகத்தை வாங்கியோ ரொன்று
வரையாது தாரத் துழைக்கும் - விரைவின்றி
எத்தும் விளரி கிளைக்கீக்க வேந்திழையாய்
துத்தங் குரலாகுஞ் சொல். *சிலப். 17 : 13 அடியார்க்.*

பாலைத்திறம்

தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே
துக்கங் கழிசோம ராகமே - மிக்கதிறற்
காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றார்
பூந்தா ரகத்தியனார் போந்து *சிலப் 4 : 72 - 6 அடியார்க்.*

அகநிலை மருதம்

ஒத்த கிழமை உயர்குரல் மருதம்
துத்தமும் விளரியும் குறைபெறல் நிறையே. *சிலப். 8. 39 - 41. அரும்பத.*

நரம்புகளின் மாத்திரை

குரறுத்த நான்கு கிளைமூன் றிரண்டாம்
குரையா வுழையிளி நான்கு - விரையா
விளரி யெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர் *சிலப். 17 : 13 அடியார்க்.*

மரக்குற்றம்

நீரிலே நிற்ற லழுகுதல் வேத னிலமயக்குப்
பாரிலே நிற்ற லிடிவீழ்த னோய்மரப் பாற்படல்கோ
ணேரிலே செம்பகை யார்ப்பொடு கூட மதிர்வுநிற்றல்
சேரினேர் பண்க ணிறமயக் குப்படுஞ் சிற்றிடையே

சிலப் 8 : 29 - 30 அடியார்க்.

சாரீரவீணை

பூதமுதற் சாதனத்தாம் புற்கலத்தின் மத்திமத்து
நாதமுத லாமெழுத்து நாலாகி - வீதி
வருவரத்தாற் றானத்தால் வந்து வெளிப்பட்
டிருவரத்தாற் றோற்ற மிசைக்கு. *சிலப். 3 : 26 அடியார்க்.*

யோனி

உள்ளோற் குள்ளதும் இல்லோற் குள்ளதும்
உள்ளோற் கில்லதும் இல்லோற் கில்லதும்
எள்ளா துரைத்தல் யோனி யாகும். *சிலப். 3 : 12 அடியார்க்.*

வகையுளி

1. அருள் நோக்கும் நீரார் அசைசீர் அடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி - மருள் நீக்கிக்
கூம்பவும் கூம்பா தலரவும் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு *யா. வி. 95*

2. எழுத்தல் கிளவியின் அசையொடு சீர்நிறைத்
தொழுக்கலும் அடியொடு தளைசிதை யாமை
வழுக்கில் வகையுளி சேர்த்தலும் உரித்தே *(அவிநயம்) யா. வி. 95*

வஞ்சி

வஞ்சிப்பா'

1. தன்றளை பாதம் தனிச்சொற் சுரிதகம்
என்றிவை நான்கும் அடுக்கிய தூங்கிசை
வஞ்சி யெனப்பெயர் வைக்கப் படுமே *(காக்கைபாடினியார்) யா. வி. 90*

2. தூங்கல் இசையாய்த் தனிச்சொற் சுரிதகம்
தான்பெறும் அடிதளை தழீஇவரை வின்றாய்
எஞ்சா வகையது வஞ்சிப் பாவே *(அவிநயனார்) யா.வி. 90*

3. தூங்கல் ஓசை நீங்கா தாகி
நாற்சீர் நிரம்பா அடியிரண் டுடைத்தாய்
மேற்சீர் ஓதிய ஐஞ்சீர் பெற்றுச்
சுரிதகம் ஆசிரியம் உரியதனின் அடுத்து
வந்த தாயின் வஞ்சிப் பாவே *(நீர்மலிந்தவார் சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 90*

வஞ்சிப்பாவின் மூவகை

1. தன்சீர் நிலையிற் றளைதம தழீஇய
இன்பா என்பர் இயல்புணர்ந் தோரே

2. ஏனையவை விரவின் இடையெனப் படுமே
தானிடை இல்லது கடையெனப் படுமே *(மயேச்சுரர்) யா. வி. 92*

வஞ்சியடிக்கு எழுத்து

ஈரிரண்டோ டீரா றெழுவாய் இறுவாயாச்
சேரும் எழுத்திருசீர் வஞ்சிக்காம் - ஓரும்
நெடிலடிக்கு நேர்ந்தனவும் மூவொருசீர் வஞ்சிக்
கடிவகுத்தார் எட்டாதிஆய்ந்து. *யா. வி. 90*

வஞ்சிவிகற்பம்

1. வஞ்சிப்பா நான்குந்தன் வாலியமூன் றோசையால்
எஞ்சாத ஈராறாம் ஈண்டவற்றை - எஞ்சாத
பந்தம் பதினான்கின் மாறப் பழுதின்றி
வந்தன நூற்றறுபத் தெட்டு.

2. அந்தத்திற் பாவிற் கினமாய ஆறினையும்
பந்தம் பதினான்கி னாற்பாப்ப - வந்தன
எண்பத்து நான்காம் இனியவற்றின் மிக்கனவும்
பண்புற்றுப் பாத்துக் கொளல் *யா. வி. 92*

முச்சீரடி வஞ்சி

மிக்ககூன் விதிமுறை வகுத்தலும்
தக்காசிடை வகையுளி சேர்த்தலும்
அளபெடை அலகு நீத்தலும்
வளமலி அசைச்சீர் வகுத்தலும்
வெண்பா அல்லாப் பாவினுள்
பண்பார் நெடிலடி நடத்தலும்
குறளடி யால்வரும் வஞ்சியைத்
திறமலி சிந்தடி யாக்கலும்
மிக்கும் குறைந்தும் வரினும்
ஒருபுடை ஒப்புமை நோக்கி
ஒழிந்த செய்யுளுங் கொளலே
அதான்று
குறியீடும் இலக்கணம் உண்மையிற்
செறிவு டைப்பொதுச் சீர்தரப் பெறாவே *வீரசோ. 117*

வஞ்சித்தாழிசை

குறளடி நான்கவை கூடின வாகி
முறைமையின் அவ்வகை மூன்றினைந் தொன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை யாகும். *(காக்கை பாடினியார்) யா. கா. 34*

வஞ்சித்துறை

1. ஒன்றின நான்மையும் உடைத்தாக் குறளடி
வந்தன வஞ்சித் துறையென லாகும். *யா. கா. 34*

2. குறளடி நான்கின் கூடின வாயின்
முறைமையின் அவ்வகை மூன்றினைந்தொன்றி
வருவன வஞ்சித் தாழிசை ஆகும் *(காக்கைபாடினியார்)*

3. எஞ்சா முச்சீர் நாலடி மூன்றெனில்
வஞ்சித் தாழிசை தனிவரில் துறையே *(சிறுகாக்கைபாடினியார்) யா. வி. 91.*

4. இருசீர் நாலடி மூன்றிணைந் திறுதி
வஞ்சித் தாழிசை தனிவரிற் றுறையே *(அவிநயனார்) யா. வி. 90*

5. இருசீர் நாலடி மூன்றிணைந் தொன்றி
வருவது வஞ்சித் தாழிசை தனிநின்
றொருபொருள் முடிந்தது துறையென மொழிப *(மயேச்சுரர்) யா. வி. 91*

வஞ்சிவிருத்தம்

முச்சீர் நாலடி ஒத்தவை வரினே
வஞ்சி விருத்தம் என்றனர் கொளலே *(சிறுகாக்கை பாடினியார்)*

வஞ்சியில் பிறபா மயங்கல்

அகத்திணை மருங்கின் அளவு மயங்கி
விதப்ப மற்றவை வேறா வேண்டி
வஞ்சி அடியின் யாத்தனர் வஞ்சி
அகத்திணை மருங்கின் அனையு மாறே *(பன்னிருபடலத்துட் பெருந்திணைப் படலம்) யா. வி. 31*

அகத்திணை வஞ்சி

அகத்திணை யகவயின் நிற்ப வஞ்சி
சிறப்பில எனினும் சிலவிடத் துளவே *(மாபுராணம்) யா. வி. 31*

வஞ்சிப்பாவின் சாதி

பன்னிய சீர்பயின்று பத்து நிலத்தவாய்
மன்னவனைச் சேர்ந்து வனப்பெய்தி - மன்னுதலால்
நான்காம்பா என்றுரைக்கும் நாமநூல் வஞ்சியை
நான்காம் குலமென்றார் நன்கு *யா. வி. 90*

நான்காம் குலத்தின் நிலம்

ஆணைவழி நிற்றல் மாண்வினை தொடங்கல்
கைக்கடன் ஆற்றல் கசிவகத் துண்மை
ஓவா முயற்சி ஒக்கல் போற்றல்
மன்றிடை மகிழ்தல் ஒற்றுமை கோடல்
திருந்திய அறத்திற் றீரா தொழுகல்
விருந்துபுறந் தருதல் வேளாண் டுறையே. *யா. வி. 90*

வஞ்சியும் கலியும் வாராப் பொருள்

புறநிலை வாயுறை செவியறி அவையடக்
கெனவிவை வஞ்சி கலியவற் றியலா *(நல்லாறனார்) யா. வி. 93*

வட்டப்பாலை

1. ஆழியு மாரும்போற் கீறிச் சிறுதிகைக்கன்
ஊழி னொரோவொன் றுடன்கீறிச் - சூழ
எருதாதி கீழ்த்திசைக்கொண் டீராறு மெண்ணிக்
கருதி நிலக்கயிற்றைக் காண் *சிலப். 17 : 13 18. அரும்பத.*

2. இளியிடபங் கற்கடக மாம்விளரி சிங்கம்
தளராத தாராமதுவாம் - தளராக்
குரல்கோற் றனுத்துத்தங் கும்பங் கிளையாம்
வரலா லுழைமீன மாம்

3. குரறுலை விற்றுத்தங் கைக்கிளையே கும்பம்
பரிய வுழைமீனம் பாவாய் - அரிதாரம்
கொல்லே றிளிவிளரி கற்கடங் கோப்பமைந்த
தொல்லே ழிசைநரம்பிற் காம். *சிலப். 17 : 13 - 8 அரும்பத.*

வட்டப்பாலை இடைமுறைத் திரிபு

குன்றாக் குரற்பாதி தாரத்தி லொன்று
நடுவ ணினைகிளை யாக்கிக் - கொடியிடைய்ாய்
தாரத்தி லொன்று விளரிமே லேறடவந்
நேரத் ததுகுரலா நின்று *சிலப். 8 : 35 அடியார்க்.*

வட்டப்பாலையில் பிறக்கும் நால்வகைப்பண்

தாரத் துளை தோன்றப் பாலையாழ் தண்குரல்
ஒருமுளை தோன்றக் குறிஞ்சியாழ் - நேரே
இளிகுரலிற் றேன்ற மருதயாழ் துத்தம்
இளியிற் பிறக்கநெய்தலி யாழ். *சிலப். 17 : 13 அடியார்க்.*

வட்டப் பாலையின் முடிவுதானம்

தார பாகமுங் குரலின் பாகமும்
நேர்நடு வண்கிளை கொள்ள நிற்ப
முன்னர்ப் பாகமும் பின்னர்ப் பாகமும்
விளரிகுர லாகு மென்மனார் புலவர் *சிலப். 3 : 72 - 78 அடியார்க்.*

வடமொழிச் சந்தம்

செந்தமிழ்ச் செய்யுட் டெரிந்துணர்ந்து செந்தமிழ்க்கண்
வந்த வடமொழியை மாற்றாதே - சந்தம்
வழுவாமற் கொண்டியற்று மாண்பினார்க் குண்டே
தழுவாது நிற்குந் தமிழ் *யா. வி. 95*

வடிவெழுத்து

கட்புலன் இல்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல ஒலியை
உட்கொளற் கிடுமுரு பாம்வடி வெழுத்தே. *நன். 257 சங்கர*

வரி

வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல் *சிலப். 3 : 24 அடியார்க்.*

கண்கூடுவரி

கண்கூ டென்பது கருதுங் காலை
இசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப *சிலப். 8 : 74-77 அடியார்க்.*

வரிவகை எட்டு

கண்கூடு காண்வரி யுள்வரி புறவரி
கிளர்வரி ஐந்தோடொன்ற உரைப்பிற்
காட்சி தேர்ச்சி எடுத்துக் கோளென
மாட்சியின் வரூஉம் எண்வகை நெறித்தே *சிலப். 3 : 13 அடியார்க்.*

காண்வரி

காண்வரி யென்பது காணுங் காலை
வந்த பின்னர் மனமகிழ் வுறுவன
தந்து நீங்குந் தன்மைய தாகும் *சிலப். 8 : 78 - 83 அடியார்க்.*

உள்வரி

உள்வரி யென்ப துணர்ந்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ ருருவம்
கொண்டுங் கொள்ளாது மாடுதற் குரித்தே *சிலப். 8 : 84 - 89 அடியார்க்.*

புறவரி

புறவரி யென்பது புணர்க்குங் காலை
இசைப்ப வந்து தலைவன் முற்படாது
புறத்துநின் றாடி விடைபெறு வதுவே *சிலப். 8 : 90 - 93 அடியார்க்.*

கிளர்வரி

கிளர்வரி யென்பது கிளக்குங் காலை
ஒருவ ருய்ப்பத் தோன்றி யவர்வாய்
இருபுற மொழிப்பொருள் கேட்டுநிற் பதுவே *சிலப். 8 : 94 - 101 அடியார்க்.*

காட்சிவரி

காட்சிவரி யென்பது கருதுங் காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முனர்ப்
பட்டது கூறிப் பரிந்துநிற் பதுவே. *சிலப். 8 : 105 - 106 அடியார்க்.*

தேர்ச்சிவரி

தேர்ச்சி யென்பது தெரியுங் காலைக்
கெட்ட மாக்கள் கிளைகண் டவர்முன்
பட்டது முற்றது நினைஇ யிருந்து
தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும் *சிலப். 8 : 102 - 104 அடியார்க்.*

எடுத்துக்கோள்வரி

எடுத்துக் கோளை யிசைக்குங் காலை
அடுத்தடுத் தழிந்து மாழ்கி யயலவர்
எடுத்துக்கோள் புரிந்த தெடுத்துக் கோளே *சிலப். 8 : 107 - 108 அடியார்க்.*

முகம் (வரி)

1. நிலமுத லாகிய வுலகியல் வரிக்கு
முகமாய் நிற்றலின் முகமெனப் படுமே

2. சிந்து நெடிலுஞ் சேரினும் வரையார் *சிலப். 7 : 2, 3. 4 அரும்பத.*

சார்த்து (வரி)

பாட்டுடைத் தலைவன் பதியொடும் பேரொடும்
சார்த்திப் பாடிற் சார்த்தெனப் படுமே *சிலப்.7 : 7 அரும்பத.*

நிலை : (வரி)

முகமு முரியுந் தன்னொடு முடியும்
நிலையை யுடையது நிலையெனப் படுமே *சிலப். 7 : 13 அரும்பத.*

முரி (வரி)

எடுத்த வியலு மிசையுந் தம்மில்
முரித்துப் பாடுதன் முரியெனப் படுமே *சிலப். 7 : 14 - 16 அரும்பத.*

கூடை (வரிப்பாட்டு)

கூடை யென்பது கூறுங் காலை
நான்கடி யாகி யிடையடி மடக்கி
நான்கடி யஃகி நடத்தற்கு முரித்தே *சிலப் 7 : 18 - 19 அரும்பத.*

வரைவு முடுக்கம்

வருத்தங் கூறல் அவன்மறுத் துரைத்தல்
உள்ளது கூறல் ஏதங் கூறல்
பகல்வரல் என்றல் தொழுதிரந் துரைத்தல்
சிறைப்புறங் கூறல் மந்திமேல் வைத்தல்
கண்டுயி லானமை கண்டார் உரைத்தல்
பகலுடம் பட்டாள்போன் நிரவரல் என்றல்
இரவுடம் பட்டாள்போன்று பகல்வரல் என்றல்
இரவும் பகலும் வரவொழி கென்றல்
காலங் கூறல் கூறுவிக் குற்றல்
செலவு கூறல் பொலிவிழி வுரைத்தலென்
றீரெண் கிளவியும் இயம்புங் காலை
வாரணி முலையாய் வரைவு முடுக்கம். *திருக்கோ. 17*

வழிமொழி அணி

1. வழிமொழி அணியே வகுக்குங் காலை
எழுத்தும் சொல்லும் இசைபல வாகி
வழிதொடர்ந் தொலிப்ப வகுத்தலாகும். *வீரசோ. 157*

2. எழுத்தின் வழிநிலை இசைதொடர்ந் தொலிக்கும்
மொழியின் வழிநிலை.மொழிவயின் நிலையே *வீரசோ. 157*

வழு

வழுவகை (இழுக்கு)

தினைபால் மரபு வினைச்செப்புக் காலம்
இடனோடே ழாகும் இழுக்கு *நவநீதப். 84 நேமி. 26 வீரசோ. 83*

எழுத்து வழு :

முன்னிலை நெடிலும் ஆவும் மாவும்
னம்மிகப் புணரும் இயங்குதிணை யான *யா. வி. 95*

சொல்வழு

1. சொல்லின் வழுவே சொல்லோத்து மரபிற்
சொல்லிய குற்றம் தோன்ற லான *யா. வி. 95*

2. வேறுவினை யுடைய பொதுவினை கிளப்பப்
பொதுவினை யுடைய வேற்றமை உண்டோ? *யா. வி. 95*

பொருள் வழு

பொருளின் வழுவே தமிழ்நடைத் திரிவே *யா. வி. 95*

யாப்புவழு

யாப்பின் வழுவே யாப்பின திலக்கணம்
கோப்ப வாராக் கோவைத் தாகும் *யா. வி. 95*

வழுவிலாப் புலவன்

பிரிபொருட் டொடர்மொழி முரண்மொழி யெனாஅ
ஒருபொருள் மொழியே ஐயமொழி யெனாஅ
முறைபிறழ வைப்பே சொல்வழு வெனாஅ
யாப்பின் வழுவே நடைவழு வெனாஅப்
பொருளின் வழுவே புணர்ப்புவழு வெனாஅக்
கலையொடு மலைவே காலமலை வெனாஅ
உலக மலைவே இடமலை வெனாஅ
மேற்கோள் மலைவே ஒதுமலை வெனாஅ
எடுத்துரை மலைவே நூன்மலை வெனாஅ
இருநான் கடுத்த ஈரைம் புறவும்
உய்த்துணர் மொழியே ஒட்டுப்பிரி மொழியே
பிறிதுபடு மொழியே பிசிபடு மொழியே
உத்தி மறுதலை எனவரூஉம் இவையும்
இடக்கர் இசையவும் இடக்கர் பொருளவும்
இடக்கர் படவரூஉம் சந்தி இசையவும்
இன்னா இசையவும் எனவெடுத் திவற்றொடு
முன்னாங் கூறிய பிறழ்வும் தொகைஇ

ஏழுடை இருபான் ஊனம் நீக்குபு
பாட வல்லோன் கவிஞன் அன்றேல்
அடங்காப் புதல்வற் பயந்த பரத்தையிற்
புறஞ்சொற் பெறூஉம் புலவ ரானே *யா. வி. 96*

வாக்கி

அறமுதல் நான்கும் திறனிருந்து...
கேட்போர் சித்தமும் விரும்பக் கிளக்கும்
தோற்ற முடையோன் வாக்கி யாகும் *(மாமூலம்) நவ்நீதப். 87*

வாசம்

பஞ்சவாசம்

தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கம்
கப்பூரஞ் சாதியோ டைந்து. *சிலப் 5 : 26 அடியார்க்.*

வாட்கை (வாழ்க்கை)

அறுவகைத் தொழிலினும் ஐந்துவகைப் பொருளினும்
உறுபுகழ் மன்னவர் உறவொடு நிலவ
மறுவில் வாட்கை வாட்சி யாகும். *வீரசோ. 104*

வாதி

1. ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டித்
தனதுகோள் நிறுத்தப் பிறர்கோள் மறுப்பவன்
வாதி என்று சொல்லப் படுமே

2. மேற்கோள் ஏது விடைநெறி காட்டி
நாட்டிய அளவை நன்னூல் வழாமைத்
தன்கோள் நிறீஇப் பிறர்கோள் மறுக்கும்
மூதுணர் வுடையோன் வாதி யாகும் *(மாமூலம்) நவ்நீதப். 87*

வார்த்தை

காலமும் இடமும் வாலிதிற் புகழ்வார்
ஆகிய தடுப்பினது வார்த்தை ஆகும். *வீரசோ. 157*

வாரம்

வார மென்பது வகுக்குங் காலை
நடையினு மொலியினு மெழுத்தினு நோக்கித்
தொடையமைந் தொழுகுந் தொன்மைத் தென்ப *சிலப் 7 : 18 - 19 அரும்பத.*

விதந்த மொழி

விதந்த மொழிஇனம் வேறும் செப்பும் *(பரிமாணனார்) நன். மயிலை.*

விதப்புக் கிளவி

விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும் *யா. வி. 26*

விபாவனை (அணி)

முயற்சி இன்றி முடியும் பொருண்மாட்டு
வியப்புற வருமெனின் விபாவனை யாமே *வீரசோ. 151*

விரவியல் (அணி)

பரவியல் பல்லலங் காரப் பட்டன
விரவியல் என்று வேண்டுவர் என்ப. *வீரசோ. 153*

விரற்குப் பிரமாணம்

1. அணுத்தேர்த் துகள்பஞ்சிற் றூய்மயி ரன்றி
மணற்கடுகு நெல்விரலென் றேற - அணுத்தொடங்கி
எட்டோடு மன்னுவிரற் பன்னிரண்டாற் சாணாக்கில்
அச்சாண் இரண்டுமுழ மாம்.
2. முழநான்கு கோல் அக்கோல் ஐஞ்நூறு கூப்பீ
டவைநான்கு காதத் தளவாம் - பழுதின்
றுளநிறைந்த தொல்லோர் உரைசெய்த துண்மை
அளவிறந்த தன்மைநிலை யாம்.
3. ஈரைஞ்நூ றெண்முன் றியன்பின் பிரிந்தக்கால்
ஈரைந்தாம் சந்தத்தில் எண்.
4. எட்டொன் றிருபான்மூன் றென்ன வருமூன்றற்
கொட்டிய சந்த விரி.
5. மதிலிரண்டு மாமாறும் வாய்ந்த வசுக்கள்
டதினைந்தாம் சந்தப் பரப்பு.
6. இரண்டீ ரிரண்டிரு நான்கிரு நான்காம்
இரண்டென்ப பாதத்தில் எண்.
7. ஒருபாழ் பரவையோர் எட்டைந்தோர் ஏழா
றிருபதாம் சந்தத்தில் எண்.
8. இருநான்கு திக்கிசை யெட்டாறு சுன்னெட்
டிருபான்பேன் மூன்றாம் இயல்பு.
9. ஆறே ழுருபுபா ழெட்டோடு மாங்கலை
வீறுத்த மாதி விளம்பிருபா - னாறாக
மாறுற் கிருதி மகிழ்வினாற் செய்துலகிற்
கூறுக தேறும் பொருள்.
10. ஏற்புடைய காதங் குறைந்த எழுநூற
நூற்றொருகால் கைவிரலே ழுற்கிருதி - ஆற்ற
மொழிந்தவிரு பத்தாறா முன்னிய சந்தம்
ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டு. *வீரசோ. 137*

விருத்தம்

எழுத்தினால் ஒத்தல் இயையாதும் தம்மில்
எழுத்தும் அலகும் இயையா - வழுத்தும்

அனைத்தும் அளவாம் அடிநான்காய்ச் சாற்றில்
அனைத்தும் வியமமென்றார் ஆய்ந்து

பாதிச்சம விருத்தம்

பாதம் இரண்டிரண் டொத்துக் குறைந்தனகொள்
பாதிச் சமமாப் பகுத்து

மூவகை விருத்தம்

ஓரடிபோல் நான்கும் எழுத்தல கொத்தனவும்
ஈரடி தம்முளொத் தெய்தனவும் - ஓரடியும்
ஒவ்வா தனவும் சமமும் வியமமுமென்
றெய்தா விருத்தத் தியல்பு.

விருத்தங்களின் எழுத்து அலகு அளவு

சந்த எழுத்தாகிற் றள்ளி அரைசெய்து
சந்த எழுத்தின் அரைகூட்ட - முந்துகுருப்
பாதத் தளவாகும் பாதமே மாறிவர
ஏதந்தீர் நான்கடிக்கு மெண்

விருத்த பேதம்

1. பத்தியம் நான்கடிய சாதி விருத்தமது
மற்றவற்று மாத்திரை யானறிப - ஒத்தமைந்த
சாதி விருத்தம் தனைமாத் திரையுடனே
தீதில் எழுத்தால் தெளி.

2. ஆதிநூற் காரியைவை தாளியை யென்றிரண்டாம்
சாதிசமம் பாதித் சமம்வியமம் - ஓதும்
செருத்தகைய பேரமர்க்கண் சிற்றிடையாய் சொன்ன
விருத்தமொரு மூன்றா விளம்பு. *வீரசோ. 137*

விருத்தச்சாதி

1. விருத்த விருத்தியினை வேறைந்தா நாட்டி
விருத்த அடியெழுத்தால் மாறி - அருத்திக்க
மூன்றொடு நான்காய குப்பை ஒருக்கதன்
பாதியுடன் வைக்கமே லே.

2 விருத்த விருத்தியதன் வீவில் எழுத்துக்
குருக்களோ டேனைக் குறைவில் இலகு
வருக்கத்தின் மாத்திரை என்றிவை ஐந்தும்
விகற்பித்து வேண்டப் படும் *யா. வி. 95*

விருத்த அளவு

1. பிரத்தார எண்ணிரட்டித் தொன்று களைய
விரற்களவை யாகி விடும். *யா. வி. 95*

2. பெருக்கிய வாறு பிரத்தரித் தாங்கட்
டருக்கிய நாவலர் சந்தந் தரணி

இரட்டித் ததனந்தத் தொன்று களைய
விரற்கள வாமென்று வேண்டுவர் தாமே *யா. வி. 95*

3. நாலிருசாண் கொண்டது நற்கோலாம் ஐந்நூறு
கோலியைந்த நீளம் குரோசமே - நாலு
குரோசமோர் காவதமாம் குன்றாத சாணும்
விரோதந்தீர் முந்நால் விரல்

4. முந்நால் விரற்சாண் இரண்டுகை நான்கு கோல்
ஐஞ்ஞூறு கூப்பி டளவு

5. பரமாணுத் தேர்த்துகள் பஞ்சித்துய் எஞ்சா
மயிர்மணல் ஐயவி எண்ணெல் - விரலளவும்
எட்டெட்டா ஏறும் எழில்விரல் ஆதியா
ஒட்டினவும் நூன்முறையால் ஒட்டு *யா. வி. 95*

4. பாதிச்சம விருத்தம்

முடிவிரண்டும் மிக்கும் முதலிரண்டும் நைந்தும்
முடிவிரண்டும் குன்றி முதலிரண்டும் மிக்கும்
அடியிடையிட் டஃகியும் மிக்கும் வருமேற்
படியின்மேற் பாதிச் சமவிருத்த மாமே *யா. வி. 95*

விருத்தி

ஒன்பான்விருத்தி

ஆதிப்பா விருத்தி யையம்பதிற் புலவோர்
ஓதிக் கொண்டன ரொன்பான் விருத்தி *சிலப் 8 : 23 - 26 அடியார்க்.*

விரை

1. நறும்பிசி னாகண நற்கொட்ட மாஞ்சி
வெறுங்கண்டில் வெண்ணெய் வரை *சிலப். 6 : 76 அரும்பத*

2. கொட்டந் துருக்கந் தகர மகிலாரம்
ஒட்டிய வைந்தும் விரை *சிலப். 5 : 14 அரும்பத.*

விலக்குறுப்பு

விலக்குறுப் பென்பது விரிக்குங் காலைப்
பொருளும் யோனியும் விருத்தியும் சந்தியும்
சுவையும் சாதியும் குறிப்பும்சத் துவமும்
அவிநயஞ் சொல்லே சொல்வகை வண்ணமும்
வரியும் சேதமும் உளப்படத் தொகைஇ
இசைய எண்ணின் ஈரே முறுப்பே *சிலப். 3 : 13 அடியார்க்.*

விளக்கு (அணி)

1. இளங்கடை யிடைதலை என்னும் மூன்றினும்
விளங்காநின்றது விளக்கெனப் படுமே *வீரசோ. 150*

2. புனையுறு செய்யுட் பொருளை ஒருவழி
வினைநின்று விளக்கினது விளக்கெனப் படுமே

3. முதலிடை கடையென மூவகை யான *நேமி. 4*

விளம்பனம்

விளம்பனத் தியற்கை விரிக்குங் காலை
ஆரியம் தமிழொடு நேரிதின் அடக்கிய
உலகின் தோற்றமும் ஊழி இறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேதநாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதி காலத் தரசர் செய்கையும்
அவ்வவ் நாட்டார் அறியும் வகையால்
ஆடியும் பாடியும் அறிவரக் கிளத்தல் *யா. வி. 96*

விளைவு

அதுதான். இடையூ றின்மையும் இன்பப் புணர்ச்சியும்
நெடுநிலம் படாமையும்
கற்புங் காவலும் கடனும் நாணும்
இச்செறிந் திருக்கையும் இருஞ்சுரம் போதலும்
பாசறை முடித்தலும் பாத்தலின் விழவுமெனப்
பேசப் பட்டவும் பிறவும் போலப்
பரந்துமுன் பேசிய பயன்போற் றோன்றி
விரும்பியது விளைப்பது விளைவெனப் படுமே *வீரசோ. 90-94*

வினாவகை

அறியான் வினாதல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான்கோடல்
மெய்யவற்குக் காட்டலொடு ஐவகை வினாவே *நேமி. 30*

வினையெச்ச பெயரெச்ச அடுக்கு

வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும்
பலபல அடுக்கினும் முற்றுமொழிப் படிய *நேமி. 70*

வெட்சி

தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்
றன்ன இருவகைத்தே வெட்சி. *தொல். புறத். இளம்.*

வெட்சியின் பொதுமை

பல்லமர் செய்து படையுள் தப்பிய
நல்லாண் மாக்கள் எல்லாரும் பெறுதலின்
திறப்பட மொழிந்து தெரிய விரித்து
முதற்பட எண்ணிய எழுதிணைக்கும் உரித்தே *தொல். பொருள். புறத். இளம்.*

வெண்பா

1. சிறந்துயர் செப்பல் இசையன வாகி
அறைந்த உறுப்பின் அகறல் இன்றி
விளங்கிக் கிடப்பது வெண்பா வாகும் *(காக்கை பாடினியார்)*

வெண்பாவின் ஓசையும் ஈறும்

2. ஏந்திசைச் செப்பலும் தூங்கிசைச் செப்பலும்
ஒழுகிசைச் செப்பலும் உண்ணும் வெண்பா
செப்பல் ஓசை வெண்பா வாகும் *(சங்கயாப்பு)*

3. சிந்தடி யானே இறுதலும் அவ்வடி
அந்தம் அசைச்சீர் வருதலும் யாப்புற
வந்தது வெள்ளை வழக்கியல் தானே *(காக்கை பாடினியார்)*

4. ஏந்திசைச் செப்பல் இசையன வாகி
வேண்டிய உறுப்பின் வெண்பா வாகும் *யா. வி. 57*

செப்பல் வகை

1. ஏந்திசைச் செப்பல்

வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்பல் என்மனார் புலவர் *(சங்கயாப்பு) யா. வி. 57*

2. தூங்கிசைச் செப்பல்

இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்பல் என்மனார் புலவர் *(சங்கயாப்பு) யா. வி. 57*

3. ஒழுகிசைச் செப்பல்

வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே ஒழுகிசைச் செப்பல் *(சங்கயாப்பு) யா. வி. 57*

வெண்பாவின் ஈறு

1. முச்சீர் அடியான் இறுதலும் நேர்நிரை
அச்சீர் இயல்பின் அசையின் இறுதியாம் *(அவிநயனார்) யா.வி. 57*

2. குற்றுகரச் சீரோ டுகர வகாரச்சீர்
இற்ற எழுவாயாப் பின்னிசைத்தாய் - முற்றுகரம்
ஈறாய் வருமே எனினும் நிரையவாய்க்
கூறார் சிறப்புடைத்தாக் கொண்டு

3. மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவாய்
ஓவா தளபெடுத் தூஉவும் கெழூஉவும் உதாரணமாய்
நாவாழ் பெரும்புகழ் நற்றத்தர் யாப்பில் நடந்தது போல்
தேய்வாம் உகரம்வந் தாலியிற் சீரிங்குச் செப்பியதே

4. காசு பிறப்புமே காட்டாது தேமாவும்
ஆசில் புளிமாவும் ஆய்ந்துரைத்த - தோசைமேல்

தேறித்தாஞ் செப்பல் தெளிவிப்ப தன்றாகிற்
கூறிற்றே கூறார் கொணர்ந்து *யா. வி. 57*

வெண்பா வகை (ஒருசாரார் கூற்று)

1. பண்பாய்த் தடங்கிய பாநடை தெரியின்
வெண்பா மூவிசை விரிக்குங் காலே

2. செப்பல் வெண்பா வெண்கூ வெண்பா
அகவல் வெண்பா என்றனர் அவையே

3. செப்பல் வெண்பாச் சீரே ழாகித்
தொடைநிலை பெறாஅ தடிநிலை பெறுமே *யா. வி. 57*

4. வெண்கூ வெண்பா எழுத்திறந் திசைக்கும் *யா. வி. 57*

5. அகவல் வெண்பா அடிநிலை பெற்றுச்
சீர்நிலை தோறும் தொடைநிலை திரியாது
நடைவயின் சேரடி
நெய்யார்ந் தன்ன நேயமுடைத் தாகிப்
பொருளொடு புணர்ந்த எழுத்தழி யாதே *யா. வி. 57*

6. மருளொடு புணர்ந்தோர் மருட்கை தீரச்
சொல்ல வன்மை வெண்பா இயல்பே *யா. வி. 57*

வெண்பாவிற்குரிய தல்லதாவை

ஐஞ்சீர் அடுக்கலும் மண்டிலம் ஆக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய அல்ல. *தொல். பொருள் 375 பேரா.*
(நக்கீரனார் அடிநூல்) யா. வி. 93

வெண்பா - மறைவாணர்பா

ஆதியாய் ஆற்றல் உடைத்தாய் வரம்பிகவா
நீதிசால் நூல்பொருந்தி நிற்றலால் - ஓதநீர்
மண்பாவு தொல்சீர் மறைவாணர் பாற்சார்த்தி
வெண்பா உரைத்தார் விரித்து *யா. வி. 62*

வெண்பாவிகற்பம்

வெண்பாவோர் ஐந்தும் விகற்பத்தாற் பத்தாகித்
தண்பாற் றளைநான்கின் நாற்பதாய்த் - திண்பான்மைச்
செப்பல் ஒருமூன்றின் வந்துறழச் சேர்ந்தபாத்
தப்பாத முந்நாற்ப தாம் *யா. வி. 62*

வெண்பாவுக்கு எழுத்து

1. பண்பாய்ந்த ஏழு பதினா றிழிபுயர்வா
வெண்பா அடிக்கெழுத்து வேண்டினார் - வெண்பாவின்
ஈற்றடிக் கைந்தாதி ஈரைந் தெழுத்தளவும்
பாற்படுத்தார் நூலோர் பயின்று

2. முற்றுகரந் தானும் முதற்பாவின் ஈற்றடிப்பின்
நிற்றல் சிறுபான்மை நேர்ந்தமையால் - மற்ற
அடிமருங்கின் ஐயிரண்டோ டோரெழுத்து மாதல்
துடிமருங்கின் மெல்லியலாய்! சொல்லு *யா. வி. 62*

குறள் வெண்பா

1. ஈரடி இயைந்தது குறள்வெண் பாவே *(அவிநயனார்)*

2. தொடையொன் றடியிரண் டாகி வருமேற்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே *(காக்கைபாடினியார்)*

குறள் வெண்பா

3. ஐம்பெருந் தொடையின் இனக்குறள் விகற்பம்
செந்தொடை விகற்பொடு செயிர்தீர் ஈரடி *யா. வி. 59*

சிந்தியல் வெண்பா

நேரிசைச் சிந்தும் இன்னிசைச் சிந்துமென்
றீரடி முக்கால் இருவகைப் படுமே *யா. வி. 59*

இருகுறள் நேரிசை

குற்றிய லுகர முதல்குறள் வெண்பா
முற்றின் இருகுறள் நேரிசை ஆகும். *யா. கா. 23*

நேரிசை வெண்பா

1. இரண்டாம் அடியின் ஈறொரூஉ எய்தி
முரண்ட எதுகை ஆகியும் ஆகா
திரண்டு துணியாய் இடைநனி போழ்ந்தும்
நிரந்தடி நான்கின நேரிசை வெண்பா *(காக்கைபாடினியார்)*

2. குறட்பா இரண்டவை நால்வகைத் தொடையாய்
முதற்பாத் தனிச்சொலின் அடிமூய். இருவகை
விகற்பினும் நடப்பது நேரிசை வெண்பா *(அவிநயனார்)*

3. இருகுறள் நடுவண் தனிச்சொற் பெற்றும்
இரண்டொன் றாசும் அவணிடை யிட்டும்
ஒருவிகற் பாகியும் இருவிகற் பாகியும்
நிகழ்வன நேரிசை வெண்பா ஆகும் *யா. வி. 60*

4. ஒன்றைந்தெட் டாகியசீர் ஒத்த எதுகையாய்
நின்றபதின் மூன்றொன்பான் நேரொத்து - நன்றியலும்
நீடுசீர் மூவைந்தா நேரிசைவெண் பாவென்பர்
நாடுசீர் நாப்புலவர் நன்கு. *வீரசோ. 112; 125*

நிகரில் இருவிகற்ப நேரிசைவெண் பாவைப்
பகரிற் பரிசறிவார் மாட்டுப் - புகரிலா

இன்குறள் வெண்பா இரண்டாய்த் தனிச்சொல்லு
நன்குறளாய் நிற்கும் நடு *வீரசோ. 125*

ஆசிடை வெண்பா

மூண்டுமலி நேரிசை வெண்பா டூற்குறட்பா
வேண்டுதனிச் சொல்லோடு விட்டிசைக்கில் - ஆண்டடியில்
ஆசிடை ஒன்றிரண்டு வந்தமர்ந்தால் மற்றதன்பேர்
ஆசிடை வெண்பாவென் றார். *வீரசோ. 125*

இன்னிசை வெண்பா

1. தனிச்சொல் தழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினும் ஒன்றே வரினும்
இயற்பெயர் இன்னிசை என்றிசி னோரே (காக்கை பாடினியார்) *யா. வி. 61*

2. ஒன்றும் பலவும் விகற்பாகி நான்கடியாய்
நின்ற தனிச்சொல்தாம் பெற்றும் பெறாதொழிந்தும்
தன்னிசைய நேரிசையில் வேறாய் வருமாகில்
இன்னிசைவெண் பாவாமென் றார். *வீரசோ. 112 ; 125*

3. ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொல்
இன்றி வருவன இன்னிசை வெண்பா *(சிறுகாக்கை பாடினியார்)*

4. ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச் சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை வெண்பா *(அவிநயனார்)*

5. ஒருவிகற் பாகித் தனிச்சொல் இன்றியும்
இருவிகற் பாகித் தனிச்சொல் இன்றியும்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியும்
தனிச்சொல் இன்றிப் பலவிகற் பாகியும்
அடியடி தோறும் ஒருஉத்தொடை அடைநவும்
எனவைந் தாகும் இன்னிசை தானே *யா. வி. 61*

பஃறொடை வெண்பா

1. ஏழடி இறுதி ஈரடி முதலா
ஏறிய வெள்ளைக் கியைந்தன அடியே
மிக்கடி வருவது செய்யுட் குறித்தே *(சங்கயாப்பு)*

2. தொடையடி இத்துணை என்னும் வழக்கம்
உடையதை இன்றி உறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமம் கொளலே *(காக்கை பாடினியார்)*

3. தொடைபல தொடுப்பன பஃறொடை வெண்பா
(சிறுகாக்கை பாடினியார்)

4. தொடைமிகத் தொடுப்பது பஃறொடை வெண்பா *(அவிநயனார்)*

5. ஆறடி முக்காற் பாட்டெனப் படுமே
ஏறிய அடியும் செய்யுளுள் வரையார் *யா. வி. 62*

வெண்பா வகை

(மற்றொரு வகை)

கட்டளை கலம்பகம் சமநடை சமவியம்
மட்டவிழ் குழலினாய் மயூர சமவிய்ம்
ஒட்டினார் எழுத்தினால் ஒட்டி ஒண்டமிழ்க்
கிட்டமா யவர்கள்வெண் பாவின் பேர்களே *யா. வி. 95*

வெண்டாழிசை

1. ஈரடி முக்கால் இசையினும் தளையினும்
வேறுபட் டியல்வன வெண்டா ழிசையே.

2. தன்பா அடித்தொகை மூன்றாய் இறும்படி
வெண்பாப் புரைய இறுவது வெள்ளையின்
தண்பா இனங்களிற் றாழிசை யாகும் *(காக்கைபாடினியார்)*

3. அடிமூன் றாகி வெண்பாப் போல
இறுவனமூன்றே வெள்ளொத் தாழிசை *(சிறுகாக்கைபாடினியார்)*

4. அடிமூன் றாகி வெண்பாப் போல
இறுவ தாயின் வெள்ளொத் தாழிசை *(அவிநயனார்) யா. வி. 66*

செந்துறை:

1. அந்தம் குறையா தடியிரண் டாமெனிற்
செந்துறை என்னும் சிறப்பின தாகும் *(காக்கைபாடினியார்)*

2. ஈரடி இயைந்தது குறள்வெண் பாவே
ஒத்த அடித்தே செந்துறை வெள்ளை *(அவிநயனார்) யா. வி. 63*

3. கூறிய இரண்டும் குறட்பா இனமே *யா. வி. 65*

வெண்டுறை

1. அடியைந் தாகியும் மிக்கும் ஈற்றடி
ஒன்றும் இரண்டும் சீர்தப வரினும்
வெண்டுறை என்னும் விதியின வாகும் *(காக்கைபாடினியார்)*

2. பெற்றவடி ஐந்தினும் பிறவினும் பாட்டாய்
இற்ற அடியும் ஈற்றயல் அடியும்
ஒன்றும் இரண்டும் நின்ற தன்சீர்
கண்டன குறையின் வெண்டுறை யாகும் *(மயேச்சுரர்)*

3. ஐந்தா றடியின் நடந்தவும் அந்தடி
ஒன்றும் இரண்டும் ஒழிசீர்ப் படுநவும்
வெண்டுறை நாமம் விதிக்கப் படும் *(அவிநயனார்) யா. வி. 67*

வெளிவிருத்தம்

1. ஒருமூன் றொருநான் கடியடி தோறும்
தனிச்சொற் றழுவி நடப்பன வெள்ளை
விருத்தம் எனப்பெயர் வேண்டப் படுமே *(காக்கை பாடினியார்)*

2. நான்கு மூன்றடி தோறும் தனிச்சொல்
தோன்ற வருவன வெளிவிருத் தம்மே *(சிறுகாக்கை பாடினியார்)*

3. மூன்று நான்கடி தோறும் தனிச்சொற்
கொளீஇய எல்லாம் வெளிவிருத் தம்மே *(அவிநயனார்)*

4. மூவடி யாகியும் நாலடி யாகியும்
பாவடி வீழ்ந்து பாடலுள் நடந்தும்
கடிவரை விலவாய் அடிதொறும் தனிச்சொல்
திருத்தகு நிலைய விருத்த மாகும் *(நீர்மலிந்த வார்சடையோன்*
பேர்மகிழ்ந்த பேராசிரியர்) யா. வி. 68

வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை

ஆலும் ஆனும் ஒடும் ஒடுவும்
சாலும் மூன்றாம் வேற்றுமைக் கதுவே
செய்வோன் காரணம் செய்யத்தகு கருவி
எய்திய தொழில்முதல் இயைபுடன் அதன்பொருள் *(அகத்தியனார்) நன்.*
297. சங்கர. நன்.297. மயிலை.

ஐந்தாம் உருபுப்பொருள்

உவம நீக்கம் எல்லை ஏதுவென்
றவைநான் கென்ப ஐந்தாம் உருபே *நேமி. 43*

ஆறாம் வேற்றுமை

ஆறாம் உருபே அதுஆ தவ்வும்
வேறொன் றுடையதைத் தனக்குரியதையென
இருபாற் கிழமையின் மருவுற வருமே. *நன். 300 சங்கர.*

ஏழு வேற்றுமை

ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனும் உளனொரு வகையால்
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன். *(அகத்தியம்) தொல். சொல். 74*
சேனா நன். மயிலை.

தாங்கும் தமிழ்மண்

வாங்கும் உலகத் தமிழர்
உணர்வு மனங்களிலே
தேங்கும் துறைகள் திறமாய்
அறிந்து திசையனைத்தும்
தாங்கும் **தமிழ்மண் பதிப்பகம்**
ஐயா இளங்குமரர்
ஓங்கும் அறிவுநூல் யாவும்
வழங்கி உயர்ந்ததுவே.

- செந்தலை ந. கவுதமன்
சூலூர் பாவேந்தர் பேரவை

வளவன் பதிப்பகம்

2, சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 044-24339030
செல்பேசி : 9444410654